
# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

# ONLINE PROGRAMMES

## எம்.ஏ. (தமிழ்)



## இலக்கணம் 2 - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

இரண்டாம் பருவம்

# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் **A+(CGPA: 3.64)** தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

205121

## எம்.ஏ. (தமிழ்)

இரண்டாம் பருவம்

# இலக்கணம் 2 - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

**Author:**

**DR. M.CHITHAMBARAM**, *Associate Professor in Tamil, Tamil Research Centre, Alagappa Government Arts College, Karaikudi-630003*

"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.

VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-291/Preparation and Printing of Course Materials/2018 Dated 19.11.2018 Copies 500**

## தாள் - 31921

## இலக்கணம் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

**நோக்கம்:** மாணவர்களுக்குத் தொல்காப்பியச் சொல்லதிகாரச் செய்திகளைப் பற்றி எடுத்துக் கூறல்

### பிரிவு : I : கிளவியாக்கம்

கூறு: 1: கிளவியாக்கம் - வழுவமைதி

கூறு: 2: கிளவியாக்கம் - தொடர்ச்சி

கூறு: 3: வேற்றுமையியல் - முறைவைப்பு

கூறு: 4: வேற்றுமை மயங்கியல்

### பிரிவு : II : விளிமரபு – பெயரியல்

கூறு: 5: விளிமரபு

கூறு: 6: பெயரியல் - சொற்களின் பாகுபாடு – உயர்திணை

கூறு: 7: அஃறிணை – விரவுப்பெயர்

கூறு: 8: வினையியல் - இலக்கணம் - பாகுபாடு

### பிரிவு : III : இடையியல் - உருபுகள்

கூறு: 9: வினையெச்சம் - தொடர்ச்சி

கூறு: 10: இடையியல் - இலக்கணம் - சாரியை- இடைநிலை – வேற்றுமை – உருபுகள்

கூறு: 11: இடையியல்: இசைநிலை - இசைநிறைச் சொற்கள் - குறிப்புச் சொற்கள் - உவம உருபுகள்

### பிரிவு : IV : உரியியல் - எச்சவியல்

கூறு: 12. உரியியல் - இசை, குறிப்பு, பண்பு

கூறு: 13. எச்சவியல்

கூறு: 14, எச்சவியல் - தொடர்ச்சி – தொகை சொற்கள்

## இலக்கணம் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

குறிப்பு

தொல்காப்பியம் தமிழில் தோன்றியமிகச் சிறந்த இலக்கணநூல் ஆகும். இந்நூல் எழுத்திற்கும் சொல்லிற்கும் பொருளிற்கும் இலக்கணம் வகுக்கின்றது. இத்தகைய இலக்கணத்தைக் கூறும் பகுதிகள் முறையே எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனக் குறிக்கப்பெறும். மொழிமுதல் காரணமாய அணுத்திரளாய்த்தோன்றும் எழுத்து ஒன்றோ ஒன்றிற்கு மேற்பட்டனவோ தொடர்ந்து பொருள்தரின் அது சொல் என்று அழைக்கப்பெறும். சொல்,பதம், கிளவி என்பனவெல்லாம் ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவிகள் ஆகும். அத்தகைய சொற்களின் இலக்கணத்தைக் கூறும் பகுதி ஆதலால் இப்பகுதி ‘சொல்லதிகாரம்’ எனப் பெயர் பெறலாயிற்று,இவ்அதிகாரம் ஒன்பது இயல்களைத் தன்னகத்தே கொண்டமைந்ததாகும். அவை முறையே, கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல்,வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பனவாகும். அவற்றுள் முதல் இயல் ‘கிளவியாக்கம்’ என்னும் பெயரதாகும். கிளவிகள் பொருள் மேல் ஆமாறு உணர்த்தியமையின் கிளவியாக்கம் என்னும் பெயர்த்து என கிளவியாக்கம் என்பதற்கு விளக்கம் உரைப்பார் இளம்பூரணர். கிளவியாக்கம் என்பதற்கு சொல்லினது தொடர்ச்சி எனக் குறிப்பதுடன் சொல் பொருள்மேல் ஆகும் நிலை என உரைவகுப்பார் தெய்வச்சிலையார்.சேனாவரையரோ வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையால் அது கிளவியாக்கம் ஆயிற்று எனக் குறிப்பார், மேலும் ஆக்கம் அமைத்துக்கோடல் - நொய்யும் நுறுங்கும் களைந்து களைந்து அரிசி அமைத்தாரை அரிசியாக்கினர்ர் என்பதுபோல என முற்குறித்து பின் உரை விளக்கத் தந்து போவார், இதன்வழி சொற்களிடத்து வழுக்காத்தலே கிளவியாக்கம் என்னும் சேனாவரையர் கருத்து வெளிப்பட்டு நிற்கும்.

**திணை:**

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;

அ.்றிணை என்மனார், அவர் அல பிறவே

ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

குறிப்பு

என வரும் நூற்பா சொற்கள் இசைத்து நிற்கும் வழி உணர்த்திற்று. சொற்கள் இருதிணை ஐம்பால் என்பனவாக இசைத்து நிற்கும். அத்திணையோ உயர்திணை அஃறிணை என இருதிறப்படும். மக்கள் என்று சுட்டிச்சொல்லப்படுவன எல்லாம் உயர்திணையின்பாற்படும். மக்கள் நீங்கலாக பிற பொருட்கள் எல்லாம் அஃறிணை எனப்படும். அஃறிணை என்பது அல் + திணை, அதாவது உயர்திணை அல்லாத திணை என்பதன் அடியாகத் தோன்றியது என்பதனை அறிதல் வேண்டும். சொல் இவ்விரு திணைகளை அடிப்படையாய் வைத்து தோன்றும் எனத் தொல்காப்பியர் குறித்து நிற்பார்.அடுத்து அமைந்துள்ள இரு நூற்பாக்கள் இவ்விரு திணைகளின் கண் ஐம்பால்களை உணர்த்தி நின்றன.

**உயர்திணை – பால்பாகுபாடு :**

ஆடூஉ அறி சொல், மகடூஉ அறி சொல்,

பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி,

அம் முப் பாற்சொல் உயர்திணையவ்வே

உயர்திணையின்கண் அமையும் சொற்கள் மூவகைப் பாகுபாட்டின் கண் வரும். அவைமுறையே ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறியும் சொல் என்பனவாகும். அவை முறையே ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர்பாற் சொல் எனக் குறிக்கப்பெறும்.

**அஃறிணை – பால்பாகுபாடு:**

ஒன்று அறி சொல்லே, பல அறி சொல், என்று

ஆயிரு பாற் சொல் அஃறிணையவ்வே ( 3 )

அஃறிணை என்பது ஒன்றறி சொல், பலவறி சொல் என்பதாய் அமையும். இதனை ஒன்றன்பால், பலவின்பால் எனக் குறிப்பர், உயர்திணையை ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர்பாற் சொல் எனக் குறிக்கும் தொல்காப்பியர் அஃறிணையை ஒன்றன்பால், பலவின்பால் எனக் குறிப்பர்.

அஃறிணையுள்ளும் ஆண்பெண் பிரிப்பு உண்டு,குரங்கினத்துள் கடுவன், மந்தி உண்டு, வேழத்திடத்து களிறு, பிடி எனப் பிரிப்பு முறை உண்டு, எனினும் தொல்காப்பியர் அஃறிணையை ஆண், பெண், பல எனப் பிரரிக்காததற்குக் காரணம் அஃறிணையில் உயிர் உள்ள பொருள்களிடத்தே ஆண், பெண், பிரிப்பு முறை காணப்படுகிறது. .உயிரற்ற பொருள்களிடத்து இப் பிரிப்பு முறை இல்லை என்பதாலும் அவையும் அஃறிணையிடத்து அமையும் என்பதனாலும் தொல்காப்பியர் அவ்வாறு பிரிக்காது விட்டார். இதன் வழித் தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலமவெளிப்போந்து நிற்கும்.

**பேடியும் தெய்வமும்:**

குறிப்பு

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்

ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்,

தெய்வம் சுட்டிய பெயர் நிலைக் கிளவியும்,

இவ் என அறியும் அந்தம் தமக்கு இலவே;

உயர்திணை மருங்கின் பால் பிரிந்து இசைக்கும்.

இருதிணையிடத்து பால்பாகுபாடு உணர்த்தி நிற்கும் எழுத்துகளை உணர்த்தவரும் தெல்காப்பியர் அதற்கு முன்பாக பாலினுள் அடங்காத பேடியையும் தெய்வத்தையும் தனித்த நூற்பாவினுள் பிரித்துரைப்பார். பெண்மையைக் குறித்து நிற்கும் ஆண்மை திரிந்த பெயர் நிலைக்கிளவியும் தெய்வம் சுடடிய பெயர்நிலைக்கிளவியும் தமக்கென தனித்து அறியும் ஈற்றெழுத்தினை உடையன அல்ல. ஆயினும் உயர்திணைக்குரிய பாலாய்ப் பிரிந்திசைக்கும்.

பேடி வந்தாள், பேடர் வந்தார், பேடியர் வந்தார்

தேவி வந்தாள், தேவன் வந்தார், தேவியர் வந்தார்

**ஆண்பால் ஈறு:**

னஃகான் ஒற்றே ஆடுஉ அறி சொல்

பெயர் வினைகளின் ஈற்றில் நிற்கும் ன ஒற்று ஆண்பாலைக் குறித்து நிற்கும்.

உண்டான், உண்பான், உண்ணா நின்றான் - தெரிநிலை வினை

கரியன், குறியன் - குறிப்பு வினை

மன்னன், செழியன் - பெயர்ச்சொல்

**பெண்பால்ஈறு:**

ளஃகான் ஒற்றே மகடூ அறி சொல்

பெயர் வினைகளின் ஈற்றில் நிற்கும் ள ஒற்று பெண்பாலைக் குறித்து நிற்கும்.

உண்டாள், உண்பாள், உண்ணா நின்றாள் - தெரிநிலை வினை

கரியள், குறியள் - குறிப்பு வினை

மகள், அரியவள் - பெயர்ச்சொல்

குறிப்பு

**பலர்பால் ஈறு:**

ர.்.கான் ஒற்றும், பகர இறுதியும்,

மாரைக் கிளவி உளப்பட, மூன்றும்

நேரத் தோன்றும் பலர் அறி சொல்லே

ர.்.கான் ஒற்றும் பகர இறுதியும்.மார் என்னும் இடைச்சொல் எனும் மூன்றும் பலர்பாலைக் குறித்து நிற்கும்.

உண்டனர், உண்பர், உண்ணா நின்றனர் தெரிநிலை வினை

கரியர், குறியர் - குறிப்பு வினை

மன்னர், செழியர் - பெயர்ச்சொல்

உண்ப, செல்ப, காண்ப – வினையில் பகர ஈறு நின்றது

உண்மார், கொண்மார் – மார் விகுதி

**ஒன்றன்பால் ஈறு:**

ஒன்று அறி கிளவி த, ற, ட, ஊர்ந்த

குன்றியலுகரத்து இறுதி ஆகும்

ஒன்றன்பால் த, ட, ற என்னும் ஒற்றுக்களைச் சேர்ந்து வரும் ஈறுகளைப் பெற்று வரும். அவை முறையே து, டு, று என்பன ஆகும்.

உண்டது, உண்ணா நின்றது

சொல்லிற்று, கூறிற்று - வினை

குண்டுக்கட்டு – குறுந்தாட்டு – வினைக் குறிப்பு

இது, ஆறு, இரண்டு – பெயர்

**பலவின்பால் ஈறு:.**

அ, ஆ, வ, என வரூஉம் இறுதி

அப் பால் மூன்றே பல அறி சொல்லே.

ஆ, அ, வ என்னும் மூன்று ஈறுகளும் பலவின்பாலில் வரும். இதனுள் ஆகார ஈறு மட்டும் எதிர்மறை வினையிடத்துப் பயின்று வரும்.

குறிப்பு

உண்டன, உண்ணா நின்றன, உண்பன – வினை

கரியன, குறியன – வினைக் குறிப்பு

உண்ணா, வாரா, ஓடா – எதிர்மறை

உண்குவ, தின்குவ- வகர ஈறு

**வினையோடு வரல்:**

இரு திணை மருங்கின் ஐம் பால் அறிய

ஈற்றின் நின்று இசைக்கும் பதினோர் எழுத்தும்

தோற்றம்தாமே வினையொடு வருமே

தொல்காப்பியரால் வகுத்துச் சொல்லப்பெற்ற பதினோரு எழுத்துகளும் உயர்திணை, அ∴றிணை என்னும் இரு திணைகளின்கண் அமைந்த ஆண்பால், பெண்பால்:, பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்னும் ஐந்து பால்களின் ஈறாய் வரும். மேலும் இவை வினையினைச் சார்ந்தே வரும்.

வினையின் தோன்றும் பால் அறி கிளவியும்,

பெயரின் தோன்றும் பால் அறி கிளவியும்,

மயங்கல் கூடா; தம் மரபினவே .

வினையின்கண் தோன்றும் பாலறி கிளவியும் பெயரின்கண் தோன்றும் பாலறி கிளவியும் தமக்குள் மயங்கி வருதல் கூடாது. ஆண்பாற் பெயராயின் ஆண்பால் ஈறே வழங்கல் வேண்டும். பிற பால் ஈறுகளுக்கும் அவ் விதி பொருந்தும்.

அரசன் வந்தான்

அரசி வந்தாள்

ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவி

ஆண்மை அறி சொற்கு ஆகு இடன் இன்றே

குறிப்பு

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆகிய பேடி என்டபது பால் பிரிந்து இசைக்கும் போது ஆண்பாலாய் அமையாது பெண்பாலாகவே அமையும்.

பேடி வந்தாள்

**செப்பும் வினாவும்:**

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்!

மாந்தரின் வாழ்வியல் பெரும்பான்மையும் வினாவும் விடையுமாகவே அமைபவை. அதனுள் மயக்கம் ஏற்படுமாயின் அது தேவையற்ற குழப்பங்களை மொழியிடத்தும் வாழ்விடத்தும் ஏற்படுத்தும். எனவே தொல்காப்பியர் செப்புவிற்கும் வினாவிற்கும் இலக்கணம் வகுத்தார். செப்புவிடத்தும் வினாவிடத்தும் வழு அமைதல் கூடாது என ஈண்டு வழியுறுத்தினார்.

வினாவும் செப்பே, வினா எதிர் வரினே.

நேரிடையாக விடை அமையுமெனில் அது செவ்வன் இறை என்றும் மறைமுகமாக அமையுமெனில் அது இறை பயப்பு என்றும் சுட்டப்பெறும்.இந் நிலையில் வினாவும் செப்பாய் அமைதல் உண்டு.

சாத்தா படித்தாயா என்னும் வினாவிற்கு சிலர் படிக்காமல் இருப்பேனா என்று விடையிறுப்பர்.அது வெளிப்படையாய் வினாவினைப் போன்று அமையினும் ஒருவகையான் விடையினை உணர்த்தி நிற்பதால் வினாவும் செப்பேயாம்.

செப்பே வழீஇயினும் வரை நிலை இன்றே,

அப் பொருள் புணர்ந்த கிளவியான

சிலபோது வினாவிற்கான விடையானது செவ்வன் இறையாக அமையாது வழுவி வருதலும் உண்டு, அவ்வாறே வரினும் அது நீக்குவதற்கில்லை. ஏனெனில் அத்தகைய பதிலானதுஒருவகையான் வினாவிற்கு ஏற்ற விடையாய் அமைவதால் என்பர் தொல்காப்பியர்,சாத்தாஉண்டியோ என்ற வழி உண்டேன் என்பது நேரிடையான பதில். ஆனால் சிலர் வயிறு குத்திற்று என்பர், இது நேரிடையான பதில் இல்லை எனினும் ஒருவகையான் பதிலை உணர்த்திற்று ஆதலின் செப்பு வழியினும் வரைநிலையின்று என்றார் தொல்காப்பியர்.

செப்பினும் வினாவினும், சினை, முதல், கிளவிக்கு

அப் பொருள் ஆகும், உறழ் துணைப் பொருளே

குறிப்பு

செப்பினும் வினாவினும் ஒப்புமை தோன்ற உரைப்பதும் உண்டு. உறழ்ந்தும் உரைப்பதுண்டு. ஒப்புமைப் பொருள் என்பது ஒத்தன்மைத்தாய் ஒப்புமைப்படுத்திச் சொல்வதாகும். உறழ்பொருள் என்பது ஒப்புமை தோன்றாது மாறுபடக் கூறுவதாகும். அவ்வாறு சொல்லுமிடத்து சினைப்பொருளோடு சினைப்பொருளையும் முதற்பொருளோடு முதற்பொருளையும் ஒப்பிட்டே கூறவேண்டும். உறழ்பொருளும் துணைப்பொருளும் அவ்வப் பொருளாய் அமைதலே சிறப்புடைத்தாம்.

இவள் கண் ஒக்கும் இவள் கண் - சினையோடு சினை

முருகனை ஒக்கும் கந்தன் - முதற்பொருளோடு முதற்பொருள்.

**தகுதியும் வழக்கும்:.**

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்

பகுதிக் கிளவி வரை நிலை இலவே

தகுதி வழக்கு என்பன பயின்று வருமிடத்து அவற்றின் அருகாய் வரும் பகுதிக் கிளவிகள் கடிந்து ஒதுக்கப்படா.வழக்கு என்பது இரண்டு வகைப்படும்.அவை முறையே இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பதாகும். அவற்றுள் இயல்பு வழக்கு மூன்று வகைப்படும். அவை,

இலக்கணமுடையது- மண் மரம்

இலக்கணப்போலி-இலக்கணமுடையதுபோல்தோன்றுவது – முன்றில்

மரூஉ – சோழநாடு - சோணாடு

தகுதி வழக்கு மூன்று வகையான் அமையும் அவை,

மங்கலம் - மங்கலமல்லாதவற்றை மங்கலமாய்க் கூறல் - செத்தாரைச் துஞ்சினார் எனல்

இடக்கரடக்கல் - இவை மரபு கருதி மறைத்துக் கூறல் - கால் கழுவி வருகிறேன்

குழூஉக்குறி – ஒரு குழுவினரால் பயிலப்படுவது – பொற்கொல்லர் பொன்னைப் பறி எனல்

இடக்கரடக்கல், குழூஉக்குறி போன்றன செய்யுட்கண் பயின்று வருதல் இல்லையாதலின் மங்கல வழக்கு என்பதனையே தகுதி எனக் குறிப்பார் சேனாவரையர்.'பகுதிக்கிளவி' என்பதற்கு பக்கச்சொல் என்றே

உரையாசிரியர்கள் பலரும் குறித்து நிற்க தெய்வச் சிலையார் மட்டும் கூற்றுச்சொல் என விளக்கமளிப்பார்,

குறிப்பு

**இனச்சுட்டு:**

இனச் சுட்டு இல்லாப் பண்பு கொள் பெயர்க் கொடை

வழக்கு ஆறு அல்ல; செய்யுள் ஆறே

இவ் உலகின்கண் அமைந்துள்ள பொருட்களுள் இனமுள்ளபொருள், இனமில்லாத பொருள் என இருவகை உண்டு,அவற்றுள் இனமுள்ள பொருட்கு பண்புஅடை கொடுத்தல் உண்டு. ஆனால் இனமில்லாப் பொருட்கும் பண்புஅடை கொடுத்தல் என்பது உலகியல் வழக்கன்று, செய்யுள் வழக்கு என்பார் தொல்காப்பியர்.

தாமரை என்பதனுள் செந்தாமரை, வெண்தாமரை என இனமுண்டு. எனவே இதற்கு பண்புஅடை கொடுத்தல் இயல்பானதேயாம். ஆனால் ஞாயிறு, நிலவு போன்றன இனமில்லாப் பொருட்கள். எனினும் இவற்றிற்கு செய்யுளின்கண் மட்டும் அடை கொடுக்கலாம் என்பார் தொல்காப்பியர்,

செஞ்ஞாயிறு நிலவு வேண்டினும் வெண்திங்கள் வெயில் வேண்டினும்

**இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள்:**

உலகின்கண் இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் என இருவகையுண்டு, இயற்கைப்பொருள் என்பது தன் இயல்பினின்று திரியாத பொருள் ஆகும். செயற்கைப்பொருள் என்பது ஏதேனும் ஒரு காரணத்தால் தன் இயல்பினின்று திரிந்த பொருள் ஆகும். இவவிருவகைப்பொருளையும் சொல்லும் முறைமையினைத் தொல்காப்பியர் விளக்குவார்,

இயற்கைப் பொருளை இற்று எனக் கிளத்தல்.

இயற்கைப்பொருளைச் சுட்டுமிடத்து அதன் இயல்பினை குறித்து உரைத்தல் வேண்டும்.

நிலம் வலிது, நீர் தண்மையுடைத்து .

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்!

செயற்கைப் பொருளைச் குறிக்குமிடத்து அப்பொருள் அத்தன்மையடைதற்குக் காரணம் யாதோ அதனை சுட்டியுரைத்தல் வேண்டும்.

குறிப்பு

பயிர் நல்ல ஆயின, மயிர் நல்ல ஆயின

ஆக்கம்தானே காரணம் முதற்றே

ஆக்கக் கிளவி என்பது காரணமுதற்றான் வரும்.

கடுவும் கைப்பிழி எண்ணெயும் கலந்து பெய்தமையால் மயிர் நல்ல ஆயின.

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்

போக்கு இன்று என்ப-வழக்கினுள்ளே

ஆக்கக் கிளவி என்பது காரணமுதற்றான் வரும். எனினும் வழக்கினுள் காரணமின்றியும் வருதல் உண்டு.

மயிர் நல்ல, பயிர் நல்ல

பால் மயக்கு உற்ற ஐயக் கிளவி

தான் அறி பொருள்வயின் பன்மை கூறல்!

உயர்திணை, அஃறிணை என்னும் இருவகைத்திணையிடத்து திணை இதுவெனத் துணிந்து பால் துணியாதவிடத்து அத்திணைப் பன்மையால் கூறுதல் வேண்டும்.

ஆண்மகனோ பெண்மகனோ அங்கு தோன்றுகின்றவர்

உருபு என மொழியினும், அஃறிணைப் பிரிப்பினும்,

இரு வீற்றும் உரித்தே, சுட்டும் காலை.

திணைஐயம் தோன்றி ஒரு வடிவம் சொல்லக்கருதினும் அஃறிணையை ஒன்று பல எனச் சொல்லக்கருதினும் பொதுநிலையால் கூறுதல் வேண்டும்.

குற்றியோ மகனோ அங்கு தோன்றுகின்ற உரு

ஒன்றோ பலவோ செய்புக்க பெற்றம்

அஃறிணையை மட்டும் அது எனச்சொல்லலும் உரித்து என்பார் தெய்வச்சிலையார்

குற்றியோ மகனோ தோன்றுகின்ற அது

தன்மை சுட்டலும் உரித்து என மொழிப,

அன்மைக் கிளவி வேறு இடத்தான

குறிப்பு

ஐயுற்றுத் துணிந்தவழி வேறாகிய பொருள் இடத்து வரும் அன்மைக்கிளவி ஐயம் துணியப்பட்ட பொருளைச் சுட்டலும் உரித்து என்பார் தொல்காப்பியர். இதன்வழி ஐயம் துணிந்த பொருளின் வேறாகிய பொருளிடத்து அல்ல, அன்று போன்ற அன்மைக்கிளவிகளைப் பயன்படுத்தலாம் என்பது பெறப்படும்.

குற்றியன்று மகன்

மகனன்று பெண்

**வண்ணச்சினைச்சொல்:**

அடை, சினை, முதல், என முறை மூன்றும் மயங்காமை

நடை பெற்று இயலும், வண்ணச் சினைச் சொல்.

அடை, சினை, முதல் ஆகிய மூன்றும் ஓரிடத்துப் பயின்று வரும்பொழுது அவை ஒன்றனுள் ஒன்று மயங்காமல் வருமாறு அமைதல் வேண்டும்.

செங்கால்நாரை – செம்மை – அடை- கால் - சினை- நாரை – முதல்

சிலபோது செய்யுளில் மாறி வருதலும் உண்டு.

கவிப்புறத்து இருந்த செவிச்செஞ்சேவல் - செவி- சினை – செஞ் ( செம்மை) அடை-

சேவல் - முதல்

**பால்வழுவமைதி:**

ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்,

ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்,

வழக்கின் ஆகிய உயர் சொல் கிளவி;

இலக்கண மருங்கின் சொல் ஆறு அல்ல

ஒருவரைக் குறிக்கும் பன்மைச்சொல்லும் ஒன்றனைக் குறிக்கும் பன்மைச் சொல்லும் வழக்கின்கண் பயின்று வரும் உயர்வுச் சொல்லாகும். இலக்கண மருங்கின் சொல்லாக அமையாது.

முதலமைச்சர் வந்தார்

அகத்தியர் வந்தார்.

குறிப்பு

**வினைச்சொற்கள் பயின்று வரும் இடம்:**

செலவினும், வரவினும், தரவினும், கொடையினும்,

நிலை பெறத் தோன்றும் அந் நாற் சொல்லும்

தன்மை, முன்னிலை, படர்க்கை, என்னும்

அம் மூஇடத்தும் உரிய என்ப.

செலவு, வரவு, தரவு, கொடை என்னும் தொழிற்சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடத்திற்கும் உரியதாய் வரும்.

அவற்றுள்,

தரு சொல், வரு சொல், ஆயிரு கிளவியும்

தன்மை, முன்னிலை, ஆயீரிடத்த .

அந்நான்கு சொற்களுள் தருசொல், வருசொல் ஆகியன தன்மைக்கும் முன்னிலைக்கும் உரியதாய் வரும்.

எனக்குத் தந்தான் - தன்மை

நினக்குத் தந்தான் - தன்மை

என்னிடம் வந்தான் - முன்னிலை

உன்னிடம் வந்தான் - முன்னிலை

ஏனை இரண்டும் ஏனை இடத்த.

தருசொல் வருசொல், நீங்கலாக உள்ள செலவு, கொடை என்பன படர்க்கையிடத்து வரும்.

அவனிடம் சென்றான் - படர்க்கை

அவனுக்குக் கொடுத்தான் - படர்க்கை

குறிப்பு

**யாது – எவன் என்னும் சொற்கள்:**

யாது, எவன் என்னும் ஆயிரு கிளவியும்

அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்

யாது, எவன் என்னும் சொற்கள் முறையே அறியாத பொருள்களிடத்து அதனை அறிந்து கொள்ளுதற்கான வினாவாய் வரும்.

இச் செய்யுளிற்குப் பொருள் யாது?

அச் சொல்லிற்குப் பொருள் எவன்?.

அவற்றுள்,

யாது என வரூஉம் வினாவின் கிளவி

அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்

தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே

மேற்கண்ட சொற்களுள் யாது என்னும் சொல் அறியாத பொருள்களிடத்து மாத்திரமன்று. அறிந்த பொருள்களிடத்தும் ஐயம் தீர்த்தற்கு வருதல் உண்டு.

இம் மரங்களுள் கருங்காலி யாது?

இனைத்தென அறிகிளவி:

இனைத்து என அறிந்த, சினை, முதல், கிளவிக்கு

வினைப்படு தொகுதியின் உம்மை வேண்டும்

இத்துணை என அறியப்பட்ட கிளவிக்கும் சினைக் கிளவிக்கும் வினைப்படுதன்மையின்கண் உம்மை கொடுத்துச் சொல்லவேண்டும்.

சேர சோழ பாண்டியர் மூவரும் வந்தனர்,

பன்னிரு கையும் பாற்பட இயற்றி

மன்னாப் பொருளும் அன்ன இயற்றே

உலகின்கண் இல்லாத பொருள்களைச் சுட்டியுரைக்குமிடத்தும் உம் கொடுத்துக் கூறல் வேண்டும். இந் நூற்பா மேற்கண்ட நூற்பாவின் மாட்டேற்று நூற்பா ஆகும்.

பவளக் கோட்டு நீலயானை சாதவாகனன் கோயிலுள்ளும் இல்லை

குறிப்பு

குருடு காண்டல் பகலிலும் இல்லை

நச்சினார்க்கினியர் மன்னாப்பொருள் என்பதனை நிலையில்லாப்பொருள் எனக் குறிப்பர்.

இளமையும் நில்லா, யாக்கையும் நில்லா

**செப்பு வழுவமைதி**:

எப் பொருளாயினும் அல்லது இல் எனின்,

அப் பொருள் அல்லாப் பிறிது பொருள் கூறல்

ஒருவரால் வினவப்படும் பொருள் இல்லையாயின் அதனை அப்பொருளால் கூறாது பிறிது பொருளால் கூற வேண்டும்.

பயறு உள்ளவோ வணிகீர் என்றவழி உளுந்தல்லது இல்லை எனக் கூறலாம்.

அப் பொருள் கூறின், சுட்டிக் கூறல்

வினவப்பட்ட பொருளைச் சுட்டிக்கூற நேரின் அப்பொருள் அல்லது இல்லை எனக் கூறலாம்.

பயறு அல்லது இல்லை எனல்.

பொருளொடு புணராச் சுட்டுப் பெயராயினும்,

பொருள் வேறுபடாஅது ஒன்று ஆகும்மே.

பொருளோடு கூறாமல் சுட்டிக் கூறினும் பொருள் வேறுபடாது ஒன்றாகவே அமையும்.

இது அல்லது இல்லை என்று கூறலாம்.

**இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்:**

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்

வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்,

சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்;

இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

ஓரிடத்து இயற்பெயர்க் கிளவியையும் சுட்டுப் பெயர்க்கிளவியையும் சொல்லநேருமானால் இயற்பெயர்க் கிளவிக்கு முன்னதாக சுட்டுப்பெயர் கிளவியைக் கூறமாட்டார், இயற்பெயர்க்கிளவியையே முற்படக் கூறுவர்.

*Self-Instructional Material*

குறிப்பு

கந்தனவன் வந்தான், முருகனவன் போர் செய்தான்

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே

சுட்டுப்பெயர்க் கிளவியை இயற்பெயர்க் கிளவிக்கு முற்படக் கிளத்தல் செய்யுளில் உண்டு.

அவணனங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்

சுட்டு முதல் ஆகிய காரணக் கிளவியும்

சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்.

சுட்டு முதலாகிய காரணக் கிளவியும் சுட்டுப் பெயர் இயற்பெயரின்பின் அமைதல் போன்றுஇயற்பெயரின் பின்னே அமையும்.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனால் தந்தை உவக்கும்

சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்

இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்.

சிறப்புப் பெயர்க்கிளவியும் இயற்பெயர்க்கிளவியும் வினைக்கு ஒருங்கியலும் காலம் தோன்றின் இயற்பெயருக்கு முன்னால் சிறப்புப்பெயர் அமையும்.

மூதறிஞர் இராசாசி, உரையாசிரியர் இளம்பூரணர்

**ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி:**

ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி,

தொழில் வேறு கிளப்பின், ஒன்று இடன் இலவே

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி பல பெயர்களைப் பெற்றாலும் ஒரு வினைமுடிவினைக் கொண்டு முடிதலே சிறப்புடைத்தாம். ஒவ்வோர் பெயரும் ஒவ்வோரு வினைமுடிவினைப் பெற்று முடியுமாகில் அவை அனைத்தும் ஒன்றினொடு ஒன்று ஒன்றி நிற்காது தனித்து நிற்கும். அ.்.து உயர்வன்று.

ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான்- ஆசிரியன், பேரூர்க்கிழான், சாத்தன் என்னும் பெயர்கள் வந்தான் என்னும் ஒரு வினைமுடிவினைக் கொண்டு முடிந்தன.

தன்மைச் சொல்லே அ.்.றிணைக் கிளவி என்று

எண்ணுவழிமருங்கின் விரவுதல் வரையார்

குறிப்பு

தன்மைச் சொல்லும் அ.்.றிணைக் கிளவியும் எண்ணுவழி வழியில் ஒருங்கே அமையும் பொழுது திணைவிரவி வருதலை நீக்கார்

யானும் என் எ.்.கமும் சாரும்

ஒருமை எண்ணின் பொதுப் பிரி பாற்சொல்

ஒருமைக்கு அல்லது எண்ணு முறை நில்லாது.

ஒருமை எண்ணின் பொதுப்பிரிபாற்சொல் ஒருவன், ஒருத்தி என நிற்குமே தவிர இருவன், இருத்தி மூவன், முத்தி என்றெல்லாம் வராது.

**வியங்கோள் எண்ணுப் பெயர்:**

வியங்கோள் எண்ணுப்பெயர் திணை விரவு வரையார்

வியங்கோள் என்பதனோடு சேர்ந்துவரும் எண்ணுப்பெயர்கள் திணைவிரவி வருதலை நீக்கார்.

ஆவும் ஆயனும் வருக.

**வேறுவினைப் பொதுச்சொல்:**

வேறு வினைப் பொதுச் சொல் ஒரு வினை கிளவார்

எண்ணுங்காலும் அது அதன் மரபே

வேறு வினைகளை உடைய பலபொருள்கள் சேர்ந்து நிற்கும் பொதுச்சொல்லை ஏதேனும் ஒரு பொருளின் சொல்லால் குறித்தல் கூடாது, பொதுச்சொல்லாலே கூறுதல் வேண்டும்.

அடிசில் என்பது தின்னுதல், பருகுதல், உண்ணுதல், அருந்துதல் எனப்பெறும் பல்வேறு வினைகளை உடைய பொதுச்சொல் ஆகும். ஆனால் இதனை வெவ்வேறு வினையால் கூறாது அடிசில் அயின்றார் என்ற பொது வினையால் கூறுவர்.

**இரட்டைக் கிளவி:**

இரட்டைக் கிளவி இரட்டின் பிரிந்து இசையா

இரட்டை சொற்களாய் நின்று பொருள் உணர்த்தும் சொற்கள் பிரிந்திசையா, பிரிந்திசைக்க முற்பட்டால் பொருள் உணர்த்தா, இவை இசை, குறிப்பு பண்பு குறித்து வரும்.

குறிப்பு

சுருசுருத்தது- இசை

கறுகுறுத்தார்- குறிப்பு

சிறுசிறத்தது- பண்பு

**ஒருபெயர்ப் பொதுச்சொல்:**

ஒரு பெயர்ப் பொதுச் சொல் உள் பொருள் ஒழியத்

தெரிபு வேறு கிளத்தல், தலைமையும் பன்மையும்

உயர்திணை மருங்கினும், அ∴றிணை மருங்கினும்.

உயர்திணை மருங்கினும், அ∴றிணை மருங்கினும் ஒருபெயராய் பலபொருட்கும் பொதுவாய் வந்து நிற்கும் சொல்லை சொல்ல முற்படுங்கால் அங்குள்ள பொருட்களை எல்லாம் எடுத்துரைக்காது அவற்றுள் தலைமை, பன்மை என்னும் இருவேறு கூறுகளை ஆய்ந்து எடுத்துரைக்கவேண்டும்.

கமுகந் தோட்டம், அரசர் வீதி

தோட்டம் என்பது பல மரங்கள் நிறைந்திருக்கும் பகுதி ஆகும். இருப்பினும் கமுகு மரங்கள் மிகுதியும் இருத்தலால் பன்மை கருதி கமுகந்தோட்டம் எனக் குறிக்கின்றோம். அது போன்றே வீதி என்பது பல்வேறு மக்கள் இருக்கும் பகுதி எனினும் அவர்களுள் தலைமைத்தன்மை உடையவன் அரசன் என்பதனால் அரசர்வீதி எனக் குறிக்கின்றோம்.

**பெயரினும் தொழிலினும் பிரிபவை:**

பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்

மயங்கல் கூடா, வழக்கு வழிப்பட்டன.

உயர்திணை மருங்கினும், அ∴றிணை மருங்கினும் பெயராலும் தொழிலாலும் பிரிந்து வருபவை எல்லாம் குற்றமாகா. அவை வழக்கு வழிப்பட்டனவே ஆகும்.

ஆயிரம் மக்கள் போர் செய்யப் போயினர் – என்பதில் மக்கள் என்பது பொதுச்சொல்- எனினும் போர் என்னும் குறிப்பானது பெண்களை நீக்கி ஆண்களைக் குறித்தது.

இப்பெற்றம் உழவொழிந்தன- என்பதில் பெற்றம் பொதுச்சொல்- ஆனால் உழவொழிந்தன என்ற குறிப்பானது பசுவினை நீக்கிக் காளையைக் குறித்தது.

**எண்ணுத் திணை விரவுப் பெயர்**

பலவயினானும் எண்ணுத் திணை விரவுப் பெயர்

அ.்.றிணை முடிபின, செய்யுளுள்ளே.

குறிப்பு

பலவயினிடத்து உயர்திணையும் அ.்.றிணையும் கலந்து எண்ணப்படும்பொழுது செய்யுளின்கண் அ.்.றிணை முடிவைப்பெற்று வரும்.

முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா

**பலபொருள் ஒருசொல்**

வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல்,

வினை வேறுபடாஅப் பல பொருள் ஒரு சொல்

என்று ஆயிரு வகையபல பொருள் ஒரு சொல்

பலபொருள் ஒருசொல் இருதிறப்படும். அவை முறையே வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல் வினைவேறுபடா பலபொருள் ஒருசொல் என்பதாகும்.

வினை வேறுபடும் பல பொருள் ஒரு சொல்:

அவற்றுள்,

வினை வேறுபடூஉம் பல பொருள் ஒரு சொல்

வேறுபடு வினையினும், இனத்தினும், சார்பினும்,

தேறத் தோன்றும்-பொருள் தெரி நிலையே.

மேற்சொல்லப்பெற்ற இருவகைச் சொற்களுள் வினைவேறுபடும் பலபொருள் ஒருசொல் ஒரு பொருட்குச் சிறந்த வினையாலும் இனத்தாலும் சார்பாலும் தெளிவான பொருளைத் தரும்.

மா என்பது மரம், வண்டு, புரவி எனப் பலபொருள் தந்து நிற்கும். மாவும் கமுகும் என்பதன்வழி இனத்தால் மரத்தினை உணர்த்திற்று, மாவும் தேரும் என்றவழி சார்பால் புரவியைக் குறித்தது. மாவீழ்மலர் என்றவழி வினையால் வண்டினைக் குறித்து நின்றது.

குறிப்பு

ஒன்று வினை மருங்கின் ஒன்றித் தோன்றும்

வினை வேறுபடாஅப் பல பொருள் ஒரு சொல்,

நினையும் காலை, கிளந்தாங்கு இயலும்.

வினைவேறுபடா பலபொருள் ஒரு சொல் ஆயின் வினையினைக் கொண்டு பொருளை அறிதல் என்பது இயலாது,அவ்விடத்து வெளிப்படையாக விதந்து சொல்லப்படும்.

மா வீழ்ந்தது –என்பதனைக் கொண்டு மா என்னும் சொல்லின் பொருளை அறிதல் இயலாது. வீழ்தல் என்பது மரம், வண்டு, புரவி என்பதற்கெல்லாம் வினைவேறுபடா பொதுவினை ஆகும். எனவே இவ்விடத்து மாமரம் வீழ்ந்தது, மாவிலங்கு வீழ்ந்தது என்று விதந்து சொல்லப்படும்.

குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி

வினை, சார்பு, இனம் முதலியவற்றான் தெளிவாகப் பிரித்தறிய இயலாதாயின் பொருளின் வேறுபாடு குறித்தோன் தெளிவாகச் சொல்லுதல் வேண்டும். அத்தகைய பொருள் உணர் நிலையானது சொல்லுவோனது தெரித்து மொழியான் அமையும் என்பதாம்.

சேவல் என்னும் ஆண்பாற்பெயர் மயில் நீங்கலாகிய மற்ற பறவை இனங்களுக்குப் பொருந்தும்.

'நிவந்தோங்கு உயர்கொடிச் சேவலோய்' என்னும் பொழுது 'சேவலோய்' என்பது திருமாலைக் குறிக்கும். இதன்வழி சேவல் என்பது கருடனைக் குறித்து நின்றது.

**உயர்திணைப்பெயர் அஃறிணை முடிவு கொளஸ்:**

குடிமை, ஆண்மை, இளமை, மூப்பே,

அடிமை, வன்மை, விருந்தே, குழுவே,

பெண்மை, அரசே, மகவே, குழவி,

தன்மை திரி பெயர், உறுப்பின் கிளவி,

காதல்,சிறப்பே, செறற்சொல், விறற்சொல் என்று

ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ,

அன்ன பிறவும், அவற்றொடு சிவணி,

முன்னத்தின் உணரும் கிளவி எல்லாம்

குறிப்பு

உயர்திணை மருங்கின் நிலையினஆயினும்,

அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்

குடிமை முதலாக விறற்சொல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டுக்கிளவிகளும் அவை போன்றன பிறவும் உயர்திணைக்குரியன எனச் சொல்லப்பட்டாலும் அஃறிணை முடிவையும் பெறும்.

அடிமை வந்தான், அடிமை வருகின்றது,விருந்து வந்தார், விருந்து வந்தது

பால் பிரிந்திசையா உயர்திணைச் சொற்கள்:

காலம், உலகம், உயிரே, உடம்பே,

பால் வரை தெய்வம், வினையே, பூதம்,

ஞாயிறு, திங்கள், சொல், என வரூஉம்

ஆயீர் ஐந்தொடு பிறவும் அன்ன

ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்,

பால் பிரிந்து இசையா, உயர்திணை மேன.

காலம் முதலாகச் சொல்லப்பெற்ற பத்துச் சொற்களும் அவை போன்ற பிற சொற்களும் உயர்திணைச் சொற்கள் ஆயினும் உயர்திணைக்கண் பால் பிரிந்திசையா அஃறிணைப் பாலாய் நின்றிசைக்கும்.

காலம் ஆயிற்று, உலகம் பசித்தது, ஞாயிறு பட்டது

நின்றாங்கு இசைத்தல் இவண் இயல்பு இன்றே .

இசைத்தலும் உரிய, வேறிடத்தான

குடிமை, ஆண்மை முதலியன வேந்து நல்லன் என நின்றாங்கு உயர்திணையாய் இசைத்தல் போன்ற காலம், உலகம் போன்றன இசைக்கா. எனினும் ஈறு திரிந்து உலகத்தார் மகிழ்ந்தார் என்பன போன்று வரலாம்.

**அடைமொழி இனம் செப்பல்:**

எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்தே

எடுத்த மொழி தன் பொருளைத் தருவதோடு நில்லாமல் தன் இனமாகிய பிறிதோர் பொருளையும் குறித்து நிற்கும்.

அறம் செய்தான் சுவர்க்கம் புகும் எனின் அறம் செய்யான் நரகம் புகும் என்பதனையும் உணர்த்தும்.

குறிப்பு

பன்மைச் சொற்கள் ஒருமை முடிவு கொளல்:

கண்ணும் தோளும் முலையும் பிறவும்

பன்மை சுட்டிய சினை நிலைக் கிளவி

பன்மை கூறும் கடப்பாடு இலவே-

தம் வினைக்கு இயலும் எழுத்து அலங்கடையே

சினைநிலைக் கிளவி தன் வினைக்கான ஈறினைக் கொண்டு முடிதலும் உண்டு, தன் முதல் வினைக்கான ஈறினைக் கொண்டும் முடிதலும் உண்டு,. அவை தன் வினைக்கான ஈறுகளைக் கொண்டு முடீயாத பொழுது கண், தோள் முதலியன பன்மை முடிவினைப் பெறுவதில்லை.

கண் சிவந்தது – கண்கள் சிவந்தன – தன் வினையால் முடிந்தது

கண் சிவந்தான் - கண் விளித்தாள் - தம்முதல் வினையான் முடிந்தது.

**பயிற்சி வினாக்கள்:**

1.உயர்திணைப்பாகுபாடுகள் குறித்து எழுதுக.

உயர்திணை – பால்பாகுபாடு :

ஆடூஉ அறி சொல், மகடூஉ அறி சொல்,

பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி,

அம் முப் பாற்சொல் உயர்திணையவ்வே

உயர்திணையின்கண் அமையும் சொற்கள் மூவகைப் பாகுகுபாட்டின் கண் வரும். அவைமுறையே ஆடூஉ அறிசொல், மகடூஉ அறிசொல், பல்லோர் அறியும் சொல் என்பனவாகும். அவை முறையே ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர்பாற் சொல் எனக் குறிக்கப்பெறும்.

அஃறிணை – பால்பாகுபாடு:

ஒன்று அறி சொல்லே, பல அறி சொல், என்று

ஆயிரு பாற் சொல் அஃறிணை யவ்வே

அஃறிணை என்பது ஒன்றறி சொல், பலவறி சொல் என்பதாய் அமையும். இதனை ஒன்றன்பால், பலவின்பால் எனக் குறிப்பர், உயர்திணையை ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர்பாற் சொல்

குறிப்பு

எனக் குறிக்கும் தொல்காப்பியர் அ.ஃ.றிணையை ஒன்றன்பால், பலவின்பால் எனக் குறிப்பர். அ.ஃ.றிணையுள்ளும் ஆண்பெண் பிரிப்பு உண்டு, குரங்கினத்துள் கடுவன், மந்தி உண்டு, வேழத்திடத்து களிறு, பிடி எனப் பிரிப்பு முறை உண்டு, எனினும் தொல்காப்பியர் அ.ஃ.றிணையை ஆண், பெண், பல எனப் பிரரிக்காததற்குக் காரணம் அ.ஃ.றிணையில் உயிர் உள்ள பொருள்களிடத்தே ஆண், பெண், பிரிப்பு முறை காணப்படுகிறது:. உயிரற்ற பொருள்களிடத்து இப் பிரிப்பு முறை இல்லை என்பதாலும் அவையும் அ.ஃ.றிணையிடத்து அமையும் என்பதனாலும் தொல்காப்பியர் அவ்வாறு பிரிக்காது விட்டார். இதன் வழி தொல்காப்பியரின் நுண்மாண் நுழைபுலம் வெளிப்போந்து நிற்கும்.

2.செப்பும் வினாவும் எவ்வாறு அமைதல் வேண்டும்?

செப்பும் வினாவும்:

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்!

மாந்தரின் வாழ்வியல் பெரும்பான்மையும் வினாவும் விடையுமாகவே அமைபவை. அதனுள் மயக்கம் ஏற்படுமாயின் அது தேவையற்ற குழப்பங்களை மொழியிடத்தும் வாழ்விடத்தும் ஏற்படுத்தும். எனவே தொல்காப்பியர் செப்பு என்பதற்கும் வினாவிற்கும் இலக்கணம் வகுத்தார்,

வினாவும் செப்பே, வினா எதிர் வரினே.

செப்பானது பலமுறை எழுப்பப்பெற்ற வினாவிற்கு நேரிடையான விடையாகவும் சில சமயம் மறைமுக விடை்யாகவும் அமையும். நேரிடையாக விடை அமையுமெனில் அது செவ்வன் இறை என்றும் மறைமுகமாக அமையுமெனில் அது இறை பயப்பு என்றும் சுட்டப்பெறும்.இந் நிலையில் வினாவும் செப்பாய் அமைதல் உண்டு.

சாத்தா படித்தாயா? என்னும் வினாவிற்கு சிலர் படிக்காமல் இருப்பேனா என்று விடையிறுப்பர், அது வெளிப்படையாய் வினாவினைப் போன்று அமையினும் ஒருவகையான் விடையினை உணர்த்தி நிற்பதால் வினாவும் செப்பேயாம்.

செப்பே வழீஇயினும் வரை நிலை இன்றே,

அப் பொருள் புணர்ந்த கிளவியான

சிலபோது வினாவிற்கான விடையானது செவ்வன் இறையாக அமையாது வழுவி வருதலும் உண்டு, அவ்வாறே வரினும் அது நீக்குவதற்கில்லை. ஏனெனில் அத்தகைய பதிலானது ஒருவகையான் வினாவிற்கு ஏற்ற விடையாய் அமைவதால் என்பார் தொல்காப்பியர். சாத்தாஉண்டியோ என்ற வழி உண்டேன் என்பது நேரிடையான பதில். ஆனால் சிலர்

குறிப்பு

வயிறு குத்திற்று என்பர், இது நேரிடையான பதில் இல்லை எனினும் ஒருவகையான் பதிலை உணர்த்திற்று ஆதலின் செப்பு வழியினும் வரைநிலையின்று என்றார் தொல்காப்பியர்.

செப்பினும் வினாவினும், சினை, முதல், கிளவிக்கு

அப் பொருள் ஆகும், உறழ் துணைப் பொருளே

செப்பினும் வினாவினும் ஒப்புமை தோன்ற உரைப்பதும் உண்டு. உறழ்ந்தும் உரைப்பதுண்டு. ஒப்புமைப் பொருள் என்பது ஒத்தன்மைத்தாய் ஒப்புமைப்படுத்துதிச் சொல்வதாகுமு:. உறழ்பொருள் என்பது ஒப்பமை தோன்றாது மாறுபடக் கூறுவதாகும். அவ்வாறு சொல்லுமிடத்து சினைப்பொருளோடு சினைப்பொருளையுமு் முதற்பொருளோடு முதற்பொருளையும் ஒப்பிட்டே கூ23வேண்டும. உறழ்பொருளும் துணைப்பொருளும் அவ்வப் பொருளாய் அமைதலே சிறப்புடைத்தாம்.

சான்று:

இவள் கண் ஒக்கும் இவள் கண் - சினையோடு சினை

முருகனை ஒக்கும் கந்தன் - முதற்பொருளோடு முதற்பொருள்.

3.இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் குறித்து எழுதுக.

இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள்:

உலகின்கண் இயற்கைப்பொருள், செயற்கைப்பொருள் என இருவகையுண்டு, இயற்கைப்பொருள் என்பது தன் இயல்பினினக்று திரியாத பொருள் ஆகும். செயற்கைப்பொருள் என்பது ஏதேனும் ஒரு காரணத்தால் தன் இயல்பினின்று திரிந்த பொருள் ஆகும். இவவிருவகைப்பொருளையும் சொல்லும் முறைமையினைத் தொல்காப்பியர் விளக்குவார்,

இயற்கைப் பொருளை இற்று எனக் கிளத்தல்!

இயற்கைப்பொருளைச் சுட்டுமிடத்து அதன் இயல்பினை குறித்து உரைத்தல் வேண்டும்.

சான்று: நிலம் வலிது, நீர் தண்மையுடைத்து .

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்! .

குறிப்பு

செயற்கைப் பொருளைச் குறிக்குமிடத்து அப்பொருள் அத்தன்மையடைதற்கு காரணம் யாதோ அதனை சுட்டியுரைத்தல் வேண்டும்.

பயிர் நல்ல ஆயின, மயிர் நல்ல ஆயின

ஆக்கம்தானே காரணம் முதற்றே

ஆக்கக் கிளவி என்பது காரணமுதற்றான் வரும்.

கடுவும் கைப்பிழி எண்ணெயும் கலந்து பெய்தமையால் மயிர் நல்ல ஆயின.

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்

போக்கு இன்று என்ப-வழக்கினுள்ளே

ஆக்கக் கிளவி என்பது காரணமுதற்றான் வரும். எனினும் வழக்கினுள்

காரணமின்றியும் வருதல் உண்டு.

மயிர் நல்ல, பயிர் நல்ல

4.வியங்கோள் எண்ணுப்பெயர் எவ்வாறு வரும்?

வியங்கோள் எண்ணுப் பெயர்:

வியங்கோள் எண்ணுப்பெயர் திணை விரவு வரையார்

வியங்கோள் என்பதனோடு சேர்ந்துவரும் எண்ணுப்பெயர்கள் திணைவிரவி வருதலை நீக்கார்.

ஆவும் ஆயனும் வருக.

5.ஒருபொருள் குறித்தவேறுபெயர்க்கிளவி குறித்து எழுதுக.

ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி:

ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி,

தொழில் வேறு கிளப்பின், ஒன்று இடன் இலவே

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி பல பெயர்களைப் பெற்றாலும் ஒரு வினைமுடிவினைக் கொண்டு முடிதலே சிறப்புடைத்தாம். ஒவ்வோர் பெயரும் ஒவ்வோரு வினைமுடிவினைப் பெற்று முடியுமாகில் அவை அனைத்தும் ஒன்றினொடு ஒன்று ஒன்றி நிற்காது தனித்து நிற்கும். அஃது உயர்வன்று.

குறிப்பு

சான்று: ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான்- ஆசிரியன், பேரூர்க்கிழான், சாத்தன் என்னும் பெயர்கள் வந்தான் என்னும் ஒரு வினைமுடிவினைக் கொண்டு முடிந்தன.

6.அடைமொழி இனம்செப்பல் அமையுமாற்றை விளக்குக.

அடைமொழி இனம் செப்பல்:

எடுத்த மொழி இனம் செப்பலும் உரித்தே

எடுத்த மொழி தன் பொருளைத் தருவதோடு நில்லாமல் தன் இனமாகிய பிறிதோர் பொருளையும் குறித்து நிற்கும்.

அறம் செய்தான் சுவர்க்கம் புகும் எனின் அறம் செய்யான் நரகம் புகும் என்பதனையும் உணர்த்தும்.

7.யாது? எவன்? என்னும் சொற்கள் எவ்வாறு வரும்?

யாது – எவன் என்னும் சொற்கள்:

யாது, எவன் என்னும் ஆயிரு கிளவியும்

அறியாப் பொருள்வயின் செறியத் தோன்றும்

யாது, எவன் என்னும் சொற்கள் முறையே அறியாத பொருள்களிடத்து அதனை அறிந்து கொள்ளுதற்கான வினாவாய் வரும்.

இச் செய்யுளிற்குப் பொருள் யாது?

இச் சொல்லிற்குப் பொருள் எவன்?.

அவற்றுள்,

யாது என வரூஉம் வினாவின் கிளவி

அறிந்த பொருள்வயின் ஐயம் தீர்தற்குத்

தெரிந்த கிளவி ஆதலும் உரித்தே

மேற்கண்ட சொற்களுள் யாது என்னும் சொல் அறியாத பொருள்களிடத்து மாத்திரமன்று. அறிந்த பொருள்களிடத்தும் ஐயம் தீர்த்தற்கு வருதல் உண்டு.

இம் மரங்களுள் கருங்காலி யாது?

8.இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவி குறித்து எழுதுக.

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்:

குறிப்பு

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்

வினைக்கு ஒருங்கு இயலும் காலம் தோன்றின்,

சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்;

இயற்பெயர் வழிய என்மனார் புலவர்.

கந்தனவன் வந்தான், முருகனவன் போர் செய்தான்

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே

சுட்டுப்பெயர்க் கிளவியை இயற்பெயர்க் கிளவிக்கு முற்படக் கிளத்தல் செய்யுளில் உண்டு.

அவணனங்கு நோய் செய்தான் ஆயிழாய் வேலன்

சுட்டு முதல் ஆகிய காரணக் கிளவியும்

சுட்டுப்பெயர் இயற்கையின் செறியத் தோன்றும்.

சுட்டு முதலாகிய காரணக் கிளவியும் சுட்டுப் பெயர் இயற்பெயரின்பின் அமைதல் போன்று இயற்பெயரின் பின்னே அமையும்.

சாத்தன் கையெழுதுமாறு வல்லன், அதனால் தந்தை உவக்கும்.

## வேற்றுமையியல்

வேற்றுமையியல் என்பது பொருள்களை வேற்றுமைப்படுதம்தியதால் பெற்ற பெயர் ஆகும்.அதற்கு ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும் ஒருகால் செயப்படு பொருளாக்கியும் ஒருகால் கருவியாக்கியும் ஒருகால் ஏற்பதாக்கியும் ஒருகால் நீங்க நிற்பது ஆகியும் ஒருகால் இடமாக்கியும் அவ்வாறு வேறுபடுத்துவது என்க என உரைவகுப்பார் தெய்வச்சிலையார்,

வேற்றுமைதாமே ஏழ் என மொழிப

விளி கொள்வதன்கண் விளியோடு எட்டே.

வேற்றுமை என்பதனை ஏழு எனக் குறிப்பர் தொல்காப்பியர், விளி வேற்றுமை என்பதனையும் சேர்த்து எட்டு என உரைப்பாரும் உண்டு.

குறிப்பு

அவைதாம்,

பெயர், ஐ, ஒடு, கு,

இன், அது, கண், விளி என்னும் ஈற்ற

மேற் சொன்ன வேற்றுமையின் பெயர்கள், எழுவாய், ஐ, ஒடு, கு, இன், கண், விளி என்பதாய் அமையும்.

**எழுவாய் வேற்றுமை:**

அவற்றுள்,

எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே

இவற்றுள் முதல்வேற்றுமை என்பது பெயர் தோன்றுகின்ற நிலை ஆகும். இவ் வேற்றுமை வேற்றுமை உருபும் விளியும் ஏலாது பெயராகவே தோன்றுவதால்தான் பெயர் தோன்றுநிலையே எனக் குறித்தார் தொல்காப்பியர்

**பெயர்ப் பயனிலைகள்**

பொருண்மை சுட்டல், வியங்கொள வருதல்

வினை நிலை உரைத்தல், வினாவிற்கு ஏற்றல்,

பண்பு கொள வருதல், பெயர் கொள வருதல், என்று

அன்றி அனைத்தும் பெயர்ப் பயனிலையே

பொருண்மை சுட்டல் - ஆ உண்டு

வியங்கொள வருதல் – ஆ வருக

பண்பு கொள வருதல் - ஆ கிடந்தது

வினாவிற்கு ஏற்றல், - யாது?

பண்பு கொள வருதல - ஆ கரிது

பெயர் கொள வருதல் - ஆ பல

பெயரின் ஆகிய தொகையுமார் உளவே;

அவ்வும் உரிய, அப்பாலான.

பெயர்ச்சொல் மட்டுமன்று, தொகைச்சொல்லும் பயனிலை ஏற்றுவரும்.

குறிப்பு

யானைக்கோடு கிடந்தது.

எவ் வயின் பெயரும் வெளிப்படத் தோன்றி

அவ் இயல் நிலையல் செவ்விது என்ப.

மூன்றிடத்து பெயரும் செவிபலனாகத் தோன்றி நின்று பயன்நிலை கொண்டு முடிதலும் உண்டு. இதன் வழி அவ்வாறு தோன்றாது நின்று பயனிலை கொண்டு முடிதலும் உண்டு என்பதும் பெறப்படும்.

கருவூருக்குச் செல்லாயோ சாத்தா! என்ற வழி செல்வல் எனவும், யான், யாது,செய்வல் என்றவழி செல்வல் என்றவழி இது செய் எனவும் அவன் யார் என்ற வழிப் படைத்தலைவன் எனவும் செப்பிய வழி, யான் இவனும் என்னும் எழுவாய் வெளிப்பட நின்று செல்வல் இது செய், படைத்தலைவன் என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.

கூறிய முறையின் உருபு நிலை திரியாது,

ஈறு பெயர்க்கு ஆகும் இயற்கைய என்ப.

எழுவாயாக நிற்கும் பெயர்கள் வேற்றுமை உருபினை ஏற்கும் போது உருபுநிலை திரிவதில்லை. அவை பெயருக்கு ஈறாய் நிற்கும் என்பார் தொல்காப்பியர்.

சாத்தன் - பெயர்

சாத்தனை- ஐ

சாத்தனொடு- ஒடு

சாத்தற்கு – கு

சாத்தனின் - இன்

சாத்தின்கண் - கண்

பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா,

தொழில் நிலை ஒட்டும் ஒன்று அலங்கடையே.

எழுவாயாகும் பெயர்கள் காலம் காட்டாது, தொழில்நிலை ஒட்டு எனப்பெறும் வினையாலணையும் பெயர் மட்டும் காலம் காட்டும்.

முருகன் வந்தான்

பரிசு கொடுத்தவன் சென்றான்

குறிப்பு

இரண்டாம் வேற்றுமை:

இரண்டாகுவதே,

ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

எவ் வழி வரினும், வினையே, வினைக்குறிப்பு,

அவ் இரு முதலின் தோன்றும், அதுவே.

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.அது வினை, வினை குறிப்பு என்பதனை அடிப்படையாகக் கொண்டு வரும். தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமைக்குரியது செயப்படு பொருள் எனக் குறிக்காது வினை, வினை குறிப்பு எனக் குறித்தமைக்குத் தெரிநிலை வினையில் செயற்படு பொருள் தெளிவாகத் தெரியும். அதனையே குறிப்பிட்டரோ என்று ஐயம் தோன்றும்.ஐயம் நீக்குதற்கே வினையே, வினைக்குறிப்பு எனக் குறித்தார் என்பார் சேனாவரையார்.

சேனாவரையார், செயற்படு பொருளை மூன்டறெபக் பிரிப்பார், அமை முறையே இயற்றப்படுவது, வேறுபடுத்தப்படுவது, எய்தப்படுவது என்பதாகும்.

இயற்றப்படுவது: - முன் இல்லாததனை உண்டாக்குதல்- இதற்கு ஒரு வாய்பாடு மட்டுமே தொல்காப்பியர் உரைத்தார்- சேனாவரையர் இயற்றப்படுவது ஒரு தன்மைத்தாதலின் அதற்கு ஒரு வாய்பாடே கூறினார் என உரை விளக்கம் தருவார்.

வேறுபடுக்கப்படுதல் முன் உள்ள ஒன்றினை வேறுபடுத்தல்

எயிலை இழைத்தான் - இயற்றப்படுவது

நாட்டை அழித்தான் -வேறுபடுத்தப்படுவது

அரசை வென்றான் - எய்தப்படுவது

காப்பின், ஒப்பின், ஊர்தியின், இழையின்,

ஓப்பின், புகழின், பழியின், என்றா-

பெறலின், இழவின், காதலின், வெகுளியின்,

செறலின், உவத்தலின், கற்பின், என்றா-

அறுத்தலின், குறைத்தலின், தொகுத்தலின், பிரித்தலின்,

நிறுத்தலின், அளவின், எண்ணின், என்றா-
ஆக்கலின், சார்தலின், செலவின், கன்றலின்,
நோக்கலின், அஞ்சலின், சிதைப்பின், என்றா-
அன்ன பிறவும் அம் முதற் பொருள
என்ன கிளவியும் அதன் பால என்மனார் .

குறிப்பு

காப்பு – ஊரைக் காக்கும்

ஒப்பு - தந்தையை ஒக்கும்

ஊர்தியின்- தேரை ஊரும்

புகழின்- குரிசிலைப் புகழும்

பெறலின்- புதல்வரைப் பெறும்

பழியின் - நாட்டைப் பழிக்கும்

இழவின் - பொருளை இழக்கும்

காதலின் - மனைவியைக் காதலிக்கும்

வெகுளியின்– பகைவரை வெகுளும்

செறலின் - செற்றாரைச் செறும்

உவத்தலின் - நாட்டாரை உவக்கும்

கற்பின்- நூலைக்கற்கும்

அறுத்தலின் - நாணை அறுக்கும்

குறைத்தலின்,- மரத்தைக் குறைக்கும்

தொகுத்தலின்,- நெல்லைத் தொகுக்கும்

பிரித்தலின் - வேலியைப் பிரிக்கும்

நிறுத்தலின் - பொன்னை நிறுக்கும்

அளவின் - அரிசியை அளக்கும்

எண்ணின்– அடைக்காயை எண்ணும்

குறிப்பு

ஆக்கலின் - அறத்தை ஆக்கும்

சார்தலின் - ஊரைச்சாரும்

செலவின் - நெறியைச் செல்லும்

கன்றலின் - சூதினைக் கன்றும்

நோக்கலின் - கணையை நோக்கும்

அஞ்சலின் - கள்வரை அஞ்சும்

சிதைப்பின் - நாட்டைச் சிதைக்கும்

அன்னபிறவும் என்றமையான்,

பகைவரைப் பணித்தான், சோற்றையட்டான், குழையையுடையான், பொருளையிலன் என்னுந் தொடக்கதன கொள்க என்பார் சேனாவரையர்.

**மூன்றாம் வேற்றுமை:**

மூன்றாகுவதே,

ஒடு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

வினைமுதல், கருவி, அனை முதற்றுஅதுவே

மூன்றாம் வேற்றுமை என்பது ஒடு எனப் பெயர் கொண்ட வேற்றுமை உருபு ஆகும். அது வினைமுதல், கருவி என்பதனைக் கொண்டு வரும்.வினைமுதல் என்பது கருவி முதலியாகிய கரணங்களைத் தொழிற்படுத்துவது. கருவி என்பது வினைமுதலின் தொழிற்பயனை செயற்படுபொருட்கண் சென்று உய்ப்பது.

அதனின் இயறல், அதன்தகு கிளவி,

அதன் வினைப்படுதல், அதனின் ஆதல்,

அதனின் கோடல், அதனொடு மயங்கல்,

அதனொடு இயைந்த ஒரு வினைக் கிளவி,

அதனொடு இயைந்த வேறு வினைக் கிளவி,

அதனொடு இயைந்த ஒப்பு அல் ஒப்பு உரை,

இன் ஆன் ஏது,ஈங்கு, என வரூஉம்

அன்ன பிறவும் அதன் பால என்மனார்

குறிப்பு

அதனின் இயறல் - மண்ணானியன்ற குடம்

மண்முதற்காரணம். முதற்காரணமாவது காரியத்தோடு ஒற்றுமையுடையது.

அதன் தகு கிளவி- அறிவானமைந்த சான்றோர் என்பன. இவை கருவிப்பாற்படும்.

அதன் வினைப்படுதல்- சாத்தனான் முடியுமிக்கருமம் என்பது இதுவினைமுதற்பாற்படும்.

அதனின் ஆதல் - வாணிகத்தானாயினான் என்பது,

அதனின் கோடல் - கரணத்தாற் கொண்ட அரிசி என்பது. இவையுங் கருவிப் பாற்படும். இவ் ஐந்து பொருளும் ஓடுவுருபிற்குஞ் சிறுபான்மைபற்றி உரியவாயினும்,பெரும்பான்மைபற்றி ஆனுருபிற்கே உரிய போலக் கூறினார் எனக் குறிப்பார் சேனாவரையர்

அதனொடு மயங்கல் - எண்ணொடு விராய அரிசி என்பது .

அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி - ஆசிரியனொடு வந்த மாணாக்கன் என்பது , வருதற்றொழில் இருவர்க்கு மொத்தலின், ஒருவினைக் கிளவியாயிற்று.

அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி - மலையொடு பொருத மால்யானை என்பது , பொருதல் யானைக் கல்லதுஇன்மையின் வேறுவினைக் கிளவியாயிற்று.

அதனோடு இயைந்த ஒப்பல் ஒப்புரை - பொன்னோடிரும்பனையர் நின்னொடு பிறரே என்பது ஒப்பல்லதனை ஒப்பாகக் கூறலின் ஒப்பலொப்புரை யாயிற்று.

இம் மூன்றற்கும் உடனிகழ்தல் பொது வென்பதூஉம் அவை ஒடுவெனுருபிற்கே யுரிய என்பதூஉம்உணர்த்திய, அதனோடியைதல் மூன்றற்குங் கூறினார். அதனொடு மயங்கற்கும் ஈதொக்கும். எல்லாப் பொருட்கண்ணும் அது என்றது உருபேற்கும் பெயர்ப்பொருளை.அதற்கு வினையுடைமையின்(சொல் - 76) என்பதற்கும் ஈதொக்கும். இன்னானேது என்பது முயற்சியிற் பிறத்தலா0

ன் ஒலி நிலையாது என்பது, அதனினாதல் எனக் காரக ஏது முற்கூறப்பட்டமையான், இது ஞாபக ஏதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும் இன்னுருபிற்கும்உரித்தென்பது விளக்கிய ஏது என்னாது இன்,ஆன்,ஏது என்றார்.இன்னானென்பது உம்மைத் தொகை. அவற்றது ஏதுப் பொருண்மை

அதனினியற லென்பதற்குத் தச்சன் செய்த சிறுமாவைய மென்றும்,இன்னானென்பதற்குக் கண்ணாற் கொத்தை காலான்

குறிப்பு

முடவனென்றும் உதாரணங்காட்டினாரால் உரையாசிரியரெனின்;- அற்றன்று; தச்சன் செய்த சிறுமா வையமென்பது வினைமுதல் கருவி யனை முதற்று(சொல் - 73) என்புழி யடங்குதலான் ஈண்டும் பாற்படுக்க வேண்டாமையானும் , சினைவிகாரத்தை முதன் மேலேற்றிக் கூறும் பொருண்மை இன்னானென்பதனாற் பெறப்படாமையானும். அது போலியுரை யென்க என விளக்குவார் சேனாவரையர்

ஒடுவும் ஆனும் இரண்டு வேற்றுமை யாகற்பால வெனின்;- அற்றன்று ; வேற்றுமை மயக்கமாவது ஒரு வேற்று மையது ஒரு பொருட் கண்ணாக, சில பொருட் கண்ணாக ஏனை வேற்றுமையுஞ் சேறலன்றே; அவ்வாறன்றிச் சிறி தொழித்து எல்லாப் பொருட்கண்ணும் இரண்டுருபுஞ் சேறலானும்,வடநூலுள் பொருள் வேற்றுமையல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையாக ஓதப்படாமை யானும்,ஈண்டெல்லாவாசிரியரும் ஒரு வேற்றுமையாகவே யோதினாரென்க.வடநூலொடு மாறுகொள்ளாமை கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின்,விளிவேற்றுமையைஎழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற்பாலராவர், அவ்வாறடக்கலில ரெனின் - அற்றன்று; விளிவேற்றுமையை எழுவாய் வேற்று மைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்று;

ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை

வேறெ விளம்பான் பெயரது விகாரமென்

றோதிய புலவனு முளனொரு வகையா

னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்

என்பவாகலின் ஐந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமையாக நேர்ந்தாரென்பது பெறப்படும்; ஆசிரியர் அவர் மதம் பற்றிக் கூறினாராகலின் அதனொடு மாறு கொள்ளா தென்பது. இக் கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள் ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறிற் றென்க என்பது சேனாவரையர் உரைக்குறிப்பாம்.

அன்னபிறவும்என்றதனால்,

கண்ணாற்கொத்தை, தூங்கு கையானோங்கு நடைய ( புறம் - 22) மதியோ டொக்குமுகம், சூலொடு கழுதை பாரஞ் சுமந்தது என்பன போல்வன கொள்க.

**நான்காம் வேற்றுமை:**

குறிப்பு

நான்காகுவதே,

கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

எப் பொருள் ஆயினும் கொள்ளும், அதுவே .

நான்காம் வேற்றுமை உருபு கு என்பதாகும். அது ஏதேனும் ஒரு பொருளை ஏற்பதற்காய் வரும்.எப்பொருளாயினும் கொள்ளுமது என்பது நான்காம் வேற்றுமையின் பொதுப்பொருளாய் நிற்கும். தொல்காப்பியர் பின் வகுத்துச் சொல்வன எல்லாம் பொதுப்பொருளாகும்.

அதற்குப் படு பொருளின், அது ஆகு கிளவியின்,

அதற்கு யாப்பு உடைமையின், அதன் பொருட்டு ஆதலின்,

நட்பின், பகையின், காதலின், சிறப்பின், என்று

அப் பொருட் கிளவியும் அதன் பால என்மனார்

அதற்கு வினையுடைமை - கரும்பிற்கு வேலி

அதற்குடம்படுதல் - சாத்தற்கு மகளுடம்பட்டார் என்பது. சான்றோர் கொலைக்குடம்பட்டார் என்பதுமது.

அதற்குப் படுபொருளாவது பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒரு பங்கிற்படும் பொருள்; அது சாத்தற்குக் கூறு கொற்றன் என்பது.

அதுவாகு கிளவி கடி சூத்திரத்திற்குப் பொன் என்பது. பொன்கடிசூத்திர மாய்த் திரியுமாகலின் அதுவாகு கிளவி யென்றார். கிளவி - பொருள்.

அதற்கு யாப்புடைமை-கைக்கு யாப்புடையது கடகம் என்பது.

அதற்பொருட்டாதல் - கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்பது.

நட்பு-அவற்கு நட்டான், அவற்குத் தமன் என்பன.

பகை - அவற்குப் பகை, அவற்கு மாற்றான் என்பன.

காதல் - நட்டார்க்குக் காதலன், புதல்வற்குஅன்புறும் என்பன.

சிறப்பு - வடுகரசர்க்குச் சிறந்தால் சோழியவரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அப்பொருளென்றது அன்னபொருளை! இவ்வாடையும் அந்நூலானியன்றது என்றதுபோல.

குறிப்பு

எனவே, அன்னபிறவும்என்றவாறாம்.

அப்பொருட்கிளவியுமென்றதனால், பிணிக்குமருந்து,நட்டார்க்குத் தோற்கும், அவற்குத் தக்காளிவள், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பன போல்வனவெல்லாங் கொள்க.

**ஐந்தாம் வேற்றுமை:**

ஐந்தாகுவதே

இன் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

இதனின் இற்று இது என்னும், அதுவே

ஐந்தாம் வேற்றுமை உருபு இன் என்பதாகும். இவ் வேற்றுமை உருபு இதனின் இத்தன்னையுடையது ஆதல் என்னும் பொருளில் வரும். ஒன்றினொடு பிறிதொன்றினை ஒப்பிடும்போது வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பதானே வரும். எனவே அவற்றை வரையறுத்துக் கூறுகிறார் தொல்காப்பியர். ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள் நீங்கல், ஒப்பு,எல்லை, ஏது என நான்கு வகைப்படும் என்பார் சேனாவரையர்.

வண்ணம், வடிவே, அளவே, சுவையே,

தண்மை, வெம்மை, அச்சம், என்றா-

நன்மை, தீமை, சிறுமை, பெருமை,

வன்மை, மென்மை, கடுமை, என்றா-

முதுமை, இளமை, சிறத்தல், இழித்தல்,

புதுமை, பழமை, ஆக்கம் ,என்றா-

இன்மை, உடைமை, நாற்றம், தீர்தல்,

பன்மை, சின்மை, பற்று விடுதல், என்று-

அன்ன பிறவும் அதன் பால என்மனார் .

வண்ண முதலாகப் பற்றுவிடுதல் ஈறாகச் சொல்லப்பட்டனவும் அவைபோல்வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைத் திறத்தனவாம்

வண்ணம் - வெண்மை, கருமை முதலாயின,

குறிப்பு

வடிவு - வட்டம், சதுர முதலாயின.

அளவு நெடுமை, குறுமை முதலாயின .

சுவை - கைப்பு, புளிப்பு முதலாயின.

நாற்றம் - நறுநாற்றம், தீநாற்றம் முதலாயின.

காக்கையிற்கரிது களம்பழம் - வண்ணம்

இதனின் வட்டமிது - வடிவு

இதனி னெடிதிது - அளவு

இதனிற் றீவிதிது- சுவை

இதனிற் றண்ணிதிது– தண்மை

இதனின் வெய்திது – வெம்மை

இதனி னன்றிது – நன்மை

இதனிற் றீதிது - தீமை

இதனிற் சிறிதிது - சிறுமை

இதனிற் பெரிதிது - பெருமை

இதனின் வலிதிது – வன்மை

இதனின் மெலிதிது – மென்மை

இதனிற் கடிதிது - கடுமை

இதனின் முதிதிது - முதுமை

இதனி னிளைதிது - இளமை

இதனிற் சிறந்ததிது – சிறத்தல்

இதனி னிழிந்ததிது - இழித்தல்

இதனிற் புதிதிது - புதுமை

இதனிற் பழைதிது - பழமை

இவனி னிலனிவன் - இன்மை

இவனி னுடையனிவன் - உடைமை

குறிப்பு

இதனி னாறுமிது – நாற்றம்

இதனிற் பல விவை – பன்மை

இதனிற் சில விவை – சின்மை

அச்சம் - கள்ளரி னஞ்சும்

ஆக்கம் - வாணிகத்தினாயினான்

தீர்தல் -ஊரிற் றீர்ந்தான்

பற்றுவிடுதல் - காமத்திற் பற்று விட்டான் எனவும் வரும்.

அச்சமுதலிய நான்கு மொழித்து ஒழிந்த இருபத்து நான்கும் ஒத்த பண்பு வேறுபாடுபற்றிப் பொருஉப் பொருள் விரித்தவாறு என்பார் சேனாவரையர், எல்லைப் பொருளின்கண்ணும் மேற்குறித்த இருபத்துநான்கு வாய்பாடுகளும் வரும்.

கருவூரின் கிழக்கு

அன்னபிறவும்என்றதனால், அவனின்அனியளிவன், அதனிற் சேய்த்திது, இகழ்ச்சியிற் கெட்டான், மகிழ்ச்சியின் மைந்துற்றான் என்பன போல்வன கொள்க.

**ஆறாம் வேற்றுமை:**

ஆறாகுவதே,

அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

தன்னினும் பிறிதினும், இதனது இது எனும்

அன்ன கிளவிக் கிழமைத்து, அதுவே .

ஆறாம் வேற்றுமை உருபு அதுவெனப் பெயரியதாம். இது தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் பொருளில் வரும்.

இயற்கையின், உடைமையின், முறைமையின், கிழமையின்,

செயற்கையின், முதுமையின், வினையின், என்றா-

கருவியின், துணையின், கலத்தின், முதலின்,

ஒருவழி உறுப்பின், குழுவின், என்றா

தெரிந்து மொழிச் செய்தியின், நிலையின், வாழ்ச்சியின்,

திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன;

கூறிய மருங்கின் தோன்றும் கிளவி

ஆறன் பால என்மனார் புலவர்

குறிப்பு

இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்டனவும் திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப் பொருட்கண் தோன்றுஞ் சொல்லெல்லாம் ஆறாம் வேற்றுமைத் திறத்தனவென்று சொல்லுவர் புலவர்.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமென்றாரேனும் திரிந்து வேறுபடுதல் அன்ன பிறவுமென்றதனால் தழுவப்படுவன வற்றுள் ஒரு சாரனவற்றிற்கே கொள்க.

எள்ளது குப்பை, படையது குழாம் என்பன குழூஉக் கிழமை. அவை முறையானே ஒன்று பல குழீஇயதும் வேறு பல குழீஇயதுமாம்.

சாத்தனதியற்கை நிலத்ததகலம் என்பன இயற்கைக்கிழமை

சாத்தனது நிலைமை, சாத்தன தில்லாமை என்பன நிலைக்கிழமை. இவையொன்றியற்கிழமை

யானையதுகோடு, புலியதுகிர் என்பன உறுப்பின் கிழமை. உறுப்பாவது பொருளின் ஏகதேசமென்ப தறிவித்தற்கு ஒருவழி உறுப்பென்றார்.

சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக்கிழமை.

அரசனது முதுமை, அரசனது முதிர்வு என்பன முதுமைக்கிழமை. முதுமை யென்பது பிறிதோர் காரணம் பற்றாது காலம் பற்றி ஒருதலையாக அப் பொருட்கட்டோன்றும் பருவமாகலின் செயற்கையு ளடக்காது வேறு கூறினார்.

சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக்கிழமை. இவை மெய்திரிந்தாய தற்கிழமை.

சாத்தனது உடைமை, சாத்தனது தோட்டம் என்பன உடைமைக்கிழமை

மறியதுதாய். மறியது தந்தை என்பன முறைமைக்கிழமை.

இசையது கருவி, வனை கலத்தது திகிரி என்பன கருவிக்கிழமை.

அவனது துணை, அவனதிணங்கு என்பன துணைக்கிழமை.

நிலத்ததொற்றிக்கலம் சாத்தனது விலைத்தீட்டு என்பன கலக்கிழமை.

ஒற்றியது முதல், ஒற்றியது பொருள் என்பன முதற்கிழமை.

குறிப்பு

கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல் என்பன செய்யுட்கிழமை.

தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தியாயின. இவை பொருட்பிறிதின்கிழமை.

முருகனது குறிஞ்சிநிலம், வெள்ளியதாட்சி என்பன கிழமைக்கிழமை.

காட்டதியானை, யானையது காடு என்பன வாழ்ச்சிக்கிழமை. முருகனது குறிஞ்சிநிலம், யானையது காடு என்பன நிலப்பிறிதின்கிழமை. காட்டதியானை என்பது பொருட்பிறிதின்கிழமை ,

ஏனையது காலப் பிறிதின்கிழமை.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவு மென்றதனால் எட்சாந்து கோட்டு நூறு சாத்தனதொப்பு தொகையதுவிரி, பொருளது கேடு, சொல்லது பொருள் என்னுந் தொடக்கத்தன கொள்க . அவற்றுள் எட்சாந்து கோட்டு நூறு என்பன முதலாயின முழுவதூஉந் திரிதலின், வேறு கூறினார்.

மேற்சொல்லப்பட்ட தற்கிழமை பிறிதின்கிழமை யென்பனவற்றை விரித்தவாறு

**ஏழாம் வேற்றுமை:**

ஏழாகுவதே,

கண் எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

வினை செய் இடத்தின், நிலத்தின், காலத்தின்,

அனை வகைக் குறிப்பின் தோன்றும், அதுவே.

ஏழாம் வேற்றுமை உருபு கண் என்பதாகும். அது வினைசெய் இடமும் நிலமும் காலமும் என்னும் மூன்று பொருளின்கண் வரும். தெய்வச்சிலையார் வினை நிகழுமிடத்தினும் காலத்தினும் அவ்விருவகைக் குறிப்பினும் தோன்றும் என்பார்.

தட்டுப்புடைக்கண் வந்தான் - இடம்

மாடத்தின்கண் இருந்தான் - நிலம்

கூதிர்கண் வந்தான் - காலம்

கண் என்னும் எருபு தோன்றும் இடமனைத்தும் ஏழாம் வேற்றுமை எனக் கொள்ளக்கூடாது,வினைசெய் இடமும் நிலமும் காலமும் என்னும் இடங்களில் வருவனவற்றையே கொள்ளல் வேண்டும் என்பார். இதனை சேனாவரையர் குறிப்பின் தோன்றுமது என்பதனால் உணரமுடியும்

கண், கால், புறம், அகம், உள், உழை, கீழ், மேல்,

பின், சார், அயல், புடை, தேவகை, எனாஅ

முன்,இடை, கடை, தலை, வலம், இடம், எனாஅ

அன்ன பிறவும் அதன் பால என்மனார்

குறிப்பு

கண் முதலாக இடமீறாகச் சொல்லப்பட்ட பத்தொன்பது பொருளும் அவை போல்வன பிறவும் ஏழாவதன்றிறத்தன.

கண்ணென்னும் பொருளாவது கண்ணின்று கூறுதலாற்றா னவனாயின்" (கலி-37) எனவும் ,கண்ணகன்ஞாலம் எனவும்,கண்ணென்றும் இடைச்சொல்லால்உணர்த்தப்படும் கால் புறம்,முகம்,உள் என்பன முரலாயினவற்றது பொருள் வேற்றுமை வழக்கு நோக்கி யுணர்ந்து கொள்க.

கண்ணின்று சொல்லியானை என்கண்ணின்றிவை சொல்லற்பாலையல்லை என்றும்,

ஊர்க்காற்செய்கை ஊர்கட்செய் என்றும்,

ஊர்ப்புறத்து நின்ற மரத்தை ஊர்க்கண்மரம் என்றும்,

எயிலகத்துப் புக்கானை எயிற்கட்புக்கான் என்றும்,

இல்லுளிருந்தானை இற்கணிருந்தான் என்றும், அரசனுழை யிருந்தானை அரசன் கணிருந்தான் என்றும்,

ஆலின் கீழ்க் கிடந்த ஆவை ஆலின்கட் கிடந்தது என்றும்,

மரத்தின் மேலிருந்த குரங்கை மரத்தின் கணிருந்தது என்றும்,

ஏர்ப்பின் சென்றானை ஏர்க்கட் சென்றான் என்றான் என்றும்,

காட்டுச் சாரோடுவதனைக் காட்டின்கணோடும் என்றும்,

உறையூர்க் கயனின்ற சிராப்பள்ளிக் குன்றை உரையூர்க்கட்குன்று என்றும் ,

எயிற்புடை நின்றாரை எயிற்கண் நின்றார் என்றும்,

வடபால்வேங்கடம் தென்பாற் குமரி என்பனவற்றை வடக்கண்வேங்கடம் தெற்கட்குமரி என்றும் ,

புலிமுன்பட்டானைப் புலிக்கட்பட்டான் என்றும்,

நூலினிடையுங் கடையுந் தலைதுநின்ற மங்கலத்தை நூற்கண்மங்கலம் என்றும்,

குறிப்பு

கைவலத்துள்ளதனைத் கைக்கணுள்ளது என்றும்,

தன்னிடத்து நிகழ்வதனைத் தன்கண் நிகழ்வது என்றும் அவ்விடப் பொருள் பற்றி ஏழாம் வேற்றுமை வந்தவாறு கண்டுகொள்க.

எனாஅ என்பது எண்ணிடைச்சொல்.

கண்முதலாயினவெல்லாம் உருபென்றாரால் உரையாசிரியரெனின் :- உருபாயின், ஏழாவதற்குக் கண்ணென்பது உருபாதல் மேலே பெறப்பட்டமையாற் பெயர்த்துங் கண்காலென்றல் கூறியது கூறிற்றாமாகலானும் ஊர்ப்புறத்திருந்தான், ஊரகத்திருந்தான், கைவலத்துள்ளது கொடுக்கும் எனப்புறம் அகம் வலமென்பனவற்றுவழி அத்துச்சாரியை கொடுத்து உதாரணங் காட்டினமையானும் அவர்க்கது கருத்தன்றென்க. உருபல்லவேல், என்னுழை, என்முன் என நிலைமொழி உருபிற்கோதிய செய்கை பெற்றவாறென்னையெனின்:- அதற்பொருட்டாகலின் (சொல்-76) எனவும் தம்முடைய தண்ணளியுந் தாமும் எனவும் உருபின் பொருள்பட வரும். பிறமொழி வந்துழியும் நிலைமொழி அச்செய்கை பெற்று நிற்றலின், அச்செய்கை உருபுபுணர்ச்சிக்கேயென்னும் யாப்புறவின் றென்க என இளம்பூரணரை மறுத்துரைப்பார் சேனாவரையர்.

அன்னபிறவு மென்றதனால்,

பொருட்கண் உணர்வு, எண்கண் அன்புடையன்,மலர்க்கண் நாற்றம் , ஆகாயத்துக்கட்பருந்து என்னுந் தொடக்கத்தனவும் கொள்க என்பதாம்.

**புறனடை:**

வேற்றுமைப் பொருளை விரிக்கும் காலை,

ஈற்று நின்று இயலும் தொகைவயின் பிரிந்து,

பல் ஆறாகப் பொருள் புணர்ந்து இசைக்கும்

எல்லாச் சொல்லும் உரிய என்ப

வேற்றுமைப் பொருளை விரிக்கும் பொழுது அன்மொழித்தொகையினை விரித்துப் பொருள் உணர்த்துமாறு போல விரித்து உரைக்க வேண்டும் என்பார் தொல்காப்பியர்,ஈற்று நின்றியலும் அன்மொழித்தொகை எனத் தொல்காப்பியர் எச்சவியல் நூற்பா ( நூற்பா எண் - 22 ) குறிப்பதால்

இவ்விடத்துச் சுட்டப்பெறுவது அன்மொழித்தொகையையே எனக் கருதுவார் சேனாவரையர்,

குறிப்பு

தாழ்குழல் - அன்மொழித்தொகை – தாழ்குழலை உடையவள்

கருங்குழற்பேதை- வேற்றுமைத்தொகை – கருங்குழலை உடைய பேதை

பயிற்சி வினாக்கள்:

1. இரண்டாம் வேற்றுமையை விளக்கி வரைக.

இரண்டாம் வேற்றுமை:

இரண்டாகுவதே,

ஐ எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

எவ் வழி வரினும், வினையே, வினைக்குறிப்பு,

அவ் இரு முதலின் தோன்றும், அதுவே.

இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பதாகும்.அது வினை, வினை குறிப்பு என்பதனை அடிப்படையாகக் கொண்டு வரும். தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமைக்குரியது செயப்படு பொருள் எனக் குறிக்காது வினை, வினை குறிப்பு எனக் குறித்தமைக்கு தெரிநிலை வினையில் செயற்படு பொருள் தெளிவாகத் தெரியும். அதனையே குறிப்பிட்டரோ என்று ஐயம் தோன்றும்.ஐயம் நீக்குதற்கே வினையே, வினைக்குறிப்பு எனக் குறித்தார் என்பார் சேனாவரையார்.

சேனாவரையார், செயற்படு பொருளை மூன்று எனப் பிரிப்பார், அவை முறையே இயற்றப்படுவது, வேறுபடுத்தப்படுவது, எய்தப்படுவது என்பதாகும்

இயற்றப்படுவது: - முன் இல்லாததனை உண்டாக்குதல்- இதற்கு ஒரு வாய்பாடு மட்டுமே தொல்காப்பியர் உரைத்தார்- சேனாவரையர் இயற்றப்படுவது ஒரு தன்னைத்தாதலின் அதற்கு ஒரு வாய்பாடே கூறினார் என உரை விளக்கம் தருவார்.

வேறுபடுக்கப்படுதல் முன் உள்ள ஒன்றினை வேறுபடுத்தல்

எயிலை இழைத்தான் - இயற்றப்படுவது

நாட்டை அழித்தான் -வேறுபடுத்தப்படுவது

அரசை வென்றான் - எய்தப்படுவது

காப்பின், ஒப்பின், ஊர்தியின், இழையின்,

ஓப்பின், புகழின், பழியின், என்றா-

பெறலின், இழவின், காதலின், வெகுளியின்,

செறலின், உவத்தலின், கற்பின், என்றா-

அறுத்தலின், குறைத்தலின், தொகுத்தலின், பிரித்தலின்,

நிறுத்தலின், அளவின், எண்ணின், என்றா-

ஆக்கலின், சார்தலின், செலவின், கன்றலின்,

நோக்கலின், அஞ்சலின், சிதைப்பின், என்றா-

அன்ன பிறவும் அம் முதற் பொருள

என்ன கிளவியும் அதன் பால என்மனார் .

## குறிப்பு

காப்பு – ஊரைக் காக்கும்

ஒப்பு - தந்தையை ஒக்கும்

ஊர்தியின்- தேரை ஊரும்

புகழின்- குரிசிலைப் புகழும்

பெறலின்- புதல்வரைப் பெறும்

பழியின்- நாட்டைப் பழிக்கும்

இழவின் - பொருளை இழக்கும்

காதலின் - மனைவியைக் காதலிக்கும்

வெகுளியின்– பகைவரை வெகுளும்

செறலின் - செற்றாரைச் செறும்

உவத்தலின் - நாட்டாரை உவக்கும்

கற்பின் - நூலைக்கற்கும்

அறுத்தலின் - நாணை அறுக்கும்

குறைத்தலின் - மரத்தைக் குறைக்கும்

குறிப்பு

தொகுத்தலின் - நெல்லைத் தொகுக்கும்

பிரித்தலின் - வேலியைப் பிரிக்கும்

நிறுத்தலின் - பொன்னை நிறுக்கும்

அளவின் - அரிசியை அளக்கும்

எண்ணின– அடைக்காயை எண்ணும்

ஆக்கலின் - அறத்தை ஆக்கும்

சார்தலின் - ஊரைச்சாரும்

செலவின் - நெறியைச் செல்லும்

கன்றலின் - சூதினைக் கன்றும்

நோக்கலின் - கணையை நோக்கும்

அஞ்சலின் - கள்வரை அஞ்சும்

சிதைப்பின் - நாட்டைச் சிதைக்கும்

அன்னபிறவும் என்றமையான்

பகைவரைப் பணித்தான், சோற்றையட்டான், குழையையுடையான், பொருளையிலன் என்னுந் தொடக்கதன கொள்க என்பார் சேனாவரையர்.

2.நான்காம் வேற்றுமை பயின்றுவரும் இடங்களைச் சுட்டியுரைக்க.

நான்காம் வேற்றுமை:

நான்காகுவதே,

கு எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

எப் பொருள் ஆயினும் கொள்ளும், அதுவே .

நான்காம் வேற்றுமை உருபு கு என்பதாகும். அது ஏதேனும் ஒரு பொருளை ஏற்பதற்காய் வரும்.எப்பொருளாயினும் கொள்ளுமது என்பது நான்காம் வேற்றமையின் பொதுப்பொருளாய் நிற்கும். தொல்காப்பியர் பின் வகுத்துச் சொல்வன எல்லாம் பொதுப்பொருளாகும்.

அதற்கு வினை உடைமையின், அதற்கு உடம்படுதலின்,

அதற்குப் படு பொருளின், அது ஆகு கிளவியின்,

குறிப்பு

அதற்கு யாப்பு உடைமையின், அதன் பொருட்டு ஆதலின்,

நட்பின், பகையின், காதலின், சிறப்பின், என்று

அப் பொருட் கிளவியும் அதன் பால என்மனார்

அதற்கு வினையுடைமை - கரும்பிற்கு வேலி

அதற்குடம்படுதல் - சாத்தற்கு மகளுடம்பட்டார் என்பது. சான்றோர் கொலைக்குடம்பட்டார் என்பதுமது.

அதற்குப் படுபொருளாவது பொதுவாகிய பொருளைப் பகுக்குங்கால் ஒரு பங்கிற்படும் பொருள்; அது சாத்தற்குக் கூறு கொற்றன் என்பது.

அதுவாகு கிளவி கடி சூத்திரத்திற்குப் பொன் என்பது. பொன்கடிசூத்திர மாய்த் திரியுமாகலின் அதுவாகு கிளவி யென்றார். கிளவி - பொருள்.

அதற்கு யாப்புடைமை-கைக்கு யாப்புடையது கடகம் என்பது.

அதற்பொருட்டாதல் - கூழிற்குக் குற்றேவல் செய்யும் என்பது.

நட்பு-அவற்கு நட்டான், அவற்குத் தமன் என்பன.

பகை - அவற்குப் பகை, அவற்கு மாற்றான் என்பன.

காதல் - நட்டார்க்குக் காதலன், புதல்வறக் அன்புறும் என்பன.

சிறப்பு - வடுகரசர்க்குச் சிறந்தால் சோழியவரசர், கற்பார்க்குச் சிறந்தது செவி என்பன.

அப்பொருளென்றது அன்னபொருளை!இவ்வாடையும்அந்நூலானியன்றதுஎன்றதுபோல.

எனவே, அன்னபிறவு மென்றவாறாம்.

அப்பொருட்கிளவியுமென்றதனால், பிணிக்கு மருந்து, நட்டார்க்குத் தோற்கும்,அவற்குத் தக்காளிவள், உற்றார்க்குரியர் பொற்றொடி மகளிர் என்பன போல்வனவெல்லாங் கொள்க.

3.தற்கிழமையிம் பிறிதின் கிழமையிலும் பயன்றுவரும் வேற்றுமையை விவரி?

ஆறாம் வேற்றுமை:

ஆறாகுவதே,

அது எனப் பெயரிய வேற்றுமைக் கிளவி;

தன்னினும் பிறிதினும், இதனது இது எனும்

அன்ன கிளவிக் கிழமைத்து, அதுவே.

ஆறாம் வேற்றுமை உருபு அதுவெனப் பெயரியதாம். இது தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் பொருளில் வரும்.

குறிப்பு

இயற்கையின், உடைமையின், முறைமையின், கிழமையின்,

செயற்கையின், முதுமையின், வினையின், என்றா-

கருவியின், துணையின், கலத்தின், முதலின்,

ஒருவழி உறுப்பின், குழுவின், என்றா

தெரிந்து மொழிச் செய்தியின், நிலையின், வாழ்ச்சியின்,

திரிந்து வேறுபடூஉம் பிறவும் அன்ன;

கூறிய மருங்கின் தோன்றும் கிளவி

ஆறன் பால என்மனார் புலவர்

இயற்கை முதலாக வாழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்டனவும் திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமாகிய மேற்கூறப்பட்ட கிழமைப் பொருட்கண் தோன்றுஞ் சொல்லெல்லாம் ஆறாம் வேற்றுமைத் திறத்தனவென்று சொல்லுவர் புலவர்.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவுமென்றாரேனும் திரிந்து வேறுபடுதல் அன்ன பிறவுமென்றதனால் தழுவப்படுவன வற்றுள் ஒரு சாரனவற்றிற்கே கொள்க.

எள்ளது குப்பை, படையது குழாம் என்பன குழூஉக் கிழமை. அவை முறையானே ஒன்று பல குழீஇயதும் வேறு பல குழீஇயதுமாம்.

சாத்தனதியற்கை நிலத்ததகலம் என்பன இயற்கைக்கிழமை

சாத்தனது நிலைமை, சாத்தன தில்லாமை என்பன நிலைக்கிழமை. இவையொன்றியற்கிழமை

யானையதுகோடு, புலியதுகிர் என்பன உறுப்பின் கிழமை. உறுப்பாவது பொருளின் ஏகதேசமென்ப தறிவித்தற்கு ஒருவழி யுறுப்பென்றார்.

சாத்தனது செயற்கை, சாத்தனது கற்றறிவு என்பன செயற்கைக்கிழமை.

குறிப்பு

அரசனது முதுமை, அரசனது முதிர்வு என்பன முதுமைக்கிழமை. முதுமை யென்பது பிறிதோர் காரணம் பற்றாது காலம் பற்றி ஒருதலையாக அப் பொருட்கட்டோன்றும் பருவமாகலின் செயற்கையு ளடக்காது வேறு கூறினார்.

சாத்தனது தொழில், சாத்தனது செலவு என்பன வினைக்கிழமை. இவை மெய்திரிந்தாய தற்கிழமை.

சாத்தனது உடைமை, சாத்தனது தோட்டம் என்பன உடைமைக்கிழமை

மறியதுதாய். மறியது தந்தை என்பன முறைமைக்கிழமை.

இசையது கருவி, வனை கலத்தது திகிரி என்பன கருவிக்கிழமை.

அவனது துணை, அவனதிணங்கு என்பன துணைக்கிழமை.

நிலத்ததொற்றிக்கலம்4 சாத்தனது விலைத்தீட்டு என்பன கலக்கிழமை.

ஒற்றியது முதல், ஒற்றியது பொருள் என்பன முதற்கிழமை.

கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல் என்பன செய்யுட்கிழமை.

தெரிந்து மொழியாற் செய்யப்படுதலின் தெரிந்து மொழிச் செய்தியாயின. இவை பொருட்பிறிதின்கிழமை.

முருகனது குறிஞ்சிநிலம், வெள்ளியதாட்சி என்பன கிழமைக்கிழமை.

காட்டதியானை, யானையது காடு என்பன வாழ்ச்சிக்கிழமை. முருகனது குறிஞ்சிநிலம், யானையது காடு என்பன நிலப்பிறிதின்கிழமை. காட்டதியானை என்பது பொருட்பிறிதின்கிழமை ,

ஏனையது காலப் பிறிதின்கிழமை.

திரிந்து வேறுபடூஉ மன்ன பிறவு மென்றதனால் எட்சாந்து கோட்டு நூறு சாத்தனதொப்பு தொகையதுவிரி, பொருளது கேடு, சொல்லது பொருள் என்னுந் தொடக்கத்தன கொள்க. அவற்றுள் எட்சாந்து கோட்டு நூறு என்பன முதலாயின முழுவதூஉந் திரிதலின் வேறு கூறினார்.

மேற்சொல்லப்பட்ட தற்கிழமை, பிறிதின்கிழமை என்பனவற்றை விரித்தவாறு.

**வேற்றுமை மயங்கியல்**

குறிப்பு

வேற்றுமை உருபுகள் தம்முள் தாம் மயங்கி பொருள் வேறுபாட்டினைத் தந்து நிற்கும் என்பதனை உணர்த்துதலே இவ்வியலின் நோக்கம் ஆகும்.இதற்கு ஒன்றற்கு உரியதாய உறுப்பு ஒன்றனோடு மயங்குதலும் ஒன்றற்குரிய பொருள் ஒன்றனோடு மயங்குதலும் கூறினமையால் இப்பெயர் பெற்றது எனத் தெய்வச்சிலையார் உரைப்பார். அத்தகைய வேற்றுமை மயக்கம் என்பது பொருள் மயக்கம்,உருபு மயக்கம் என இரு வகைப்படும். ஒரு வேற்றுமை உருபு தன்னுடைய பொருளைத் தராமல் பிற வேற்றுமைப் பொருளைத் தருமானால் அது உருபு மயக்கம் எனப்பெறும்.ஒரு வேற்றுமைதன் பொருளில்வராது பிறிதொரு வேற்றுமைப் பொருளிலும் சென்று நின்று பொருள் தருமானால் அது பொருள் மயக்கம் என்று அழைக்கப்பெறும்.

இரண்டாம் வேற்றுமை உருபு மயக்கம்:

இந்த மயக்கம் இரண்டாம் வேற்றுமைப் பொருளுக்கு உரியது, இச் சார்பு கருமச் சார்பு, கருமமல்லாச் சார்பு என இருவகைப்படும்.

ஒன்றினையொன்று உடம்பால் சார்தல் கருமச்சார்பு எனப்படும். தூணைச்சார்ந்தான்

ஒன்றினையொன்று உடம்பால் சார்தலன்றி மனத்தாலும் சார்தல் கருமமல்லாச்சார்பு எனப்படும்.

அரசரைச்சார்ந்தான்

கருமம் அல்லாச் சார்பு என் கிளவிக்கு

உரிமையும் உடைத்தே,கண் என் வேற்றுமை

அரசர்கட் சார்ந்தான்

இரண்டாம் வேற்றுமை உருபு தன் பொருளில் நீங்காது ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளிலும் மயங்கி வந்துள்ளது,

சினை நிலைக் கிளவிக்கு ஐயும் கண்ணும்

வினை நிலை ஒக்கும் என்மனார் புலவர்

சினைப் பொருள்மேல் நிற்கும் கிளவிக்கு இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐயும் ஏழாம் வேற்றுமை உருபாகிய கண்ணும் மயங்கி நிற்கும்.

கோட்டைக் குறைத்தான், கோட்டின்கண் குறைத்தான்

**கன்றல், செலவு**

குறிப்பு

கன்றலும் செலவும் ஒன்றுமார் வினையே

கன்றல் பொருள் மேல் வரும் சொல்லும் செலவுப்பொருள் மேல் வரும் சொல்லும் மேற்கண்டவாறே மயங்கி நிற்கும்

சூதினைக் கன்றினான்,

சூதின்கண் கன்றினான்

நெறியைச் சென்றான்

நெறிக்கட் சென்றான்

முதற்சினைக் கிளவிக்கு அது என் வேற்றுமை

முதற்கண் வரினே, சினைக்கு ஐ வருமே.

முதற் சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு அது முதற்கண் வருமாயின் சினைக்கு 'ஐ' வரும்.

யானையது கோட்டைக் குறைத்தான்

முதல் முன் ஐ வரின்,கண் என் வேற்றுமை

சினை முன் வருதல் தெள்ளிது என்ப.

முதற் சொல்லோடு தொடர்ந்த சினைச்சொல்லிற்கு ஐ முதற்கண் வருமாயின் சினைக்கு கண் வரும்

யானையைக் கோட்டின்கண் குறைத்தான்

முதலும் சினையும் பொருள் வேறுபடாஅ;

நுவலும் காலை, சொற்குறிப்பினவே

முதலும் சினையும் முதலானது முதலேயாய்ச் சினையானது சினையேயாய்த் தம்முள் வேறு பொருளாகாது சொல்லும்பொழுது சொல்லுவானது, சொல்லுதலாகிய குறிப்பினால் முதலென்றும் சினையென்றும் வழங்கப்படும்.

சொற்குறிப்பின் என்றது முதலெனப்பட்டது தானே தன்னைப் பிறிதொன்றற்கு ஏகதேசமாகக் குறித்தவழிச் சினையுமாம். சினையெனப் பட்டதுதானே தன்கண் ஏகதேசத்தை நோக்கி முதலெனக் குறித்தவழி முதலுமாய் அமையும்

கோட்டது நுனியைக் குறைத்தான். கோட்டை நுனிக்கட் குறைத்தான், கோட்டை நுனியைக் குறைத்தான் என முதற்குச் சொல்லப்பட்ட உருபு சினைக்கண்ணும் வந்ததாலென்று வினவுவார் கோட்டென்பது இங்கு முதலாய் நிற்றலின், முதலிற்கு ஓதிய உருபே முதற்கண் வந்ததென்று அறிதல் வேண்டும்.

குறிப்பு

**பிண்டப்பொருள்:**

பிண்டப் பெயரும் ஆயியல் திரியா;

பண்டு இயல் மருங்கின் மரீஇய மரபே

பிண்டத்தையுணர்த்தும் பெயரும் முதற்சினைப் பெயரியல்பில் திரிந்து வராது. பிண்டம் பல பொருட்டொகுதி ஆகும்.

இங்கு ஆயியல் திரியா என மாட்றெிந்ததன்வழி, முதற் சினைக் கிளவிக்குப் போலப் பிண்டப் பெயர்க்கு முதற்கண் ஆறாவது வரின் சினைக்கு இரண்டாவது வருதலும், முதற்கு இரண்டாவது வரின் சினைக்கு ஏழாவது வருதலும், சிறுபான்மை இரண்டாவது வருதலும் உண்டாம் என்பது பெறப்படும்.

குப்பையது தலையைச் சிதறினான், குப்பையைத் தலைக்கட் சிதறினான், குப்பையைத் தலையைச் சிதறினான் என வரும்.

**ஒடு வினை ஒடுச்சொல்:**

ஒடு வினை ஒடுச் சொல் உயர்பின் வழித்தே

அதனோடியைந்த ஒருவினைக் கிளவியென மூன்றாவதற்கோதிய ஒருவினை ஒடுச்சொல் உயர்பொருளை உணர்த்தும் பெயர்வழித் தோன்றி நிற்கும்.

சான்று: அரசனோடிளையர் வந்தார். ஆசிரியனொடு மாணாக்கர் வந்தார் என வரும்.

உயர்பொருட் பெயர்வழி ஒடு அமையும். எனவே, உயர்பில்லாத வழிச் சாத்தனுங் கொற்றனும் வந்தார் என இருபெயரும் எழுவாயாய் நிற்கும்

குறிப்பு

நாயொடு நம்பி வந்தான் என இழிபெயர்க்கண்ணும் ஒரு வினையொடுச் சொல் வந்தது எனில், யாதானும் ஓராற்றான் அதற்கு உயர்பு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார்; கூறுபவாயின், அஃது ஒரு வினையொடுச் சொல்லெனப்படாது. கைப்பொருளொடு வந்தான் என்பதுபோல, அது தனக்குண்டாக வந்தானெனப் பிறிது பொருள் படுவதோர்ஒடுவுருபாகும் என உரை வகுப்பார் சேனாவரையர்.

இதனை வேற்றுமையியலின்கண் அதனினியறல்“ (சொல். 14) என்னுஞ் சூத்திரத்தின் பின் அமைக்காது இங்கு வைத்ததற்கு சேனாவரையர் காரணம் சுட்டுவார். வேற்றுமையியலில் பெயரும் முறையுந் தொகையும் பொது வகையான் அவற்றின் இலக்கணமும் உணர்த்தியதல்லது. இன்ன வேற்றுமை இன்ன பொருட்கண் இன்னவாறாமென்னும் விசேட இலக்கணம் உணர்த்தவில்லையாதலான், அங்கு உணர்த்தாது விடுத்தார். மேலும் இப்பொருட்கண் இவ்வாறாமென விசேட விலக்கணம் மூன்றனு மைந்தனும் (சொல் - 92) எனக் கூறுகின்றாராகலின், அதனோடியைய ஈண்டு வைத்தார் . இதுவும் ஒரு பொருள் பற்றி ஓதுகின்ற விசேட இலக்கணமாகலாம் என்பது எனக் குறிப்பார் சேனாவரையர்,

**ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி:**

மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய

ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி

நோக்கு ஓரனைய என்மனார் புலவர்

மூன்றாம் வேற்றமையிடத்தும் ஐந்தாம் வேற்றுமையிடத்தும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல் அவ் ஏதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒருதன்மையதாகும்.

சான்று :வாணிகத்தானாயினான், வாணிகத்தானாய பொருள் என்றும் வாணிகத்தின் ஆயினான்வாணிகத்தினாய பொருள் எனவும் வரும்.

வாணிகத்தான், வாணிகத்தின் என உருபொடு தொடர்ந்து நின்ற சொல் ஏதுக்கிளவி எனப்பெறும்.

அதன்வினைப் படுத லதனி னாதல் (சொல் - 74) என்றும் புதுமை பழமை யாக்கம் (சொல் - 78) என்றும் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் ஏதுப்பொருள் மேற்கூறப்பட்டமையால் இச் சூத்திரம் தேவையன்றே எனின் பிரிநிலையேகார முதலாகிய இடைச்சொல்லும் ஒருசார் வினைச்சொல்லும் முன்பு கூறப்பட்டன எனினும், எச்சமாதல் என்னும் ஒப்புமையான் எச்ச ஆராய்ச்சிக்கண் அவைதம்மையே,

பிரிநிலை வினையே பெயரே யொழியிசை

யெதிர்மறை யும்மை யெனவே சொல்லே (சொல் - 430)

குறிப்பு

எனப் பின்னுங் கூறினாற்போல், ஏதுப்பொருண்மை மூன்றாவதற்கும் ஐந்தாவதற்கும் மேற்கூறப்பட்டதாயினும், மயக்கமாதலொப்புமையான் மயக்கவாராய்ச்சிக்கண் ஈண்டுங் கூறினாராகலின் கூறியது கூறலென்னுங் குற்றமின்றென்பதாம் இ∴து அச்சக்கிளவி“ (சொல் - 100) என்பதற்குமொக்கும்,அ∴தேல், மயக்கமாவது ஒரு வேற்றுமை பிறிதொன்றன் பொருட் கட்சேறலன்றே; ஏதுவின் கண் வரும் மூன்றாவதும் ஐந்தாவதும் தம் பொருளே பற்றி நிற்றலின் மயங்கின வெனப்படாவெனின்:- ஏதுப்பொருண்மை தனக்குரியவாற்றான் அவற்றிற்குத் தன் பொருளாயினவாறு போலப் பிறிதொன்றற் குறியவாற்றாற் பிறிதொன்றன் பொருளாதலு முடைமையின், அம் முகத்தான் மயங்கின வெனவே படுமென்பது, அல்லதூஉம் ஒரு பொருட்கண் இரண்டுருபு சென்ற துணையான் மயக்கமாயிற்று எனினும் அமையும் என விளக்குவார் சேனாவரையர்

**நோக்கு அல் நோக்கம்:**

இரண்டன் மருங்கின் நோக்கு அல் நோக்கம், அவ்

இரண்டன் மருங்கின், ஏதுவும் ஆகும்

நோக்கலி னஞ்சலின்“ (சொல் - 72) என இரண்டாவதற்கோதிய நோக்கப் பொருண்மை நோக்கிய நோக்கம், நோக்கல் நோக்கம் என இரண்டு வகைப்படும். நோக்கிய நோக்கம் கண்ணானோக்குதல், நோக்கல் நோக்கம் மனத்தால் ஒன்றனை நோக்குதல் ஆகும். அந் நோக்கல் நோக்கமாகிய பொருள் மூன்றாவதற்கும் ஐந்தாவதற்குமுரிய ஏதுப் பொருண்மையுமாய் அமையும்.

நோக்கல் நோக்கத்தால் நோக்கப்படும் பொருளை, நோக்கல், நோக்கனென்றார்.நோக்கல்நோக்கம் அவ் இரண்டன் மருங்கின் ஏதுவுமாகும். எனவே, அத்தகைய ஏதுப் பொருண்மைக்குரிய இரண்டுருபும் அவ ஏதுப் பொருண்மையில் தீராது இரண்டாவதன் பொருட்கண் வரும் ஓம்படைப்பொருட்கண் வருவனவற்றிற்கும் அத்தகைய கருத்தினைச் சார்ந்தேயாம்..

வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னவன்

கோனோக்கி வாழுங் குடி (குறள் - 542)

குறிப்பு

என்றதில் வானை நோக்கி வாழும், கோலை நோக்கி வாழும் என இரண்டாவது வருதலேயன்றி, வானானோக்கி வாழும், வானினோக்கி வாழும், கோலானோக்கி வாழும் கோலினோக்கி வாழும் என மூன்றாவதும் ஐந்தாவதும் வந்து நிற்கும்.

ஏதுவாயினவாறென்னை யெனின்:- உயிருங் குடியும் வானையுங் கோலையு நோக்குவது அவற்றானாய பயன்பற்றி அவற்றைத் தாமின்றியமையாமை யன்றே; அதனான் அவ்வாறு பயன்படுவன அவற்றதின் றியமையாமைக்கு ஏதுவாதலுமுடையவென்பது. அஃதேல், வானுங்கோலும் ஏதுவாயவழி நோக்கப்படுவன் பிறவாவான் செல்லுமெனின்:-அற்றன்று; கண்ணுட் குத்தினான் என்றவழிக் கண்ணே செயப்படு பொருளாதலும் பெறப்பட்டாற்போல, வானானோக்கும். கோலானோக்கும் என்புழியும் அவைதாமே செயப்படு பொருளாதலும் பெறப்பட்டமையால், நோக்கப்படுவன பிறவாவான் என எரை விளக்கம் தருவார் சேனாவரையர்.

**அதுவென் வேற்றுமை:**

அது என் வேற்றுமை உயர்திணைத்தொகைவயின்,

அது என் உருபு கெட, குகரம் வருமே

ஆறாம் வேற்றுமைப் பொருண்மேல் வரும் உயர்திணைத் தொகைக்கண் உருபு விரிப்புழி அதுவென்னும் ஆறாம் வேற்றமை உருபு கெட அவ்விடத்து நான்காம் வேற்றுமை உருபு வரும்

நம்பி மகன், நங்கை கணவன் என்பதனை விரிக்கும் இடத்து நம்பிக்கு மகன், நங்கைக்கு கணவன் என நான்காம் வேற்றுமை உருபு வந்து நிற்கும்.

உயர்திணைத் தொகைவயின்அதுவெனும் உருபுகெடக் குகரம் வருமென்றதனால் ஆறனுருபு அஃறிணைப்பால் தோன்றி நிற்கும் என்பது பெறப்படும்.

உயர்திணைத் தொகைவயின் ஆறாவதனை விலக்கி நான்காவதே சேறலின்,இதனதிதுவிற்று (சொல் - 110) என்னுஞ் சூத்திரத்தால் கூறப்படும் பொருளோடு இதனை உடன் வைக்காது தொல்காப்பியர் இதனை வேறுபடுத்திக் கூறி விளக்கினார்.

**தடுமாறு தொழிற்பெயர்:**

தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்

கடி நிலை இலவே, பொருள்வயினான.

குறிப்பு

தனக்கே உரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப் பெயரோடு சென்று தடுமாறும் தொழிலொடு தொடர்ந்த பெயர்க்கு இரண்டாவதும் மூன்றாவதுமாகிய வேற்றுமை உருபுகள் வருவதுகடியப்படாது. அவ்வேற்றுமை தொக அவற்றின் பொருள் நிற்குந் தொகைகளிடத்து என்பார் தொல்காப்பியர்.

சான்று: :புலிகொன்ற யானை, புலிகொல் யானை என்றவழி, புலியைக் கொன்ற யானை எனவும் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கி நிற்கும்.

ஈற்றுப் பெயர் முன்னர் மெய் அறி பனுவலின்

வேற்றுமை தெரிப, உணருமோரே

தடுமாறு தொழிலொடு புணர்ந்த பெயருள், இறுதிப் பெயர்முன்னர்ப்பொருள் வேறுபாடுணர்த்துஞ் சொல்வரின் அச்சொல்லினைக் கொண்டு பொருள் வேறுபாடு உணர்தல் வேண்டும். புலிகொல்யானை ஓடாநின்றது, புலிகொல் யானைக் கோடு வந்தன என வரும்.

பிறமயக்கம் போலாது இங்கு பொருள் வேறுபாடுணர்ந்தல்லது உருபு விரிக்கலாகாமையின், இதனை மெய்யறி பனுவலின் வேற்றுமை தெரிப என்றார் தொல்காப்பியர்,

**ஓம்படைக் கிளவி:**

ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்

தாம் பிரிவு இலவே, தொகை வரு காலை.

ஓம்படைப் கிளவிக்கு இரண்டாம் வேற்றுமைக்குரிய ஐகாரவுருபும் மூன்றாம் வேற்றுமைக்குரிய ஆனுருபும் வந்து நிற்கும்.;

ஓம்படுத்தல்-பாதுகாத்தல் என்னும் பொருளது.

புலிபோற்றிவா என்பதில் ஓம்படைக்கிளவி இரண்டாவதற்குஓதிய காப்புப் பொருளில் அடங்குவதால் புலியைப் போற்றி வாவென ஐகாரவுருபும், புலி அவன் போற்றி வருதற்கு காரணமும் ஆதலால் புலியாற் போற்றிவாவென ஆனுருபும் வந்தமையும்.

**வாழ்ச்சிக் கிழமை:**

ஆறன் மருங்கின் வாழ்ச்சிக் கிழமைக்கு

ஏழும் ஆகும், உறை நிலத்தான.

ஆறாம் வேற்றுமைக்கண் ஓதிய வாழ்ச்சிக்கிழமைக்கு ஏழாம் வேற்றுமையும் வரும்.

குறிப்பு

காட்டுயானை என்பது காட்டது யானை, காட்டின்கண் யானை என அமையும்.

யானைக்காடு, நம்பியூர் என்பன வாழ்ச்சிக்கிழமைப்பொருளவாயினும், அங்கு ஏழாம் வேற்றுமை மயங்காது என்பதற்கு உறைநிலத்தான எனக் குறித்தார் தொல்காப்பியர்.

**கொடை எதிர் கிளவி:**

குத் தொக வரூஉம் கொடை எதிர் கிளவி

அப் பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்

குவ்வென்னும் வேற்றுமையுருபு தொகவருங் கொடையெதிர் கிளவியிடத்து ஆறாம் வேற்றுமை உருபு வரும். கொடையினை ஏற்றுக் கொள்ளும் சொல் கொடையெதிர் கிளவி எனப்படும்.

நாகர்பலி என்பது நாகர்க்கு நேர்ந்த பலியென விரிதலேயன்றி நாகரது பலியெனவும் விரியும்.

**அச்சக் கிளவி:**

அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்

எச்சம் இலவே, பொருள்வயினான

அச்சக் கிளவிக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஒத்த தன்மையுடையனவாய் வரும்.

பழியஞ்சும் என்றவழி பழியினஞ்சும், பழியைஞ்சும் என வரும்.

புறனடை:

அன்ன பிறவும் தொல் நெறி பிழையாது,

உருபினும் பொருளினும் மெய் தடுமாறி,

இரு வயின் நிலையும் வேற்றுமை எல்லாம்

திரிபு இடன் இலவே, தெரியுமோர்க்கே

மேல் மயக்கங் கூறப்பட்ட வேற்றுமையேயன்றி, அவை போல்வன பிறவும், தொன்று தொட்டு வரும் வழக்கிற் பிழையாது, உருபானும் பொருளானும்

ஒன்றன் நிலைக் களத்து ஒன்று சென்று, பிறிதொன்றன் பொருளுந் தன் பொருளுமாகிய இருவகையிடத்தும் நிலைபெறும் வேற்றுமையெல்லாந் திரிபுடையனவல்ல என்பதாம்.;

குறிப்பு

அன்ன பிறவாவன-நோயினீங்கினான் நோயை நீங்கினான் எனவும், சாத்தானை வெகுண்டான் சாத்தனொடு வெகுண்டான் எனவும், முறையாற் குத்துங்குத்து முறையிற் குத்துங்குத்து எனவும், கடலோடு காடொட்டாது கடலைக் காடொட்டாது வருவனவும் பிறவுமாம்.

உருபு தொடர்ந்து அடுக்கிய வேற்றுமைக் கிளவி

ஒரு சொல் நடைய, பொருள் செல் மருங்கே

பலவுருபுகளும் தம்முள் தொடர்ந்தடுக்கி வந்த வேற்றுமைச் சொற்களெல்லாம் முடிக்குஞ் சொல்லொன்றினால் முற்றுப் பெற்று நடக்கும்

என்னொடு நின்னொடுஞ் சூழாது எனவும்,

அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியாய்

நின்றது மன்னவன் கோல் (குறள் - 543)எனவும் வரும்.

சாத்தன் தாயைக் காதலன், நாய் தேவனாயிற்று என்பனவற்றில் தாயை தேவன் என்பன, காதலன் பயனிலைக்கு அடையாமொழியாய் இடைநின்றாற் போல கோட்டைநுனிகட் குறைத்தான்,தினையிற் கிளியைக் கடியும் என்பனவற்றில் நுனிக்கண், கிளியை என்பன, குறைத்தான் கடியுமென்னும் முடிக்குஞ் சொல்லிற்கு அடையாய் இடைநின்றவாகலின் அவை பல உருபுகள் தொடந்தடுக்கியமைக்கு உதாரணமாகாது என சேனாவரையர் மறுக்கின்றார்.

குழையைச் சாத்தனது கள்ளரின் என இவ்வாறு தொடராது வருவனவற்றை நீக்குதற்கு உருபு தொடர்ந்தடுக்கியவென்று, நீ தந்த சோற்றையுங் கூறையையுமுண்டுடுத் திருந்தேம் என இன்னோரன்னுழி ஒரு சொல்லாற் பொருள் செல்லாமையின் அவற்றை நீக்குவதற்குப் பொருள் சென்மருங்கென்றுங் கூறினார் சேனாவரையர்.

இறுதியும், இடையும், எல்லா உருபும்,

நெறி படு பொருள்வயின் நிலவுதல் வரையார்.

ஆறு உருபுகளும் அவ்வவ் தொடர்கண் இறுதியிலும் இடையிலும் நிற்கும்.

வேற்றுமை உருபுகள் இறுதியில் விரிந்து நின்றன

குறிப்பு

கடந்தான் நிலத்தை,

வந்தான் சாத்தனொடு,

கொடுத்தான் சாத்தற்கு,

வலியன் சாத்தனின்

இருந்தான் குன்றத்துக்கண்

வேற்றுமை உருபுகள் இடையில் விரிந்து நின்றன

நிலத்தைக் கடந்தான்,

சாத்தனொடு வந்தான் ,

சாத்தற்குக் கொடுத்தான்,

சாத்தனின் வலியன்

சாத்தனதாடை

குன்றத்ததுக்கணிருந்தான்

எல்லா உருபுகளும் இடையிலும் இறுதியுலும் விரிந்து நிற்கும் எனினும் ஆறாம் வேற்றுமையும் ஏழாம் வேற்றமையும் இறுதிக்கண் விரியாது,ஆடை சாத்தனது கூகை குன்றத்துக்கண் என இறுதிக்கண் விரிப்பின் ஆடை சாத்தனதாயிற்று, கூகை குன்றத்தின்கண் உள்ளது என பொருள் தருமாதலின் இங்ஙனம் உணர்த்தல் பொருந்தாதாம்.ஆடை சாத்தனது என்றவழி வினைக் குறிப்பான் பொருள் கூறின் ஆறன் உருபும் விரிக்கப்படும் எனக் கூறினார்சேனாவரையர்,

பிறிது பிறிது ஏற்றலும், உருபு தொக வருதலும்,

நெறிபட வழங்கிய வழி மருங்கு என்ப.

பிறிதோர் உருபு பிறிதோர் உருபை ஏற்றலும் ஆறுருபுந் தொக்கு நிற்றலும், நெறிபட வழங்கிய வழக்கைச் சார்ந்ததாம்

சாத்தனதனை,

சாத்தனதனொடு,

சாத்தனதற்கு,

சாத்தனதனின்,

சாத்தனதன்கண் என ஆறாம் வேற்றுமை உருபு பிற உருபேற்றவாறும் ;

குறிப்பு

நிலங்கடந்தான்,

தாய்மூவர்,

கருப்பு, வேலி,

வரைவீழருவி,

சாத்தன்கை,

குன்றக் கூகை என வேற்றுமை உருப தொக்க வருதலும் காண்க.

கடந்தானிலம் -ஐ

இருந்தான் குன்றத்து– கண் என உருபுகள் தொக்கு நின்றன.

ஐயும் கண்ணும் அல்லாப் பொருள்வயின்

மெய் உருபு தொகாஅ இறுதியான

ஐகார வேற்றுமைப் பொருளுங் கண்ணென வேற்றுமைப் பொருளுமல்லாத பிற பொருளின்மேல் நின்ற உருபு தொடர்மொழியிறுதிக்கண் தொக்கி நிற்கமாட்டா..

அறங்கறக்கும் என இடைக்கண் தொக்கி நின்ற நான்காவது உருபு கறக்கு மறம்என இறுதிக்கண் தொக்கு நில்லாமை அறிக.

**உருபு மயக்கம்:**

யாதன் உருபின் கூறிற்றுஆயினும்,

பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

ஒரு தொடர் யாதானுமோர் வேற்றுமை உருபு கொடுத்துச் சொல்லப்பட்டாலும் அவ் உருபினைச் சார்ந்து தொடர்பொருள் செல்லாது. பொருள் செல்லும் வழியைச் சார்ந்து வேற்றுமை செல்லும்.;

பொருள் செல்லாமை எனப்படுவது உருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இளியாமை. அவ்வேற்றுமையைச் சார்தல் என்பது அதன் பொருட்டாதல்.

கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற

முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்.“ (அகம்- 212)

குறிப்பு

என்ற பாடலின்கண் அமைந்த கிழங்குமணற் கீன்ற முளை என்ற தொடரில் மணற்கு என நான்காம் வேற்றுமை உருபு பயின்று வரினும் மணலின்கண் என்ற இடப்பொருளே சிறந்து நின்றது.

**வேற்றுமையும் எதிர்மறையும்:**

எதிர் மறுத்து மொழியினும், தம்தம் மரபின்

பொருள் நிலை திரியா, வேற்றுமைச் சொல்லே.

விதிமுகத்தால் கூறாது எதிர் மறுத்துக்கூறினும், தத்தம் இலக்கணத்தான் வரும் பொருள் நிலைமையினின்றும் வேற்றுமை உருபு மாறுவதில்லை.

மரத்தைக் குறைப்பான் விதிமுகத்தாற் கூறியது –

வேலால்எறியான் - எதிர்மறுத்துக் கூறியது

**செய்யுட்கு விதி:**

கு, ஐ, ஆன் என வரூஉம் இறுதி

அவ்வொடு சிவணும், செய்யுளுள்ளே.

கு ஐ ஆனென வரும் மூன்றுருபின் இறுதியும் செய்யுளின்கண் அகரத்தோடு பொருந்திநிற்கும்.

கடிநிலை யின்றே யாசிரி யற்க எனவும்,

காவ லோனக் களிறஞ் சும்மே எனவும்

களிறு மஞ்சுமக்காவ லோன எனவும்

புரைதீர் கேள்விப் புலவ ரான“ எனவும்

உள்ளம் போல வுற்றுழி யுதவும்,

புள்ளியிற் கலிமா வுடைமையான எனவும் வரும்.

குகரமும் ஐகாரமும் ஈறு கெட அகரத்தொடு சிவணலுடைமையான் , ஐ ஆன் கு என முறையில் கூறாது. கு ஐ என அவற்றை இயையவைத்தார். இயைய வைக்கின்றவர் ஐகாரம் முன்வைக்கவெனின்;- முறை அதுவாயினுஞ் செய்யுளின்பம் நோக்கிக் குகரம் முன்வைத்தாரென்பார் சேனாவரையர்.

*Self-Instructional Material*

குறிப்பு

அ எனப் பிறத்தல் அ∴றிணை மருங்கின்

குவ்வும் ஐயும் இல் என மொழிப

அ∴றிணைப் பெயர்க்கண் அகரத்தொடு சிவணி ஈறுதிரிதல் குவ்வும் ஐயுமில்லென என்னும் இரண்டிற்கும் இல்லை. இவ்விடத்து அ எனத் திரிதலைஅ எனப்பிறத்த என்றார் தொல்காப்பியர்,

பிற உறுபுகள் நான்கன் உருபில் சென்று மயங்குதல்:

இதனது இது இற்று என்னும் கிளவியும்,

அதனைக் கொள்ளும் பொருள்வயினானும்,

அதனான் செயற்படற்கு ஒத்த கிளவியும்,

முறை கொண்டு எழுந்த பெயர்ச்சொல் கிளவியும்,

பால் வரை கிளூவியும், பண்பின் ஆக்கமும்,

காலத்தின் அறியும் வேற்றுமைக் கிளவியும்,

பற்று விடு கிளவியும், தீர்ந்து மொழிக் கிளவியும்,

அன்ன பிறவும், நான்கன் உருபின்

தொல் நெறி மரபின, தோன்றலாறே.

இதனதிது இத்தன்மைத் தென்னும் ஆறாதவன் பொருண்மையும், ஒன்றனையொன்று என்னும் இரண்டாவதன் பொருண்மையும் ஒன்றனானொன்று தொழிற்படற்கு ஒக்கும் என்னும் மூன்றாவதன் பொருண்மையும், முறைப் பொருண்மையைக் கொண்டு நின்ற பெயர்ச் சொல்லினது ஆறாம் வேற்றுமைப் பொருண்மையும், நிலத்தை வரைந்து கூறும் பொருண்மையும் பண்பின்கணாம் பொருவுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும், காலத்தின் கண் அறியப்படும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும் பற்றுவிடு பொருண்மையும், தீர்ந்துமொழிப் பொருண்மையுமாகிய ஐந்தாவதன் பொருண்மையும், அவைபோல்வன பிறவும் நான்கன் உருபில் தொன்னெறி தொட்டுத் தோன்றும் மரபின ஆகும்.

யானைக்குக்கோடு கூரிது எனவும்

இவட்குக் கொள்ளும் இவ்வணி எனவும்

அவற்குச் செய்யத்தகும் அக்காரியம் எனவும்

ஆவிற்குக் கன்று எனவும்

குறிப்பு

கருவூர்க்குக் கிழக்கு எனவும்

சாத்தற்கு நெடியன் எனவும்

காலைக்கு வரும் எனவும்

மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான் எனவும்

ஊர்க்குத் தீர்ந்தான் எனவும் நான்கன் உருபு வரும்.

அன்னபிறவும் எனத் தொல்காப்பியர் விதந்தோதியமையால்,

ஊர்க்கண்சென்றான்.

ஊர்க்கணுற்றது செய்வான் - என்னும் ஏழாவதன் பொருட் கண்ணும்,

ஊரிற்சேயன் - என்னும் ஐந்தாவதன் பொருட் கண்ணும்,

ஊர்க்குச் சென்றான்

ஊர்க்குற்றது செய்வான்

ஊர்க்குச் சேயன் - என நான்காவது வருதல் கொள்ள வேண்டும்.

ஏனை உருபும் அன்ன மரபின;

மானம் இலவே, சொல் முறையான.

நான்கன் உருபல்லாத பிறவுருபும் தொகையல்லாத தொடர்மொழிக்கண் ஒன்றன்பொருள் சிதையாமை ஒன்று மயங்குதல் குற்றமல்ல.

நூலது குற்றங்கூறினான் எனவும் தொடர் மொழிக்கண் நூலைக் குற்றங்கூறினான் எனவும்,

அவட்குக்குற்றேவல் செய்யும் எனவும் தொடர்மொழிக்கண் அவளது குற்றேவல் செய்யும் எனவும் வருவனவும் கொள்க என்பார் சேனாவரையர்.

**தொழில் முதல்நிலை:**

வினையே, செய்வது, செயப்படுபொருளே,

நிலனே, காலம், கருவி, என்றா

இன்னதற்கு, இது பயன் ஆக, என்னும்

அன்ன மரபின் இரண்டொடும் தொகைஇ,

ஆயெட்டு என்ப தொழில் முதனிலையே

குறிப்பு

வினையும், வினை முதலும், செயப்படு பொருளும், நிலமும், காலமும், கருவியுமாகிய ஆறும், இன்னதற்கு, இது பயனாக என்று சொல்லப்படும் இரண்டொடுந் தொக்குத் தொழிலது முதனிலை எட்டாமென்று சொல்லுவர்

தொழின் முதனிலை என்றது தொழிலது காரணத்தை, காரியத்தின் முன்னிற்றலின் முதனிலை ஆயிற்று. காரணமெனினும் காரகமெனினும் ஒருபொருளதாம்.

வனைந்தான் என்றவழி, வனைதற்றொழிலும், வனைந்த கருத்தாவும், வனையப்பட்ட குடமும், வனைதற்கிடமாகிய நிலமும், அத்தொழில் நிகழுங்காலமும், அதற்குக் கருவியாகிய திகிரி முதலாயினவும், வனையப்பட்ட குடத்தைக் கொள்வானும், வனைந்ததனானாய பயனுமாகிய எட்டும் பற்றி அத்தொழில் நிகழந்தவாறு கண்டுகொள்க என்பார் சேனாவரையர்.

அவைதாம்,

வழங்கு இயல் மருங்கின் குன்றுவ குன்றும்.

மேற்கூறப்பட்ட தொழின் முதனிலை தாம் எல்லாத் தொழிற்கும் எட்டும் வருமென்றும் சொல்வதற்கில்லை. வழக்கின்கட்சில தொழிற்கண் குன்றத்தகுவன குன்றிவரும்.அவ்வாறு குன்றத் தகுவனவாவன செயப்படுபொருளும் ஏற்பதும் பயனுமாம்.

கொடியாடிற்று, வளிவழங்கிற்று என்றவழி செயல்படு பொருளும் ஏற்பதும் பயனுமாகிய முதனிலையாயினும், ஒழிந்தனவற்றான் ஆடுதலும் வழங்கலுமாகிய தொழில் நிகழ்ந்தவாறு கண்டுகொள்க என்பர் சேனாவரையர்,

**ஆகுபெயர்க் கிளவி :**

முதலின் கூறும் சினை அறி கிளவியும்,

சினையின் கூறும் முதல் அறி கிளவியும்,

பிறந்தவழிக் கூறலும், பண்பு கொள் பெயரும்,

இயன்றது மொழிதலும், இருபெயரொட்டும்,

வினைமுதல் உரைக்கும் கிளவியொடு தொகைஇ,

அனை மரபினவே ஆகுபெயர்க் கிளவி

யாதானும் ஓர் இயைபு பற்றி ஒன்றன் பெயர் அதற்கு இயைபுடைய பிறிதொன்றிற்கு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். இதற்கு

Self-Instructional
Material

குறிப்பு

முதற்சொல் வாய்பாட்டாற் கூறப்படுஞ் சினை யறி கிளவியும், சினைச்சொல் வாய்ப்பாட்டாற் கூறப்படும் முதலறி கிளவியும்,நிலத்துப் பிறந்த பொருண்மேல் அந்நிலப்பெயர் கூறலும், பண்புப்பெயர் அப்பண்புடையதனை யுணர்த்திப் பண்பு கொள் பெயராய் நின்றதூஉம், முதற் காரணப்பெயரான் அக் காரணத்தானியன்ற காரியத்தைச் சொல்லுதலும் அன்மொழிப் பொருண்மேனின்ற இருபெய ரொட்டும், செயப்பட்ட பொருண்மேல் அதனைச் செய்தான் பெயரைச் சொல்லுஞ் சொல்லுமென அப் பெற்றிப்பட்ட இலக்கணத்தை யுடையன ஆகுபெயர் என உரைவகுப்பார் சேனாவரையர்.

கடுத்தின்றான், தொங்குதின்றான் என முதற் பெயர் சினை மேலும்,

இலை நட்டு வாழும், பூ நட்டு வாழும், எனச் சினைப்பெயர் முதன் மேலும்,

குழிப்பாடி நேரிது என நிலப்பெயர் அந் நிலத்துப் பிறந்த ஆடை மேலும்,

இம் மணி நீலம் எனப் பண்புப்பெயர் அப் பண்புடையதன் மேலும்,

இக் குடம் பொன் எனக் காரணப்பெயர் அதனானியன்ற காரியத் தின்மேலும்,

பொற்றொடி வந்தாள் என இருபெயரொட்டு அன்மொழிப் பொருள்மேலும்,

இவ்வாடை கோலிகன் எனச் செய்தான் பெயர் செயப்பட்டதன் மேலும், வந்து நிற்கும்.

அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படுதலின் ஈண்டுக் கூறல் வேண்டா வெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் அதற்கான விடையினைப் பின்வருமாறு குறிப்பார்.

அன்மொழித் தொகை தொகையாதலுடைமையான் ஆண்டுக் கூறினார்; பெயர் இயற்கைப் பெயர் ஆகுபெயர் என இரண்டாகும். பொற்றொடி வந்தாள் என்பதில் பொற்றொடி என்பது பெண்ணின் இயற்பெயரன்று,ஆயின் ஆகுபெயராம். எனினும் பொன், தொடி எனடபன இணைந்து பெண்ணினைக் குறித்ததாதலின் இது அன்மொழித்தொகையாம்.

அன்மொழித்தொகை எச்சவியலுள் உணர்த்தப்படும்; அதனால் அவ் ஆகுபெயராதலுடைமை பற்றி ஈண்டுக் கூறினார். எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்ச முதலாயின வினைச் சொல்லாதலும் இடைச்சொல்லாதலும் உடைமையான் அவற்றை வினையியலுள்ளும் இடையியலுள்ளுங் கூறிய வாறு போல என்பார்,

குறிப்பு

அவைதாம்,

தம்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்,

ஒப்பு இல் வழியான் பிறிது பொருள் சுட்டலும்,

அப் பண்பினவே, நுவலும் காலை

வேற்றுமை மருங்கின் போற்றல் வேண்டும்

மேற்கூறப்பட்ட ஆகுபெயர்தாம் தத்தம் பொருளின் நீங்காது தம்பொருளின் வேறல்லாத பொருளொடு புணர்தலும், தம் பொருட்கியைபில்லாத பிறிது பொருளைச்சுட்டி நிற்றலும் என இரண்டு இயல்புகளை உடையது,

கடுவென்னு முதற்பெயர் முதலோடு ஒற்றுமையுடைய சினைமேல் நிற்றல் தத்தம் பொருள் வயிற்றம்மொடு சிவணலாம்.

குழிப்பாடியென்னும் இடப்பெயர் இடத்தின் வேறாய ஆடைமேல் நிற்றல் ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாம்.

குழிப்பாடியும் ஆடையும் இடமும் இடத்துநிகழ் பொருளுமாகிய இயைபுடைய வாகலினன்றே அதன் பெயர் அதற்காயிற்று; அதனான் அஃதொப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலாமாறென்னையெனின்:- அவ் வியைபுடையவேனும், முதலுஞ்சினையும் பண்பும் பண்புடையதுமாதன் முதலாகிய ஒற்றுமையாகிய இயைபினவாகலின், அவை தம்முள் வேறெனவே படும்; அதனாற் குழிப்பாடியென்பது ஒப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டலேயா மென்பது. ஒற்றுமையாகிய இயைபுள்வழி அது தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணிற்றென்றும், அவ்வியைபின்றி இடமும் இடத்துநிகழ் பொருளுமாதன் முதலாகிய இயைபேயாய வழி இஃதொப்பில் வழியாற் பிறிது பொருள் சுட்டிற்றென்றும், வேறுபடுத்துணரப்படுமென்பார், வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்என்றார் என்பது. அஃதேல், இதனைப் பிரித்து ஒரு சூத்திரமாக உரைத்தாரால் உரையாசிரியரெனின்:- அங்ஙனம் பிரிப்பின், தம்மொடு சிவணலும் பிறிது பொருள் சுட்டலுமாகிய இவற்றது வேறுபாட்டின்கண் என்பது இனிது பெறப்படாமையானும், எழுத்தோத்தினுள் புள்ளி யிறுதியு முயீரிறு கிளவியும் (எழு-156) என்னுஞ் சூத்திரத்து இந்நிகர்ப் பாதுகாவலைப் பிரியாது ஒன்றாகவே யுரைத்தலானும், அவர்க்கது கருத்தன் றென்க என வினா எழுப்பி விடை பகர்வார் சேனாவரையர்,

**அளவு, நிறைப்பெயர்:**

அளவு நிறையும் அவற்றொடு கொள்வழி

உள என மொழிப, உணர்ந்திசினோரே.

அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராகக் கொள்ளுமிடமும் உடையவென்று சொல்லுவர் உணர்ந்தோர்

குறிப்பு

பதக்குத்தூணி என்னும் அளவுப் பெயர் இந்நெற்பதக்கு, இப்பயறு தூணி எனவும்,

தொடி துலாமென்னும் நிறைப் பெயர் இப்பொன்றொடி, இவ் வெள்ளி துலாம் எனவும், அளக்கப்பட்ட பொருண் மேலும் நிறுக்கப் பட்ட ஆகுபெயராய் நின்றன.

கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்,

கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே!

சொல்லப்பட்டனவேயன்றிப் பிறவும் ஆகுபெயருளவேல், அவையெல்லாஞ் சொல்லப்பட்டவற்றின்இயல்பால் உணர்ந்து கொள்க என்பார் தொல்காப்பியர். சொல்லப்பட்டவற்றதுஇயல்பாவது யாதானுமோர் இயைபு பற்றி ஒன்றன்மேல் வழங்கப்படுதல்.

யாழ்குழல் என்னுங் கருவிப்பெயர் யாழ் கேட்டான், குழல்கேட்டான் என அவற்றானாகிய ஓசைமேலும் ஆகுபெயராய் நின்றன.

யானை பாவை என்னும் உவமைப்பெயர் யானை வந்தான், பாவை வந்தாள் என உவமிக்கப்படும் பொருண் மேல் நின்றன.

ஏறு குத்து என்னுந் தொழிற்பெயர் இ∴தோரேறு, இ∴தோர்குத்து என அத்தொழிலானாம் வடுவின் மேல் நின்றன.

பயிற்சி வினாக்கள்:

1.ஆக்கமொடு புணர்ந்த ஏதுக்கிளவி எவ்வாறு வரும்?

ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி:

: மூன்றனும் ஐந்தனும் தோன்றக் கூறிய

ஆக்கமொடு புணர்ந்த ஏதுக் கிளவி

நோக்கு ஓரனைய என்மனார் புலவர்

மூன்றாம் வேற்றமையிடத்தும் ஐந்தாம் வேற்றுமையிடத்தும் விளங்கச் சொல்லப்பட்ட ஆக்கத்தோடு கூடிய ஏதுச்சொல் அவ் ஏதுப் பொருண்மையை நோக்கும் நோக்கு ஒருதன்மையதாகும்.

சான்று :வாணிகத்தானாயினான், வாணிகத்தானாய பொருள் என்றும் வாணிகத்தின் ஆயினான்வாணிகத்தினாய பொருள் எனவும் வரும்.

குறிப்பு

2.உருபு மயக்கம் குறித்து எழுதுக.

உருபு மயக்கம்:

யாதன் உருபின் கூறிற்றுஆயினும்,

பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்.

ஒரு தொடர் யாதானுமோர் வேற்றுமை உருபு கொடுத்துச் சொல்லப்பட்டாலும் அவ் உருபினைச் சார்ந்து தொடர்பொருள் செல்லாது. பொருள் செல்லும் வழியைச் சார்ந்து வேற்றுமை செல்லும்.

பொருள் செல்லாமை எனப்படுவது உருபேற்ற சொல்லும் உருபு நோக்கிய சொல்லுந் தம்முள் இளியாமை. அவ்வேற்றுமையைச் சார்தல் என்பது அதன் பொருட்டாதல்.

கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற

முளையோ ரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய். (அகம்- 212)

என்ற பாடலினகண் அமைந்த கிழங்குமணற் கீன்ற முளை என்ற தொடரில் மணற்கு என நான்காம் வேற்றுமை உருபு பயின்று வரினும் மணலின்கண் என்ற இடப்பொருளே சிறந்து நின்றது.

3.அச்சக்கிளவி எவ்வாறு வரும்?

அச்சக் கிளவி:

அச்சக் கிளவிக்கு ஐந்தும் இரண்டும்

எச்சம் இலவே, பொருள்வயினான

அச்சக் கிளவிக்கு ஐந்தாம் வேற்றுமையும் இரண்டாம் வேற்றுமையும் ஒத்த தன்மையுடையனவாய் வரும்.

பழியஞ்சும் என்றவழி பழியினஞ்சும், பழியைஞ்சும் என வரும்.

4.கொடை எதிர் கிளவி – குறிப்பிடுக.

குறிப்பு

கொடை எதிர் கிளவி:

குத் தொக வரூஉம் கொடை எதிர் கிளவி

அப் பொருள் ஆறற்கு உரித்தும் ஆகும்

குவ்வென்னும் வேற்றுமையுருபு தொகவருங் கொடையெதிர் கிளவியிடத்து ஆறாம் வேற்றுமை உருபு வரும். கொடையினை ஏற்றுக் கொள்ளும் சொல் கொடையெதிர் கிளவி எனப்படும்.

நாகர்பலி என்பது நாகர்க்கு நேர்ந்த பலியென விரிதலேயன்றி நாகரது பலியெனவும் விரியும்.

5.தடுமாறு தொழிற்பெயர் குறித்து விளக்குக.

தடுமாறு தொழிற்பெயர்:

தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்

கடி நிலை இலவே, பொருள்வயினான.

தனக்கே உரித்தாய் நில்லாது ஒருகால் ஈற்றுப் பெயரோடு சென்று தடுமாறும் தொழிலொடு தொடர்ந்த பெயர்க்கு இரண்டாவதும் மூன்றாவதுமாகிய வேற்றுமை உருபுகள் வருவதுகடியப்படாது. அவ்வேற்றுமை தொக அவற்றின் பொருள் நிற்குந் தொகைகளிடத்து என்பார் தொல்காப்பியர்.

சான்று: :புலிகொன்ற யானை, புலிகொல் யானை என்புழிப் புலியைக் கொன்ற யானை எனவும் புலியாற் கொல்லப்பட்ட யானை எனவும் இரண்டாவதும் மூன்றாவதும் மயங்கி நிற்கும்.

6.கருமச்சார்பு, கருமமல்லாச்சார்பு விளக்கி வரைக.

இந்த மயக்கம் இரண்டாம் வேற்றுமைப் ொபாருளுக்கு உரியது, இச் சார் கருமச் சார்பு, கருமமமலாச் சார்பு என இருவகைப்படும்

ஒன்றினையொன்று உடம்பால் சார்தல் கருமச்சார்பு எனப்படும். தூணைச்சார்ந்தான்

ஒன்றினையொன்று உடம்பால் சார்தலன்றி மனத்தாலும் சார்தல் கருமமல்லாச்சார்பு எனப்படும்.

அரசரைச்சார்ந்தான்

கருமம் அல்லாச் சார்பு என் கிளவிக்கு

உரிமையும் உடைத்தே, கண் என் வேற்றுமை

குறிப்பு

அரசர்கட் சார்ந்தான்

இரண்டாம் வேற்றுமை உருபு தன் பொருளில் நீங்காது ஏழாம் வேற்றுமைக்குரிய இடப்பொருளிலும் மயங்கி வந்துள்ளது.

7.ஓம்படைக்கிளவி எவ்வாறு அமையும்?

ஓம்படைக் கிளவி:

ஓம்படைக் கிளவிக்கு ஐயும் ஆனும்

தாம் பிரிவு இலவே, தொகை வரு காலை.

ஓம்படைப் கிளவிக்கு இரண்டாம் வேற்றுமைக்குரிய ஐகாரவுருபும் மூன்றாம் வேற்றுமைக்குரிய ஆனுருபும் வந்து நிற்கும்.;

ஓம்படுத்தல்-பாதுகாத்தல் என்னும் பொருளது.

புலிபோற்றிவா என்பதில் ஓம்படைக்கிளவி இரண்டாவதற் கோதிய காப்புப் பொருளில் அடங்குவதால் புலியைப் போற்றி வாவென ஐகாரவுருபும், புலி அவன் போற்றி வருதற்கு காரணமும் ஆதலால் புலியாற் போற்றிவாவென ஆனுருபும் வந்தமையும்.

**விளிமரபு**

இது வேற்றுமை வகையின் எட்டாவதாகிய விளிவேற்றுமையின் இலக்கணம் உணர்த்தும் பகுதி ஆகும். முதற்கண் ஏழு வேற்றுமைகளை உணர்த்தி அவற்றின் மயக்கங்களையும் உணர்த்திப் பின் விளிவேற்றுமையின் இலக்கணம் உணர்த்தினார். இவ் வேற்றுமை பெயரினைச் சார்ந்தே வரும். விளி ஏற்று வரும். சில விளி ஏலாப் பெயர்களையும் தொல்காப்பியர் இதனுள் உணர்த்துகின்றார்.

**விளியின் பொது இலக்கணம்:**

விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு

தெளியத் தோன்றும் இயற்கைய என்ப

நிறுத்த முறையானே விளிவேற்றுமை யுணர்த்தி எடுத்துக் கொண்டார். அதனான் இவ் ஓத்து விளிமரபென்னும் பெயர்த்தாயிற்று.

விளியென்று சொல்லப்படுவன தம்மையேற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும். இயல்பையுடையன என்று கூறுவார் தொல்காப்பியர்.

ஈறுதிரிதலும்,ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதல் என்னும் வேறுபாடுடைமையான் விளியெனப்படும்.

குறிப்பு

கொள்ளும் பெயரோடு எனவே, கொள்ளாப் பெயருமுள என்றதனால் வியேற்கும் பெயர்களுடன் விளி ஏலாப் பெயர்களும் உண்டு என்பது கொள்ளப்படும்.

அவ்வே,

இவ் என அறிதற்கு மெய் பெறக் கிளப்ப.

விளிகொள்ளும் பெயரும் கொள்ளாப் பெயரும் இவையென மாணாக்கனுணர்தற் பொருட்டு அவை இவ் ஓத்தினகத்துப் பொருள்படக் கிளக்கப்படும். இது கூறுவாம் என்னும் தந்திரவுத்தி.

**விளியேற்கும் பெயர்கள்:**

விளியேற்கும் பெயர்களைச் சேனாவரையர் உயர்திணைப் பெயர், உயர்திணை விரவுப் பெயர், அ.்.றிணைப் பெயர், அ.்.றிணை விரவுப் பெயர் என நான்காகப் பகுத்துரைப்பார்.

**உயர்திணைப் பெயர்கள் விளியேற்றல்::**

உயர்திணைப் பெயர்களில் இ, உ, ஐ. ஓ என்னும் நான்கு உயிரீறுகளும் விளி ஏற்கும்.

அவைதாம்

இ உ ஐ ஓவென்னு மிறுதி

அப்பால் நான்கே உயர்திணை மருங்கின்

மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயரே.

கிளக்கப்படுவனவாகிய பெயர் தாம் இ உ ஐ ஓ என்னுமிறுதியையுடைய நான்கு பெயரும் உயர் திணைப் பெயருள் விளி கொள்ளும் பெயர்கள் ஆகும்.

அ.்.றிணைப்பெயர் ஆகுபெயராய் உயர்திணைக்கண் வந்தவழி விரவுப்பெயர் உயர்திணைக் கண்வருங்காலும், அவை விளியேற்குமிடத்து உயர்திணைப் பெயராம் எனபதற்கு உயர்திணை மருங்கின் மெய்ப் பொருள் சுட்டிய என்றார் தொல்காப்பியர் எனக் குறிப்பார் சேனாவரையர்.

சுடர்த்தொடீ கேளாய் (கலி. 51) இதில் சுடர்த்தொடி என்னும் அ.்.றிணைப் பெயர் உயர்திணைப் பெயராய் விளியேற்றது.

சாத்தீ – சாத்தீ என்னும் விரவுத்திணைப் பெயர் உயர்திணைப் பெயராய் விளியேற்றது.

குறிப்பு

மெய்ப்பொருள் சுட்டிய விளிகொள் பெயர் அப்பால் நான்கென்பன எழுவாயும் பயனிலையுமாய் இயைந்து, ஒரு சொன்னீர்மையவாய், அவை தாமென்னும் எழுவாய்க்குப் பயனிலையாயின.

சேனாவரையர், உயர்திணைப் பெயர் வேறாய அஃறிணைப் பெயர், அஃறிணை விரவுப் பெயர் என்பனவற்றுள் உயர்திணை விரவுப் பெயரை மட்டும் உயர்திணையுள் அடக்கி ஏனைய இரண்டினையும் தனித்தனியே தொல்காப்பியர் உரைத்தமைக்கு சேனாவரையர் பின்வரும் காரணங்களைச் சுட்டுவார்.

தொல்காப்பியர் அஃறிணைப் பெயரின் வேறாய அஃறிணை விரவுப் பெயர் ஒன்றினைக் குறிப்பதால் உயர்திணைப் பெயரின் வேறாய உயர்திணை விரவுப் பெயரை உள்ளதாய்க் இருத்தல் வேண்டும்.

உயர்திணைப் பெயர்களுள் விளியேற்கும் பெயர்கள்பெயர்கள் என முறைப்பெயர்களைச் சுட்டுகின்றார். முறைப்பெயர்கள் விரவுப் பெயர்கள் ஆகும். எனவே இவை உயர்திணை விரவுப் பெயர்கள் என்பது சேனாவரையர் கருத்து.

உயர்திணைப் பெயர்களுள் விளி ஏலாப் பெயர்களைச் சுட்டும்போது தான், நீயிர் என்ற சொற்களைக் குறிப்பார். இவை விரவுப் பெயர்கள் ஆகும். விளி ஏலா உயர்திணைப் பெயர்களுள் அவ் விரவுப் பெயர்களையும் தொல்காப்பியர் கூறுதலின் உயர்திணை விரவுப் பெயர்களையும் சேர்த்துக் கூறுதல் தொல்காப்பியர் சிந்தனை எனத் துணியலாம் என்பது சேனாவரையர் கருத்து.

அஃறிணை விரவுப் பெயரினை அஃறிணைக்குள் சுட்டாததற்குக் காரணம் உயர்திணைப் பெயர்களும், உயர்திணை விரவுப் பெயர்களும் ஒரே தன்மையான் விளி ஏற்பன. ஆனால் அஃறிணைப் பெயர்களும் அஃறிணை விரவுப் பெயர்களும் ஒரே தன்மையான் விளி ஏற்பன அல்ல

கிளந்த விறுதி யஃறிணை விரவுப்பெயர்

விளம்பிய நெறிய விளிக்குங் காலை (சொல் -150

எனவும், இதன் பின்,

முறைப்பெயர் மருங்கி னையெ னிறுதி

யாவொடு வருதற் குரியவு முளவே“ (சொல் -126)

எனவும், இதன்பின்

குறிப்பு

னகார ளகார வீற்றிருவகை முறைப்பெயரு மடங்கப்

புள்ளி யிறுதி யேயொடு வருமே“ (சொல் -151)

எனவும் குறிப்பார் தொல்காப்பியர். அதற்கான காரணம் மயங்கக் கூறலென்னுங் குற்றமும் நீங்கிச் சூத்திரமுஞ் சுருங்கும் என்பதாகும். அவ்வாறு குறிக்கப்பெறாது முறைப் பெயரே யன்றித் தாம் நீயி ரென்பனவும் ஈண்டுக் கூறப் பட்டமையானும்,உரையாசிரியர்க்கு அது கருத்தன்று என்பது தெரியவரும்.

**இகர ஐகார ஈறுகள்:**

அவற்றுள்,

இ ஈ ஆகும்; ஐ ஆய் ஆகும்

மேற்கூறப்பட்ட நான்கீறும் விளியேற்குமாறு கூறுகின்றார்.

அவற்றுள் என்பது அந் நான்கீற்றினுள் என்றவாறு.

நம்பி - நம்பீ என இகரம் ஈகாரமாயும்,

நங்கை - நங்காய் என ஐகாரம் ஆயாயும் ஈறு திரிந்து விளியேற்கும்

**ஓகார உகர ஈறுகள்:**

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்

கோ - கோவே -ஓகாரமும் ஏகாரம்.

வேந்து - வேந்தே உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும்.

உகரம்தானே குற்றியலுகரம்

மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம் ஆகும்.

திரு, திருவே எனச் சிறுபான்மை முற்றுகர ஈறு உண்டு என்ற போதினும் ஓதிய முறையான் விளியேற்பன குற்றிலுகர ஈறே ஆதலின் குற்றியலுகரமென்றார் தொல்காப்பியர்.

**ஏனை உயிர்கள் உயர்திணையில் விளி ஏலாமை:**

ஏனை உயிரே உயர்திணை மருங்கின்

தாம் விளி கொள்ளா என்மனார் புலவர்

மேற்கூறப்பட்ட நான்கு ஈறுமல்லாத உயிரீறுகள் உயர்திணைக்கண் விளி ஏற்காது.

குறிப்பு

கொள்வன இவையென வரையறுத் துணர்த்தவே, ஏனைய கொள்ளா என்று குறிக்கப்பட்டது,. வரையறைக்குப் பயன் அதுவாகலான் அதனால் இச்சூத்திரம் வேண்டாம் எனின் அஃதொக்கும் எனினும் வரையறையாற் பெறப்படுவதனையே ஒரு பயன் நோக்கிக் கூறினார். அந்தப் பயன் ஏனையுயிர் விளிகொள்ளாது என, முன்னர் கூறப்பட்ட தன்மை மட்டுமன்றி பிறவாற்றானும் விளி கொள்வனவும் உள்ளன என்பதனை உணர்த்துதலாகும். அவைமுறையே,

கணி, கணியே; கரி, கரியே என்பனவாய் வரும்

தாமென்பதனான் ஏனையுயிர் தம்மியல்பாற் விளிகொள்ளாது ஆயினுஞ் சொல்லுவான் குறிப்புவகையாற் கொள்வனவும் உண்டு,. மகன் என்பதுவிளி பெறாதாயினும் சொல்லுவான் குறிப்பான் மகவே என விளியேற்றலும் உண்டு.

**இகர ஈற்று அளபெடைப் பெயர்:**

அளபெடை மிகூஉம் இகர இறு பெயர்

இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.

அளபெடையில் தன்னியல்பாகிய மாத்திரையின் மிகுந்து நான்கும் ஐந்தும் மாத்திரை பெற்று நிற்கும் இகரவீற்றுப் பெயர் இ ஈ யாகாது இயல்பாய் விளியேற்கும்.

அளபெடைமிக்கும் இயற்கைவாகும் செயற்கைய என்னாது ‘மிகூஉ மிகர விறுபெயரென’ அநுவதித்தாரேனும் மாத்திரைமிக்கு இயல்பாமென்பது அதனாற் பெறப்படும்.

தொழீஇஇ,

தொழீஇஇஇ என்பனவாய் வரும்.

இ ஈ ஆகாமையின் இயற்கையவாகும் என்றும், மாத்திரை மிகுதலாகிய செயற்கையுடைமையாற் செயற்கைய என்றுங் கூறினார் தொல்காப்பியர்,

**முறைப் பெயர்:**

முறைப் பெயர் மருங்கின் ஐ என் இறுதி

ஆவொடு வருதற்கு உரியவும் உளவே.

முறைப்பெயரிடத்து ஐயென்னும் முடிபு ஆயாகாது ஆவொடு வருதற்கும் உரியதாகும்.

குறிப்பு

அன்னை - அன்னா

அத்தை - அத்தா என்பதாய் வரும்.

ஐகார ஈறு ஆயாதலும் உடையது என்பது உம்மையால் பெறப்படும்என்பார் தொல்காப்பியர். அன்னாய் - அத்தாய்

**அண்மை விளி:**

அண்மைச் சொல்லே இயற்கை ஆகும்

ஈ, உ, ஐ, ஓ என்னும் நான்கு ஈறுகளும் அண்மைக்கண் விளியேற்கும். பொழுது இயல்பாக விளியேற்கும்.

தம்பி வாழி

வேந்து வாழி

நங்கை வாழி

கோ வாழி

**உயர்திணையில் மெய்யீறுகள் விளியேற்றல்:**

ன, ர, ல, ள, என்னும் அந் நான்கு என்ப

புள்ளி இறுதி விளி கொள் பெயரே.

மெய் ஈறினையுடைய உயர்திணைப் பெயர்களுள் ன, ர, ல,ள என்னும் ஈறுகளை உடைய பெயர்கள் மற்றுமே விளி ஏற்கும்.

**உயர்திணையில் மெய்யீறுகள் விளியேற்காமை:**

ஏனைப் புள்ளி ஈறு விளி கொள்ளா

ன, ர, ல,ள என்னும் ஈறுகளை உயர்திணைப் பெயர்களைத் தவிர ஏனைய புள்ளியீறுகள் விளியேற்கா.

அவற்றுள்,

அன் என் இறுதி ஆ ஆகும்மே.

அன் என்னும் ஆறு ஆ வாக மாறும்.

துறைவன் - துறைவா

ஊரன் - ஊரா

சோழன் - சோழா

சேர்ப்பன் - சேர்ப்பா

குறிப்பு

அண்மைச் சொல்லிற்கு அகரம் ஆகும்.

அண்மை விளியாயின் அன் ஈறு அகரமாகும்.

துறைவன் - துறைவ

ஊரன் - ஊர

சோழன் - சோழ

சோப்பன் - சேர்ப்ப

ஆன் என் இறுதி இயற்கை ஆகும்.

அதாவது ஆனென்னும் னகரவீறு இயல்பாய் விளியேற்கும்

சேரமான் - மலையான்

தொழிலின் கூறும் ஆன் என் இறுதி

ஆய் ஆகும்மே, விளிவயினான.

தொழிலான் ஒருபொருளைச் சொல்லும் ஆனீற்றுப் பெயர் ஆய் என விளியேற்கும்.

வந்தான் - வந்தாய் ;

சென்றான் - சென்றாய் என வரும்.

பண்பு கொள் பெயரும் அதன் ஓரற்றே

ஆன் ஈற்றுப் பண்புகொள் பெயரும் தொழிற்பெயர்போல ஆயாய் விளியேற்கும்

கரியான்- கரியாய்

செய்யான் - செய்யாய் என வரும்.

அளபெடைப் பெயரே அளபெடை இயல

ஆன் ஈற்று அளபெடைப் பெயர் இகரஈற்று அளபெடைப் பெயரேபோல் மூன்று மாத்திரையின் நீண்டு இயல்பாய் விளியேற்கும்.

உழா அ அன்

குறிப்பு

கிழா அஅ அன் என வரும்.

முறைப் பெயர்க் கிளவி ஏயொடு வருமே

னகர ஈற்று முறைப் பெயர் ஏகாரம் பெற்று விளியேற்கும்.

மகன் - மனே, மருமகன்- மருமகனே

தான் என் பெயரும், சுட்டுமுதற்பெயரும்,

யான் என் பெயரும், வினாவின் பெயரும்,

அன்றி அனைத்தும் விளி கோள் இலவே

தானென்னும் பெயரும், அவன் இவன் உவனென்னும் சுட்டுமுதற்பெயரும், யானென்னும் பெயரும், யாவனென்னும் வினாப்பெயருமாகிய அவ்வனைத்தும், னகர ஈறே ஆயினும், விளியேற்காது.

ஆரும் அருவும் ஈரொடு சிவணும்

ரகாரவீற்றுள் ஆர், அர் என்னும் இரண்டும் ஈராய் விளியேற்கும்

பார்ப்பார் - பார்ப்பீர்

கூத்தர் - கூத்தீர் என வரும்.

தொழிற்பெயர் ஆயின், ஏகாரம் வருதலும்

வழுக்கு இன்று என்மனார், வயங்கியோரே

மேற்கூறிய இரண்டு ஈற்றுத் தொழிற் பெயர்களும் ஈகாரத்தோடு ஏகாரம் பெற்று வருதலும் உண்டு,

வந்தார் - வந்தீரே;

சென்றார் - சென்றீரே என வரும்.

ஏகாரம் வருதலும் வழுக்கின்று என்றதனால், ஏகாரம் பெறாது ஈரோடு வருதலே பெரும்பான்மை என்பது பெறப்படும்.

பண்பு கொள் பெயரும் அதன் ஓரற்றே

ஆர், அர் என்னும் இரண்டு ஈற்றுப் பண்புகொள் பெயரும், அவ்வீற்றுத் தொழிற்பெயர் போல ,ஈரோடு சேர்ந்தும் சிறுபான்மை ஈரோடு ஏகாரம் பெற்றும் விளியேற்கும்.

குறிப்பு

கரியார் – கரியீர்

இளையர், இளையீர்

கரியீரே. இளையீரே எனவும் வரும்.

அளபெடைப் பெயரே அளபெடை இயல

ரகாரவீற்று அளபெடைப்பெயர் முன்னர் குறிக்கப்பெற்ற அளபெடைப் பெயரே போல மூன்று மாத்திரையின் மிக்கு இயல்பாய் விளியேற்கும்.

சிறா அ அர்;

மகா அ அ அர் என வரும்.

சுட்டுமுதற் பெயரே முன் கிளந்தன்ன

அவர், இவர், உவர் என வரும் ரகார ஈற்றுச் சுட்டு முதற்பெயர், னகார ஈற்றுச் சுட்டுமுதற்பெயரே போல விளி ஏற்காது.

நும்மின் திரிபெயர், வினாவின் பெயர், என்று

அம் முறை இரண்டும் அவற்று இயல்பு இயலும்.

நும்மின் திரிபாகிய நீயிரும் வினாவின் பெயராகிய யாவரும் இரண்டும் மேற்கூறிய சுட்டுப் பெயரே போல விளியேற்காது.

எஞ்சிய இரண்டின் இறுதிப் பெயரே

நின்ற ஈற்று அயல் நீட்டம் வேண்டும்

உணர்த்தாது எஞ்சி நின்ற லகார ளகாரமென்னும் இரண்டு புள்ளியை இறுதியாகவுடைய பெயர் ஈற்று அயல் எழுத்து நீண்டு விளியேற்கும்.

குரிசில் - குரிசீல்

மக்கள் - மக்காள் என வரும்.

அயல் நெடிதுஆயின், இயற்கை ஆகும்

ஈற்றயலெழுத்து நெடில் ஆயின் இயல்பாய் விளியேற்கும்

பெண்பால்,

கோமாள் என வரும்.

குறிப்பு

**ளகர ஈற்று வினைப்பெயரும் பண்புப் பெயரும்**

வினையினும் பண்பினும்

நினையத் தோன்றும் ஆள் என் இறுதி

ஆய் ஆகும்மே, விளிவயினான

வினையின்கண்ணும் பண்பின்கண்ணும் வரும் ஆள் ஈற்றுப்பெயர் இயல்பாகாது ஆய் என மாறி விளியேற்கும்.

நின்றாள் - நின்றாய்

கரியாள் - கரியாய் எனவும் வரும்.

முறைப் பெயர்க் கிளவி முறைப் பெயர் இயல

ளகாரவீற்று முறைப்பெயர் னகாரவீற்று முறைப்பெயர்போல ஏகாரம் பெற்று விளியேற்கும்.

மகள் - மகளே ;

மருமகள் - மருமகளே என வரும்.

சுட்டுமுதற்பெயரும் வினாவின் பெயரும்

முன் கிளந்தன்ன என்மனார் புலவர்.

அவள், இவள், உவள் என்னும் ளகார ஈற்றுச் சுட்டு முதற்பெயரும், யாவள் என்னும் வினாப்பெயரும், மேற்கூறிய சுட்டு முதற்பெயரும் வினாப்பெயரும்போல, விளி ஏற்காது,

அளபெடைப் பெயரே அளபெடை இயல

லகார ளகார ஈற்று அளபெடைப்பெயர், மேற்கூறிய அளபெடைப்பெயரே போல, அளபு நீண்டு இயல்பாய் விளியேற்கும்.

மா அஅல், கோஒஒன் என வரும்.

**விரவுப் பெயர் விளியேற்றல்:**

கிளந்த இறுதி அ∴றிணை விரவுப்பெயர்

விளம்பிய நெறியே விளிக்குங் காலை

உயர்திணைப் பெயரும் உயர்திணை விரவுப் பெயரும் விளிகொள்ளும் தன்மையை உணர்த்திய தொல்காப்பியர்,இனி அ∴றிணை விரவுப்பெயர் விளிகொள்ளுமாறுஉணர்த்துகின்றார்.

கிளந்த இறுதி என்பன உயிரீறு நான்கும் புள்ளியீறு நான்குமாம் . அவற்றை யிறுதியாகவுடைய அஃறிணைக் கண்வரும் விரவுப்பெயர் மேற்கூறிய நெறியான் விளியேற்கும்;

சாத்தி - சாத்தீ,

பூண்டு - பூண்டே;

தந்தை - தந்தாய்,

சாத்தன் - சாத்தா;

கூந்தல் - கூந்தால்,

மக்கள் - மக்காள் என்பனவாய் வரும்.

சாத்தி, பூண்டு, தந்தை, சாத்த என அண்மைவிளியாய் வருவனவும் உண்டு.

**அஃறிணைப் பெயர் விளி ஏற்றல்:**

புள்ளியும் உயிரும் இறுதி ஆகிய

அஃறிணை மருங்கின் எல்லாப் பெயரும்

விளி நிலை பெறூஉம் காலம் தோன்றின்,

தெளி நிலை உடைய,ஏகாரம் வரலே.

புள்ளியும் உயிரும் இறுதியாகிய அஃறிணையிடத்து வரும் எல்லாப்பெயரும் விளியேற்கும் காலத்தில் ஏகாரம் பெறும்.

மரம் - மரமே

அணில் - அணிலே என வரும்.

உள எனப்பட்ட எல்லாப் பெயரும்,

அளபு இறந்தனவே, விளிக்கும் காலை,

சேய்மையின் இசைக்கும் வழக்கத்தான.

உயர்திணைக்கண்ணும் அஃறிணைக்கண்ணும் விளியேற்பனவாகச் சொல்லப்பட்ட எல்லாப் பெயரும், விளிக்குமிடத்து,சேய்மைக்கண் ஒலிக்கும் வழக்கத்தின்காரணமாக தத்தமாத்திரையின் இறந்திசைத்தன.

நம்பீ இ, சாத்தாஅ என வரும்.

சேரமான், மலையமான் என்பனவற்றில்ஈற்றயல் அளபிறந்த வழி இயல்பு விளியென்னாது ஈற்றயல் நீண்டதாகக் கொள்ளவேண்டும்.

குறிப்பு

அம்ம என்னும் அசைச்சொல் நீட்டம்

அம் முறைப்பெயரொடு சிவணாதுஆயினும்,

விளியொடு கொள்ப தெளியுமோரே

அம்மவென்னும் அசைச்சொல்லினது நீட்டம், விளிகொள்ளும் பெயரொடு தோன்றாது,இடைச்சொல்லோடு தோன்றினாலும்விளியாகக் கொள்வர்.

அம்மா, சாத்தா என வரும்.

சாத்தா என்பதே எதிர்முகமாக்கும் ஆயினும் அம்மா என்பது அவ்வெதிர் முகமாக்குதலே குறித்து நிற்றலின் விளியாகக் கொள்ளப்படுமென்பதாலே விளியொடு கொள்ப என்றார் என்பார் சேனாவரையர்.

உயர்திணைப் பெயருள் விளி ஏலாதவை:

த, ந, நு, எ ,என அவை முதல் ஆகித்

தன்மை குறித்த ன, ர, ள, என் இறுதியும்,

அன்ன பிறவும், பெயர் நிலை வரினே,

இன்மை வேண்டும், விளியொடு கொளலே.

தநநு என்னும் உயிர்மெய்யும் எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாகவுடைய சொல்லும் அவை போல்வன பிறவுமாகிய பெயர்ச்சொல் வருமாயின், விளியேற்காது.

தமன், தமர், தமள்,

நமன், நமர், நமள்,

நுமன், நுமர், நுமள்,

எமன், எமர், எமள், எனவும்;

தம்மான், தம்மார், தம்மாள்,

நம்மான், நம்மார், நம்மாள்,

நும்மான், நும்மார், நும்மாள்,

எம்மான், எம்மார், எம்மாள் எனவும் வரும்.

குறிப்பு

அன்னபிறவுமென்றதனான்,

மற்றையான், மற்றையார், மற்றையாள்;

பிறன், பிறர், பிறள் என வருவன கொள்ள வேண்டும்.

பயிற்சி வினாக்கள்:

1.விளி என்பதனை விளக்குக.

விளியின் பொது இலக்கணம்:

விளி எனப்படுப கொள்ளும் பெயரொடு

தெளியத் தோன்றும் இயற்கைய என்ப

நிறுத்த முறையானே விளிவேற்றுமை யுணர்த்தி எடுத்துக் கொண்டார்; அதனான் இவ்வோத்து விளிமரபென்னும் பெயர்த்தாயிற்று.

விளியென்று சொல்லப்படுவன தம்மையேற்கும் பெயரோடு விளங்கத் தோன்றும் இயல்பையுடையன என்று கூறுவார் தொல்காப்பியர்

ஈறுதிரிதலும்,ஈற்றயல் நீடலும், பிறிது வந்தடைதலும், இயல்பாதல் என்னும் வேறுபாடுடைமையான் விளியெனப்படும்.

2.முறைப்பெயர் கிளவி குறித்து எழுதுக.

முறைப் பெயர்:

முறைப் பெயர் மருங்கின் ஐ என் இறுதி

ஆவொடு வருதற்கு உரியவும் உளவே.

முறைப்பெயரிடத்து ஐயென்னும் முடிபு ஆயாகாது ஆவொடு வருதற்கும் உரியதாகும்.

அன்னை - அன்னா

அத்தை - அத்தா என்பதாய் வரும்.

ஐகார ஈறு ஆயாதலும் உடையது என்பது உம்மையால் பெறப்படும் மென்பார் தொல்காப்பியர், அன்னாய் - அத்தாய்

3.இகர,ஐகார ஈறுகள் விளியேற்றலை விவரி.

இகர ஐகார ஈறுகள்:

குறிப்பு

அவற்றுள்,

இ ஈ ஆகும்; ஐ ஆய் ஆகும்

மேற்கூறப்பட்ட நான்கீறும் விளியேற்குமாறு கூறுகின்றார்.

அவற்றுள் என்பது அந் நான்கீற்றினுள் என்றவாறு.

நம்பி - நம்பீ என இகரம் ஈகாரமாயும்,

நங்கை - நங்காய் என ஐகாரம் ஆயாயும் ஈறு திரிந்து விளியேற்கும்

ஓகார உகர ஈறுகள்:

ஓவும் உவ்வும் ஏயொடு சிவணும்

கோ - கோவே - ஓகாரமும் ஏகாரம்.

வேந்து - வேந்தே உகரமும் ஏகாரம் பெற்று விளியேற்கும்.

உகரம்தானே குற்றியலுகரம்

மேற்கூறப்பட்ட உகரமாவது குற்றியலுகரம் ஆகும்.

திரு, திருவே எனச் சிறுபான்மை முற்றுகர ஈறு உண்டு என்ற போதினும் ஓதிய முறையான் விளியேற்பன குற்றிலுகர ஈறே ஆதலின் குற்றியலுகரமென்றார் தொல்காப்பியர்.

4.உயர்திணைப்பெயர்கள் விளியேலாமை குறித்து எழுதுக.

உயர்திணைப் பெயருள் விளி ஏலாதவை:

த, ந, நு, எ ,என அவை முதல் ஆகித்

தன்மை குறித்த ன, ர, ள, என் இறுதியும்,

அன்ன பிறவும், பெயர் நிலை வரினே,

இன்மை வேண்டும், விளியொடு கொளலே.

தநநு என்னும் உயிர்மெய்யும் எ என்னும் உயிரையும் முதலாகவுடையவாய் ஒருவனது கிழமைப் பொருண்மையைக் குறித்து நின்ற ன ர ள என்னும் மூன்று புள்ளியை இறுதியாகவுடைய சொல்லும் அவை போல்வன பிறவுமாகிய பெயர்ச்சொல் வருமாயின், விளியேற்காது.

தமன், தமர், தமள்,

நமன், நமர், நமள்,

நுமன், நுமர், நுமள்,

எமன், எமர், எமள், எனவும்;

தம்மான், தம்மார், தம்மாள்,

நம்மான், நம்மார், நம்மாள்,

நும்மான், நும்மார், நும்மாள்,

எம்மான், எம்மார், எம்மாள் எனவும் வரும்.

அன்னபிறவுமென்றதனான்,

மற்றையான், மற்றையார், மற்றையாள்;

பிறன், பிறர், பிறள் என வருவன கொள்ள வேண்டும்.

குறிப்பு

5. ளகர ஈற்று வினைப்பெயரும் பண்புப்பெயரும் குறித்து விளக்குக.

ளகர ஈற்று வினைப்பெயரும் பண்புப் பெயரும்:

வினையினும் பண்பினும்

நினையத் தோன்றும் ஆள் என் இறுதி

ஆய் ஆகும்மே, விளிவயினான

வினையின்கண்ணும் பண்பின்கண்ணும் வரும் ஆள் ஈற்றுப்பெயர் இயல்பாகாது ஆய் என மாறி விளியேற்கும்.

நின்றாள் - நின்றாய்

கரியாள் - கரியாய் எனவும் வரும்.

முறைப் பெயர்க் கிளவி முறைப் பெயர் இயல

ளகாரவீற்று முறைப்பெயர் னகாரவீற்று முறைப்பெயர்போல ஏகாரம் பெற்று விளியேற்கும்.

மகள் - மகளே,

மருமகள்- மருமகளே என வரும்.

## பெயரியல்

குறிப்பு

சொற்கள் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். இச்சொற்களின் பொது இலக்கணத்தை கிளவியாக்கத்தினுள் உணர்த்தினார்.பொது இலக்கணமாதல் ஒப்புமைத்தன்மையாலும் வேற்றுமைத்தன்மையாலும் பெயரோடு பொருந்தி அமையமாதலின் பெயரிலக்கணத்திற்கும் பொது இலக்கணத்திற்கும் இடையில் வேற்றுமை இலக்கணத்தை உணர்த்தினார் தொல்காப்பியர்.ஈண்டு சிறப்பு வகையான் நான்கு சொற்களையும் விளக்கத் தொடங்கி முதற்கண் பெயரிலக்கணம் உரைத்தார், பெயரினது இலக்கணம் உணர்த்தியமையால் இவ்வியல் பெயரியல் என்னும் பெயரதாயிற்று, அதனை உணர்த்தும் சேனாவரையர் உரைநான்கு சொல்லும் பொதுவகையா னுணர்த்தி, பொதுவிலக்கணமாத லொப்புமையானும் வேற்றுமை பெயரோடியைபுடைமையானும் பெயரிலக்கணத்திற்கும் பொதுவிலக்கணத்திற்கும்இடை வேற்றுமையிலக்கணமுணர்த்தி இனிச்சிறப்புவகையான நான்குசொல்லுமுணர்த்துவானெடுத்துக் கொண்டு, இவ்வோத்தான் அவற்றின் முதற்கண்ணதாகிய பெயரிலக்கண முணர்த்துகின்றார். அதனா னிது பெயரிய லென்னும் பெயர்த்தாயிற்று என்பதாம்.

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே

பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லும் இடைச் சொல்லும் உரிச்சொல்லுமாகிய எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே ஆகும். பொருள் குறியாத சொற்கள் தமிழில் இல்லை என்பதாம்.

ஆயிரு திணையி னிசைக்கும்" (சொல் - 1) என்றதனான் இது பெறப்படுதலின் இச்சூத்திரம் வேண்டாமோ எனின்- அவ்வாறன்று, ; சொல்லிசைக்கும் பொருளாவன இவ்விரண்டு திணையுமே பிறிதில்லையென்பதனை உணர்த்துகின்றதேுயன்றி சொல்லெல்லாம் பொருள் உணர்த்தாதனஇல்லையென்னும் யாப்புறவு அதனாற் பெறப்படாமையினாலும், அசைநிலை முதலாயினவும் பொருள்குறித்து நிற்குமென ஐயம் அறுத்தற்கும் இச்சூத்திரம் வேண்டும் என உரைவிளக்கம் தருவார் சேனாவரையர்,.

முயற்கோடு,யாமைமயிர்க்கம்பலம் என்பன பொருளுணர்த்தாவாலெனின்: என வினா எழுப்பி அதற்கு அவை தொடர்மொழியாகலான் ஈண்டைக் கெய்தாவென்பது. அஃதேல், தொடர்மொழிதான் பொருள்குறியாது வருமோவெனின்:- வாரா. அவை மெய்ப்பொருள் குறிப்பனவும் பொய்ப் பொருள். குறிப்பனவுமென இருவகைப்படும். அவற்றுள், பொய்ப் பொருள் குறிப்பனவும் பொருளுணர்த்துவனவேயாம். அல்லாக்கால் இல்லோன்றலைவனாக வருந் தொடர்நிலைச் செய்யுள்

பொருளுணர்த்தாமையின், அவை புலவராற் கொள்ளப்படாவென்பது. என விடையளிப்பார் சேனாவரையர், .

குறிப்பு

மேலும் இச்சூத்திரம் முதலாக ஐந்து சூத்திரத்தாற் கூறப்பட்டன பொதுவிலக்கண மாகலான், இவற்றை இவ்வியலில் வைக்காது கிளவியாக்கத்துள் வைத்திருக்கலாமே என வினவும் சேனாவரையர் :- இவை பொதுவிலக்கணமேயெனினும், ஆண்டுக் கூறப்பட்டன வழூஉக்காத்தலும் வழூஉக்காத்தற்கு உபகாரமுடையனவுமன்றே; எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன என ஐயமகற்றலும் சொற்பொருள் இணைத்துப் பாகுபடுமென்றலும் சொல்லினைத் தென்றலுமென வழூஉக்காத்தலும், வழூஉக்காத்தற்கு உபகார முடையனவு மன்மையான், ஆண்டுணர்த்தாது, பொருள் வேறுபாடுபற்றிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லு முணர்த்துங்கால் அவை யுணர்த்தியல்லது உணர்த்தலாகாமையின் அவற்றை யீண்டுணர்த்தினாரென்பது பொருள் வேறுபாடுபற்றிச் சொல் லுணர்த்துமாறு முன்னர்க் காணப்படும். என விளக்கம் தருவார்.பொருண்மை தெரிதலும், சொன்மை தெரிதலும்,சொல்லின் ஆகும்என்பதும் தெரியவரும்.

பொருண்மை தெரிதலுவும் சொன்மை தெரிதலும்

சொல்லினாகும் என்மனார் புலவர்.

தெரிபு வேறு நிலையலும், குறிப்பின் தோன்றலும்,

இரு பாற்றுஎன்ப பொருண்மை நிலையே

தன்னின் வேறாகிய பொருளறியப்படுதலும் பொருளறியப்படாது அச்சொல்தானேயறியப்படுதலும் இரண்டும் சொல்லானாம்என்று சொல்லுவர்

சாத்தன் வந்தான்

பண்டு, காடு மன், உறு

பொருளை உணர்த்தல்

நீயென் கிளவி

செய்தெனெச்சம்,

தஞ்சக்கிளவி,

கடியென் கிளவி

சொல் தன்னை உணர்த்தல்

குறிப்பு

ஆயிறு திணையி னிசைக்குமன சொல்லே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (சொல் - 155)ஈறு பெயர்க் காகும் இயற்கைய வென்ப (சொல் - 69) என்றவழி சொல்லென்னும் சொல்லும் பெயரென்னும் பெயரும் அறியப்படுதலால் சொன்மை தெரிதலாகும். ஏனைச் சொல்லும் ஏனைப் பெயரும் அறியப்படுதற்கண் பொருண்மை தெரிதலும் ஆகும். எனவே மேற்கண்ட இரண்டும் ஒருங்கே வந்தன.

**சொற்களின் வகை:**

சொல் எனப்படுப பெயரே, வினை, என்று

ஆயிரண்டு என்ப, அறிந்திசினோரே

சொல்லாவன பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லுமென இரண்டு வகைப்படும்

பெயர்ச்சொற்கிலக்கணம் வேற்றுமையியலில் கூறினார்; வினைச்சொற்கிலக்கணம் வினையியலில் கூறுவார் என்பார் சேனாவரையர்,

பிறசொற்களும் உள்ளன எனினும், இவற்றினது சிறப்பு நோக்கிப் பெயரே வினையென் றாயிரண் டென்ப என்றார். இவற்றுள்ளும் பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப் பொருள்பற்றி வருஞ் சிறப்புடைமையாற் பெயரை முற்கூறினார் என்பது சேனாவரையரின் குறிப்புரையாம்

இடைச்சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்,

அவற்று வழி மருங்கின் தோன்றும்" என்ப .

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றும்.

அவற்றுவழி மருங்கில் தோன்றும்என்று தொல்காப்பியர் உரைத்தமையால் பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றும் இவ் விரண்டையும் அவற்றோடு சேர்த்து சொல் நான்காம்என்று அறிதல் வேண்டும். சார்ந்து தோன்றுமென்றமையால் இவற்றது சிறப்பின்மை தெரியவரும். வழக்குப் பயில்தல் நோக்கி இடைச்சொல் முதற்கண் கூறினார் தொல்காப்பியர்,

**பெயர்ச்சொல்லின் பாகுபாடு:**

அவற்றுள்,

பெயர் எனப்படுபவை தெரியும் காலை,

உயர்திணைக்கு உரிமையும், அஃறிணைக்கு உரிமையும்,

குறிப்பு

ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்,

அம் மூ உருவின, தோன்றலாறே

பொருள் வேறுபாடு பற்றிச் சிறப்பு வகையான் நான்கு சொல்லும் உணர்த்துதற்கு உதவியாகிய பொதுவிலக்கணத்தை முன் உணர்த்திபின் நிறுத்த முறையானே பெயர்ச் சொல்லின் இலக்கணத்தை உணர்த்துவார் தொல்காப்பியர்.

மேற் சொல்லப்பெற்ற நான்கனுள், பெயரென்று சொல்லப் படுவன உயர்திணைக்குரியவாய் வருவனவும், அஃறிணைக்குரியவாய் வருவனவும், இரண்டு திணைக்கு மொத்த உரிமையவாய் வருவனவும் எனன மூன்று வேறுபாட்ட வகையான் தோன்றும்.

பெயர்ச்சொல் பால் உணர்த்தல்:

இரு திணைப் பிரிந்த ஐம் பால் கிளவிக்கும்

உரியவை உரிய, பெயர்வயினான

இருதிணைப்பிரிந்த ஐம்பாற் கிளவியாதற்குப் பெயருள் உரியனவாகும்.

அவன், பெண்மகன், சாத்தான் என னகரவீறு ஆடுவிற்கும் மகடுவிற்கும், அஃறிணையாண்பாற்கும் உரித்தாய் வரும். அவள், மக்கள், மகள் என ளகரவீறு மகடுவிற்கும் பல்லோர்க்கும், அஃறிணைப் பெண்பாற்கும் உரியதாய் வரும்.பெண்டாட்டி நம்பிஇகரவீறும் ஆடூ மகடூஎன்னும் ஊகாரவீறும் இருபாற்கு உரியனவாய் வரும். வினைச் சொற்போல, இன்னவீறு இன்னபாற்கு உரித்தெனப் பெயர்ச் சொல் ஈறு உணர்த்தாமையின். ‘உரியவையுரிய’ என்றார் என்பார் சேனாவரையர்,

அவ்வாறு உணர்த்தாமைக்குக் காரணம் நூற்பாக்களின் எண்ணிக்கை பல்குமென்று அஞ்சியதாம். அஃதேல், இவற்றது பாற்கு உரிமை எவ்வாறு கொள்ளப்படுமெனின் வழக்கின்கட் பாலுணர்த்துதற் குரியவாய் வழங்கப்படுவனற்றைக் கொண்டு என்பதாம்.

குறிப்பு

நஞ்சுண்டான் சாம் என்பது ஒருபாற்குரிய சொல்லாயினும் நஞ்சுண்டாள் சாம், நஞ்சுண்டார் சாவர், நஞ்சுண்டது சாம், நஞ்சுண்டன சாம் என ஏனைப் பாற்கும் உரித்தாம் அச் சொல்லென இப் பொருண்மை உணர்த்துகின்றது என்பார் உரையாசிரியர். ஆனால் அத்தகைய கருத்தினை சேனாவரையர் மறுத்துரைப்பர்ர். நஞ்சுண்டல் சாதற்குக் காரணமென்பான் ஒரு பால்மேல் வைத்து நஞ்சுண்டான் சாமென்றது அல்லது, ஆண்டுத் தோன்றும் ஆண்மையும் ஒருமையுஞ் சாதற்குக் காரணமென்னுங் கருத்தினால் அல்லன் ; அதனாற் சொல்லுவான் கருத்தொடு கூடிய பொருளாற்றலாற் சாதல் ஏனைப் பாற்கும் ஒக்குமெனச் சேறல் சொல்லிலக்கணத்தில் கூறப்படாமையால், ஆசிரியர்,

ஒருபாற் கிளவி ஏனைப்பாற் கண்ணும்

வருவன தானே வழக்கென மொழிப(பொருளியல்-28)

என இப் பொருண்மை பொருளியலிற் கூறினார். எனவே இச் சூத்திரத்திற்கு இ∴துரையாதல் உரையாசிரியர் கருத்தன்று என்க. மேலும் பார்ப்பான் கள்ளுண்ணான் என்றவழிக் கள்ளுண்ணாமை சாதி பற்றிச் செல்வதொன்றாகலின் பார்ப்பனிக்கும் பார்ப்பார்க்குமல்லது பிறசாதியார்க்கும் அ∴றிணைக்குஞ் சொல்லாமையின், ஐம்பாற்கிளவிக்குமுரிய என்றல் பொருந்தாமையானும் அவர்க்கது கருத்தன்மை யறிக எனவும் விளக்கம் தருவார் சேனாவரையர்.

**உயர்திணைப் பெயர்கள்:**

அவ்வழி,

அவன், இவன், உவன், என வரூஉம் பெயரும்;

அவள், இவள், உவள், என வரூஉம் பெயரும்;

அவர், இவர், உவர், என வரூஉம் பெயரும்;

யான், யாம், நாம், என வரூஉம் பெயரும்;

யாவன், யாவள், யாவர், என்னும்

ஆவயின் மூன்றொடு அப் பதினைந்தும்

பால் அறிவந்த உயர்திணைப் பெயரே

மூவகையாக மேற்சொல்லப்பட்ட பெயருள், அவனென்பது முதலாக யாவரென்ப தீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால் விளங்க நிற்கும் உயர்திணைப்பெயர் ஆகும். அவன், இவன், உவன் என்னும் ஆண்பாற் பெயர்களும் அவள், இவள், உவள் என்னும் பெண்பாற் பெயர்களும் அவர், இவர், உவர்,என்னும் பலர்பால் பெயர்களும்யான், யாம், நாம்,

யாவன், யாவள், யாவர் என்னும் பெயர்களும் உயர்திணையில் இன்னபால் என்பதனை உணர்த்தி நிற்கும் பெயர்கள் ஆகும்.

குறிப்பு

இவற்றுள்யானென்பது, ஒருவன் ஒருத்தி யென்னும் பகுதி உணர்த்தாதாயினும், அது திணை யொருமை உணர்த்தலின் பாலறிவந்த பெயராம். மேலும் பாலறி வந்தவெனப் பன்மைபற்றிக் கூறினாரெனினும் அது யான் என்பதற்கு ஏற்காது, இது நீங்கலாக ஏனையவற்றிற்கு ஏற்றலின் பன்மையில் கூறினார் என்பார் சேனாவரையர்,

ஆண்மை அடுத்த மகன் என் கிளவியும்,

பெண்மை அடுத்த மகள் என் கிளவியும்,

பெண்மை அடுத்த இகர இறுதியும்,

நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்,

முறைமை சுட்டா மகனும் மகளும்,

மாந்தர் மக்கள் என்னும் பெயரும்,

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்,

சுட்டு முதல் ஆகிய அன்னும் ஆனும்,

அவை முதல் ஆகிய பெண்டு என் கிளவியும்,

ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ,

அப் பதினைந்தும் அவற்று ஓரன்ன .

இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டன போல பாலறிவந்த உயர்திணைப்பெயராம்.

ஆண்மையடுத்த மகனென் கிளவி - ஆண்மகன்

பெண்மையடுத்த மகளென் கிளவிபெண்மகள்- பெண்டாட்டி

நம்மூர்ந்துவரூஉ மிகரமும் ஐகாரம்- நம்பி, நங்கை

முறைமை சுட்டா மகனு மகளும் - மகன் மகள்

ஆடூ மகடூ என்னும் சொல்லும்

மாந்தர் மக்களென்னும் பன்மைப் பெயர்

சுட்டு முதலாகிய அன்னும் ஆனுமாவன :

அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான் , இம்மாட்டான், உம்மாட்டான் என்பன.

குறிப்பு

அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி

ஒப்பொடு வரூஉங் கிளவியாவன பொன்னன்னான்; பொன்னன்னாள்

என்பனவும் பால் விளங்கி நிற்கும் உயர்திணைப் பெயர்கள் ஆகும். தொடக்கத்தன. இவை மேலே சொல்லப்பட்டன போன்று அதிகம் பயின்றுவாராமையின், அவற்றொடு ஒருங்கு வைக்காது தனித்துக் கூறினார் என்பார் சேனாவரையர்,

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்,

எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்,

பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்,

அன்ன இயலஎன்மனார் புலவர்

எல்லாரும் எனவும் எல்லீரும் எனவும் பெண்மகன் எனவும் வரும் மூன்றும் மேற் கூறப்பட்டனபோலப் பாலறிவந்த உயர்திணைப் பெயர்களாம்.

இவற்றுள் பெண்மகன் என்னும் சொல்லிற்கு புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக் காலத்தும் பெண் மகனென்று வழங்குவர் எனச் சான்று காட்டுவார் சேனாவரையர்.

எல்லாரும் எல்லீரும் என்றவழி படர்க்கைப் பன்மை யுணர்த்தும் ஆர் என்பதும் முன்னிலைப் பன்மை யுணர்த்தும் ஈர் என்பதும் உம்மை யடுத்து வருவதலானும் பெண்மகன் என்னும் சொல் பால் திரிந்து வருவதனாலும் தனித்துக் கூறினார்.

நிலப் பெயர், குடிப் பெயர், குழுவின் பெயரே,

வினைப் பெயர், உடைப் பெயர்,பண்பு கொள் பெயரே,

பல்லோர் குறித்த முறை நிலைப் பெயரே,

பல்லோர் குறித்த சினை நிலைப் பெயரே,

பல்லோர் குறித்த திணை நிலைப் பெயரே,

கூடி வரு வழக்கின் ஆடு இயற் பெயரே,

இன்றிவர் என்னும் எண்ணியற்பெயரொடு,

குறிப்பு

அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே

நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலனபோலப் பாலறிவந்த உயர்திணைப் பெயர்களாம். ;

நிலப்பெயர் - அருவாளன், சோழியன்,

குடிப்பெயர் - மலையமான், சேரமான்

குழுவின் பெயர் - அவையத்தார், அத்தி கோசத்தார்,

வினைப்பெயர் - வருவார், செல்வார், தச்சன், கொல்லன்

உடைமைப்பெயர் - அம்பர் கிழான், பேரூர்கிழான் என்பன ; வெற்பன் , சேர்ப்பன்.

பண்பு கொள் பெயர் - கரியான். செய்யான்

பல்லோர்க்குறித்த முறை நிலைப் பெயர் - தந்தையர், தாயர்

பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயர் - பெருங்காலர், பெருந்தோளர்

பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயர் - பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர்

(பல்லோர்க் குறித்த என்று சிறப்பித்தமையால் இம் மூவகைப் பெயருள் ஒருமைப்பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்)

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் - பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர்

எண்ணியற் பெயர் ஒருவர், இருவர், முப்பத்துமூவர்

அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்
பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த
என்ன பெயரும் அத் திணையவ்வே

மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வனவும் பிறவும், உயர்திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பாலறிவந்த எல்லாப்பெயரும் உயர்திணைப் பெயராம்

அன்ன பிறவுமாவன - ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார், என்னுந் தொடக்கத்தன என்பார் சேனாவரையர் .

குறிப்பு

## அ.ஃறிணைப் பெயர்கள்:

அது, இது, உது, என வரூஉம் பெயரும்;

அவை முதல் ஆகிய ஆய்தப் பெயரும்;

அவை, இவை, உவை, என வரூஉம் பெயரும்;

அவை முதல் ஆகிய வகரப் பெயரும்;

ஹயாது, யா, யாவை," என்னும் பெயரும்;

ஆவயின் மூன்றொடு அப் பதினைந்தும்

பால் அறி வந்த அ.ஃறிணைப் பெயரே

அது, இது, உதுவென் வரும் பெயரும், சுட்டே முதலாக ஆய்தத்தோடு கூடி அ.ஃது, இ.ஃது, உ.ஃது என வரும் பெயரும் ; அவை, இவை, உவையென வரும் பெயரும், அச் சுட்டே முதலாக அவ், இவ், உவ் என வரும் வகர ஈற்றுப் பெயரும் யாது, யா, யாவை என்னும் வினாப்பெயருமென இப் பதினைந்து பெயரும், பால் விளங்க வரும் அ.ஃறிணைப் பெயராம்.

பல்ல, பல, சில, என்னும் பெயரும்,

உள்ள, இல்ல, என்னும் பெயரும்,

வினைப் பெயர்க் கிளவியும், பண்பு கொள் பெயரும்,

"இனைத்து எனக் கிளக்கும் எண்ணுக்குறிப் பெயரும்,

ஒப்பின் ஆகிய பெயர்நிலை உளப்பட,

அப் பால் ஒன்பதும் அவற்று ஓரன்ன

பல்லவென்பது முதலாகக் கூறப்பட்ட ஒன்பது பெயரும் மேற்கூறப்பட்ட அ.ஃறிணைப் பெயர்போலப் பால் உணர நிற்கும் பெயர்களாம்.

இவற்றுள் பல்ல, பல, சில, உள்ள, இல்ல என்னும் ஐந்து பெயரும் தம்மை யுணர்த்தி நின்றன. மற்றையன பொருளுணர்த்தி நின்றன.

வினைப் பெயர்க்கிளவி - வருவது, செல்வது

பண்பு கொள் பெயர் கிளவி – கரியது, செய்ய

இனைத்தெனக் கிளக்கும் எண்ணுக்குறிக் கிளவி: ஒன்று, பத்து, நூறு

குறிப்பு

ஒப்பினாகிய பெயர்நிலைக்கிளவி: பொன்னன்னது, பொன்னன்னவை

கள்ளொடு சிவணும் அவ் இயற்பெயரே,

கொள் வழி உடைய, பல அறி சொற்கே .

கள்ளென்னும் ஈற்றொடு பொருந்தும் அஃறிணையியற் பெயர் கள்ளீற்றோடு பொருந்துதற்கண் பலவறி சொல்லாம்.

அஃறிணை இயற்பெயராவன : ஆ, நாய், குதிரை, கழுதை,தெங்கு, பலா, மலை, கடல் என்னும் தொடக்கத்துச் சாதிப்பெயர். ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாய் நிற்றலின் இயற்பெயராகும். இவை கள் என்னும்,ஈற்றினைப் பெற்று ஆக்கள், குதிரைகள் என நின்று பன்மை விளக்கும் போது பலவறி சொல்லாக அமையும்.

அன்ன பிறவும் அஃறிணை மருங்கின்

பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த

என்ன பெயரும் அத் திணையவ்வே

மேற்கூறப்பட்ட பெயர்போல்வனவும் பிறவும், அஃறிணையின்கண் பன்மையும் ஒருமையுமாகிய பால் விளங்க வந்த எல்லாப் பெயரும் அத்திணைக்குரியதாம்.

அன்னபிறவும்என்றதனாற் கொள்ளப்படுவன: பிறிதுபிற; மற்றையது, மற்றையன, பல்லவை, சில்லவை; உள்ளது, இல்லது,உள்ளன, இல்லன என்னுந் தொடக்கத்தனஆகும்.

தெரிநிலை உடைய, அஃறிணை இயற்பெயர்

ஒருமையும் பன்மையும், வினையொடு வரினே

கள்ளொடு வராத அஃறிணை இயற்பெயர் ஒருமையும் பன்மையும் விளங்கு நிலையுடைய, அதற்கேற்ற வினையொடு தொடர்ந்து வருமிடத்து ஒருமையும் பன்மையும் விளங்கும்

:ஆ வந்தது, ஆ வந்தன; குதிரை வந்தது, குதிரை வந்தன என வினையாற் பால் விளக்கியமை அறிக.

## விரவுப் பெயர்கள்

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர்களை விரவுப்பெயர் என்பர், அத்தகைய பெயர்களை வினைகளைக் கொண்டு திணை அறிய இயலுமேயன்றி வினைகள் இல்லாத வழி திணை அறிதல் இயலாது இதனைத் தொல்காப்பியர்,

குறிப்பு

இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்,

திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்,

நினையும் காலை, தம்தம் மரபின்

வினையொடு அல்லது பால் தெரிபு இலவே

எனக் குறிப்பார்.

அவை, தத்தம் மரபின் வினையொடு பால் விளக்குமாறு :- சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது என்பதாய் அமையும்.

தத்தம் மரபின் வினையாவன உயர்திணைக்கும் அ∴றிணைக்கு உரிய பதினோரீற்றுப் படர்க்கைவினை என்பதாகும்.

இருதிணைக்கும் பொதுவாகிய சொல், வினையாற் பொதுமை நீங்கி ஒருதிணைச்சொல்லா மென்பது கருத்தாகலின் ஈண்டுப் பாலெனெப்பட்டது திணையேயாம்.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் தத்தம் மரபின் வினையோடல்லது பால்தெரிபில என்றார் என்னும் சாத்தனொருவன் சாத்தனொன்று எனத் தம்மரபின் பெயரொடுவந்து பால்விளக்குதலையும் ஏற்றுக் கொள்க என்பார் சேனாவரையர்,

விரவுப்பெயர்களின் திணையினை வினைகளால் அறிதல் மட்டுமன்றி செய்யும் என்னும் வினைமுற்றுச் சொல்லாலும் அறியலாம். அச்சொல் நிகழ் காலம் பற்றியும் பல்லோர் படர்க்கை ஒழிந்த நான்கு பால்களிலும் வரும். இதனைக் கொண்டு அந்த விரவுப் பெயர்கள் உயர்திணை ஒருமைப் பாற்கு உரியன என்று அறியலாம்.

நிகழூஉ நின்ற பலர் வரை கிளவியின்

உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே,

அன்ன மரபின் வினைவயினான

நிகழ்காலம்பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதலும் உரித்து அவ்வொருமைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து எனபர்.

பலர்வரை கிளவியென்றது செய்யும் என்னும் முற்றுச்சொல்லை ஆகும்.

குறிப்பு

சாத்தன் யாழெழுஉம், சாத்தி சாந்தரைக்கும் என்றவழி யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலுமாகிய வினை அஃறிணைக்கு வராது ஒருவற்கும் ஒருத்திக்கு பொருந்தலின் உயர்திணையொருமைப்பால் விளங்கியது.

நடத்தல் கிடத்தல் முதலாகிய பிறதொழில்பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணையொருமை தோன்றாமையின்,அன்ன மரபின் வினைவயினான என்றார் என விளக்குவார் சேனாவரையர்,

தோன்றலும்உரித்தென்னும் எதிர்மறை உம்மையான், அன்ன மரபின் வினைக்கட்டோன்றாமையும்உரித்தென்னாது, பலர்வரை கிளவியால்தோன்றாமையும்உரித்தென்று கொள்க.

அஃதேல், யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலு முதலாகிய தொழில் வேறுபாடுபற்றி வரும் முன்னிலைவினையானும் வியங்கோளானும் இருவகை யெச்சத்தானு மெல்லாம் உயர் திணைப்பால் தோன்றுதலால் பலர்வரை கிளவியினென வரைந்து கூறல் பொருந்தாதெனின்:- அற்றன்று; முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல் (சொல் -193) என முன்னிலைப் பெயராற் பாலுணருமாறு முன்னருணர்த்தப்படுதலானும், அன்னமரபின் வினைபற்றி வரும் வியங்கோள் ஏவற் பொருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்து செய்யு முயர்திணை சுட்டியல்லது பெரும் பான்மையும் வாராமையான் ஆண்டன்ன மரபின் வினையாற் பாலுணர்தல் ஒரு தலையன்றாகலானும் பெயரெச்சத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமும் சிறுபான்மை பொதுவினை கொண்டவழியல்லது தத்தமரபின் வினை கொண்டவழி அவ்வினையே பால் விளக்கலான் ஆண்டெச்சம் பால் விளக்கல் வேண்டாமையானும், அவை யொழித்துப் பலர்வரை கிளவியே விதந்து கூறினார். இருவகை யெச்சத்தானும் வியங்கோளானுஞ் சிறுபான்மை உயர்திணைப்பால் தோன்றல் ஒன்றென முடித்தலென்பதனாற் கொள்க என்னும் சேனாவரையர் உரை தெளிவு தந்து நிற்கும்.

நிகழ்காலத்துப் பிறசொல்லை நீக்குதற்குப் பலர்வரை கிளவி என்றார்.

பன்மைவிரவுப்பெயரை நீக்குதற்கு நிகழூஉநின்ற என்றார்.

குறிப்பு

மேல் விரவுப்பெயர் தத்தமரபின் வினையோடல்லது பால் தெரிபில வென்றார் ; இனி அவற்றானன்றிப் பொதுவினை யானும் பால்தெரிய நிற்குமென்பது உணர்த்தியவாறு. அஃதேல், சாத்தன் புற்றின்னும், சாத்தி கன்றீனும் எனச் செய்யுமென்னுஞ் சொல்லான் அஃறிணைப்பாலுந் தோன்றுதலின், அது கூறாராயிற் றென்னையெனின் :- எழுதலும் அரைத்தலும் அஃறிணைக்கென்னும் இயைபில்லாதவாறு போலப் புற்றின்றல் உயர்திணைக்கு எவ்வாற்றானு மியைபின்றெனப் படாமையானும், கன்றீனும் என்புழி ஈனு மென்னும் வினையானன்றிக் கன்றென்னுஞ் சார்பான் அஃறிணைப்பால் தோன்றுதலானும், ஒருமை வினையான் ஒரு வழி அஃறிணைப்பால் தோன்றினும் அது சிறுபான்மை யாகலானும், கூறாராயினா ரென்பது.

## விரவுப்பெயர்களின் பாகுபாடு:

இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயரே, முறைப்பெயர்க் கிளவி, தாமே, தானே, எல்லாம், நீயிர், நீ, என்னும் ஒன்பதும் விரவுப் பெயர்கள் ஆகும்.

இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயரே,

முறைப்பெயர்க் கிளவி,ஊ எனக் கிளந்து

சொல்லிய அல்ல பிறவும், ஆஅங்கு

அன்னவை தோன்றின், அவற்றொடும் கொளலே

இயற்பெயராவன சாத்தன் கொற்றன் - காரணம் கருதாது ஒருவனுக்கு வழங்கும் பெயர், இது விரவுப்பெயர் எனினும் ஒக்கும். எனினும் ஒருசாரார்க்கு அப்பெயர் கொடுத்தமை சிறப்பு கருதி என்பார் சேனாவரையர். பாணியுந் தாளமும் ஒரு பொருளவாயினும் இசை நூலார் தாளத்துள் ஒருசாரனவற்றிற்குப் பாணி யென்னும் பெயர் கொடுத்தாற் போல வென்பது. என்பது அவர் உரை

சினைப்பெயராவன பெருங்காலன், முடவன் என அச் சினையுடைமையாகிய நிமித்தம்பற்றி முதன்மேல் வரும் பெயர்.

சினைமுதற் பெயராவன சீத்தலைச்சாத்தன். கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதியென்னு முதற்பெயர் சினைப்பெயரொடு தொடர்ந்தல்லது பொருளுணர்த் தாமையிற் சினை முதற் பெயராயின

குறிப்பு

முறைப்பெயராவன தந்தை தாயென முறைபற்றி முறையுடைப் பொருண்மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒருவனோடு ஒருவதற்கு வரும் இயைபு.ஆகும். தூம், தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஐந்தும் தம்மை உணர்த்தி நின்றன.

பிறவுமென்றதனான், மக, குழவி போல்வன கொள்க. என்பார் பேராசிரியர், இவற்றை உயர்திணைப் பெயரென்றார் உரையாசிரியர். இதனை மறுத்துரைக்கும் சேனாவரையர் தொல்காப்பியர் மரபியலுள்.

மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்

அவையும் அன்ன அப்பா லான (மரபிய – 14 )

எனவும்,

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை (மரபியல் -19)

எனவும், அவை அ∴றிணைக்காதல் கூறி,

குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை

கிழவ அல்ல மக்கட் கண்ணே (மரபியல் - 23)

என உயர்திணைக்கு ஓதிவைத்தாராகலின், அவை விரவுப்பெயரேயாம்; அதனான் அது போலியுரை என்க எனக் குறிப்பிடுகிறார்.

அவற்றுள்,

நான்கே இயற்பெயர்; நான்கே சினைப்பெயர்;

நான்கு என மொழிமனார், சினைமுதற்பெயரே;

முறைப்பெயர்க் கிளவி இரண்டு ஆகும்மே;

ஏனைப் பெயரே தம்தம் மரபின

விரவுப்பெயருள் இயற்பெயர் நான்கு, சினைப்பெயர் நான்கு, சினைமுதற்பெயர் நான்கு, முறைப்பெயர் இரண்டாகும். ஏனைய ஐந்து பெயருந் தத்தமிலக்கணத்தனவாகும்.

அவைதாம்,

பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர்,

பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர், என்று

அந் நான்கு என்பஇயற்பெயர் நிலையே

குறிப்பு

.பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர்,

பன்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர், என்று

அந் நான்கு என்ப-சினைப்பெயர் நிலையே

பெண்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

பன்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர், என்று

அந் நான்கு என்ப-சினைமுதற்பெயரே

பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர், என்று

ஆயிரண்டு என்ப-முறைப்பெயர் நிலையே

மேற்கண்ட நூற்பாக்கள் இயற்பெயர் முதுலிய நான்கன் விரியாகிய பதினான்கும் இவை இவை என உணர்த்தின.

**பெண்மை சுட்டிய விரவுப்பெயர்:**

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே

மேற்கூறிய பதினான்கு பெயரும் இருதிணையும் பற்றிப் பாலுணர்த்திய வெடுத்துக்கொண்டார். அவை பெண்மைப் பெயர் நான்கும், ஆண்மைப்பெயர் நான்கும், பன்மைப் பெயர் மூன்றும், ஒருமைப்பெயர் மூன்றுமாம்.

பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும்,அ∴றிணைப் பெண்ணொன்றற்கும் உயர்திணை யொருத்திக்கும் உரியதாகும்.

அந் நான்கு பெயர்களாவன: பெண்மையியற்பெயர், பெண்மைச்சினைப்பெயர், பெண்மைச் சினைமுதற்பெயர், பெண்மை முறைப் பெயர் என்பனவேயாகும்.

அ∴றிணை- பெண்மைஉயர்திணை– பெண்மை

பெண்மையியற்பெயர்,-சாத்தி வந்தது,சாத்தி வந்தாள்

பெண்மைச்சினைப்பெயர் - முடத்தி வந்தது,முடத்தி வந்தாள்

குறிப்பு

பெண்மைச் சினைமுதற்பெயர்- முடகொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள்

பெண்மை முறைப் பெயர் - தாய் வந்தது, தாய் வந்தாள்

**ஆண்மை சுட்டிய விரவுப்பெயர்:**

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே

ஆண்மைபற்றி வரும் நான்கு பெயரும், அ.ஃறிணை ஒன்றற்கும், உயர்திணை ஒருவனுக்கும் உரியதாகும்.

அந் நான்குபெயர்கள்:: ஆண்மை இயற்பெயர், ஆண்மைச்சினைப் பெயர், ஆண்மைச் சினைமுதற்பெயர், ஆண்மை முறைப்பெயர் என்பனவாகும்

.

அ.ஃறிணை- ஆண்மை

உயர்திணை – ஆண்மை

ஆண்மையியற்பெயர்,- சாத்தன் வந்தது, சாத்தன் வந்தான்

ஆண்மைச்சினைப்பெயர் - முடவன் வந்தது, முடவன் வந்தான்

ஆண்மைச் சினைமுதற்பெயர்- முடகொற்றன் வந்தது, முடக்கொற்றன் வந்தான்

ஆண்மை முறைப் பெயர் - தந்தை வந்தது, தந்தை வந்தான்

ஒன்றற்கும் எனப் பொதுப்படையாகக் கூறிடினும் ஆண்மை சுட்டிய என்றதனால் அ.ஃறிணை ஆண் ஒன்றேயாம் என்பார் சேனாவரையர்.

**பன்மை சுட்டிய விரவுப்பெயர்**:

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்அ.ஃறிணை ஒருமையும் அ.ஃறிணைப் பன்மையும் உயர்திணை ஒருமைஎன்று சொல்லப்பட்ட மூன்று பால்களுக்குமட் உரியதாகும்.

குறிப்பு

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றே, பலவே, ஒருவர், என்னும்

என்று இப் பாற்கும் ஓரன்னவ்வே

அம்மூன்றுமாவன; பன்மையியற்பெயரும், பன்மைச் சினைப்பெயரும், பன்மைச்சினை முதற்பெயருமாம்.

அ∴றிணை ஒருமை அ∴றிணை பன்மை உயர்திணை ஒருமை

பன்மை இயற்பெயர்:யானை வந்தது. யானை வந்தன,யானை வந்தான், யானை வந்தாள்

பன்மை சினைப்பெயர் -நெடுங்கழுத்தல்நெடுங்கழுத்தல் நெடுங்கழுத்தல் வந்தான்

வந்தது வந்தன நெடுங்கழுத்தல் வந்தாள்

பன்மைசினை முதற்பெயர்- பெருங்கால் யானை பெருங்கால்யானை,பெருங்கால்யானை

வந்தான்

வந்தது வந்தன பெருங்கால் யானை

வந்தாள்

பன்மைக்கேயன்றி ஒருமைக்குமுரியவாய் வருவனவற்றைப் பன்மைப் பெயரென்ற தென்னையெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் பெண்மைப் பெயர் முதலாயினவும் பிறபெயராலுணர்த்தப்படாத பெண்மை முதலாயினவற்றையு முணர்த்தலானன்றே அப் பெயரவாயின. என்னை ? பெண்மை முதலாயின பிறபெயராலுணர்த்தப்படுமாயின் அப்பெண்மை முதலாயினவற்றான் அப்பெயர் வரைந்து சுட்டலாகாமையின், பன்மைப்பெயர் ஒருமை யுணர்த்துமாயினும், பிறவாற்றாலுணர்த்தப்படாத பன்மையை ஒருகாலுணர்த்தலின் அப் பன்மையான் அவை வரைந்து

குறிப்பு

சுட்டப்படுதலின் அப்பெயரவாயின. அற்றேனும், பன்மை சுட்டிய பெயரென்றமையாற் பன்மையே யுணர்த்தல் வேண்டுமெனின்:- அற்றன்று; இயை பின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசேடித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்ற வழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மை மாத்திரை நீக்கி வெண்குடையாயென்பதுபட நிற்றலின் அ∴தியைபின்மை நீக்கலாம். கருங்குவளை என்ற வழிச்செம்மை முதலாயினவற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினியைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயரென்பது, வெண்குடைப் பெருவிறல் என்பதுபோல, ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பதுபட நின்றது. அதனான் விசேடிக்குங்காற் பிறிதினியைபு நீக்கல் ஒருதலையன்றென்க.அ∴றிணையொருமையும் அத்திணைப்பன்மையும் உயர்திணை யொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்தலாற் பன்மை சுட்டிய பெயரென்பாருமுளர். அ∴துரை யாசிரியர் கருத்தன்மை அவ்வுரையான் விளங்கும் என நீண்ட உரை எழுதி விளக்குவார்.

**ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர்**:

ஒருமை சுட்டிவரும் ஒருமை இயற்பெயர், ஒருமை சினைப் பெயர் ஒருமை சினைமுதற் பெயர் ஆகியன அ∴றிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாகும்.

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே

அ∴றிணை ஒருமை உயர்திணை ஒருமை

ஒருமை இயற்பெயர் கோதை வந்தது கோதை வந்தான், கோதை வந்தாள்

ஒருமை சினைப் பெயர் செவியிலி வந்தது செவியிலி வந்தான், செவியிலி வந்தாள்

ஒருமை சினை முதற் பெயர் கொடும்புற மருதி வந்தது கொடும்புற மருதி வந்தான்

கொடும்புற மருதி வந்தாள

**தாம் என் கிளவி:**

தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே.

தாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாலுக்கு உரியது

தாம் வந்தார்

குறிப்பு

தாம் வந்தன

**தான் என் கிளவி:**

தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே

தான் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாலுக்கு உரியது

தான் வந்தான்

தான் வந்தாள்

தான் வந்தது

**எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி:**

.எல்லாம்“ என்னும் பெயர்நிலைக் கிளவி

பல்வழி நுதலிய நிலைத்து ஆகும்மே

எல்லாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாலுக்கு உரியது

எல்லாம் வந்தோம்

எல்லாம் வந்தீர்

எல்லாம் வந்தார்

எல்லாம் வந்தன

எல்லாமென்னும் பெயர் இரண்டுதிணைக்கண்ணும் பன்மை குறித்து வருமென்னாது பல்வழியென்றது. மேனியெல்லாம் பசலையாயிற்று என ஒரு பொருளின் பலவிடங் குறித்து நிற்றலுமுடைத்தென்பதூஉம் கோடற்குப் போலும். அ.்.து எஞ்சாப்பொருட்டாய் வருவதோர்உருரிச்சொல்என்பாருமுளர் என்பார் சேனாவரையர்.

தன் உள்ளுறுத்த பன்மைக்கு அல்லது,

உயர்திணை மருங்கின், ஆக்கம் இல்லை

எல்லாமென்னுஞ் சொல், உயர்திணையில், தன்மைப்பன்மைக்கல்லது முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது

நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்“ (கவி-97) எனப் படர்க்கைக் கண்ணும் வந்ததெனின்- எழுத்ததிகாரத்துள்,உயர்திணையாயனின்

குறிப்பு

நம்மிடை வருமே“ (எழு-190) எனத் தன்மைக்கேற்ற சாரியை கூறினமையானும்,ஈண்டு நியமித்தலானும், அது இட வழுவமைதியாய் அமைந்தது.

தன்மைச்சொல் அ.ஃறிணைக்கின்மையின், எல்லாமென்பது பொதுமையிற் பிரிந்து தன்னுளுறுத்த பன்மைக்கண் வந்துழி உயர்திணையீற்றுப் பெயரெனப்படினும், இரு திணைப்பன்மையும்உணர்த்துதற்கேற்றுப் பொதுப் பிரியாது நின்றவழி விரவுப் பெயராதற் கிழுக்கன்று என்பார் சேனாவரையர்.

எல்லாப்பார்ப்பாரும், எல்லாச் சான்றாரும் எனப் படர்க்கைக்கண் வருதலும் கோடற்குத் தன்னுள்ளுறுத்த பன்மைக் காங்கால் உயர்திணை மருங்கினல்லதாகாதென மொழிமாற்றி யுரைத்தாரால் என்ற உரையாசிரியரின் உரையில் வினா எழுப்பும் சேனாவரையர் அதற்கு படர்க்கைக்கண் வருதல் இடவழுவமைதி யென்றவழிப்படு மிழுக்கின்மையானும்,தன்மைச் சொல்லே ய.ஃறிணைக் கிளவி“ (சொல்-43) எனவும்; யான் யாம் நாமென வரூஉம் பெயர்“ (சொல்-163) எனவும் பிறாண்டு மோதியவாற்றால், தன்மைச்சொல் அ.ஃறிணைக்கின்மை பெறப்படுதலின் ஈண்டுக்கூறல் வேண்டாமை யானும், எழுத்ததிகாரத்துள் உயர் திணையாயி னம்மிடை வருமே“ எனத் தன்மைக்குரிய சாரியையே கூறலானும், அது போலியுரையென்க என விளக்கம் செய்து மறுக்கின்றார்..

**நீயிர், நீஎன வரூஉம் கிளவி**

.நீயிர், நீ“ என வரூஉம் கிளவி

பால் தெரிபு இலவே; உடன்மொழிப் பொருள

நீயிர், நீ என வரூஉம் கிளவிகள் திணை தெரிய வாராது, இருதிணையும் உடன் தோன்றி நிற்கும்.

நீயிர் வந்தாய்

நீ வந்தாய்.

அவற்றுள்,

நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே

நீ என்னும் கிளவி ஒருமைக்குரித்து. ஒருமை என்பது ஒருவன், ஒருத்தி, ஒன்று ஆகிய மூன்றையும் குறிக்கும் என்பார் சேனாவரையர்,

நீ வந்தாய்

ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே.

குறிப்பு

நீயிர் என்பது பன்மைக்குரித்து. பன்மை என்பது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை என்பார் சேனாவரையர்,

நீயிர் வந்தீர்

**ஒருவர் என்னும் கிளவி:**

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி

இரு பாற்கும் உரித்தே, தெரியும் காலை

இன்றிவரென்னும்எண்ணியற் பெயரென்று ஓதப்பட்டவற்றுள், ஒருவரென்னும் பெயர்ச்சொல்,அடங்கும்.உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளக்காது, ஒருவன் ஒருத்தி யென்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும்.

ஒருவர் வந்தார்

இருபாற்குமெனப் பொதுப்படக் கூறினாரேனும், ஒருவரென்னும் ஒருமைப் பெயரானுணர்த்தப் படுதற்கேற்பன ஒருவன், ஒருத்தி என்பனவே யாகலான், அவையே கொள்ளப்படும்.

உயர்திணை ஒருமைப்பால் இரண்டென்று அறியப்பட்டமையான், இருபாற்கும் உரித்தென்னும்உம்மைமுற்றும்மை. உயர்திணைப் பெயராயினும், பாலுணர்த்தாமையும் முன்னர்த்தானுணர்த்தலும் இதற்கு ஒக்குமாகலின்,ஈண்டுக் கூறினார் என்பார் சேனாவரையர்.

தன்மை சுட்டின், பன்மைக்கு ஏற்கும்.

ஒருவர் என்னும் சொல் தன்மை சுட்டின் பன்மை ஏற்கும்.

ஒருவர் வந்தார்

ஒருவர் அவர்

இன்ன பெயரே இவை எனல் வேண்டின்,

முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல்

நீயிர், நீ, ஒருவர் என்பனவற்றை இன்ன பால்பெயர் என்று அறிய வேண்டின் சொல்லுவான் குறிப்பொடு கூட்டி உணர்தல் வேண்டும்.

ஒரு சாத்தன், ஒருவனானும் ஒருத்தியானும் பலரானும் ஒன்றானும் பலவானுந் தன்னுழைச் சென்றவழி, நீ வந்தாய், நீயிர் வந்தீர் எனல். அதனைக் கேட்பவன் இவன் இன்னபால் கருதிக் கூறினான் என்பதை உணர்தல்.

ஒருவரொருவரைச் சார்ந்தொழுகலாற்றின்( நாலடியார் ) என்றவழிச் சொல்லுவானொடு கேட்டான் இவன் ஆண்பால் உருவைக் குறித்தான் என உணரும்.

குறிப்பு

**மகடூஉ என்னும்சொல்:**

.மகடூஉ மருங்கின் பால் திரி கிளவி

மகடூஉ இயற்கை, தொழில்வயினான

மகடூஉப் பொருண்மைக்கண் பால்திரிந்துவரும் பெண்மகனென்னும் பெயர், வினைகொள்ளுமிடத்து மகடூஉவிற்குரிய வினை கொள்ளும்.

:பெண்மகன் வந்தாள் என வரும்.

பொருண்மை பற்றி மகடூஉ வினைகொள்ளுமோ ஈறு பற்றி ஆடூஉ வினைகொள்ளுமோ என்று ஐயுற்றார்க்கு இந்நூற்பா ஐயமகற்ற எழுந்தது.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் தொழில்வயினான் என்றாராகலின், சிறப்பில்லாப் பெயர்வயினிடத்து பெண்மகளிவள் என மகடூஉ இயற்கையாய் வரும்.

**செய்யுட்குரிய மரபு:**

ஆ ஓ ஆகும் பெயருமார் உளவே;

ஆயிடன் அறிதல், செய்யுளுள்ளே

செய்யுளுள் ஆகாரம் ஓகாரமாய்த் திரியும்:

வில்லோன் காலன கழலே தொடியோன்

மெல்லடி மேலவுஞ் சிலம்பே நல்லோர்.

யார்கொ லளியர் தாமே (யாரியர்,

கயிறாடு பாறையில் கால்பொராக் கலங்கி

வாகை வெண்ணெற் றொலிக்கும்)

வேய்பயில் பழுவ முன்னி யோரே (குறுந் - 7)

எனவும்,

கழனி நல்லூர் மகிழ்நர்க் கென்னிழை

குறிப்பு

நெகிழப் பருவரல் செப்பா தோயே. (நற்றிணை - 40)

எனவும் ஆகாரம் ஒகாரமாய்த் திரிந்தவற்றிற்குச் சான்றாம்.

ஆன், ஆள், ஆர், ஆய் என்னும் மற்றவாகிய பெயரல்லது, சேரமான், மலையமான் என்னுந் தொடக்கத்தன அவ்வாறு திரியாமையின்,ஆயிடனறிதல் என்றார். உழாஅன், கிழாஅன் என்பன அன்னீற்றுப்பெயர்கள். ஒருமொழிப் புணர்ச்சியான் அவ்வாறு, நின்றன. ஆனீற்றுப் புணர்ச்சியாயின் உழவோன், கிழவோன் எனத் திரியும்.

இறைச்சிப் பொருள்வயின் செய்யுளுள் கிளக்கும்

இயற்பெயர்க் கிளவி உயர்திணை சுட்டா;

நிலத்துவழி மருங்கின் தோன்றலான

திணையொடு பழகிய பெயர் அலங்கடையே

செய்யுளுட் கருப்பொருண்மேற் கிளக்கப்படும் இருதிணைக்குமுரிய பெயர் உயர்திணை யுணர்த்தாது.: அவ்வவ் நிலத்துவழி அ∴றிணைப் பொருளவாய் வழங்கப்பட்டு வருதலால் ஆகும்

கடுவன் முதுமகன் கல்லா மூலற்கு

வதுவை யயர்ந்த வன்பறழ்க் குமரி

என்றவழி, கடுகன், மூலன்,குமரியென்பன அ∴றிணைப் பொருளவாய்நிலத்து வழி மருங்கிற், உயர்திணை சுட்டாததனை அறிக. ஈண்டு நிலமாவது, முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் என்பதாகும்.

திணையொடு பழகிய பெயரலங் கடையே

அவ்வத்திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயரல்லாத விடத்து கருப்பொருளுணர்த்தும் விரவுப்பெயர் உயர்திணை சுட்டாது அ∴றிணை சுட்டும்.

எனவே, திணைக்குரியவாய் வழங்கப்பட்டு வரும் பெயர் இருதிணையுஞ் சுட்டிவருமென்பதாம்.

திணையொடு பழகிய விரவுப்பெயராவன காளைவிடலை என்னுந் தொடக்கத்தன ஆகும்.

செருமிகு முன்பிற் கூர்வேற் காளை" எனவும்,திருந்துவேல் விடலையொடு வருமெனத் தாயே (அகம்-195) எனவும், உயர்திணை சுட்டிவந்தவாறு கண்டுகொள்க என்பார் சேனாவரையர்.

**பயிற்சி வினாக்கள்:**

குறிப்பு

1.சொற்களின் வகை குறித்து எழுதுக.

சொற்களின் வகை:

சொல் எனப்படுப பெயரே, வினை, என்று

ஆயிரண்டு என்ப, அறிந்திசினோரே

சொல்லாவன பெயர்ச்சொல்லும் வினைச் சொல்லுமென இரண்டு வகைப்படும்

பெயர்ச்சொற்கிலக்கணம் வேற்றுமையியலில் கூறினார்; வினைச்சொற்கிலக்கணம் வினையியலில் கூறுவார் என்பார் சேனாவரையர்.

பிறசொற்களும் உள்ளன எனினும், இவற்றினது சிறப்பு நோக்கிப் பெயரே வினையென் றாயிரண் டென்ப" என்றார். இவற்றுள்ளும் பொருளது புடைபெயர்ச்சியாகிய தொழில் பற்றாது அப் பொருள்பற்றி வருஞ் சிறப்புடைமையாற் பெயரை முற்கூறினார் என்பது சேனாவரையரின் குறிப்புரையாம்

இடைச்சொல் கிளவியும், உரிச்சொல் கிளவியும்,

அவற்று வழி மருங்கின் தோன்றும் என்ப .

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றும்.

அவற்றுவழி மருங்கிற் றோன்று மென்று தொல்காப்பியர் உரைத்தமையால் பெயரையும் வினையையுஞ் சார்ந்து தோன்றும் இவ் விரண்டையும் அவற்றோடு சேர்த்து சொல் நான்கா மென்று அறிதல் வேண்டும். சார்ந்து தோன்றுமென்றமையால் இவற்றது சிறப்பின்மை தெரியவரும். வழக்குப் பயில்தல் நோக்கி இடைச்சொல் முதற்கண் கூறினார் தொல்காப்பியர்.

2.உயர்திணை ஆண்பாற்பெயாகள் குறித்துக் கட்டுரைக்க.

உயர்திணைப் பெயர்கள்:

அவ்வழி,

அவன், இவன், உவன், என வரூஉம் பெயரும்;

அவள், இவள், உவள், என வரூஉம் பெயரும்;

குறிப்பு

அவர், இவர், உவர், என வரூஉம் பெயரும்;

யான், யாம், நாம், என வரூஉம் பெயரும்;

யாவன், யாவள், யாவர், என்னும்

ஆவயின் மூன்றொடு அப் பதினைந்தும்

பால் அறிவந்த உயர்திணைப் பெயரே

மூவகையாக மேற்சொல்லப்பட்ட பெயருள், அவனென்பது முதலாக யாவரென்ப தீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் பால் விளங்க நிற்கும் உயர்திணைப்பெயர் ஆகும். அவன், இவன், உவன் என்னும் ஆண்பாற் பெயர்களும் அவள், இவள், உவள் என்னும் பெண்பாற் பெயர்களும் அவர், இவர், உவர்,என்னும் பலர்பால் பெயர்களும்யான், யாம், நாம், யாவன், யாவள், யாவர் என்னும் பெயர்களும் உயர்திணையில் இன்னபால் என்பதனை உணர்த்தி நிற்கும் பெயர்கள் ஆகும்.

இவற்றுள் யானென்பது, ஒருவன் ஒருத்தி யென்னும் பகுதி உணர்த்தாதாயினும், அது திணை யொருமை உணர்த்தலின் பாலறிவந்த பெயராம். மேலும் பாலறி வந்தவெனப் பன்மைபற்றிக் கூறினாரெனினும் அது யான் என்பதற்கு ஏற்காது, இது நீங்கலாக ஏனையவற்றிற்கு ஏற்றலின் பன்மையில் கூறினார் என்பார் சேனாவரையர்,

ஆண்மை அடுத்த மகன்“ என் கிளவியும்,

“பெண்மை அடுத்த மகள்“ என் கிளவியும்,

பெண்மை அடுத்த இகர இறுதியும்,

நம் ஊர்ந்து வரூஉம் இகர ஐகாரமும்,

முறைமை சுட்டா மகனும் மகளும்,

மாந்தர் மக்கள் என்னும் பெயரும்,

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயரும்,

சுட்டு முதல் ஆகிய அன்னும் ஆனும்,

அவை முதல் ஆகிய பெண்டு என் கிளவியும்,

ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ,

அப் பதினைந்தும் அவற்று ஓரன்ன .

இப்பெயர் பதினைந்தும் மேற்கூறப்பட்டன போல பாலறிவந்த உயர்திணைப்பெயராம் ; எ-று.

குறிப்பு

ஆண்மையடுத்த மகனென் கிளவி - ஆண்மகன்,

பெண்மையடுத்த மகளென் கிளவிபெண்மகள்,- பெண்டாட்டி

நம்மூர்ந்துவரூஉ மிகரமும் ஐகாரம்- நம்பி, நங்கை

முறைமை சுட்டா மகனு மகளும் - மகன் மகள்

ஆடூ மகடூ என்னும் சொல்லும்

மாந்தர் மக்களென்னும் பன்மைப் பெயர்

சுட்டு முதலாகிய அன்னும் ஆனுமாவன :

அவ்வாளன், இவ்வாளன், உவ்வாளன்; அம்மாட்டான் , இம்மாட்டான், உம்மாட்டான் என்பன.

அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி

ஒப்பொடு வரூஉங் கிளவியாவன பொன்னன்னான்; பொன்னன்னாள்

என்பனவும் பால் விளங்கி நிற்கும் உயர்திணைப் பெயர்கள் ஆகும். தொடக்கத்தன. இவை மேலே சொல்லப்பட்டன போன்று அதிகம் பயின்றுவாராமையின், அவற்றொடு ஒருங்கு வைக்காது தனித்துக் கூறினார் என்பார் சேனாவரையர்,

எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்,

எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்,

பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்,

அன்ன இயலஎன்மனார் புலவர்

எல்லாரும் எனவும் எல்லீரும் எனவும் பெண்மகன் எனவும் வரும் மூன்றும் மேற் கூறப்பட்டனபோலப் பாலறிவந்த உயர்திணைப் பெயர்களாம்.

இவற்றுள் பெண்மகன் என்னும் சொல்லிற்கு புறத்துப் போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண்மகளை மாறோக்கத்தார் இக் காலத்தும் பெண் மகனென்று வழங்குவர் எனச் சான்று காட்டுவார் சேனாவரையர்.

எல்லாரும் எல்லீரும் என்றவழி படர்க்கைப் பன்மை யுணர்த்தும் ஆர் என்பதும் முன்னிலைப் பன்மை யுணர்த்தும் ஈர் என்பதும் உம்மை

யடுத்து வருவதலானும் பெண்மகன் என்னும் சொல் பால் திரிந்து வருவதனாலும் தனித்துக் கூறினார்.

**குறிப்பு**

நிலப் பெயர், குடிப் பெயர், குழுவின் பெயரே,

வினைப் பெயர், உடைப் பெயர்,பண்பு கொள் பெயரே,

பல்லோர் குறித்த முறை நிலைப் பெயரே,

பல்லோர் குறித்த சினை நிலைப் பெயரே,

பல்லோர் குறித்த திணை நிலைப் பெயரே,

கூடி வரு வழக்கின் ஆடு இயற் பெயரே,

இன்றிவர் என்னும் எண்ணியற்பெயரொடு,

அன்றி அனைத்தும் அவற்று இயல்பினவே

நிலப்பெயர் முதலாகச் சொல்லப்பட்டனவும் மேலனபோலப் பாலறிவந்த உயர்திணைப் பெயர்களாம். ;

நிலப்பெயர் - அருவாளன் , சோழியன் , குடிப்பெயர் - மலையமான் , சேரமான்

குழுவின் பெயர் - அவையத்தார் , அத்தி கோசத்தார் ,

வினைப்பெயர் - வருவார் , செல்வார் தச்சன் , கொல்லன்

உடைமைப்பெயர் - அம்பர் கிழான் , பேரூர்கிழான் என்பன ; வெற்பன் , சேர்ப்பன்.

பண்பு கொள் பெயர் - கரியான். செய்யான

பல்லோர்க்குறித்த முறை நிலைப் பெயர் - தந்தையார் , தாயர்

பல்லோர்க் குறித்த சினைநிலைப் பெயர் - பெருங்காலர், பெருந்தோளர்

பல்லோர்க் குறித்த திணை நிலைப் பெயர் - பார்ப்பார் , அரசர் , வணிகர் , வேளாளர் ,

(பல்லோர்க் குறித்த என்று சிறப்பித்தமையால் இம் மூவகைப் பெயருள் ஒருமைப்பெயர் இரண்டு திணைக்கும் உரியவாம்)

கூடிவரு வழக்கின் ஆடியற் பெயர் - பட்டிபுத்திரர், கங்கைமாத்திரர்

எண்ணியற் பெயர் ஒருவர், இருவர் , முப்பத்துமூவர்

அன்ன பிறவும் உயர்திணை மருங்கின்

பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த

என்ன பெயரும் அத் திணையவ்வே

மேற்சொல்லப்பட்ட பெயர்போல்வனவும் பிறவும், உயர்திணைக்கண் பன்மையும் ஒருமையுமாகிய பாலறிவந்த எல்லாப்பெயரும் உயர்திணைப் பெயராம

அன்ன பிறவுமாவன - ஏனாதி, காவிதி, எட்டி, வாயிலான், பூயிலான், வண்ணத்தான், சுண்ணத்தான், பிறன், பிறள், பிறர், மற்றையான், மற்றையாள், மற்றையார், என்னுந் தொடக்கத்தன என்பார் சேனாவரையர்

.

3.விரவுப்பெயர்கள் குறித்து எழுதுக.

விரவுப் பெயர்கள்:

உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொதுவாகிய பெயர்களை விரவுப்பெயர் என்பர், அத்தகைய பெயர்களை வினைகளைக் கொண்டு திணை அறிய இயலுமேயன்றி வினைகள் இல்லாத வழி திணை அறிதல் இயலாது அதனைத் தொல்காப்பியர்,

இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமையின்

திரிபு வேறுபடூஉம் எல்லாப் பெயரும்

நினையும் காலை, தம்தம் மரபின்

வினையொடு அல்லது பால் தெரிபு இலவே

அவை, தத்தம் மரபின் வினையொடு பால் விளக்குமாறு :- சாத்தன் வந்தான், சாத்தன் வந்தது; முடவன் வந்தான், முடவன் வந்தது என்பதாய் அமையும்.

தத்தம் மரபின் வினையாவன உயர்திணைக்கும் அஃறிணைக்கு எரிய பதினோரீற்றுப் படர்க்கைவினை என்பதாகும்.

இருதிணைக்கும் பொதுவாகிய சொல், வினையாற் பொதுமை நீங்கி ஒருதிணைச்சொல்லா மென்பது கருத்தாகலின் ஈண்டுப் பாலெனெப்பட்டது திணையேயாம்.

சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல் என்பதனால் தத்தம் மரபின் வினையோடல்லது பால்தெரிபில என்றார் என்னும்

சாத்தனொருவன் சாத்தனொன்று எனத் தம்மரபின் பெயரொடுவந்து பால்விளக்குதலையும் ஏற்றுக் கொள்க என்பார் சேனாவரையர்,

குறிப்பு

விரவுப்பெயர்களின் திணையிணை வினைகளால் அறிதல் அட்டுமன்றி செய்யும் என்னும் வினைமுற்றுச் சொல்லாலும் அறியலாம். அச்சொல் நிகழ் காலம் பற்றியும் பல்லோர் படர்க்கை ஒழிந்த நான்கு பால்களிலும் வரும். இதனைக் கொண்டு அந்த விரவுப் பெயர்கள் உயர்திணை ஒருமைப் பாற்கு உரியன என்று அறியலாம்.

நிகழூஉ நின்ற பலர் வரை கிளவியின்

உயர்திணை ஒருமை தோன்றலும் உரித்தே,

அன்ன மரபின் வினைவயினான

நிகழ்காலம்பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணை ஒருமைப்பால் தோன்றுதலும் உரித்து அவ்வொருமைப்பால் தோன்றுதற்கேற்ற வினையிடத்து எனபர்.

பலர்வரை கிளவியென்றது செய்யுமென்னு முற்றுச்சொல்லை.

சாத்தன் யாழெழுஉம், சாத்தி சாந்தரைக்கும் என்றவழி யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலுமாகிய வினை அஃறிணைக்கு வராது ஒருவற்கும் ஒருத்திக்கு பொருந்தலின் உயர்திணையொருமைப்பால் விளங்கியது.

நடத்தல் கிடத்தல் முதலாகிய பிறதொழில்பற்றி வரும் பலர்வரை கிளவியான் உயர்திணையொருமை தோன்றாமையின்,அன்ன மரபின் வினைவயினான“ என்றார் என விளக்குவார் சேனாவரையர்.

தோன்றலு முரித்தென்னும் எதிர்மறை யும்மையான், அன்ன மரபின் வினைக்கட்டோன்றாமையு முரித்தென்னாது, பலர்வரை கிளவியாற்றோன்றாமையு முரித்தென்று கொள்க.

அஃதேல், யாழெழூஉதலுஞ் சாந்தரைத்தலு முதலாகிய தொழில் வேறுபாடுபற்றி வரும் முன்னிலைவினையானும் வியங்கோளானும் இருவகை யெச்சத்தானு மெல்லாம் உயர் திணைப்பால் தோன்றுதலால் பலர்வரை கிளவியினென வரைந்து கூறல் பொருந்தாதெனின்:- அற்றன்று; முன்னஞ் சேர்த்தி முறையின் உணர்தல் “ (சொல் -193) என முன்னிலைப் பெயராற் பாலுணருமாறு முன்னருணர்த்தப்படுதலானும், அன்னமரபின் வினைபற்றி வரும் வியங்கோள் ஏவற் பொருண்மைத்தாகலின் ஏயதுணர்ந்து செய்யு முயர்திணை சுட்டியல்லது பெரும் பான்மையும் வாராமையான் ஆண்டன்ன மரபின் வினையாற் பாலுணர்தல் ஒரு தலையன்றாகலானும் பெயரெச்சத்திற்கு முடிவாகிய பெயரும் வினையெச்சமும் சிறுபான்மை பொதுவினை கொண்டவழியல்லது தத்தமரபின் வினை கொண்டவழி அவ்வினையே

பால் விளக்கலான் ஆண்டெச்சம் பால் விளக்கல் வேண்டாமையானும், அவை யொழித்துப் பலர்வரை கிளவியே விதந்து கூறினார். இருவகை யெச்சத்தானும் வியங்கோளானுஞ் சிறுபான்மை உயர்திணைப்பால் தோன்றல் ஒன்றென முடித்தலென்பதனாற் கொள்க என்னும் சேனாவரையர் உரை தெளிவு தந்து நிற்கும்

குறிப்பு

நிகழ்காலத்துப் பிறசொல்லை நீக்குதற்குப் பலர்வரை கிளவி என்றார்.

பன்மைவிரவுப்பெயரை நீக்குதற்கு நிகழூஉநின்ற என்றார்.

மேல் விரவுப்பெயர் தத்தமரபின் வினையோடல்லது பால் தெரிபில வென்றார் ; இனி அவற்றானன்றிப் பொதுவினை யானும் பால்தெரிய நிற்குமென்பது உணர்த்தியவாறு. அ∴தேல் , சாத்தன் புற்றின்னும், சாத்தி கன்றீனும் எனச் செய்யுமென்னுஞ் சொல்லான் அ∴றிணைப்பாலுந் தோன்றுதலின், அது கூறாராயிற்றுஎன்னையெனின் :- எழுதலும் அரைத்தலும் அ∴றிணைக்கென்னும் இயைபில்லாதவாறு போலப் புற்றின்றல் உயர்திணைக்கு எவ்வாற்றானு மியைபின்றெனப் படாமையானும், கன்றீனும் என்புழி ஈனு மென்னும் வினையானன்றிக் கன்றென்னுஞ் சார்பான் அ∴றிணைப்பால் தோன்றுதலானும், ஒருமை வினையான் ஒரு வழி அ∴றிணைப்பால் தோன்றினும் அது சிறுபான்மை யாகலானும், கூறாராயினா ரென்பது.

## விரவுப்பெயர்களின் பாகுபாடு:

.இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயரே, முறைப்பெயர்க் கிளவி, தாமே, தானே, எல்லாம், நீயிர், நீ, என்னும் ஒன்பதும் விரவுப் பெயர்கள் ஆகும்.

> .இயற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயரே,
>
> முறைப்பெயர்க் கிளவி,ஊ எனக் கிளந்து
>
> சொல்லிய அல்ல பிறவும், ஆஅங்கு
>
> அன்னவை தோன்றின், அவற்றொடும் கொளலே

இயற்பெயராவன சாத்தன் கொற்றன் - காரணம் கருதாது ஒருவனுக்கு வழங்கும் பெயர், இது விரவுப்பெயர் எனினும் ஒக்கும். எனினும் ஒருசாரார்க்கு அப்பெயர் கொடுததமை சிறப்பு கருதி என்பார் சேனாவரையர், பாணியுந் தாளமும் ஒரு பொருளவாயினும் இசை நூலார் தாளத்துள் ஒருசாரனவற்றிற்குப் பாணி யென்னும் பெயர் கொடுத்தாற் போல வென்பது. என்பது அவர் உரை

சினைப்பெயராவன பெருங்காலன் , முடவன் என அச் சினையுடைமையாகிய நிமித்தம்பற்றி முதன்மேல் வரும் பெயர்.

குறிப்பு

சினைமுதற் பெயராவன சீத்தலைச்சாத்தன். கொடும்புறமருதி எனச் சினைப்பெயரோடு தொடர்ந்து வரும் முதற்பெயர். சாத்தன், மருதியென்னு முதற்பெயர் சினைப்பெயரொடு தொடர்ந்தல்லது பொருளுணர்த் தாமையிற் சினை முதற் பெயராயின

முறைப்பெயராவன தந்தை தாயென முறைபற்றி முறையுடைப் பொருண்மேல் வருவன. முறையாவது பிறவியான் ஒருவனோடு ஒருவதற்கு வரும் இயைபு.ஆகும்.

தாம, தான், எல்லாம், நீயிர், நீ என்னும் ஐந்தும் தம்மை உணர்த்தி நின்றன.,

பிறவுமென்றதனான், மக, குழவி போல்வன கொள்க. என்பார் பேராசிரியர், இவற்றை உயர்திணைப் பெயரென்றார் உரையாசிரியர். இதனை மறுத்துரைக்கும் சேனாவரையர் தொல்காப்பியர் மரபியலுள்.

மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்

அவையும் அன்ன அப்பா லான “ (மரபிய – 14 )

எனவும்,

குஞ்சரம் பெறுமே குழவிப் பெயர்க்கொடை “ (மரபியல் -19)

எனவும், அவை அ∴றிணைக்காதல் கூறி,

குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை

கிழவ அல்ல மக்கட் கண்ணே “ (மரபியல் - 23)

என உயர்திணைக்கு ஓதிவைத்தாராகலின், அவை விரவுப்பெயரேயாம்; அதனான் அது போலியுரை என்க எனக் குறிப்பிடுகிறார்.

அவற்றுள்,

நான்கே இயற்பெயர்; நான்கே சினைப்பெயர்;

நான்கு என மொழிமனார், சினைமுதற்பெயரே;

முறைப்பெயர்க் கிளவி இரண்டு ஆகும்மே;

ஏனைப் பெயரே தம்தம் மரபின

விரவுப்பெயருள் இயற்பெயர் நான்கு, சினைப்பெயர் நான்கு, சினைமுதற்பெயர் நான்கு, முறைப்பெயர் இரண்டாகும். ஏனைய ஐந்து பெயருந் தத்தமிலக்கணத்தனவாகும்.

.அவைதாம்,

பெண்மை இயற்பெயர், ஆண்மை இயற்பெயர்,

பன்மை இயற்பெயர், ஒருமை இயற்பெயர், என்று

அந் நான்கு" என்பஇயற்பெயர் நிலையே.பெண்மைச் சினைப்பெயர், ஆண்மைச் சினைப்பெயர்,

பன்மைச் சினைப்பெயர், ஒருமைச் சினைப்பெயர், என்று

அந் நான்கு என்ப - சினைப்பெயர் நிலையே

பெண்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

ஆண்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

பன்மை சுட்டிய சினைமுதற்பெயரே,

ஒருமை சுட்டிய சினைமுதற்பெயர், என்று

அந் நான்கு என்ப- சினைமுதற்பெயரே

பெண்மை முறைப்பெயர், ஆண்மை முறைப்பெயர், என்று

ஆயிரண்டுஎன்ப- முறைப்பெயர் நிலையே

மேற்கண்ட நூற்பாக்கள் இயற்பெயர் முதுலிய நான்கன் விரியாகிய பதினான்கும் இவை இவை என உணர்த்தின.

பெண்மை சுட்டிய விரவுப்பெயர்:

பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருத்திக்கும் ஒன்றிய நிலையே

மேற்கூறிய பதினான்கு பெயரும் இருதிணையும் பற்றிப் பாலுணர்த்திய வெடுத்துக்கொண்டார். அவை பெண்மைப் பெயர் நான்கும், ஆண்மைப்பெயர் நான்கும், பன்மைப் பெயர் மூன்றும், ஒருமைப்பெயர் மூன்றுமாம்.

பெண்மை பற்றி வரும் நான்கு பெயரும்,அ.:.றிணைப் பெண்ணொன்றற்கும் உயர்திணை யொருத்திக்கும் உரியதாகும்.

அந் நான்கு பெயர்களாவன: பெண்மையியற்பெயர்,, பெண்மைச்சினைப்பெயர், பெண்மைச் சினைமுதற்பெயர், பெண்மை முறைப் பெயர் எனபனவேயாகும்.

குறிப்பு

பெண்மையியற்பெயர்,-சாத்தி வந்தது, சாத்தி வந்தாள்

பெண்மைச்சினைப்பெயர் - முடத்தி வந்தது, முடத்தி வந்தாள்

பெண்மைச் சினைமுதற்பெயர்- முடகொற்றி வந்தது, முடக்கொற்றி வந்தாள்

பெண்மை முறைப் பெயர் - தாய் வந்தது, தாய் வந்தாள்

ஆண்மை சுட்டிய விரவுப்பெயர்:

ஆண்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவற்கும் ஒன்றிய நிலையே

ஆண்மைபற்றி வரும் நான்கு பெயரும், அஃறிணை ஒன்றற்கும், உயர்திணை ஒருவனுக்கும் உரியதாகும்.

அந் நான்குபெயர்கள்:: ஆண்மை இயற்பெயர், ஆண்மைச்சினைப் பெயர், ஆண்மைச் சினைமுதற்பெயர், ஆண்மை முறைப்பெயர் என்பனவாகும்

.

| | அஃறிணை-ஆண்மை | உயர்திணை– ஆண்மை |
|---|---|---|
| ஆண்மையியற்பெயர்,- | சாத்தன் வந்தது, | சாத்தன் வந்தான் |
| ஆண்மைச்சினைப்பெயர்- | முடவன் வந்தது | முடவன் வந்தான் |
| ஆண்மைச்சினைப் முதற்பெயர் - | முடகொற்றன் வந்தது | முடகொற்றன் வந்தான் |
| ஆண்மை முறைப் பெயர்- | தந்தை வந்தது | தந்தை வந்தான் |

ஒன்றற்குழ் எனப் பொதுப்படையாகக் கூறிடினும் ஆண்மை சுட்டிய என்றதனால் அஃறிணை ஆண் ஒன்றேயாம் என்பார் சேனாவரையர்,

குறிப்பு

பன்மை சுட்டிய விரவுப்பெயர்:

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்அஃறிணை ஒருமையும் அஃறிணைப் பன்மையும் உயர்திணை ஒருமைஎன்று சொல்லப்பட்ட மூன்று பால்களுக்குமட் உரியதாகும்

பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றே, பலவே, ஒருவர், என்னும்

என்று இப் பாற்கும் ஓரன்னவ்வே

.அம்மூன்றுமாவன; பன்மையியற்பெயரும், பன்மைச் சினைப்பெயரும், பன்மைச்சினை முதற்பெயருமாம்.

அஃறிணை ஒருமை அஃறிணை பன்மை உயர்திணை ஒருமை

பன்மை இயற்பெயர்:யானை வந்தது. யானை வந்தன,யானை வந்தான், யானை

வந்தாள்

பன்மை சினைப்பெயர் -நெடுங்கழுத்தல் நெடுங்கழுத்தல் நெடுங்கழுத்தல் வந்தான்

வந்தது வந்தன நெடுங்கழுத்தல் வந்தாள்

பன்மைசினைமுதற்பெயர்- பெருங்கால் யானை பெருங்கால்யானை,பெருங்கால்யானை

வந்தான்

வந்தது வந்தன பெருங்கால் யானை

வந்தாள்

குறிப்பு

பன்மைக்கேயன்றி ஒருமைக்குமுரியவாய் வருவனவற்றைப் பன்மைப் பெயரென்ற தென்னையெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் பெண்மைப் பெயர் முதலாயினவும் பிறபெயராலுணர்த்தப்படாத பெண்மை முதலாயினவற்றையு முணர்த்தலானன்றே அப் பெயரவாயின. என்னை ? பெண்மை முதலாயின பிறபெயராலுணர்த்தப்படுமாயின் அப்பெண்மை முதலாயினவற்றான் அப்பெயர் வரைந்து சுட்டலாகாமையின், பன்மைப்பெயர் ஒருமை யுணர்த்துமாயினும், பிறவாற்றாலுணர்த்தப்படாத பன்மையை ஒருகாலுணர்த்தலின் அப் பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப்பெயரவாயின. அற்றேனும், பன்மை சுட்டிய பெயரென்றமையாற் பன்மையே யுணர்த்தல் வேண்டுமெனின்:- அற்றன்று; இயை பின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசேடித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்ற வழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக்காது வெண்குடையோடு இயைபின்மை மாத்திரை நீக்கி வெண்குடையாயென்பதுபட நிற்றலின் அ.ஃதியைபின்மை நீக்கலாம். கருங்குவளை என்ற வழிச்செம்மை முதலாயினவற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினியைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெயரென்பது, வெண்குடைப் பெருவிறல் என்பதுபோல, ஒருமையியைபு நீக்காது பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டுமென்பதுபட நின்றது. அதனான் விசேடிக்குங்காற் பிறிதினியைபு நீக்கல் ஒருதலையன்றென்க.அ.ஃறிணையொருமையும் அத்திணைப்பன்மையும் உயர்திணை யொருமையுமாகிய பலவற்றையும் உணர்த்தலாற் பன்மை சுட்டிய பெயரென்பாருமுளர். அ.ஃதுரை யாசிரியர் கருத்தன்மை அவ்வுரையான் விளங்கும் என நீண்ட எரை எழுதி விளக்குவார்.

ஒருமை சுட்டிய சினைமுதற் பெயர்:

ஒருமை சுட்டிவரும் ஒருமை இயற்பெயர் ஒருமை சினைப் பெயர் ஒருமை சினைமுதற் பெயர் ஆகியன அ.ஃறிணை ஒருமைக்கும் உயர்திணை ஒருமைக்கும் உரியவாகும்.

ஒருமை சுட்டிய எல்லாப் பெயரும்

ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே

அ.ஃறிணை ஒருமை உயர்திணை ஒருமை

ஒருமை இயற்பெயர் கோதை வந்தது கோதை வந்தான், கோதை வந்தாள்

ஒருமை சினைப் பெயர் செவியிலி வந்தது செவியிலி வந்தான், செவியிலி வந்தாள்

ஒருமை சினை முதற் பெயர் கொடும்புற மருதி வந்தது

குறிப்பு

கொடும்புற மருதி வந்தான்

கொடும்புற மருதி வந்தாள்.

4.தாம், தான் என்பன எவ்வாறு வரும்?

தாம் என் கிளவி:

தாம் என் கிளவி பன்மைக்கு உரித்தே.

தாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாலுக்கு உரியது

தாம் வந்தார்

தாம் வந்தன

தான் என் கிளவி:

தான் என் கிளவி ஒருமைக்கு உரித்தே

தான் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் ஒருமைப்பாலுக்கு உரியது

தான் வந்தான்

தான் வந்தாள்

தான் வந்தது

5.எல்லாம் என்னும் பெயர்நிலைக்கிளவி குறித்து எழுதுக.

எல்லாம் என்னும் பெயர்நிலைக் கிளவி:

.எல்லாம்“ என்னும் பெயர்நிலைக் கிளவி

பல்வழி நுதலிய நிலைத்து ஆகும்மே

எல்லாம் என்னும் பெயர் இருதிணைக்கண்ணும் பன்மைப்பாலுக்கு உரியது

எல்லாம் வந்தோம்

எல்லாம் வந்தீர்

எல்லாம் வந்தார்

எல்லாம் வந்தன

எல்லாமென்னும் பெயர் இரண்டுதிணைக்கண்ணும் பன்மை குறித்து வருமென்னாது பல்வழியென்றது. மேனியெல்லாம் பசலையாயிற்று என

குறிப்பு

ஒரு பொருளின் பலவிடங் குறித்து நிற்றலுமுடைத்தென்பதூஉம் கோடற்குப் போலும். அ∴து எஞ்சாப்பொருட்டாய் வருவதோ ருரிச்சொலென் பாருமுளர் என்பார் சேனாவரையர்.

உயர்திணை மருங்கின், ஆக்கம் இல்லை

எல்லாமென்னுஞ் சொல், உயர்திணையில், தன்மைப்பன்மைக்கல்லது முன்னிலைப் பன்மைக்கும் படர்க்கைப் பன்மைக்கும் ஆகாது

நெறிதா ழிருங்கூந்த னின்பெண்டி ரெல்லாம்" (கவி-97) எனப் படர்க்கைக் கண்ணும் வந்ததெனின்- எழுத்ததிகாரத்துள்,உயர்திணையாயனின் நம்மிடை வருமே" (எழு-190) எனத் தன்மைக்கேற்ற சாரியை கூறினமையானும்,ஈண்டு நியமித்தலானும், அது இட வழுவமைதியாய் அமைந்தது.

தன்மைச்சொல் அ∴றிணைக்கின்மையின், எல்லாமென்பது பொதுமையிற் பிரிந்து தன்னுளுறுத்த பன்மைக்கண் வந்துழி உயர்திணையீற்றுப் பெயரெனப்படினும், இரு திணைப்பன்மையு முணர்த்துதற்கேற்றுப் பொதுப் பிரியாது நின்றவழி விரவுப் பெயராதற் கிழுக்கன்று என்பார் சேனாவரையர்.

எல்லாப்பார்ப்பாரும், எல்லாச் சான்றாரும் எனப் படர்க்கைக்கண் வருதலும் கோடற்குத் தன்னுள்ளுறுத்த பன்மைக் காங்கால் உயர்திணை மருங்கினல்லதாகாதென மொழிமாற்றி யுரைத்தாரால் என்ற உரையாசிரியரின் உரையில் வனா எழுப்பும் சேனாவரையர் அதற்கு படர்க்கைக்கண் வருதல் இடவழுவமைதி யென்றவழிப்படு மிழுக்கின்மையானும்,தன்மைச் சொல்லே ய∴றிணைக் கிளவி" (சொல்-43) எனவும்; யான் யாம் நாமென வரூஉம் பெயர்" (சொல்-163) எனவும் பிறாண்டு மோதியவாற்றால், தன்மைச்சொல் அ∴றிணைக்கின்மை பெறப்படுதலின் ஈண்டுக்கூறல் வேண்டாமை யானும், எழுத்ததிகாரத்துள் உயர் திணையாயி னம்மிடை வருமே" எனத் தன்மைக்குரிய சாரியையே கூறலானும், அது போலியுரையென்க என விளக்கம் செய்து மறுக்கின்றார்.

6.நீயிர், நீ என வரூஉம் கிளவி எவ்வாறு அமையும் என்பதனை விளக்குக.

நீயிர், நீ என வரூஉம் கிளவி

நீயிர், நீ என வரூஉம் கிளவி

பால் தெரிபு இலவே; உடன்மொழிப் பொருள

நீயிர், நீ என வரூஉம் கிளவிகள் திணை தெரிய வாராது, இருதிணையும் உடன் தோன்றி நிற்கும்.

குறிப்பு

நீயிர் வந்தாய்

நீ வந்தாய்.

அவற்றுள்,

நீ என் கிளவி ஒருமைக்கு உரித்தே

நீ என்னும் கிளவி ஒருமைக்குரித்து. ஒருமை என்பது ஒருவன், ஒருத்தி, ஒன்று ஆகிய மூன்றையும் குறிக்கும் என்பார் சேனாவரையர்,

நீ வந்தாய்

ஏனைக் கிளவி பன்மைக்கு உரித்தே.

நீயிர் என்பது பன்மைக்குரித்து. பன்மை என்பது பல்லோர்க்கும் பலவற்றிற்கும் பொதுவாகிய பன்மை என்பார் சேனாவரையர்,

நீயிர் வந்தீர்

7.ஒருவர் என்னும் கிளவி அமையும்மாற்றை விளக்குக.

ஒருவர் என்னும் கிளவி:

ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி

இரு பாற்கும் உரித்தே, தெரியும் காலை

இன்றிவரென்னு மெண்ணியற் பெயரென்றோதப்பட்டவற்றுள், ஒருவரென்னும் பெயர்ச்சொல்,அடங்கும்.உயர்திணை முப்பாலுள் ஒருபால் விளக்காது, ஒருவன் ஒருத்தி யென்னும் இருபாற்கும் பொதுவாய் நிற்கும்.

சான்று: ஒருவர் வந்தார்

**வினையியல்**

பெயருக்கான இலக்கணம் கூறிய பின் வினையின் இலக்கணத்தை தொல்காப்பியர் இவ்வியலில் குறிப்பிடுகிறார். திணை அடிப்படையில் பெயரியலை அமைத்துக் கொண்டதுபோல் வினையியலையும் திணை அடிப்படையிலே அமைத்துக் கொண்டு இலக்கணம் வகுக்கிறார். வினை என்பது செயலைக் குறித்து நிற்கும். எனவே அதனைப் பற்றிக் கூறும் இப்பகுதி வினையியல் எனப்பட்டது.

குறிப்பு

**வினைச்சொல்லின் பொது இயல்பு:**

வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது,

நினையும் காலை, காலமொடு தோன்றும்.

வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது, ஆராயுங்காற் காலத்தொடு புலப்பட்டு வரும். இங்கு வேற்றுமை என்பது வேற்றுமை உருபைக் குறித்து நிற்கும்.

உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றி நின்றது.

வினைச்சொல் காலமொடு தோன்றும் எனக் குறிக்காது வேற்றுமை கொள்ளாது என்று மட்டும் குறித்தால் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் என்பதாய்ப் பொருள் படும் என்பதாலும் அவ் இரண்டினையும், நீக்குதற்காகவும் வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும் என்றார். வேற்றுமை கொள்ளாது எனக் குறிக்காதிருப்பரின் அது வினையாலணையும் பெயரையும் குறித்து நிற்குகும். எனவே வேற்றுமை கொள்ளாது என்றார்,

வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் காட்டாதனவும் உள. எனவே அவையும் ஆராயுங்காற் காலமுடையன என்றதற்கு,நினையுங்காலை என்றார்.

**காலத்தின் இயல்பு:**

காலம் தாமே மூன்று என மொழிப.

காலம் என்பது மூன்று என்று சொல்லப்படும்.

இறப்பின், நிகழ்வின், எதிர்வின், என்றா

அம் முக் காலமும் குறிப்பொடும் கொள்ளும்

மெய்ந் நிலை உடைய, தோன்றல.

இறப்பும் நிகழ்வும் எதிர்வும் என்று சொல்லப்படும். அம்மூன்று காலமுங் குறிப்புவினையொடும் பொருந்தும.

குாலம் மூன்றாவன இறப்பும், நிகழ்வும், எதிர்வு என்பதாம். வெளிப்படக் காலம் காட்டாதனகுறிப்பு வினையெனப்படும்.

உண்டான், உண்ணாநின்றான், உண்பான் என வரும்.

இறப்பாவது தொழிலது கழிவு, நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை ஆகும்.

**குறிப்பு**

வினைக்குறிப்புக் காலமொடு தோன்றுங்கால், பண்டு கரியன் இது பொழுது கரியன் என இறந்தகாலமும் நிகழ்காலமும் முறையானே பற்றி வருதலும், நாளைக்கரியனாம் என எதிர்காலத்து ஆக்கமொடு வருதலும் உண்டு.வினைக்குறிப்பில் காலம் வெளிப்படத் தோன்றாது எனினும் காலம் அமைந்து கிடப்பது மெய்மையாதலின் மெய்நிலையுடைய தோன்றலாறே எனக் குறித்தார் தொல்காப்பியர் என்பார் சேனாவரையர்.

வினைச்சொற்களின் வகை:

> குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக்
>
> காலமொடு வரூஉம் வினைச்சொல் எல்லாம்-
>
> உயர்திணைக்கு உரிமையும், அ∴றிணைக்கு உரிமையும்,
>
> ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்,
>
> அம் மூஉருபினதோன்றலாறே.

பொதுவகையாற் கூறியவினைச்சொல்லைச் சிறப்பு வகையானுணர்த்திய வெடுத்துக்கொண்டார்.

குறிப்புப் பொருண்மைக் கண்ணுந் தொழில் பொருண்மைக்கண்ணுந் தோன்றிக்காலத்தோடு வரும் எல்லாவினைச் சொல்லும், உயர்திணைக்குரியனவும் அ∴றிணைக்குரியனவனவும் இரண்டு திணைக்கும் ஒப்ப உரியுடையனவுமாய் வரும்.

கரியன், செய்யன் - குறிப்பு வினை

உண்டான்- உயர்திணை – தெரிநிலை வினை

கரியன் - உயர்திணை – குறிப்பு வினை

சென்றது- அ∴றிணை- தெரிநிலை வினை

செய்யது- அ∴றிணை- குறிப்பு வினை

வந்தனை- விரவு வினை- தெரிநிலை வினை

வெளியை- விரவு வினை- குறிப்பு வினை

குறிப்பொடுங்கொள்ளும் (சொல்-200) என மேற் குறிபபபிட்டுரைத்தமையாற் இங்கு குறிப்பினும் வினையினும் என்றார்.

குறிப்பு

ஈறுபற்றி உணர்த்தப்படும் வினைச்சொற்களை இது காலத்திற்குரித்து இது நிகழ்காலத்திற்குரித்து இது எதிர்காலத்திற்குரித்து என வழக்கு நோக்கி, உணர்ந்து கொள்க என்பதனை விளக்க,காலமொடு வரூஉம் என்றார்.

வினைச்சொற் காலமுணர்த்துங் காலத்துச் சிலநெறிப்பாடுடையன என்பதனை விளக்க நெறிப்படத்தோன்றி என்றார். நெறிப்பாடு எனப்படுவது சொற்களின் ஈற்றுமிசை நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்றும் உணர்த்தல் என்பது இயலாது, என்னும் அவ் ஈறு உணர்த்தும் இடத்தில் அது பற்றிச் சொல்லப்படும் என்றார் சேனாவரையர்.

**உயர்திணை: - தன்மைப் பன்மை வினை முற்று**

உயர்திணைக்குரிய வினைகளைத் தொல்காப்பியர் தன்மை வினை, படர்க்கை வினை, என இரு வகையினவாகக் கூறுவார், முன்னிலை வசினை என்பது விரவு வினை என்பதற்கு உரியதாகையால் அதனை இங்கு உணர்த்தினாரில்லை.

அவைதாம்,

அம், ஆம், எம், ஏம், என்னும் கிளவியும்,

உம்மொடு வரூஉம் க, ட, த, ற, என்னும்

அந் நாற் கிளவியொடு ஆயெண் கிளவியும்

பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே.

உயர்திணைவினை இருவகைப்படும். அவை தன்மை வினையும் படர்க்கைவினையுமென்பதாம். தன்மை வினையும் இருவகைப்படும். அவை பன்மைத் தன்மையும் ஒருமைத் தன்மையுமாம். தன்னை மட்டும் உணர்த்தி வருவது தனித்தன்மையாகும். தன்னோடு பிறரையும் உளப்படுத்தி உரைப்பது பன்மைத்தன்மை ஆகும். அவை மூன்று வகைப்படும்.

அம், ஆம் - முன்னிலையாரை உளப்படுத்துதல்.

எம், ஏம்- படர்க்கையாரை உளப்படுத்துதல்

கும், டும்,தும் றும் -முன்னிலையாரையும் படர்க்கையாரையும் உளப்படுத்துதல்

அஞ்சினம், அஞ்சினாம் - முன்னிலையாரை உளப்படுத்துதல்

அஞ்சினெம், அஞ்சினேம் - படர்க்கையாரை உளப்படுத்துதல்

உண்கும், உண்டும், வருதும், சேறும் - முன்னிலையாரையும் படர்க்கையாரையும் உளப்படுத்துதல்.

குறிப்பு

அம், ஆம்; எம் , ஏம் என்பன மூன்று காலமும்பற்றி வரும். உம்மொடு வரூஉங் கடதற அதாவது கும், டும்,தும், றும் என்பனஎதிர்காலம்பற்றி வரும்.

முன்னின்ற நான்கு ஈறும் அதாவது அம், ஆம்; எம், ஏம் என்பன இறந்த காலம் பற்றி வருங்கால், அம்மும் எம்மும் கடதறவென்னு நான்கன் முன் அன் பெற்று வரும். ஆம் அன் பெறாது. வரும். ஏம் அன் பெற்றும் பெறாது வரும்.

நக்கனம்

உண்டனம்

உரைத்தனம்

தின்றனம்

- அம் - அன் பெற்று வருதல்

நக்கனெம்

உண்டனெம்

உரைத்தனெம்

தின்றனெம்

- எம் - அன் பெற்று வருதல்.

நக்கனேம்

உண்டனேம்

உரைத்தனேம்

தின்றனேம்

ஏம் - அன் பெற்று வருதல்.

நக்கேம்

உண்டேம்

உரைத்தேம்

குறிப்பு

தின்றேம்

ஏம்.- அன் பெறாது வருதல்.

நக்காம்,

உண்டாம்,

உரைத்தாம், தின்றாம்

ஆம் - அன் பெறாது வருதல்.

அம், ஆம்; எம் , ஏம் நான்கு ஈறும் கடதற என்னும் நான்கு எழுத்துத் தவிர ஏனை எழுத்தின்முன் ஙகாரமும் ழகாரமும் ஒழித்து இன்பெற்று வரும்.

அஞ்சினம்,

அஞ்சினாம்,

அஞ்சினெம்,

அஞ்சினேம்,

உரிஞினம்,

உரிஞினாம்,

உரிஞினெம்,

உரிஞினேம்

பிறவெழுத்தோடு ஒட்டிக் கொள்க என்பார் சேனாவரையர். கலக்கினம், தெருட்டினம் என்னுந் தொடக்கத்தன குற்றுகரவீறாகலான், அதுவும் ஏனையெழுத்தேயாம் என்பார்.

அம், ஆம்; எம், ஏம் என்பன நிகழ்காலம்பற்றி வரும்பொழுது, நில், கின்று என்பனவற்றோடு வரும். நில்லென்பது லகாரம் னகாரமாய் றகாரம் பெற்று நிற்கும்.

உண்ணாநின்றனம்,

உண்ணாநின்றாம்

உண்ணாநின்றனெம்

உண்ணாநின்றேம்

குறிப்பு

உண்ணாநின்றனேம்

உண்கின்றனம்,

உண்கின்றாம்,

உன்கின்றனேம்,

உண்ணாநின்றனேம்.

அவற்றுள் அன் பெற்ற விகாரம் இறந்த காலத்திற் கூறியவாறு அமையும்.

உண்ணாகிடந்தனம், உண்ணாவிருந்தனம் எனக் கிட, இரு என்பனவும் சிறுபான்மை நிகழ்காலத்து வரும்.

நிகழ்காலத்திற்கு உரித்து என்று கூறப்பட்ட நில் என்பது, உண்ணாநிற்கும் உண்ணாநிற்பல் என எதிர்காலத்தும் வந்ததனை வினாவாக்கும் சேனாவரையர் நிகழ்வு என்பது மூன்று வகையான் வரும் என்பது அவர்தம் கருத்து, அவை, இறந்த காலத்து நிகழ்வு, நிகழ் காலத்து நிகழ்வு, எதிர் காலத்து நிகழ்வு என்பதாம். ; பண்டொருநாள் இச் சோலைக்கண் விளையாடா நின்றேன் அந்நேரத்தொரு தோன்றல் வந்தான் என்றவழி, இறந்த காலத்து நிகழ்வுபற்றி வந்தாற்போல் ஆண்டெதிர் காலத்து நிகழ்வு வந்தாற் போலஉண்ணாநிற்கும் உண்ணாநிற்பல் என்ற விடத்து எதிர்காலத்து நிகழ்வாய் அமைந்தன. எனவே, ஆண்டும் அது நிகழ்காலத்தில் தீர்ந்தின்று என்களன்பார் சேனாவரையர்.

அம், ஆம்; எம், ஏம் என்பன எதிர்காலம்பற்றி வருங்கால் பகரமும் வகரமும் பெற்று வரும். வகரமேற்புழிக் குகரமும் உகரமும் அடுத்து நிற்கும்.

உரைப்பம்,

செல்வம்,

உண்குவம்,

உரிஞுவம்

இவ்வாறே, ஒழிந்த ஈற்றோடு ஒட்டிக்கொள் என்பார் சேனாவரையர்.சிறுபான்மை ககரவொற்றுப் பெறுதலும் உண்டு.

பாடுகம்,

செல்கம்

உம்மொடு வரூஉங் கடதற ஆகிய கும், டும், தும், றும் அகிய நான்கும் எதிர்காலம் பற்றி வரும்.

**குறிப்பு**

உண்கும்,

உண்டும்,

வருதும்,

சேறும் என வரும்.

இவை ஏற்புழி உகரம் பெற்று வரும்.

உரிஞ்தும்

திருமுதும்

கும், டும், தும், றும் அகிய நான்கினுள் முதற்கண் இருக்கும் கும்மீறு, வினைகொண்டு முடியும். ஒழிந்தனபெயர் கொண்டு முடியும். ஆதலின் தொல்காப்பியர் அவற்றை வேறு எனக் கூறினார், ட்,த்,ற் என்பன காலம் காட்டும் இடைநிலைகள் ஆகும். இவை இறந்த காலம் காட்டும்.கும், டும், தும், றும் என்பன எதிர்காலம் காட்டும். எனவே இவற்றை ஓரீராகப் பிரிக்க இயலாது, எனவே,கும், டும், தும், றும் என்னுளும் நான்கீறாகக் கூறினார்.

**உயர்திணை: - தன்மைப் ஒருமை வினை முற்று**

க, ட, த, ற, என்னும்

அந் நான்கு ஊர்ந்த குன்றியலுகரமொடு,

என், ஏன், அல், என வரூஉம் ஏழும்

தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே

கடதற என்னும் நான்கும் மெய்மை ஊர்ந்து வரும் குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லும், என் ஏன் அல் என்னும் ஈற்றாகவுடைய சொல்லும் என அவ்வேழும், ஒருமை உணர்த்தும் தன்மைச் சொல்லாம்.

குற்றுகரம் நான்கும், அல்லும் , எதிர்காலம்பற்றி வரும். குற்றுகரம், காலவெழுத்துப் பெறுங்கால், உம் ஈற்றைப் போல உகரச் சாரியை பெற்று வரும். அல்லீறு பகரமும் வகரமும் பெற்று வரும். என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும்.

உண்கு

உண்டு ;

வருது,

சேறு

உரிஞ்கு,

திருமுகு

- அல்லீறு பகரமும் வகரமும் பெற்று வரும்

உண்பல்

வருவல்

என் ஏன் என்பன மூன்று காலமும் பற்றி வரும்

உண்டனென்

உண்ணாநின்றனென்,

உண்குவென்

உண்டேன்

உண்ணாநின்றேன்,

உண்பேன்

காலவெழுத் தடுத்தற்கண் எம்மீறு போல என்னீறு அன் பெற்றும் ஏமீறு போல ஏனீறு அன் பெற்றும் பெறாதும் வரும்.

குற்றியலுகரமென ஒன்றாகாது நான்காதற்கு முன்னுரைத்தாங் குரைக்க.

எதிர்காலம்பற்றி வழக்குப் பயிற்சியுமில்லாக் குற்றுகரத்தை, அங்ஙனம் வரும் அல்லோடு பின் வைக்காது மூன்று காலமும் பற்றிப் பயின்று வரும் என் ஏன் என்பனவற்றின் முன் உம் ஈற்றோடியைய வைத்தது,செய்கென்பது போலச் செய்குமென்பதும் காண்கும் வந்தேம் என வினைகொண்டு முடியுமென்பதனை அறிவித்தற்கு எனக் குறிப்பார் சேனாவரையர்,

குறிப்பு

குறிப்பு

செய்கு என்னும் வாய்பாட்டு ஒருமை:

அவற்றுள்,

”செய்கு” என் கிளவி வினையொடு முடியினும்,

அவ் இயல் திரியாது என்மனார் புலவர்.

மேற்கூறப்பட்ட ஒருமைத் தன்மை வினை ஏழனுள், செய்கென்னுஞ் சொல் வினையொடு முடியுமாயினும், முற்றுச் சொல்லாதல் திரியாது.

காண்கு வந்தேன் என வரும்.

செய்கென்கிளவி அவ்வியல் திரியாதெனவே,பெயர்த்தனென் முயங்கயான் (குறுந் . 84 ) எனவும்,தங்கினை சென்மோ (புறம் - 320 ) எனவும் ,மோயின ளுயிர்த்த காலை (அகம் - 5) எனவும் ஏனைமுற்றுச் சொல் வினை கொள்ளுங்கால் அவ்வியல் திரியும் . அவை திரிந்தவழி வினையெச்சமாதல் வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய (சொல் - 457 ) என்பதனால் பெறப்படும்.

இருசாரனவும் பெயர் கொள்ளாது வினை கொண்ட வழிச் செய்கென் கிளவி திரியாதென்றும் ஏனைய திரியுமென்றுங் கூறிய கருத் தென்னை யெனின் என வினா எழுப்பி காண்கு வந்தேன் என்றவழிச் செய்கென் கிளவி வினையெச்சமாய்த் திரிந்ததாயிற் செய்தெனெச்சமாதற் கேலாமையின், செயவெனெச்சமாய்த் திரிந்ததெனல் வேண்டும். வேண்டவே செயவெனெச்சத்திற்குரிய வினைமுதல் வினையும் பிறவினையும் அதுகொள்வான் செல்லும் ; வினைமுதல் வினையல்லது கொள்ளாமையிற் செயவெனெச்சமாய்த் திரிந்த தென்றல் பொருந்தாது.பிறிதாறின்மையின், முற்றுச் சொல்லாய் நின்ற தெனவே படும். அதனான் அவ்வியல் திரியாதென்றா ரென்பது. அல்லதூஉம் செய்கென் கிளவி சிறுபான்மை யல்லது பெயர் கொள்ளாமையின் ; பெரும் பான்மையாகிய வினைகோடல் அதற்கியல்பேயாம் ஆகவே அது திரிந்து வினைகொள்ளு மெனல் வேண்டாவாம் ; அதனாலும் முற்றாய் நின்று வினை கொண்ட தென்றலே முறைமையென்று உணர்க என விளக்கம் தருவார் சேனாவரையர். மேலும்

முற்றுச் சொற்கும் வினையொடு முடியினும்

முற்றுச்சொ லென்னும் முறைமையி னிறவா

என்றார் பிறருமெனக் கொள்க.பெயர்த்தனென் முயங்க“ (குறுந் - 84) என்னுந் தொடக்கத்தன இறந்தகாலமுணர்த்தலிற் செய்தெனெச்சமாதற் கேற்புடைமையான் , அவற்றைத் திரிபென்றார் எனவும் விதந்தோதுவார்.

**படாக்கை ஒருமை வினைமுற்று:**

அன், ஆன், அள், ஆள், என்னும் நான்கும்

ஒருவர் மருங்கின் படர்க்கைச் சொல்லே.

குறிப்பு

தன்மைவினை யுணர்த்தி, இனி உயர்திணைப் படர்க்கை வினை யுணர்த்துகின்றார் தொல்காப்பியர்

அன், ஆன், அள், ஆள் என்னு மீற்றையுடைய நான்கு சொல்லும் உயர்திணை ஒருமை உணர்த்தும் படர்க்கைச் சொல்லாம்.இவை நான்கு ஈறும் மூன்று காலமும்பற்றி வரும்.

:உண்டனன், உண்ணாநின்றனன்,உண்பன்;

உண்டான் உண்ணாநின்றான்,உண்பான் ;

உண்டனள், உண்ணா நின்றனள்,உண்பள்;

உண்டாள் உண்ணாநின்றாள், உண்பாள் .

காலத்துக் கேற்ற எழுத்துப்பெறுங்கால் அன்னும் அள்ளும் அம் ஈறுபோல அன் சாரியை பெற்று வரும். ஆனும் ஆளும் ஆம் ஈறு போன்று அன் பெறாது வரும்.

**படர்க்கைப் பன்மை வினை முற்று :**

அர், ஆர், ப, என வரூஉம் மூன்றும்

பல்லோர் மருங்கின் படர்க்கைச் சொல்லே

அர் ஆர் ப என்னும் ஈற்றையுடையவாய் வரும் மூன்று சொல்லும் பல்லோரையுணர்த்தும் படர்க்கைச் சொல்லாம். ரகாரவீறு இரண்டும் மூன்றுகாலம் பற்றி வரும் ; பகாரம் எதிர்காலம் பற்றி வரும்

உண்டனர், உண்ணாநின்றனர், உண்பர்

உண்டார், உண்ணாநின்றார், உண்பார்;

உண்ப

அன்ஈற்றிற்குரிய காலவெழுத்து அர் ஈற்றிற்கும், ஆன் ஈற்றிற்குரிய காலவெழுத்து ஆர் ஈற்றிற்கும் வரும்.

பகரம் உகரம்பெற்றும் பெறாதும் வரும்.

குறிப்பு

உரிஞுப,

உண்ப

வருகுப

எனச் சிறுபான்மை குகரமும் பெறும்.

**செய்மார் என்னும் வாய்பாட்டு வினை:**

மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை;

காலக் கிளவியொடு முடியும் என்ப.

அர், ஆர், ப என்னும் ஈறுகளோடு மாரீற்றுச் சொல்லும் பல்லோர் படர்க்கையை யுணர்த்தும் ; அ∴து அவைபோலப் பெயர் கொள்ளாது வினைகொண்டு முடியும் பகரத்திற்குரிய காலவெழுத்து மாரைக் கிளவிக்கும்ஒக்கும்.

எள்ளுமார் வந்தார் .

கொண்மார் வந்தார் என வரும்

மாரைக்கிளவி வினையோடல்லது பெயரொடு முடியாமையின். எச்சமாய்த் திரிந்து வினைகொண்ட எனப்படாது.

பீடின்று பெருகிய திருவிற்

பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே (புறம் - 375)

காமம் படரட வருந்திய

நோய்மலி வருத்தங் காணன்மார் எமரே ; (நற் - 64)எனவும், மாரீற்றுச்சொற் பெயர்கொண்டு வந்தனவே எனின் அவை மார் ஈற்றுச் சொல் அல்ல. அது ஆர் ஈற்று முற்றுச்சொல். அவை எதிர் மறையாய் ஒரு மொழிப்புணர்ச்சியான் மகரம் பெற்று நின்றன. மார் ஈறாயின் அவை பாடாதொழிவார். காணாதொழிவார் என ஏவற்பொருண்மை யுணர்த்தும். ஆனால் ஈண்டு எடுத்துக்காட்டுகளில் உள்ள பாடன்மார், காணன்மார் என்பன ஏவற்பொருண்மையை உணர்த்துமாறு இல்லை. எனவே பாடுவார், காண்பார் போன்ற சொற்கள் எதிர்மறையாய் எழுத்துப்பெற்று வந்தன.

**உயர்திணைக்குரிய வினைமுற்றுகள்:**

பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த

அந் நால்-ஐந்தும் மூன்று தலை இட்ட

முன்னுறக் கிளந்த உயர்திணையவ்வே.

பன்மையும் ஒருமையுமாய்ப் பாலறி வந்த இருபத்து மூன்றுஈற்று வினைச்சொல்லும் உயர்திணைக்குரியன ஆகும்.

குறிப்பு

இங்குகூறிய படர்க்கைவினையே கிளவியாக்கத்துக்கத்துள்ளும

கூறப்பட்டன.அவை வேறல்லவென்பார், முன்னுறக் கிளந்தவென்றார் என்றார்,. அதனாற் பயன் அன் ஆன் அள் ஆள் என்பன ஆண்பால் பெண்பாலுணர்த்துதல் இங்குப் பெறுதலும் ன.்.கானொற்று முதலாயின படர்க்கைவினைக் கீறாய்நின்று பாலுணர்த்துதல் ஈங்குப் பெறுதலுமாம். மேலும், முற்றுப் பெற ஓரிடத்துக் கூறவமையும் ஈரிடத்துக் கூறியதன் காரணம் : - பாலுணர்த்தும் இடைசொற்பற்றி உயர்திணைப் படர்க்கைவினை யுணர்த்துதல் ஈண்டுக் கூறியதனாற் பயன் வழுக்காத்தற்கு இவற்றைத் தொகுத்து இலக்கண வழக்குணர்த்துதற்காம். பெயரியல் நோக்கிப் பெயரிற் தோன்றும் பாலறி கிளவியும்“ என்றாற்போல வினையியல் நோக்கி வினையில் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல் கூடா என அமையும் ஆண்டுக் கூற வேண்டாம் எனின் : - அவ்வாறன்று, இருதிணை ஐம்பாற் சொலுணர்த்தாக்கால் திணைபால்பற்றி வழுவற்கவெனவும் வழீஇயமைக வெனவும் வழுக்காத்த சூத்திரங்களெல்லாவற்றானும் பொருளினிது விளங்காமையானும் வினையுள்ளுந் திரிபின்றிப் பால் விளக்குதற் சிறப்புடையன படர்க்கைவினையே யாகலானும்,அவற்றைப் பிரித்து ஆண்டுக் கூறினாரென்பது. படர்க்கைப் பெயரீறுந் திரிபின்றிப் பாலுணர்த்தாமையின் இலக்கணவெழுத்தோடு கூறாது, எதிரது நோக்கிக்கொள்ள வைத்தார் என விளக்கம் தருவார் சேனாவரையர்,

**தன்மைப் பன்மை வினை – வேறுபாடு**:

அவற்றுள்,

பன்மை உரைக்கும் தன்மைக் கிளவி

எண் இயல் மருங்கின் திரிபவை உளவே.

இவ்வாறு,கூறப்பட்ட இருபத்துமூன்று சொற்களுள். பன்மை உணர்த்துந் தன்மைச்சொல் எண்ணும் வழி அ.்.றிணையை யுளப்படுத்துத் திரிவனவும் உள.

யானுமென் எ.்.கமுஞ் சாறும்“ என வரும்.

தன்மைப்பன்மை வினைச்சொல் உயர்திணை வினைக்குரியது. ஆகையால் உயர்திணையே உளப்படுத்தும். அவ்வாறு இருக்க அ.்.றிணையை உளப்படுத்தல் வழுவாயினும் அமைக வென்பார் திரிபவை உளவென்றார். அதனான் இச்சூத்திரத்தை முன்னுறக் கிளந்த

உயர்திணை யவ்வே (சொல் - 208) என்னும் சூத்திரத்தின் பின் வைத்தார்.

**குறிப்பு**

திரியுமென்னாது திரிபவையுள என்றதனான், எல்லாத் திரியா, சிலவே திரிவன வென்பதாம்.

**யார் – உயர்திணை முப்பாற்கும் உரியதாதல்:.**

யாஅர் என்னும் வினாவின் கிளவி

அத் திணை மருங்கின் முப் பாற்கும் உரித்தே.

யாரென்னும் வினாப்பொருளை உணர்த்தும் சொல் உயர்திணை மருங்கின் முப்பாற்கும் உரியதாகும்.

அவன் யார்?

அவள் யார்?

அவர் யார்?

ஊதைகூட் டுண்ணும் உகுபனி யாமத்தெங்

கோதைகூட் டுண்ணிய தான்யார்மன் - போதெல்லாந்

தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன்

தூதொடு வாராத வண்டு

என்னும் பாடலின்கண், வண்டுதான் யார் என, யாரென்பது அ∴றிணைக் கண்ணும் வந்துள்ளது,.இது திணைவழுவமைதி எனப்படும்.

இது வினைக்குறிப்பு, பல்லோர் படர்க்கை உணர்த்தும் நூற்பாவின் பின் வைத்திருக்கலாமே எனின் அது பலர் பாலை மட்டும் உணர்புத்தும்.ஆனால் யார் என்னும் வினைக் குறிப்பானது அவன், அவள், அவர்,என்னும் முப்பாலிலும் வினாவால் வரும் என்பதனால் அங்கு வைக்காது இங்கு வைத்துக் கூறினார்.

**வினைமுற்றுகளின் ஈறு திரிதல்:**

பால் அறி மரபின் அம் மூஈற்றும்

ஆ ஓ ஆகும், செய்யுளுள்ளே.

பால் விளங்க வருமியல்பையுடைய ஆன், ஆள், ஆர் என்னும் மூன்று ஈற்றின் கண்ணும் ஆகாரம் செய்யளிடத்து ஓகாரமாகும்.

வினவிநிற்றந் தோனே (அகம் - 48),

நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே (அகம் - 248),

பாசிலை வாடா வள்ளியங் காடிறந் தோரே (குறந் - 216), என்பனவற்றில் ஆகாரம் ஓகாரமாய் திரிந்து நின்றது,

வந்தோம்,

சென்றோம்

என வழக்கினுள் வரும் எனினும் அவற்றை ஏம் என்னும் ஈற்றின் சிதைவென மறுக்க என்பார் சேனாவரையர்.

ஆய் என் கிளவியும் அவற்றொடு கொள்ளும்

முன்னிலையீற்றுள், ஆய் என்னும் ஈறு மேற்கூறப்பட்டனபோல செய்யளுள் ஆகாரம் ஓகாரமாகும்.

வந்தோய் மன்ற தண்கடற் சேர்ப்ப (அகம் - 80) என வரும்.

ஆயென்கிளவி ஆ ஓ ஆவது பெரும்பான்மையும் உயர்திணைக்கண் வந்தவழி என்பதனை அறிவித்தற்கே, முன்னை அதிகாரத்துக் கூறாது ஈண்டுக் கூறினார்.

**உயர்திணை - குறிப்பு வினைமுற்று:**

அதுச் சொல் வேற்றுமை உடைமையானும்,

கண் என் வேற்றுமை நிலத்தினானும்,

ஒப்பினானும், பண்பினானும், என்று

அப் பால் காலம் குறிப்பொடு தோன்றும்.

ஆறாம் வேற்றுமையது உடைமைப் பொருட்கண்ணும் ஏழாம் வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும் ஒப்பின்கண்ணும், பண்பின் கண்ணுமென அப்பகுதிக்காலங் குறிப்பாற் தோன்றும் அப் பகுதிக்காலங் குறிப்பால் தோன்றும் எனவே அப்பொருள் பற்றி வினைக்குறிப்பு வருமென்றவாறாகும்.

கச்சினன் கழலினன்- உடைமைப்பொருள்

இல்லத்தன் புறத்தன் - நிலப்பொருள்,

பொன்னன்னன் புலிபோல்வன் - ஓப்புப்பொருள்,

கரியன் செய்யன் - பண்புப்பொருள்

குறிப்பு

கச்சினான்,இல்லத்தான் எனப் பெயருங் குறிப்பாற் காலம் விளக்கலின் அப்பாற் காலங்குறிப்பொடு தோன்று மென்றதனான் வினைக்குறிப்பென்பது பெறுமாறென்னை யெனின்:- தொழினிலை யொட்டு மொன்றலங்கடை (சொல் - 70) எனத் தொழிற்பெயரல்லன காலந்தோன்றா வென்றமையால்,கச்சினான் இல்லத்தானென்பன காலம் விளக்காமையின் குறிப்பாற் காலம் விளக்குவன வினைக் குறிப்பாதல் பெறுதும. அல்லாதூஉம், வினைக்குறிப்பும் காலந் தோன்றுதலை இலக்கணமாகவுடைய வினைச்சொல்லேயாதலின், தெற்றென விளக்காவாயினுங் காலமுடையவெனவேபடும். பெயர்க்கு அன்னதோ ரிலக்கணமின்மையின், காலந்தெற்றென விளக்குவன வுளவேற் கொள்வதல்லது, காலம் விளக்காத பெயருங் காலமுடையவென உய்த்துணருமா றில்லை. அதனானுங் குறிப்பாற் காலமுணர்த்துவன வினைக்குறிப்பே என்பது பெறப்படும் என்பார் சேனாவரையர்.

தன்னினமுடித்தல் என்றமையால், ஐயாட்டையன், துணங்கையன் எனச் சிறுபான்மை காலமும் வினைசெய் இடமும் பற்றி வருவனவும் கொள்ளப்படும்.

அன்மையின், இன்மையின், உண்மையின், வன்மையின்,

அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்

என்ன கிளவியும் குறிப்பே காலம்.

அன்மை, இன்மை, உண்மை, வன்மை என்னும் பொருள் பற்றி வருவனவும், அவை போல்வன பிறவும், குறிப்புப் பொருண்மையோடு பொருந்தும் எல்லாச் சொல்லும் குறிப்பால் காலம் உணர்த்தும்.

காலம் குறிப்பால் உணரப்படும் எனவே , இவையும் வினைக்குறிப்பாகும்.

அல்லன், அல்லள், அல்லர்

இலன், இலள், இலர்

உளன், உளள், உளர்

வல்லன், வல்லள், வல்லர்

பொதுப்படக் கூறியவதால், பொருளிலன், பொருளிலள், பொருளிலர் என உடைமைக்கு மறுதலையாகிய இன்மையும் கொள்ளப்படும்.

குறிப்பு

இவற்றைப் பண்பில் அடக்கிக் கூறக் கூடாதா எனவினா எழுப்பும் சேனாவரையர் இன்மை பொருட்கு மறுதலையாதலின் பொருளின்கண் கிடக்கும் பண்பெனப்படாது, அன்மை, உண்மை என்பன பண்பெனப்படும். எனினும் பண்பிற்குப் பண்பில்லை என்பது தருக்கநூல் முடிவு, ஆகவே இவையும் பண்பாகா என்பார் சேனாவரையர்.

அன்னபிறவும் என்பதனால்,

நல்லன், நல்லள், நல்லர்

தீயன், தீயள், தீயர்,

உடையன், உடையள், உடையர், என்பனவும் கொள்ளப்படும்.

**உயர்திணை - குறிப்பு வினைமுற்றின் ஈறு:**

பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த
அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்
காலக் கிளவி உயர்திணை மருங்கின்
மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே.

பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருண்மையுடையவாய் வரும் வினைச்சொல் மேல் வரும்உயர்திணைக்கட் கூறிய தெரிநிலை வினையோடு ஒக்கும்..

தெரிநிலைவினையோடு ஒத்தல் எனப்படுவது, உயர்திணைத் தெரிநிலை வினைக்கு ஓதிய ஈற்றுள் தமக்கேற்பனவற்றோடு வினைக்குறிப்பு வந்தவிடத்து, அவ்வவ் வீற்றான் அவ்வப்பாலும் இடமும் விளக்குதல் ஆகும்.. கூறப்பட்ட பொருட்கண் வந்தனவாயினும் இல்லை, இல், இன்றி என்பன பால் விளக்காமையின், அவற்றை நீக்குதற்குப் பன்மையும் ஒருமையும் பாலறி வந்த என்றார் தொல்காப்பியர்,ஒரு பொருட்கட் பல வாய்பாடும் ஒரு பொருட்கண் ஒரு வாய்பாடும் பற்றி வரும் இருதிறமும் எஞ்சாமல் தழுவுதற்கே, அன்னமரபின் என்றார்.

தன்மையும் படர்க்கையும் உணர்த்தும் தெரிநிலைவினை ஈற்றுள் குறிப்பு வினைக்கேற்ற ஈறுகள் :- அம், ஆம், எம், ஏம் ,என், ஏன், என்னும் தன்மைஈர் ஆறும், அன், ஆன், அள்,ஆள் அர், ஆர் என்னும் படர்க்கை ஈர் ஆறும் எனப் பன்னிரண்டாகும்.

கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியென், கரியேன்

கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார்

ஆன், ஆள், ஆர் என்பன நிலப்பொருண்மைக்கண் அல்லது பிற பொருட்கண் பயின்றுவாராது.

குறிப்பு

**அ.்.றிணை - பன்மை வினைமுற்று:**

அ, ஆ, வ என வரூஉம் இறுதி

அப் பால் மூன்றே பலவற்றுப் படர்க்கை

அகரமும் ஆகாரமும் வகர உயிர்மெய்யும் ஆகிய ஈற்றையுடைய அக்கூற்று மூன்றும் அ.்.றிணைப் பன்மைப் படர்க்கையாம்.

அகரம் மூன்று காலமும்பற்றி வரும். ஆகாரம் எதிர்மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித்தாயினும் எதிர்காலத்துப் பயின்றுவரும். அகரம் , இறந்தகாலம்பற்றி வருங்கால் , கடதறவென்னு நான்கன்முன் அன் பெற்றும் , பெறாதும் வரும் . ஏனை யெழுத்தின்முன் ரகார ழகார மொழித்து இன் பெற்று வரும் . யகரத்தின்முன் சிறு பான்மை இன்னேயன்றி அன்பெற்றும் பெறாதும் வரும் . நிகழ்காலத்தின்கண் நில் , கின்று என்பனவற்றோடு அன்பெற்றும் பெறாதும் வரும் ; எதிர்காலத்தின்கண் பகர வகரத்தோடு அன்பெற்றும் பெறாதும் வரும்.

தொக்கன, தொக்க , உண்டன, உண்ட , வந்தன, வந்த , சென்றன, சென்ற எனவும், அஞ்சின எனவும்; போயின, போயன, போய எனவும்; உண்ணா நின்றன உண்ணா நின்ற, உண்கின்றன, உண்கின்ற எனவும்; உண்பன, உண்ப, வருவன, வருவ எனவும் வரும்,

வருவ, செல்வ என்னுந் தொடக்கத்தன அகரவீறாதலும் , வகர ஈறாதலுமுடையன என்பது கிளவியாக்கத்துட் கூறப்பெற்றது.

ஆகாரம், காலவெழுத்துப் பெறாது, உண்ணா, தின்னா என வரும்

வுகரம், உண்குவ, தின்குவ, என எதிர் காலத்திற்கு உரித்தாய்க் குகரமடுத்தும் வரும்.

ஓடுவ , பாடுவ எனக் குகரமடாதும் வரும்.

**அ..்.றிணை - ஒருமை வினைமுற்று:**

ஒன்றன் படர்க்கை த, ற, ட, ஊர்ந்த

குன்றியலுகரத்து இறுதி ஆகும்.

ஒன்றனை யுணர்த்தும் படர்க்கை வினையாவது தறட என்பனவற்றை ஊர்ந்துநின்ற குற்றியலுகரத்தை ஈறாகவுடைய சொல்லாகும்.

தகரவுகரம் அதாவது 'து' மூன்று காலத்திற்கு முரித்து. றகரவுகரம் அதாவது 'று' இறந்த காலத்திற்குரித்து.. டகரவுகரம் அதாவது 'டு' மூன்று காலத்திற்கு உரிய வினைக் குறிப்பிற்கல்லது வாராது.

தகரவுகரம், இறந்தகாலத்து வரும் வகை:

புக்கது, உண்டது, வந்தது, சென்றது, போயது, உரிஞியது -- எனக் கடதறவும் யகரமுமாகிய உயிர்மெய்யின் பின் வரும்.

'போனது' என னகர உயிர்மெய்ப்பின் வருகிறதே எனில்:-அது சான்றோர் செய்யுளுள் வாராமையின், அது சிதைவெனப்படும்.

நிகழ்காலத்தின்கண், வரும் வகை:

நடவாநின்றது, நடக்கின்றது, உண்ணாநின்றது, உண்கின்றது என, நில், கின்று என்பனவற்றோடு அகரம் பெற்று வரும்.

எதிர்காலத்தின்கண், வரும் வகை:

உண்பது, செல்வது எனப் பகரவகரம் பெற்றுவரும்.

றகரவுகரம், இறந்த காலத்தின்கண் வரும் வகை:

புக்கன்று, உண்டன்று, வந்தன்று, சென்றன்று எனக் கடதற வென்பவற்றின்முன் அன்பெற்று வரும்.

கூயின்று, கூயிற்று, போயின்று, போயிற்று என ஏனையெழுத்தின் முன் இன் பெற்று வரும்.

'வந்தின்று' என்பதனை இறந்தகாலம் உணர்த்தும் சொல் எனலாமோ எனின் அது எதிர்மறுத்தலை யுணர்த்துதற்கு வந்த இல்லினது லகரம் னகரமாய்த் திரிந்த எதிர்மறை வினை .என மறுக்கிறார் சேனாவரையர்,. அது எதிர்மறையாதல், வந்தில, வந்திலன், வந்திலள், வந்திலர் என வரும் ஏனைப்பாற் சொற்கள் உணர்த்தும்..

டகரவுகரம் குண்டுகட்டு, குறுந்தாட்டு, என வரும்.

**அ∴றிணைக்குரிய வினைமுற்றின் தொகை:**

.பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த

அம்மூ விரண்டும் அ∴றிணையவ்வே.

பன்மையும் ஒருமையுமாகிய பாலறியவந்த அவ்வாறீற்றுச் சொல்லும் அ∴றிணையனவாம்.

குறிப்பு

பன்மையில் அ, ஆ, வ என்பன ஒருமையில் து, று, டு என்பன ஆகிய ஆறும் அ.ஂ.றிணைக்குரியவாய் வரும்.இதனாற் பயன், அ.ஂ.றிணைச்சொல் ஆறே பிறிதில்லையென வரையறுத்தது. .

எவன் - அ.ஂ.றிணை - இருபாற்கும் உரியதாதல்:

அத் திணை மருங்கின் இரு பால் கிளவிக்கும்

ஒக்கும் என்ப-எவன் என் வினாவே".

எவனென்னும் வினாச்சொல் மேற்கூறப்பட்ட அ.ஂ.றினை இரண்டுபாற்கும் உரித்தாகும். று.

அ.ஂ.தெவன்,

அவை எவன்

**அ.ஂ.றிணை - குறிப்பு வினைமுற்று:**

.இன்று, இல, உடைய" என்னும் கிளவியும்,

அன்று, உடைத்து, அல்ல" என்னும் கிளவியும்,

பண்பு கொள் கிளவியும்,உள" என் கிளவியும்,

பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்,

ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ,

அப் பால் பத்தும் குறிப்பொடு கொள்ளும்.

இன்று இலவென்பன முதலாகிய பத்தும் வினைக்குறிப்புச் சொல்லாம்.

அவற்றுள், இன்று, இல உடைய, அன்று, உடைத்து, அல்ல, உள என்பன தம்மையுணர்த்தி நின்றன. மற்றவை பொருளுணர்த்தி நின்றன.

கோடுடைத்து,

கோடுடைய,

அதுவன்று,

அவையல்ல,

உள என வரும்,,

குறிப்பு

கோடின்று,

கோடில

என உடைமைக்கு மறுதலையாய இன்மைபற்றி வருவனவும் கொள்ளவேண்டும்..

உளதென்பது பெருவழக்கிற்றன்மையின், உளவென்பதே கூறினார். அது தன்னின முடித்தலென்பதனாற் கொள்ளப்படும்.

பண்பு கொள்கிளவி- கரிது, கரிய; செய்யது, செய்ய என வரும்.

பண்பினாகிய சினை முதற்கிளவி- நெடுஞ்செவித்து, நெடுஞ்செவிய என்பதாம்.

பெருந்தோளன் என உயர்திணைக்கண்ணும் பண்படுத்து வருதல் ஒன்றென முடித்தலென்பதனாற் கொள்க. வேற்றுமைப் பொருள்பற்றி வருங்கால், பிறிதின்கிழமையும் உறுப்பின்கிழமையல்லாத தற்கிழமையும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மையும் பற்றி அ∴றிணைவினைக் குறிப்புப் பயின்று வாராமையின், சினைக்கிழமையே கூறினார். அப்பொருள்பற்றிப் பயிலாது வருவன உரையிற் கோடலென்பதனாற் கொள்ளப்படும். சிறப்புடைப் பொருளைத் தானினிது கிளத்தல்“ என்பதனாற் கொள்ளினு மமையும்.

அறிந்த மாக்கட்டாகுக தில்ல“ (அகம்-15),மெல்விரன் மந்திகுறைகூறுஞ் செம்மற்றே“ (கலி-40) எனவும்,அணித்தோ சேய்த்தோ கூறுமி னெமக்கே“ (புறம் 173) எனவும் வரும். வடாது“,தெனாது“(புறம்-6) என்பனவும் ஏழாம் வேற்றுமைப் பொருண்மைக்கண் வந்த வினைக்குறிப்பு; பெயருமாம்.6

ஒப்பொடு வரூஉங் கிளவி-பொன்னன்னது, பொன்னன்ன எனவரும். ஒப்பொடு வருதலாவது பொருள்பற்றி வருதல்.

**அ∴றிணை - குறிப்பு வினைமுற்றின் ஈறு:**

.பன்மையும் ஒருமையும் பால் அறிவந்த

அன்ன மரபின் குறிப்பொடு வரூஉம்

காலக் கிளவி அ∴றிணை மருங்கின்

மேலைக் கிளவியொடு வேறுபாடு இலவே.

பன்மையும் ஒருமையுமாகிய பால் விளக்கிக் குறிப்புப் பொருள்பற்றி வரும் வினைச்சொல் மேற்கூறப்பட்ட அ∴றிணை வினையோ டொக்கும்.. தெரிநிலை வினைக்குரிய து, று, டு எனடபன குறிப்பு வினைக்கும் ஏற்கும். டு என்னும் ஈறு குறிப்பு வினைக்கு மட்டும் உரியது:,

குறிப்பு

விரவுவினை – பெயர், முறை, தொகை:

முன்னிலை, வியங்கோள், வினை எஞ்சு கிளவி,

இன்மை செப்பல்,வேறு“ என் கிளவி,

செய்ம்மன, செய்யும், செய்த“ என்னும்

அம் முறை நின்ற ஆயெண் கிளவியும்

திரிபு வேறுபடூஉம் செய்திய ஆகி,

இரு திணைச் சொற்கும் ஓரன்ன உரிமைய

முன்னிலை முதலாகச் செய்தவென்ப ஈறாகக் கூறிய முறையானின்ற எட்டுச் சொல்லும் , பொதுமையில் பிரிந்து ஒருகால் உயர்திணையுணர்த்தியும் , ஒருகால் அ.்.றிணை யுணர்த்தியும் , வேறுபடுந் தொழிலையுடையவாய் , இருதிணைச் சொல்லாதற்கும் ஒத்தவுரிமையுடையவையாகும்.

முன்னிலை வினைச்சொல்லாவது எதிர்முகமாய் நின்றான் தொழில் உணர்த்துவது.

வியங்கோள் - ஏவற்பொருட்டாய் வருவது, வாழ்த்துதல் முதலாகிய பிறபொருளாலும் வரும்.,வினையெஞ்சுகிளவி – வினையெச்சம் வினையை ஒழிபாகவுடையவினை,இன்மை செப்பல் - இல்லை, இல் என்பன.வேறென்பது - தன்னை யுணர்த்தி நின்ற சொல்..

செய்ம்மனவென்பது - மனவீற்று முற்றாய் எதிர்காலம் உணர்த்தும் , செய்யுமென்பது - முற்றும் எச்சமுமாகிய இரு நிலைமையுமுடைத்தாய் உம் ஈற்றான் நிகழ்காலம் உணர்த்தும், செய்தவென்பது – அகரஈற்று எச்சமாய் இறந்தகாலமுணர்த்தும்.

செய்ம்மன, செய்யும்:, செய்த முதலாகிய மூன்றுவாய்பாட்டானும், அவ்வீற்றவாய்க் காலமுணர்த்தும் உண்மன , உண்ணும், உண்ட என்னுந் தொடக்கத்தன எல்லாந் தழுவப்பட்டன அவற்றான் .அவை தழுவப்பட்டவா றென்னை யெனின் :- உண்ணல், தின்னல், வருதல் எல்லாத் தொழிலும் செய்தல் வேறுபாடாகும். செய்தல் என்னும் சொல் , பொதுவாகி எல்லாத் தொழிலையும் அகப்படுத்து நிற்கும். அதாவது சிறப்பு வினையை பொதுச்சொல் கொண்டு உண்ணதல் செய்தான் என்று கூறலாம்.டுபாதுச்சொல் சிறப்புச் சொல்லையும் ஏற்கும். என் செய்யா நின்றான் என்றவழஜி உண்ணா நின்றான்என்பது இக்காரணம் பற்றியேயாம். எனவே உண்மன, உண்ணும், உண்ட என்னுளும்

தொடக்கத்தன தழுவப்படும் என்றார் சேனாவரையர்,இத்தகைய தன்மை செய்து, செய்பு என்பதற்கும் ஒக்கும்

குறிப்பு

அம்மீறும் அன்னீறும் ஐயீறும் முதலாகிய சொற்கள் காலப்பன்மையான் வரும். வாய்பாட்டுப் பன்மையாற் சூத்திரம் பெருகுமென்றஞ்சி அவற்றை ஈற்றானுணர்த்திக் கால வேறுபாடு இலேசாற்கொள்ள வைத்தார்., காலப்பன்மையில்லனவற்றை வாய்பாட்டானு முணர்த்துப ஈற்றானு முணர்த்துப. ஏன விளக்கமளிப்பார் சேனாவரையர்

தொல்காப்பியர் முன்னிலை முதலாக வரிசைப்படுத்தி உரைத்தமைக்கும் சேனாவரையர் காரணம் காட்டுவார்,

முற்றாதலும் பலவாய்பட்டாற் பயின்று வருதலும் உடைமையான், முன்னிலை வினையை முன்வைத்தார். ஏவற்பொருண்மை முன்னிலை வினைக்கண்ணும் உண்மையின் பொருளியைபு உடைத்தாகலானும் இடங்குறித்து முற்றாய் வருதல் ஒப்புமையானும், அதன்பின் வியங்கோள் வைத்தார். அதன் பின், முற்றாதல் ஒப்புமையான் இன்மைசெப்பல் வேறென்கிளவி செய்ம்மன என்பனவற்றை வைத்தன் முறைமையாயினும், முற்றின்கண் வினையெச்சம் உண்மையானும்,ஈற்றுப்பன்மையொடு பயின்று வருதலானும், வினையெச்சம் வைத்தார். இன்மை பற்றி வரும் வினையெச்சம் உண்மையான் அதனோடியைய இன்மை செப்பல் வைத்தால். வினைக் குறிப்பாதல் ஒப்புமையானும், செய்ம்மனவிற் பயிற்சியுடைமையானும். அதன்பின் வேறென் கிளவி வைத்தார்.முற்றாதல் ஒப்புமையான், அதன்பின் செய்ம்மன வைத்தார் . முற்றாநிலைமையுமுடைத்தாகலின். அதன்பின் செய்யும் என்பது வைத்தார். பெயரெச்சமாதல் ஒப்புமையான் அதன்பின் செய்த வென்பது வைத்தார். இவ்வா றியைபுபற்றி வைத்தமையான், அம்முறை நின்ற“ வென்றார். என்பது சேனாவரையர் குறிக்கும் விளக்க உரையாகும்.

**முன்னிலை ஒருமை வினைமுற்று:**

அவற்றுள்,

முன்னிலைக் கிளவி

இ, ஐ, ஆய் என வரூஉம் மூன்றும்

ஒப்பத் தோன்றும் ஒருவர்க்கும் ஒன்றற்கும்.

கூறப்பட்ட விரவுவினைகளுள், முன்னிலைச் சொல். இகரவீறும் ஐகாரவீறும் ஆயீறுமாகிய மூன்றும் ஒருவற்கும். ஒருத்திக்கும் ஒன்றற்கும் ஆகும்..

குறிப்பு

இகரம் தடற வூர்ந்து எதிர்காலம் பற்றி வரும். ஐகாரம் அம் ஈற்றிற்குரிய எழுத்துப்பெற்றும். ஆயீறு ஆம் ஈற்றிற் குரிய எழுத்துப் பெற்றும், மூன்றுகாலமும் பற்றி வரும்.

உரைத்தி, உண்டி, தின்றி

உண்டனை, உண்ணா நின்றனை, உண்பை

உண்டாய் , உண்ணா நின்றாய், உண்பாய்

ஐயசிறி தென்னை யூக்கி (குறிஞ்சிக்கலி - 1) என இகரம் சிறுபான்மை ககரம் பெற்று வரும்.

உண்ணாய், தின்னாய், நடவாய், கிடவாய் என்னும் முன்னிலைச் சொற்கள் ஆய் விகுதி குன்றி உண், தின்; நட, கிட என ஆயின. எனவே முன்னிலை ஒருமை ஆயின.

**முன்னிலைப் பன்மை வினைமுற்று:**

."இர்,ஈர், மின் என வரூஉம் மூன்றும்

பல்லோர் மருங்கினும் பலவற்று மருங்கினும்

சொல் ஓரனைய என்மனார் புலவர்

இர்,ஈர்,மின்னென்னும் ஈற்றையுடைய மூன்று சொல்லும், பல்லோர்கண்ணும் பலவற்றின்கண்ணுஞ் சொல் லுதற்கண், ஒத்தவுரிமைய; அகம்.

இர் ஈறு அர் ஈற்றிற்குரிய எழுத்தும் பெற்றும் ஈரீறு ஆரீற்றிற்குரிய எழுத்துப் பெற்றும். மூன்றுகாலம் பற்றி வரும். மின்னீறு பிறவெழுத்துப் பெறாது ஏற்றவழி உகரம் பெற்று, எதிர்காலம் பற்றி வரும்.

: உண்டனிர், உண்ணாநின்றனிர், உண்குவிர்

உண்டீர், உண்ணாநின்றீர், உண்குவீர்

உண்மின், தின்மின்,

இர்,ஈர் என்பன மூன்று காலமும் வரும். மின் ஈறு எதிர்காலம் பற்றி வரும் முன்னிலைவினைக்குறிப்பு, உயர்திணைவினைக்குறிப்பிற் ஓதிய பொருள்பற்றி ஐகாரமும் ஆயும் இருவும் ஈருமென்னு நான்கீற்றவாய், கழலினை, நாட்டை, பொன்னன்னை கரியை எனவும்; கழலினாய், நாட்டாய், பொன்னன்னாய் கரியாய் எனவும்; கழலினிர், நாட்டினிர், பொன்னன்னிர் கரியிர் எனவும்; கழலினீர், நாட்டினீர், பொன்னன்னீர், கரியீர் எனவும் வரும்.

**ஏனைய வினைகள்:**

குறிப்பு

எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி

ஐம் பாற்கும் உரிய, தோன்றலாறே

முன்னிலைவினை ஒழித்து ஒழிந்த ஏழுவினைச் சொல்லும் மூன்றிடத்திற்கும் ஐந்துபாற்கு முரிய, தத்தம் பொருட்கண் தோன்றுமிடத்து என்பதாம்.

அவன் செல்க,அவள் செல்க,அவர் செல்க,அது செல்க,அவை செல்க

உழுது வந்தேன், உழுது வந்தேம்,உழுது வந்தாய்,உழுது வந்தீர்,உழுது வந்தான்,உழுது வந்தாள்,உழுது வந்தார், உழுது வந்தது,உழுது வந்தன

யானில்லை, யாமில்லை, நீயில்லை, நீரில்லை, அவனில்லை, அவளில்லை, அவரில்லை, அதுவில்லை, அவையில்லை

யான் வேறு,யாம் வேறு,நீ வேறு,நீயிர் வேறு,அவன் வேறு, அவள் வேறு, அவர் வேறு, அது வேறு, அவை வேறு

;யான் உண்மன. யாம் உண்மன, நீ உண்மன, நீயிர் உண்மன, அவன் உண்மன, அவள் உண்மன, அவர் உண்மன, அது உண்மன, அவை உண்மன,

யான் உண்ணுமுண், யாம் உண்ணுமுண், நீ உண்ணுமுண், நீயிர் உண்ணுமுண், அவன் உண்ணுமுண், அவள் உண்ணுமுண், அவர் உண்ணுமுண், அது உண்ணுமுண், அவை உண்ணுமுண்

அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்

யான் உண்டவுண், யாம் உண்டவுண், நீ உண்டவுண், நீயிர் உண்டவுண், அவன் உண்டவுண், அவள் உண்டவுண், அவர் உண்டவுண், அது உண்டவுண், அவை உண்டவுண்

**வியங்கோள் வினை:**

அவற்றுள்,

முன்னிலை, தன்மை, ஆயீரிடத்தொடு

மன்னாது ஆகும், வியங்கோள் கிளவி

குறிப்பு

மேல் எஞ்சிய கிளவி (சொல்-225) எனப் பட்ட ஏழனுள், வியங்கோட்கிளவி, முன்னிலையும் தன்மையுமாகிய இரண்டிடத்தோடு நிலைபெறாதாம்.

ஆயீர் இடத்தொடு கொள்ளாதென்னாது மன்னாதாகும் என்றதனால், அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. மன்னுதல் பெரும் பான்மையும் நிகழ்தல். சிறுபான்மை வருவன, நீ வாழ்க என்னும் வாழ்த்துதற் பொருண்மைக்கண்ணும், யானும் நின்னொடு உறைக என்னும் வேண்டிக் கோடற் பொருண்மைக்கண்ணும் வருவனவாம். கடாவுகபாக நின் கால்வனெடுந்தேர்“ என்பதும் வேண்டிக்கோடற் பெருண்மைக்கண் வந்ததாம்.தன்மைக்கண் ஏவலில்லை.

தொல்காப்பியர் வியங்கோள் ஈறு பற்றிச் சொல்லாமைக்கு காரணம் கூறும் சேனாவரையர் எழுத்ததிகாரத்தின் பல இடங்களில் கூறியமையான் என்பதுடன் அந் இடங்களையும் எடுத்துக் காட்டுகிறார்,ஏவல் கண்ணிய வியங்கோட்கிளவியும் (எழு-210) என அகரவீற்றுள் எடுத்தலாற் பொருந்திய மெய்யூர்ந்து அகரவீறாய் வருதலும்,செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்“ (சொல்-13) எனவும்,சொல்வரைந் தறியப் பிரித்தனர் காட்டல் (சொல்-463) எனவும்,மறைக்குங் காலை மரீ இய தொரா அல் (சொல்-443) எனவும், உடம்பொடு புணர்த்தலான் அல்லீறாய் வருதலும் ஆலீறாய் வருதலும் பெறுதலின் வியங்கோளீறுங் கூறினாரெனவே படும் என்பது அவர்தம உரை ஆகும்.

**செய்யும் என்னும் வினை:**

பல்லோர் படர்க்கை, முன்னிலை, தன்மை,

அவ் வயின் மூன்றும்,நிகழும் காலத்துச்

செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா.

பல்லோர் படர்க்கையும் முன்னிலையும் தன்மையுமாகிய அவ்வயின் மூன்றும், நிகழ்காலத்து செய்யுமென்னுஞ் சொல்லோடு பொருந்தாது.

அவன், அவள். அது, அவை, என்னும் படர்க்கைப் பெயர்களோடு செய்யும் என்னும் வாய்பாடு வரும்.அவர் செய்யும் எனப் படர்க்கையிலும் நீ செய்யும் என முன்னிலையிலும் வராது.யான் செய்யும் என்றும் வராது, எனவேதான் பல்லோர் படர்க்கை முன்னிலைத் தன்மையில் வராது என்ற கூறினார்,

குறிப்பு

**வினையெச்சம்:**

செய்து, செய்யூ, செய்பு, செய்தென,

செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என

அவ் வகை ஒன்பதும் வினை எஞ்சு கிளவி.

செய்தென்பது முதலாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் வினையெச்சமாம்.

வினையெஞ்சு கிளவி ஒன்பதும் விகுதியாகிய இடைச்சொல்லான் வேறுபட்டவாகும்.. அவ்விடைச் சொல்லாவன உகரரம் ஊகாரம், புகரம் இயர், இய, இன், அகரம், குகரம் என்பதாகும்.

செய்கென் கிளவி வினையொடு முடியினும் (சொல் - 204) எனவும்செய்யா என்னும் முன்னிலை வினைச்சொல் (சொல் - 450) எனவும் இறுதியிடைச்சொல் ஏற்றவாற்றாற் பிரித்துணர வாய்பாடு ஓதினார். அதுபோல ஏற்றவாற்றான் இறுதியிடைச்சொற் பிரித்துணர்ந்து கொள்ள ஈண்டும் வாய்பாடு பற்றி ஓதினார்.

உகரம், கடதற ஊர்ந்து இறந்தகாலம் பற்றி இயல்பாய் வரும்.

நக்கு, உண்டு, வந்து, சென்று

உகரம் ஏனையெழுத்துக்களில் ஊர்ந்து இகரமாய்த் திரிந்து இறந்தகாலம் பற்றி வரும்.

எஞ்சி உரிஞி ஓடி

உகரம் நெடில் ஈற்று முதனிலை முன்னர் யகரம் வரத் தான் கெட்டு இறந்தகாலம் பற்றி வரும்.

ஆய், போய்

இவ் உகரவீறு இகரமாதலும் யகரம் வரக் கெடுதலும் வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய (சொல் 457) என்பதனாற் பெறப்படும்.

சினைஇ, உரைஇ, இரீஇ, உடீஇ, பராஅய், தூஉய், தாஅய் என்பன செய்யுள் முடிவுகள்.

ஆகி, போகி, ஓடி, மலர்த்தி ஆற்றி என்பனவற்றில் ஆகு, போகு,ஓடு, மலர்த்து, ஆற்று என்பன பகுதிகள். இவற்றில் வரும் கடதற என்னும் எழுத்துகள் குற்றுகரத்தோடு சேர்ந்து பகுதிக்கு ஈறாய் வந்தன. எனவே இவற்றை ஏனை எழுத்தாகக் கொள்ளன வேண்டும்

குறிப்பு

ஆய் என்பதனை யகர ஈறு என்றும் ஓடி என்பதனை இகரவீறென்றுங்கொள்ளாது உகர ஈறு என்றதற்கான காரணத்தை சேனாவரையர் விளக்குவார். இகரவிறுதி இடைச்சொல்லாயின் இறுதியிடைச்சொல் எல்லாத் தொழிலும் பற்றி வருதலிற் செலவு வரவென்பனவற்றோடும் வரல் வேண்டும்.இனிச் செய்தெனச்சத் துகரமும் இறுதியிடைச் சொல்லாதலின் ஆகுதல் ஓடுதலென்னுந் தொழில் பற்றியும் வரல் வேண்டும் செலவு வரவு பற்றி இகரம் வாராமையானும் ஆகுதல் ஓடுதல் பற்றி உகரம் வாராமையானும் இறுதியிடைச் சொல் இகரமேயாக உகரமேயாக ஒன்றாவதல்லது இரண்டெனப் படாதாம். உகரம் ஒன்றாய் நின்று கடதற வூர்ந்த விதிவினைக்கட் பயின்று வருதலானும் எதிர்மறை எச்சமெல்லாம் பெரும்பான்மையும் உகரவீறாயல்லது வாராமையானும் உகரம் இயல்பாக இகரம் அதன் திரிபென்றலே முறைமை என்க. யகரவீற்றிற்கும் இ∴தொக்கும் என்பது அவர்தம் உரைக்குறிப்பாம்.

ஊகாரம் உண்ணூவந்தான் , தின்னூவந்தான் எனப் பின் வருந்தொழிற்கு இடையின்றி முன்வருந் தொழின்மேல் இறந்தகாலம் பற்றி வரும் . அ∴து உண்ணா என ஆகாரமாயும் வரும்.

பகரவுகரம் நகுபு வந்தான் என நிகழ்காலம் பற்றி வரும். நகா நின்று வந்தான் என்றவாறு. ஈண்டு நிகழ்காலமென்றது முடிக்குஞ் சொல்லுணரப்படுந் தொழிலோடு உடனிகழ்தல், உரிகுபு என உகரமும், கற்குபு எனக் குகரமும் ஏற்றவழிப் பெறுதல் கொள்க.

எனவென்பது, கடதற ஊர்ந்து இறந்த காலம் பற்றி முடிக்குஞ் சொல்லான் உணர்த்தப்படும் தொழிற்குத் தன் முதனிலைத் தொழில் காரணமென்பதுபட வரும்.

சோலைபுக்கென வெப்பம் நீங்கிற்று

உண்டெனப் பசி கெட்டது

உரைத்தென உணர்ந்தான்;

மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று

என வரும் . எஞ்சியென எனவும் உரிஞியென எனவும் ஏனை எழுத்தோடும் சேர்ந்து வரும்.

இயர், இய என்பன எதிர்காலம் பற்றி வரும்.

உண்ணியர்

திண்ணியர் ;

உண்ணிய ,திண்ணிய என வரும் .

குறிப்பு

போகியர் ,

போகிய

என ஏற்றவழிக் ககரம் பெற்று வருதலும் உண்டு.

இன் எதிர்காலம் பற்றிக் காரணப்பொருட்டாய் வரும்.

மழைபெய்யிற் குளம் நிறையும்

மெய்யுணரின் வீடெளிதாம் என வரும்.

நடப்பின்

உரைப்பின் என ஏற்ற வழிப் பகரம் பெற்று வருதலும் உண்டு.

அகரம்மூன்று காலமும் பற்றி வரும்.

மழை பெய்யக் குளம் நிறைந்தது ;

ஞாயிறு பட வந்தான் ;

உண்ண வந்தான் என வரும்

உரைப்ப,

உரைக்க என ஏற்றவழிப் பகரமுங் ககரமும் பெறுதலும் உண்டு..

குகரம்என எதிர் காலம் பற்றி வரும்.

உணற்கு வந்தான்;

தினற்கு வந்தான் என வரும்.

திரியாது நிற்கும் ஊகாரமும், புகரமும், எனவும் இயரும் இயவுமென்னும் ஐந்தீற்றுவினையெச்சமும் வழக்கினுள் இக்காலத்து வாராவாயினும் , சான்றோர் செய்யுளுள் அவற்றது வாய்பாட்டு வேற்றுமையெல்லாங் கண்டு கொள்க என்பார் சேனாவரையர்.

.பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும்

அன்ன மரபின் காலம் கண்ணிய

என்ன கிளவியும் அவற்று இயல்பினவே.

பின், முன், கால், கடை, வழி, இடத்து என்னும் ஈற்றாய் வருவனவும் காலங்கண்ணி வருவனவும் பிறவும் வினையெச்சம்.

குறிப்பு

கூறியபின்

வந்தபின்

- இறப்பும் நிகழ்வும்

இறந்த காலம் - மருந்து தின்னா முன் நோய் குணமாயிற்று.

மூன்று காலமும் - வணங்கி நாம்விடுத்தக்கால்

செய்யும் என்னும் வாய்பாட்டு நிகழ்வு எதிர் இரண்டு காலத்திற்கும் -இனி நாடுங்கால்

இறந்த பாலம் பற்றியது – துவ்வாமை வந்தக்கடை

மூன்று காலமும் - உரைத்த வழி – உரைக்கும் வழி

மூன்று காலமும் - உரைத்த விடத்து – உரைக்கும் இடத்து

பின், முன் என்பன இடங்குறித்தும் வருவதுண்டு.

வீட்டின் முன், வீட்டின் பின் இவை அவற்றினும் வேறுபட்டவை. வரும் முன் வந்த பின் எனக் காலம் குறித்து வருவதால் காலங்கண்ணிய என வரும்.

.அவற்றுள்,

முதல் நிலை மூன்றும் வினைமுதல் முடிபின.

முற் குறிக்கப்பட்ட பதினைந்து வினையெச்சத்துள் முதற்கண் நின்ற செய்து, செய்யூ,செய்பு என்பன மூன்றும் தம் வினை முதல் வினையால் முடியும்.

உண்டு வந்தான்

உண்ணூ வந்தான்

உண்குபு வந்தான்

அம் முக் கிளவியும் சினை வினை தோன்றின்,

சினையொடு முடியா, முதலொடு முடியினும்,

வினை ஓரனைய என்மனார் புலவர்.

வினை முதல் முடிவினவாகிய அம்மூன்று சொல்லும் சினைவினை நின்று சினைவினையோடு முடியாது முதல் வினையோடு முடியினும் வினையால் ஒரு தன்மை உடையனவாகும். கையிற்று வீழ்ந்தான்

கையிற்றூ வீழ்ந்தான்

கையிறுபு வீழ்ந்தான்

கையிற்று வீழ்ந்தது என சினை வினையோடு முடிவதே இயல்பாயினும் கையிற்று வீழ்ந்தான் என முதல் வினையோடு முடிவதனையும் ஏற்றுக் கொள்வர், ஏனைய எச்சங்கள் தம் வினையையும் பிற வினையையும் கொண்டு முடியும்.

ஏனைய எச்சங்கள் இருவினை கொண்டு முடிதல்:

ஏனை எச்சம் வினைமுதலானும்,

ஆன் வந்து இயையும் வினைநிலையானும்,

தாம் இயல் மருங்கின் முடியும் என்ப.

செய்து, செய்யூ, செய்பு என்னும் மூன்றும் அல்லாத பிற வினையெச்சம் வினை முதல் வினையானும் ஆண்டு வந்து பொருந்தும். பிற வினையானும், வரையறையின்றித் தாம் இயலுமாற்றான் முடியும்

மழை பெய்தெனப் புகழ் பெற்றது – வினை முதல் வினை

மழை பெய்தென மரங்குழைத்தது– பிறவினை

- செய்தென முடிந்தது

மழை பெய்யியர் எழுந்தது. - வினை முதல் வினை

மழைபெய்யியர் பலி கொடுத்தார் - – பிறவினை

- செய்யியர் என முடிந்தது

மழை பெய்யிய முழங்கும் - வினை முதல் வினை

மழை பெய்யிய வான் பழிச்சுதும் - பிறவினை

- செய்யிய என முடிந்தது

மழை பெய்யிற் புகழ்பெறும் - வினை முதல் வினை

மழைபெய்யிற் குளநிறையும் - பிறவினை

மழை பெய்யப் புகழ்பெற்றது - வினை முதல் வினை

மழை பெய்ய மரங்குழைத்தது– பிறவினை

செய என முடிந்தது

மழை பெய்தற்கு முழங்கும் - வினை முதல் வினை

மழை பெய்தற்குக் கடவுள் வாழ்த்து– பிறவினை

செயற்கு என முடிந்தது

இறந்தபின் னிளமை வாராது - வினை முதல் வினை

கணவன் இனிதுண்டபின் காதலி முகமலர்ந்தது – பிறவினை

பின் என முடிந்தது

வினை முதல் வினையும் பிறவினையும் கொண்டு வந்தது. அல்லனவும் இருவகை வினையுங்கோடல் வழக்கினுட் கண்டு கொள்க எனக் குறிப்பிட்டுரைப்பார் சேனாவரையர்.

வரையறையின்றி இருவகை வினையுங்கோடலின் வினையுங் குறிப்பு - நினையத் தோன்றிய முடிபா கும்மே“ (சொல் - 432) என்னும் பொதுவிதியான் முடிவனவற்றை ஈண்டுக் கூறல் வேண்டாவெனின் , வினையெச்சங்களுள் ஒருசாரன வினைமுதல் வினைகொள்ளுமென்றதனான் , ஏனையெச்சம் பிறவினையே கொள்ளுமோ இருவகை வினையுங் கொள்ளுமோ என்றையமாம்; அதனான் ஐயநீங்க இவ்வாறு கூறல் வேண்டும் என்பதாம்.

வினையொடு முடிதல் ஈண்டுக் கூறப்பட்டமையின் எச்சவியலுள் குறிப்பு முடிபாகும் என அமையும், வினையுமெனல் வேண்டாவெனின் :- குறிப்புமென்னு மும்மையாற் றழுவப்படுவது சேய்த்தாகலிற் றெற்றென விளக்காமையானும் , வினைமுதலென்பது பெயர்க்கும் வினைக்கும் பொதுவாகலானும் வினையுமெனல் வேண்டுமென்பது எனற சேனாவரையரின் உரைக்குறிப்பு அவர்தம் உரை நலத்திற்குச் சான்றாம்.

வினையெச்சங்கள் அடுக்கி வரல்:

பல் முறையானும் வினை எஞ்சு கிளவி
சொல் முறை முடியாது அடுக்குந வரினும்,
முன்னது முடிய முடியுமன் பொருளே.

குறிப்பு

வினையெச்சங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி வாய்பாட்டான் முடிதல் இயல்பாம். அவ்வாறன்றி பல அடுக்கி ஒரு வினையைக் கொண்டு முடிதலும் உண்டு.

உண்டு தின்றோடிப் பாடி வந்தான்

உண்டு பருகித் தின்குபு வந்தான் எனவும் வரும்.

முன்னது முடிய முடியும் என்றாராயினும் உண்டு தின்று மழைபெய்யக் குளநிறையும் என்றவழி முன்னதன் தொழிவான் ஏனைய முடியாமையின் பன்முறையான் அடுக்குங்கால் முன்னதன் தொழிலான் முடிதற்கேற்பனவே கொள்க.

சொன்முறை முடியாமையாவது தம்மொடு தாமும் பிற சொல்லு முடியாமையாகும்

உண்டு வந்தான்

தின்று வந்தான்

எனச் சொல்தொறும் வினை இயைதல் மரபு. அங்ஙனம் நில்லாது தம்முள் இயைபில்லாதன அடுக்கிவந்து இறுதி வினையெச்சத்திற்கு முடிபாகிய சொல்லால் எல்லாம் முடியினும் இழுக்காது.

வினையெச்சம் பன்முறையானும் அடுக்கி ஒரு சொல்லான் முடியும்.எனவே பெயரெச்சம் ஒருமுறையான் அடுக்கி ஒரு சொல்லால் முடியுமென்பதாம்.

நெல்லரியு மிருந்தொழுவர் ( புறம் - 24) என்னும் புறத்தொகை பாட்டினுள் தென்கடற்றிரைமிசைப் பாயுந்து எனவும் தண்குரவைச் சீர் தூங்குந்து, எனவும்,எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து, எனவும் முந்நீர்ப் பாயும் எனவும் செய்யுமென்னும் பெயரெச்சமடுக்கி ஓம்பாவீகை மாவே ளெவ்வி, புனலம் புதவின் மிழலை என்னும் ஒரு பொருள் கொண்டு முடிந்தன. ஆங்குத் தாங்கா வுறையுணல் லூர் கெழீஇய என்னும் பெயரெச்சம் இடை நிலையாய் வந்தது..

பெயரெச்சம் - முடிக்கும் சொற்கள்:

நிலனும், பொருளும், காலமும், கருவியும்,

வினைமுதற் கிளவியும், வினையும், உளப்பட

அவ் அறு பொருட்கும் ஓரன்ன உரிமைய,

செய்யும், செய்த என்னும் சொல்லே.

வினையெச்சம் உணர்த்தி, இங்கு பெயரச்சம் உணர்த்துகின்றார் தொல்காப்பியர்.

குறிப்பு

செய்யும், செய்த என்னுஞ்சொற்கள், தொழின் முதனிலை எட்டனுள் இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டொழித்து ஏனை ஆறுபொருட்கும் ஒத்த உரிமைய; அதாவது நிலம், பொருள் காலம், கருவி, வினைமுதல், வினை என்பன அவ் அறுவகைப் பொருட்கள் ஆகும்.

இவற்றிற்கு ஒத்த உரிமைய என்றமையால், செய்யும், செய்த என்பன இன்னதற்கு இது பயனாக என்னும் இரண்டற்கும், சிறுபான்மை உரியதாகும்.

வாழுமில்,

கற்குநூல்,

துயிலுங்காலம்,

வனையுங்கோல்,

ஓதும் பார்ப்பான்,

உண்ணுமூண்

- செய்யுமென்னும் பெயரெச்சத்து உம்மீறு கால எழுத்துப் பெறாது ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது

புக்கவில்,

உண்டசோறு,

வந்தநாள்,

வென்ற வேல்,

ஆடிய கூத்தன்,

போயின போக்கு

செய்தவென்னும் பெயரெச்சதது இறுதியகரம் கடதறவும் யகர னகரமும் ஊர்ந்து ஆறு பொருட்கும் உரித்தாய் வந்தது.

நோய் தீருமருந்து, நோய் தீர்ந்த மருந்து

- என்னு ஏதுப் பொருண்மை கருவிக்கண் அடங்கும்;
- அரசன் ஆ கொடுக்கும்

ஆ கொடுத்த பார்ப்பான்

- ஆடை யொலிக்குங் கூலி
- ஆடையொலித்த கூலி

செய்யும், செய்தன என்பன இன்னதற்கு இது பயனாக என்பதில் சிறுபான்மையுரியவாய் வந்தன.

எல்லைப்பொருள் ப.்.றொழில் பற்றி வருஞ் சிறப்பின்றா கலிற்றொழின் முதலொடு கூறாது இன்மை யுடைமை நாற்றந் தீர்த்தல்,(சொல்-78) என்னும் பொருண்மையால் தழீஇக்கொண்டாராகலின், பழமுதிருங் கோடு, பழமுதிர்ந்த கோடு எனச் சிறுபான்மை எல்லைப் பொருட்குரியவாதலுங் கொள்க.

நின்முகங் காணு மருந்தினே னென்னுமால் (குறிஞ்சிக்கலி-24) என்புழிக் காட்சியை மருந்தென்றான். ஆதலின் காணும் மருந்தென்பது வினைப்பெயர் கொண்டதாம். பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின் (குறள்-537) என்புழிச் பொச்சாவாக் கருவியென்பது மது. ஆறுசென்றவியர் என்புழி வியர் ஆறுசெறலான் வந்த காரியமாகலின், செயப்படு பொருட் கண் அடங்கும். நூற்ற நூலானியன்ற கலிங்கமும் ஒற்றுமை நயத்தால் நூற்ற கலிங்க மெனப்படும். நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ (பதிற்றுப்பத்து, 2-ஆம் பத்து, 12) எனப் பெயரெச்சத்தனி எதிர்மறை பொருட்பெயர் கொண்டு நின்றதாம்.

உண்டான் சாத்தன், மெழுகிற்றுத் திண்ணை என்புழி உண்டான், மெழுகிற்று என்னும் முற்றுச்சொல் வினை முதலுஞ் செயப்படு பொருளுமாகிய பொருட்கு உரியவா வந்தது. அவ்வாறே செய்யு,செய்த என்னும் இவ்விரு வகைப் பெயரெச்சமும் நிலம் முதலாகிய அறுவகைப் பொருட்கும் உரியவாகும் என்பது ஈண்டு உணர்த்தப் பெற்றது.

நிலமுதலாயினவற்றைப் பெயரெச்சப் பொருளென்னாது முடிக்குஞ் சொல்லெனின் அவ்வறுபொருட்கு மென்னாது அவ்வறு பெயர்க்கு மென்றோதுவார். ஓதவே, பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே (சொல்-433) என்னுஞ் சூத்திரம் வேண்டாவாம்; அதனான் இவை பொருளென்றலே யுரை. அம் ஆமென்பன முதலாக அகரமீறாகக் கிடந்த இறுதி இடைச் சொற்குக் கூறப்பட்ட காலவெழுத்துச் சிறிய சிதைந்துவரினும், சிறுபான்மை பிறவெழுத்துப் பெறினும், நுண்ணுணர்வுடையோர் வழக்கு நோக்கி யுணர்ந்து கொள்க என்பது சேனாவரையர் உரைக்குறிப்பாம்.

குறிப்பு

செய்யும் - ஒரு முடிபு:

அவற்றொடு வருவழி,செய்யும் என் கிளவி,

முதற்கண் வரைந்த மூஈற்றும் உரித்தே.

நிலமுதலாகிய பொருளொடு வருங்கால் செய்யுமென்னுஞ் சொல், விலக்கப்பட்ட பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை என்னும் மூவகைக்கும், உரித்தாம்.

உரித்தாய் வருமாறு எஞ்சிய கிளவி (சொல்-225) என்னுஞ் சூத்திரத்திற் காட்டினாம்.

அவற்றொடு வருவழியெனச் செய்யும் என்னும் சொல் அப்பொருண்மைக்கு உரித்தாயும் உரித்தன்றியும் வரும். அவற்றொடு வரு நிலைமை பெயரெஞ்சுகிளவியாகும்; அவற்றொடு வாரா நிலைமை முற்றுச்சொல்லாம். அது முற்றுச் சொல்லாதற்கண்ணும் பெயரெஞ்சு கிளவியாதற்கண்ணும் வேற்றுமை ணாதெனின் :-ஏனைமுற்றிற்கும் ஏனையெச்சத்திற்கும் வேற்றுமையாவதே இங்கும் வேற்றுமையாகும். முற்றுச் சொல்லிற்கும் எச்சத்திற்கும் வேற்றுமை யாதெனின் பிறிதோர் சொல்லோடு இயையாது தாமே தொடராதற்கு ஏற்கும் வினைச்சொல் முற்றாம்; பிறிதோர் சொல் பற்றியல்லது நிற்றலாற்றா வினைச்சொல் எச்சமாம்; இது தம்முள் வேற்றுமை.

உண்டானென்பது சாத்தனென்னும் பெயரவாவியன்றே நிற்பது; தாமே தொடராமென்றது என்னை யெனின் :- அற்றன்று; உண்டான் சாத்தான் என்றவழி, எத்தையென்னும் அவாய் நிலைக்கண் சோற்றையென்பது வந்தியைந் தாற்போல, உண்டான் என்றவழி யாரென்னும் அவாய் நிலைக்கண் சாத்தனென்பது வந்தியைவதல்லது, அப்பெயர்பற்றியல்லது நிற்றலாற்றா நிலைமைத்தன்று, அச்சொல்லென்பது, இவ்வேற்றுமை விளங்க ஆசிரியர் முற்றுச் சொல்லென்னும், எச்சமென்றும், அவற்றிற்குப் பெயர் கொடுத்தார். என விளக்கமளிப்பார் சேனாவரையர்,

எதிர்மறை வினை கொண்டு முடிதல்

பெயர் எஞ்சு கிளவியும் வினை எஞ்சு கிளவியும்,

எதிர் மறுத்து மொழியினும், பொருள் நிலை திரியா

பெயரெச்சமும் வினையெச்சமும், செய்தல் பொருள் அன்றி அச்செய்தற்பொருண்மை எதிர்மறுத்துச் சொல்லினும், அவ் எச்சப் பொருண்மையில் திரியாது;

உண்ணாவில்லம்,

உண்ணாச்சோறு,

உண்ணாக்காலம்,

வனையாக்கோல்,

ஓதாப்பார்ப்பான்,

உண்ணாவூண்

உண்ணாது வந்தான்,

உண்ணாமைக்குப் போயினான்

எனவும் வரும்.

உண்ணா என்பது உண்ணும், உண்ட என்னும் இரண்டற்கும் எதிர்மறையாம். உண்ணாத என்பதும் அதுவாகும்.

உண்ணாது என்பது உண்டு, உண்ணூ, உண்குபு என்பனவற்றிற்கு எதிர்மறை.

உண்ணாமைக்கு என்பது, உண்ணியர், உண்ணிய, உணற்கு என்பனவற்றிற்கும் உண்ண எனச் செயற்கென்பதும் படவரும் செயவென் எச்சத்திற்கும் எதிர்மறையாம். உண்ணாமை, உண்ணாமல் என்பனவுந்தாம் அதற்கு எதிர்மறையாம் .

உண்டிலன், உண்ணாநின்றிலன், உண்ணலன், உண்ணான் என முற்றுச் சொல்லும் எதிர்மறுத்து நிற்கும். ஆனால் அதற்கு, பொருணிலை திரியாதென கூறினாரில்லை. அதற்கு உரிய காரணத்தை சேனாவரையர் விளக்குவார். அவையனைத்தும் வினைமுற்றுச் சொற்களாகவே உள்ளன. எனவே அவை எதிர்மறுத்து மொழியினும் திரியாது எனக் கூறுதல் இன்றியமையாததாயிற்று, ஆனால் முற்றுக்களையோ உடன்பாடு, எதிர்மறை ஆகிய இரண்டிற்கும் பொருந்துமாறு ஓதியுள்ளார். எனவே எதிர் மறுத்து மொழியினும் திரியாது எனக் கூறல் வேண்டாதாயிற்று என்பதாம்.

இடைப்பிறவரல்:

தம்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்

எச் சொல் ஆயினும், இடைநிலை வரையார்

குறிப்பு

தத்தம் எச்சமாகிய வினையோடும் பெயரோடும் இயையும் குறிப்பையுடைய எச்சொல்லாயினும், இவ் எச்சத்திற்கும் அவற்றான் முடிவனவாகிய தமக்கும் இடைநிற்றல் வரையார்

உழுது சாத்தன் வந்தான்,

உழுதேரோடு வந்தான்

-வினையெச்சம்

கொல்லுங் காட்டுள் யானை,

கொன்ற காட்டுள் யானை.

பெயரெச்சம்.

எச்சொல்லாயினும் என்றதனான், உழுதோடிவந்தான், கவளங்கொள்ளாக் களித்த யானை என எச்சமும் இடைநிலையாதல் கொள்க என்பது சேனாவரையர் குறிப்பு,

சாத்தன் உண்டுவந்தான், அறத்தை அரசன் விரும்பினான், உண்டான் வந்த சாத்தான் என ஏனைத் தொடர்க்கண்ணும் பிறசொல் இடை நிற்றல் ஒக்குமாயினும், எச்சத்தொடர்க்கு இடை நிற்பனவற்றின் கண் ஆராய்ச்சியுடைமையாற் கூறினார் என்பார் சேனாவரையர்,

செய்யும் - பெயரெச்ச ஈறு கெடல்:

அவற்றுள்,

செய்யும்“ என்னும் பெயர் எஞ்சு கிளவிக்கு

மெய்யொடும் கெடுமே,ஈற்றுமிசை உகரம்

அவ் இடன் அறிதல் என்மனார் புலவர்.

மேற்சொல்லப்பட்ட எச்சங்களுட் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரந் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடுங் கெடுமிடம் அறிக.

கெடும் இடம் அறிக என்றது, அவ்வீற்றுமிசையுகரம் யாண்டுங்கெடாது வரயறுக்கவும்படாது சான்றோர் வழுக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வந்தவழிக் கண்டுகொள்க.

வாவும்புரவி,

போகும்புழை என்பன ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட,

வாம்புரவி, போம்புழை என நின்றன.

குறிப்பு

செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெடு மெனவே, செய்யுமென்னு முற்றுச்சொற்கு ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெடும். மெய்யொழித்தும் கெடுமென்பதாம்.

அம்ப லூரு மவனொடு மொழிமே" (குறுந்-51),சாரனாடவென் றோழியுங் கலுழ்மே" என வரும்.

செய்து என்னும் எச்சம்:

செய்து என் எச்சத்து இறந்த காலம்,

எய்து இடன் உடைத்தே, வாராக் காலம்.

செய்து என்னும் வினையெச்சத்தினது இறந்த காலம் வாராக்காலத்தை எய்தும் இடமுடைத்து;

ஈண்டுச் செய்தென் எச்சத்து இறந்தகாலம் என்றது முடிபாய் வரும், வினைச்சொல்லால் உணர்த்தப்படுந் தொழிற்கு அவ் எச்சத்தால் உணர்த்தப்படும் தொழில் முன்நிகழ்தலை. அது வாராக்காலம் எய்துதலாவது, அம்முன்னிகழ்வு சிதையாமல் அவ்வெச்சம் எதிர்காலத்து வருதல்.

நீயுண்டு வருவாய்,

உழுது வருவாய்

எனச் செய்தென் எச்சம் பொருள் சிதையாமல் எதிர்காலத்து வரும்.

எய்திடன் உடைத்தே வாராக் காலம் என்றதனான், உண்டு வந்தான், உழுது வந்தான் என அவ்வெச்சம் இறந்த காலத்து வருதல் இலக்கணம் என்பதாம்.

இறந்த காலத்துச் சொல் எதிர்காலத்து வழுவாயினும் வழுவமைதியாகக் கொள்க என்பதாம்.

நிகழ்காலத்தால் உணர்த்தல்::

முந் நிலைக் காலமும் தோன்றும் இயற்கை

எம் முறைச் சொல்லும் நிகழும் காலத்து

மெய்ந் நிலைப் பொதுச் சொல் கிளத்தல் வேண்டும்.

**குறிப்பு**

முந் நிலைக் காலமும் தோன்றும் இயற்கை எல்லாப் பொருள்களையும் நிகழ்காலத்துத் பொருண்மை நிலைமையுடைத்தாய செய்யும் என்னும் சொல்லால் சொல்லுக என்பதாம்.

மலை நிற்கும்

திங்கள் இயங்கும்

விரைவில் காலம் மயங்கல்:

வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்

ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி

இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்

விரைந்த பொருள என்மனார் புலவர்.

எதிர்காலத்தும் நிகழ்காலத்தும் ஒருபடியாக வரும் வினைச்சொற் பொருண்மையை விரைவு காரணமாக இறந்தகாலத்தாற் சொல்லுதல் உண்டு.

சோறு பாணித்தவழி உண்ணாதிருந்தானைப் போகல் வேண்டும் குறையுடையானொருவன் இன்னும் உண்டிலையோ என்றவழி, உண்டேன் போந்தேன் எனல்

உண்ணா நின்றானும் உண்டேன் போந்தேன் எனல்

இங்கு, எதிர் காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் உரிய பொருளை விரைவு பற்றி இறந்தகாலத்தாற் கூறியிருப்பதைக் காண்க.

தொழில் இறந்தனவல்லவேனும், சொல்லுவான் கருத்து வகையால் இறந்தனவாகச் சொல்லப்படுதலின்,குறிப்பொடு கிளத்தல்என்றார்.

எதிர்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும், நிகழ்காலத்துப் பொருண்மையைக் கிளத்தலும் என இரண்டாகலான் விரைந்த பொருள் என்றார் தொல்காப்பியர்.

சிறப்பில் காலம் மயங்கல்:

மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி,

அப் பண்பு குறித்த வினைமுதற் கிளவி,

செய்வது இல்வழி, நிகழும் காலத்து

மெய் பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே.

குறிப்பு

மிக்கதன்கண் நிகழும் வினைச்சொல்லை நோக்கித் திரிவின்றிப் பயக்கும் அம் மிக்கதனது பண்பைக் குறித்துவரும் வினைமுதற்சொல் சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதலில்லாதவிடத்து, நிகழ்காலத்தான் யாப்புறுத்த பொருளை யுடைத்தாம்.

முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுட் தெய்வஞ் சிறந்தமையால், அதற்குக் காரணமாகிய தவஞ்செய்தல் தாயைக்கோறல் முதலாகிய தொழிலை மிக்கது என்றார். தெய்வமாய இருவினை மிக்கதன்கண் வினைச் சொல்லாவன தவஞ்செய்தான், தாயைக் கொன்றான் என்னுந் தொடக்கத்தன. அப்பண்பு குறித்த வினை முதற்கிளவியாவன சுவர்க்கம் புகும், நிரயம் புகும் என்பன.

யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும், யாவன் தாயைக் கொன்றான் அவன் நிரயம் புகும் எனவும் ஒருவன் தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகும், தாயைக் கொல்லின் நிரயம் புகும் எனவும் மிக்கதன் வினைச்சொல் நோக்கி அம்மிக்கதன் திரிபில் பண்பு குறித்த வினைமுதற் கிளவி நிகழ்காலத்தான் வந்தன.

பொதுவகையாகக் கூறாது ஒருவற்சுட்டியவழி, அவன் தவஞ் செய்து சுவர்க்கம் புக்கான், புகுவன் என ஏனைக்காலத்தாற் சொல்லப் படுதலின், அவ்வாறு ஒருவற்சுட்டுதலை நீக்குதற்கு வினைமுதற்கிளவி யாயினுஞ் செய்வ தில்வழியென்றார். செய்வதென்பது, செய்கையை என்பாரும் உளர்.

வினைச் சொல் என்றாரேனும், தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும். தாயைக் கொன்றான் நிரயம் புகும் என வினைப் பெயராய் வருதலுங் கொள்க.

தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப் படுவதனை நிகழ்காலத்தாற் சொல்லுதல் வழுவாயினும் வழு அமைதியாம் என்பார் தொல்காப்பியர்,

.இது செயல் வேண்டும் என்னும் கிளவி

இது செயல் வேண்டும் என்னும் கிளவி

இரு வயின் நிலையும் பொருட்டு ஆகும்மே

தன் பாலானும் பிறன் பாலானும்.

இது செயல்வேண்டும் என்பதுபட வருஞ்சொல், தன்பாலானும் பிறன்பாலானுமென ஈரிடத்தும் நிலைபெறும் பொருண்மையையுடைத்தாம்தன்னென்றது செயலது வினைமுதலை ஆகும்.

குறிப்பு

ஓதல்வேண்டும் என்றவழி வேண்டும் என்பது ஓதற்கு வினைமுதலாயினாற்கும் அவன் ஓதலை விரும்புந் தந்தைக்கும் ஏற்றவாறு கண்டு கொள்க.

வன்புற வரும் வினா:

வன்புற வரூஉம் வினாவுடை வினைச் சொல்

எதிர் மறுத்து உணர்த்துதற்கு உரிமையும் உடைத்தே.

வற்புறுத்துவதற்காக வருவதும் வரும் வினாவையுடைய வினைச்சொல் வினைநிகழ்வுணர்த்தாது எதிர்மறுத்துணர்த்துதற்கும் உரியதாகும்

வினாவாவன ஆ, ஏ, ஓ, என்பன.

கதத்தானாக களியானாக ஒருவன் தெருளாது ஒருவனை வைதான்; அவன் தெருண்டக்கால், வையப்பட்டான் நீ யென்னை வைதாய் என்ற வழித்தான் வைதவை யுணரா மையால் வைதேனே யென்னும்; ஆண்டவ் வினாவொடு வந்த வினைச்சொல் வைதிலேன் என்னும் எதிர்மறைப் பொருள்பட வந்தவாறு காண்க. வினாவொடு வந்தவழி எதிர்மறைப் பொருள்படுமாறு எவ்வாறெனின் சொல்லுவான் குறிப்பு வகையான் எதிர்மறைப்பொரு ளுணர்த்திற் றென்க என்பார் சேனாவரையர். எதிர்மறைப் பொருளுணர்த்திற்று ஆணடு ஏகாரமாகலின், வினைச்சொல் எதிர்மறுத் துணர்த்துதற் குரிமையும் உடைத்தென்றல் நிரம்பாதெனின்:- எதிர்மறையாயின பயன்றருவது வினாவுடை வினைச்சொலென்றார் ஆகலின், அஃதெதிர் மறுத்தல் ஆண்டையதென மறுக்க என்பதும் சேனாவரையர் உரையாகும்.

வினைநிகழ்வு உணர்த்தும் வழி, வினையது நிகழாமை உணர்த்துதல் வழுவாயினும் அமைகவென வினைச்சொல் பற்றி மரபுவழு அமைத்தார்.

இயற்கை – தெளிவு – காலம் மயங்கல்:

வாராக் காலத்து வினைச்சொல் கிளவி

இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்

இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை.

எதிர்காலத்துக்குரிய வினைச்சொல் பொருண்மை இயற்கையாதலும் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து இறந்த காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும்.

இயற்கையென்பது பெற்றி முதலாயினவற்றால் உணரப்படுவது. தெளிவு நூல் தெளிவான் வருவது.

குறிப்பு

ஒருகாட்டின்கட் போவார் கூறைகோட்படுதல் ஒருதலையாகக் கண்டு இஃதியற்கையென்று துணிந்தான், கூறை கோட்படா முன்னும், இக்காட்டுள் போகிற் கூறைகோட்பட்டான். கூறைகோட்படும் என்றும்

எறும்பு முட்டை கொண்டு தெற்றி யேறின் மழை பெய்தல் நூலால் தெளிந்தான், அவை முட்டைகொண்டு தெற்றி யேறியவழி, மழை பெய்யா முன்னும், மழை பெய்தது, மழை பெய்யும் என்றும்,

எதிர்காலத்திற்குரிய பொருளை இறந்தகாலத்தானும் நிகழ்காலத்தானும் கூறியவாறு காண்க.இது காலவழுவமைதி ஆகும்.

செயப்படு பொருள் - வினைமுதல் போல வரல்:

செயப்படுபொருளைச் செய்தது போலத்

தொழிற்படக் கிளத்தலும் வழக்கு இயல் மரபே.

செய்படுபொருளைச் செய்த வினைமுதல் போலத் தொழிற்படச் சொல்லுதலும் வழக்கின்கண் இயலும் மரபு ஆகும்.

வழக்கியன்மரபு என்றமையால் இலக்கண மரபன்று என்பது தெளிவுறும்.

திண்ணை மெழுகிற்று, கலங்கழீஇயிற்று என வரும்.

திண்ணை மெழுகப்பட்டது, கலங் கழுவப்பட்டது என்று மன்னாகற் பாலது, அவ்வாய்பாடன்றி வினைமுதல் வாய்பாட்டான் வருதலும் வழக்கினு ளுண்மையான் அமைகவென வினைச்சொற்பற்றி மரபுவழு உணர்த்தப் பெற்றது.

செயப்படுபொருளை வினைமுதல் வாய்பாட்டாற் கூறுதலேயன்றி, எளிதின் இடப்படுதல் நோக்கி அரிசிதானேயட்டது எனச் செயப்படு பொருளை வினைமுதலின் தொழிற் படக் கிளத்தலும் வழக்கியன் மரபென்றற்கு தொழிற்படக் கிளத்தலும் என்றார் தொல்காப்பியர்.

இறப்பும் எதிர்வும் தம்முள் மயங்கல்:

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்

சிறப்பத் தோன்றும், மயங்குமொழிக் கிளவி

இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்குமொழிப் பொருளாய் விளங்கத் தோன்றும்.

குறிப்பு

இவர் பண்டு இப்பொழிலகத்து விளையாடுவார்;

நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான், நீ என் செய்குவை எனவரும்.

இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்குமொழிப் பொருளாய்த் தோன்றும் எனவே, அவற்றை உணர்த்துஞ்சொல் மயங்கும். அவை பெயரும் வினையுமாய் மயங்குதலின், மயங்கு வினைச்சொற் கிளவி என்னாது பொதுப்பட மயங்குமொழிக் கிளவி என்றார் தொல்காப்பியர்,

தோன்றுமென்பது பெயரெச்சமெனினும் இழுக்காது.

பண்டு விளையாடினார் என்றும் நாளை வருவன் என்று மன்றே கூறற்பாலது; அவ்வாறன்றித் தம்முண் மயங்கக் கூறினும் அமைக எனக் கால வழுவமைதி கூறப்பட்டது.

நிகழ்வு ஏனைய காலத்தொடு மயங்கல்:

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்

இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவற்றொடு மயங்கும்.

இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும், நாளை வரும் எனவும் வரும்.

சிறப்பத்தோன்று மெனவும் மயங்குதல்வரையா ரெனவும் கூறினார்; இறப்பும் எதிர்வும் மயங்குதல் பயின்று வருதலானும் அத்துணை நிகழ்கால மயக்கம் பயின்று வாராமையானு மென்க.

மூன்றுகாலமுந் தம்முண் மயங்குமென்றாரேனும், ஏற்புழியல்லது மயங்காமை கொள்க. ஏற்புழிக் கொள்ளவே வந்தானை வருகென்றலும் வருவானை வந்தான்என்றலும் என இவை முதலாயினவெல்லாம் வழுவென்பதாம்.

1.வினைச்சொல்லின் பொது இலக்கணம் குறித்து எழுதுக.

வினைச்சொல்லின் பொது இயல்பு:

வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது,

நினையும் காலை, காலமொடு தோன்றும்.

வினையென்று சொல்லப்படுவது வேற்றுமையொடு பொருந்தாது, ஆராயுங்காற் காலத்தொடு புலப்பட்டு வரும். இங்கு வேற்றுமை என்பது வேற்றுமை உருபை.க் குறித்து நிற்கும்.

உண்டான், கரியன் என வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றி நின்றது.

குறிப்பு

வினைச்சொல் காலமொடு தோன்றும் எனக் குறிக்காது வேற்றுமை கொள்ளாது என்று மட்டும் குறித்தால் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் என்பதாயப் பொருள் படும் என்பதாலும் அவ் இரண்டினையும் நீக்குதற்காகவும் வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும் என்றார். வேற்றுமை கொள்ளாது எனக் குறிக்காதிருப்பரின் அது வினையாலணையும் பெயரையும் குறித்து நிற்கும். எனவே வேற்றுமை கொள்ளாது என்றார்.

வினைச்சொல்லுள் வெளிப்படக் காலம் காட்டாதனவும் உள. எனவே அவையும் ஆராயுங்காற் காலமுடையன என்றதற்கு,நினையுங்காலை என்றார்.

2.இடைப்பிறவரல் என்பது குறித்து எழுதுக.

இடைப்பிறவரல்::

தம்தம் எச்சமொடு சிவணும் குறிப்பின்

எச் சொல் ஆயினும், இடைநிலை வரையார்

தத்தம் எச்சமாகிய வினையோடும் பெயரோடும் இயையும் குறிப்பையுடைய எச்சொல்லாயினும், இவ் எச்சத்திற்கும் அவற்றான் முடிவனவாகிய தமக்கும் இடைநிற்றல் வரையார்

:உழுது சாத்தன் வந்தான்,

உழுதேரோடு வந்தான்

-வினையெச்சம்

கொல்லுங் காட்டுள் யானை,

கொன்ற காட்டுள் யானை.

பெயரெச்சம்.

எச்சொல்லாயினும் என்றதனான், உழுதோடிவந்தான், கவளங்கொள்ளாக் களித்த யானை என எச்சமும் இடைநிலையாதல் கொள்க என்னது சேனாவரையர் குறிப்பு.

3.செய்து, செய்பு என்பன எவ்வாறு முடியும்?

செய்யும் - பெயரெச்ச ஈறு கெடல்:

அவற்றுள்,

குறிப்பு

செய்யும்" என்னும் பெயர் எஞ்சு கிளவிக்கு

மெய்யொடும் கெடுமே,ஈற்றுமிசை உகரம்;

அவ் இடன் அறிதல்!" என்மனார் புலவர்.

மேற்சொல்லப்பட்ட எச்சங்களுட் செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு ஈற்றுமிசை நின்ற உகரந் தன்னால் ஊரப்பட்ட மெய்யொடுங் கெடுமிடம் அறிக.

கெடும் இடமறிக என்றது, அவ்வீற்றுமிசையுகரம் யாண்டுங்கெடாது வரயறுக்கவும்படாது சான்றோர் வழுக்கினுள்ளும் செய்யுளுள்ளும் வந்தவழிக் கண்டுகொள்க.

வாவும்புரவி,

போகும்புழை என்பன ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங்கெட,

வாம்புரவி, போம்புழை என நின்றன.

செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு ஈற்றுமிசை யுகரம் மெய்யொடுங் கெடு மெனவே, செய்யுமென்னு முற்றுச்சொற்கு ஈற்றுமிசையுகரம் மெய்யொடுங் கெடும். மெய்யொழித்தும் கெடுமென்பதாம்.

அம்ப லூரு மவனொடு மொழிமே (குறுந்-51),சாரனாடவென் றோழியுங் கலுழ்மே என வரும்.

செய்து என்னும் எச்சம்:

செய்து என் எச்சத்து இறந்த காலம்,

எய்து இடன் உடைத்தே, வாராக் காலம்.

செய்து என்னும் வினையெச்சத்தினது இறந்த காலம் வாராக்காலத்தை எய்தும் இடமுடைத்து;

ஈண்டுச் செய்தென் எச்சத்து இறந்தகாலம் என்றது முடிபாய் வரும், வினைச்சொல்லால் உணர்த்தப்படுந் தொழிற்கு அவ் எச்சத்தால் உணர்த்தப்படும் தொழில் முன்நிகழ்தலை. அது வாராக்காலம் எய்துதலாவது, அம்முன்னிகழ்வு சிதையாமல் அவ்வெச்சம் எதிர்காலத்து வருதல்.

நீயுண்டு வருவாய்,

உழுது வருவாய்

எனச் செய்தென் எச்சம் பொருள் சிதையாமல் எதிர்காலத்து வரும்.

எய்திட னுடைத்தே வாராக் காலம் என்றதனான், உண்டு வந்தான், உழுது வந்தான் என அவ்வெச்சம் இறந்த காலத்து வருதல் இலக்கணம்என்பதாம்.

குறிப்பு

4.காலம் மயங்கும் இடங்கள் குறித்து எழுதுக.

சிறப்பில் காலம் மயங்கல்:

மிக்கதன் மருங்கின் வினைச்சொல் சுட்டி,

அப் பண்பு குறித்த வினைமுதற் கிளவி,

செய்வது இல்வழி, நிகழும் காலத்து

மெய் பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே.

மிக்கதன்கண் நிகழும் வினைச்சொல்லை நோக்கித் திரிவின்றிப் பயக்கும் அம் மிக்கதனது பண்பைக் குறித்துவரும் வினைமுதற்சொல் சுட்டிச் சொல்லப்படுவதோர் வினைமுதலில்லாதவிடத்து, நிகழ்காலத்தான் யாப்புறுத்த பொருளை யுடைத்தாம்.

முயற்சியும் தெய்வமுமாகிய காரணங்களுட் தெய்வஞ் சிறந்தமையால், அதற்குக் காரணமாகிய தவஞ்செய்தல் தாயைக்கோறல் முதலாகிய தொழிலை மிக்கது என்றார். தெய்வமாய இருவினை மிக்கதன்கண் வினைச் சொல்லாவன தவஞ்செய்தான், தாயைக் கொன்றான் என்னுந் தொடக்கத்தன. அப்பண்பு குறித்த வினை முதற்கிளவியாவன சுவர்க்கம் புகும், நிரயம் புகும் என்பன.

யாவன் தவஞ்செய்தான் அவன் சுவர்க்கம் புகும், யாவன் தாயைக் கொன்றான் அவன் நிரயம் புகும் எனவும் ஒருவன் தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகும், தாயைக் கொல்லி னிரயம் புகும் எனவும் மிக்கதன் வினைச்சொல் நோக்கி அம்மிக்கதன் திரிபில் பண்பு குறித்த வினைமுதற் கிளவி நிகழ்காலத்தான் வந்தன.

பொதுவகையாகக் கூறாது ஒருவற்சுட்டியவழி, அவன் தவஞ் செய்து சுவர்க்கம் புக்கான், புகுவன் என ஏனைக்காலத்தாற் சொல்லப் படுதலின், அவ்வாறு ஒருவற்சுட்டுதலை நீக்குதற்கு வினைமுதற்கிளவி யாயினுஞ் செய்வ தில்வழியென்றார். செய்வதென்பது, செய்கையை யென்பாரு முளர்.

வினைச் சொல் என்றாரேனும், தவஞ்செய்தான் சுவர்க்கம் புகும். தாயைக் கொன்றான் நிரயம் புகும் என வினைப் பெயராய் வருதலுங் கொள்க.

தவஞ்செய்யிற் சுவர்க்கம் புகுவன் என எதிர்காலத்தாற் சொல்லப் படுவதனை நிகழ்காலத்தாற் சொல்லுதல் வழுவாயினும் வழு அமைதியாம் என்பார் தொல்காப்பியர்,

குறிப்பு

இறப்பும் எதிர்வும் தம்முள் மயங்கல்:

இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்

சிறப்பத் தோன்றும், மயங்குமொழிக் கிளவி

இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்குமொழிப் பொருளாய் விளங்கத் தோன்றும்.

இவர் பண்டு இப்பொழிலகத்து விளையாடுவார்;

நாளை அவன் வாளொடு வெகுண்டு வந்தான், நீ என் செய்குவை எனவரும்.

இறப்பும் எதிர்வுமாகிய இரண்டு காலமும் மயங்குமொழிப் பொருளாய்த் தோன்றும் எனவே, அவற்றை உணர்த்துஞ்சொல் மயங்கும். அவை பெயரும் வினையுமாய் மயங்குதலின், மயங்கு வினைச்சொற் கிளவி என்னாது பொதுப்பட மயங்குமொழிக் கிளவி" என்றார் தொல்காப்பியர்,

தோன்றுமென்பது பெயரெச்சமெனினும் இழுக்காது.

பண்டு விளையாடினார் என்றும் நாளை வருவன் என்று மன்றே கூறற்பாலது; அவ்வாறன்றித் தம்முண் மயங்கக் கூறினும் அமைக எனக் கால வழுவமைதி கூறப்பட்டது.

நிகழ்வு ஏனைய காலத்தொடு மயங்கல்:

ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்

இறப்பும் எதிர்வுமேயன்றி நிகழ்காலமும் அவற்றொடு மயங்கும்.

இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும் எனவும், நாளை வரும் எனவும் வரும்.

சிறப்பத்தோன்று மெனவும் மயங்குதல்வரையா ரெனவும் கூறினார்; இறப்பும் எதிர்வும் மயங்குதல் பயின்று வருதலானும் அத்துணை நிகழ்கால மயக்கம் பயின்று வாராமையானு மென்க.

மூன்றுகாலமுந் தம்முண் மயங்கும் என்றாரேனும், ஏற்புழியல்லது மயங்காமை கொள்க. ஏற்புழிக் கொள்ளவே வந்தானை வருகென்றலும் வருவானை வந்தான்என்றலும் என இவை முதலாயினவெல்லாம் வழுவென்பதாம்.

குறிப்பு

இயற்கை – தெளிவு – காலம் மயங்கல்:

வாராக் காலத்து வினைச்சொல் கிளவி

இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்

இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை.

எதிர்காலத்துக்குரிய வினைச்சொல் பொருண்மை இயற்கையாதலும் தெளியப்படுதலும் சொல்லுமிடத்து இறந்த காலச் சொல்லானும் நிகழ்காலச் சொல்லானும் விளங்கத் தோன்றும்.

இயற்கையென்பது பெற்றி முதலாயினவற்றால் உணரப்படுவது. தெளிவு நூல் தெளிவான் வருவது.

ஒருகாட்டின்கட் போவார் கூறைகோட்படுதல் ஒருதலையாகக் கண்டு இ்.தியற்கையென்று துணிந்தான், கூறை கோட்படா முன்னும், இக்காட்டுள் போகிற் கூறைகோட்பட்டான். கூறைகோட்படும் என்றும்

.எறும்பு முட்டை கொண்டு தெற்றி யேறின் மழை பெய்தல் நூலால் தெளிந்தான், அவை முட்டைகொண்டு தெற்றி யேறியவழி, மழை பெய்யா முன்னும், மழை பெய்தது, மழை பெய்யும் என்றும்

எதிர்காலத்திற்குரிய பொருளை இறந்தகாலத்தானும் நிகழ்காலத்தானும் கூறியவாறு காண்க..இது காலவழுவமைதி ஆகும்.

**இடையியல்**

இப் பகுதி இடைச்சொல்லின் இலக்கணம் உணர்த்தும் பகுதி ஆகும். பெயரினையும் வினையினையும் சார்ந்து வருமாதலின் இது அவற்றின் பின் வைக்கப்பட்டது. இச் சொற்கள் மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மை இடையில் வருதலின் இடைசொல்லாயிற்று என்பார் சேனாவரையர்.

**இடைச்சொல்லின் பொது இலக்கணம்:**

இடை எனப்படுப பெயரொடும் வினையொடும்நடை பெற்று இயலும்;

தமக்கு இயல்பு இலவே.

இடைச்சொல் என்று சொல்லப் படுவன பெயரொடும் வினையொடும் வழக்குப் பெற்றியலும்; தாமாக நடக்கும் இயல்பினை உடையனவல்ல.

குறிப்பு

இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு மவற்றுவழி மருங்கிற் றோன்றும்."(சொல்-159)

என்றதனால் இடைச்சொல் பெயரும் வினையுஞ் சார்ந்து வருதல் பெறப் பட்டமையால், பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் என்பது பெறப்படும். தமக்கியல்பில என்றது,ஈண்டுப் பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பதல்லது தமக்கெனப் பொருளுடைய வல்ல என்பதனைக் குறித்தற்காம்.

அதுகொ றோழி காம நோயே (குறுந்-5) எனவும்,

வருகதில் லம்மவெஞ் சேரி சேர (அகம் 276) எனவும், பெயரும் வினையுஞ் சார்ந்து அப்பொருளை வெளிப்படுத்தவாறு வரும்.

சார்ந்து வருதல் உரிச்சொற்கும் ஒத்தலின், தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணமாம். தமக்கியல்பிலவேயென்றது, சார்ந்தல்லது வாராவென வலியுறுத்த வந்ததாம்.

பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலுந் தமக்கியல் பிலவெனப் பொதுப்படக் கூறியவதனால் சாரப்படுஞ் சொல்லின் வேறாய் வருதலேயன்றி,

உண்டனன், உண்டான்

என்மனார், என்றிசினோர்

அருங்குரைத்து

அவற்றிற் குறுப்பாய் வருதலுங் கொள்க என்பார் சேனாவரையர்,

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கிற் றோன்றும் என்பதற்கு, சார்ந்து வருதலான் இடைச்சொல்லும் உரிச்சொல்லுஞ் சிறப்பில; இவை உட்படச் சொல் நான்காமென்பது கருத்தாகலின், இடைச்சொல் பெயரும் வினையுஞ் சார்ந்து வருமென்னும் வேறுபாடு அதனாற் பெறப்படாது. இடைச்சொல் பெயர்சார்ந்தும் உரிச்சொல் வினைசார்ந்தும் வரினும் அவற்றது சிறப்பின்மையுஞ் சொல் நான்காதலும் உணர்த்துதல் சிதையாதாகலான். அதனான் இடைச்சொல் பெயரும் வினையுஞ் சார்ந்து வருமென்பது இச் சூத்திரத்தாற்கூறல் வேண்டுமென்ப. அவ்வுரை யுரைப்பார் பெயரினும் வினையினு மெய்தடு மாறி (சொல் - 297) என்பதற்கும் பெயரும் வினையுஞ் சார்ந்தென்று பொருளுரைப்ப என்பார் சேனாவரையர்,

**இடைச்சொல்லின் பாகுபாடு:**

குறிப்பு

அவைதாம்,

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்கு உதவுநவும்,

வினை செயல் மருங்கின் காலமொடு வருநவும்,

வேற்றுமைப் பொருள்வயின் உருபு ஆகுநவும்,

அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்,

இசைநிறைக் கிளவி ஆகி வருநவும்,

தம்தம் குறிப்பின் பொருள் செய்குநவும்,

ஒப்பு இல் வழியான் பொருள் செய்குநவும், என்று

அப் பண்பினவே, நுவலும் காலை.

இடைச்சொற்கள்தாம், இரண்டுசொல் புணருமிடத்து அப்பொருணிலைக் குதவு வனவும்

வினைச்சொல்லை முடிக்குமிடத்துக் காலப் பொருளவாய் வருவனவும்,

செயப்படுபொருண் முதலாகிய வேற்றுமைப் பொருட்கண் உருபென்னுங் குறியவாய் வருவனவும்,

பொருளுடையவன்றிச் சார்த்திச் சொல்லப்படுந் துணையாய் வருவனவும்,

வேறுபொருளுணர்த்தாது இசை நிறைத்தலே பொருளாக வருவனவும்,

தத்தங் குறிப்பாற் பொருளுணர்த்துவனவும்,

ஒப்புமை தோன்றாத வழி அவ்வொப்புமைப்பொருள் பயப்பனவும் எனக் கூறப்பட்ட ஏழ் இயல்பையுடையது.

புணரியனிலை புணரியலது நிலை. ஆண்டுப் பொருணிலைக் குதவுதலாவது எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப்பொருள் அ∴றிணைப் பொருளென்பதுபட வருதலும் எல்லா நம்மையும் என்புழி நம்முச்சாரியை அப் பொருள் தன்மைப்பன்மை என்பது பட வருதலுமாம். அல்லனவும் தாஞ் சார்ந்து வரும் மொழிப் பொருட்கு உபகாரமுடையவாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அவ்வாறு வாராதன சாரியை மொழியாகாது.

குறிப்பு

வினைச்சொல் ஒரு சொல்லாயினும் முதனிலையும் இறுதி நிலையும் இடைச் சொல்லுமாகப் பிரித்துச் செய்கை செய்து காட்டப்படுதலின் வினைசெயன் மருங்கின் என்றார் . அம் முடிபுணர்த்தாமைக்குக் காரணம் புணரிய னிலையிடை யுணரத் தோன்றா என்புழிச் சொல்லப் பட்டது. அவற்றுள் ஒரு சாரன பாலுணர்த்தாமையாலும், எல்லாங்கால முணர்த்துதலானும் காலமொடு வருநவும் என்றார்.

வேற்றுமைப் பொருளவாய் வருவன பிறசொல்லும் உளவாகலின் அவற்றை நீக்குதற்கு உருபாகுநவும் என்றார். பிறசொல்லாவன கண்ணகன் ஞாலம்,ஊர்க்கானிவந்த பொதும்பர் (குறிஞ்சிக்கலி - 20) என ஏழாம் வேற்றுமைப் பொருட்கண் வருங் கண் கால் முதலாயினவும்,அனையை யாகன் மாறே (புறம் - 4) சிறந்தோன் பெயரன் பிறந்த மாறேஇயல்புளிக் கோலோச்சு மன்னவன் (குறள் - 545) என மூன்றாம் வேற்றுமைப் பொருட்கண் வரும் மாறுஉளி என்பனவும்,அன்ன பிறவுமாகும். இவ்வாறு பிறவும் வருதலான் அவற்றை நீக்குவதற்கு உருபாகுநவும் எனக் கூறினார். அவை தம்மையுந்தழீஉக்கோடற்கு வேற்றுமைப் பொருள்வயின் என்றார். அவை வருங்கால் நிலைமொழி யுருபிற்கேற்ற செய்கை ஏற்புழிப் பெறுதலுடைமையின் உருபாகுநவும் என்றார். இ∴து இருபொருளுணர்த்தலான் இருதொடராகக் கொள்க என்பார் சேனாவரையர்.

அசைத்தல் - சார்த்துதல். பொருளுணர்த்தாது யெயரொடும் வினையொடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசை நிலை யாயிற்று. அவை அந்தில் முதலாயின. புகழ்ந்திகு மல்லரோ பெரிதே உரைத்திசினோரே எனச் சார்ந்த மொழியை வேறுபடுத்து நிற்றலின், அசைநிலைச் சொல்லாயின என்பாருமுளர்.

செய்யுட்கண் இசைநிறைத்து நிற்றலின் இசைநிறை யாயின.

குறிப்புச் சொல்லுவான்கண்ணதாயினும் அவன் குறித்த பொருளைத் தாங்குறித்து நிற்றலின், தத்தங்குறிப்பின் என்றார்.

**இடைச்சொல் நிற்கும் இடமும் வேறுபாடும்:**

அவைதாம்,

முன்னும் பின்னும் மொழி அடுத்து வருதலும்,

தம் ஈறு திரிதலும்

பிறிது அவண் நிலையலும்,

அன்னவை எல்லாம் உரிய என்ப.

இடைச்சொல், இடை வருதலேயன்றி தம்மாற் சாரப்படுஞ் சொற்கு முன்னும் பின்னும் வருதலும், தம்மீறு வேறுபட்டு வருதலும், பிறிதோர்

இடைச்சொல் ஓரிடைச் சொன்முன் வருதலுமாகிய அத்தன்மைய வெல்லாம் உரியதாய் வரும்.

குறிப்பு

அதுமன், கேண்மியா ( புறம் - 148)–முன்னெடுத்து பின் வருதல்

கொன்னூர் (குறுந் - 138) ஓஒவினிதே - பின்னடுத்து முன் வந்தன .

உடனுயிர் போகுக தில்லத ( குறுந் - 57) - என ஈறு திரிந்து வந்தது

வருகதில் லம்மவெஞ் சேரி சேர " (அகம் - 276) - என்பது பிறிதவணின்றது.

அன்னவையெல்லா மென்றதனான், மன்னைச்சொல் (சொல் - 252) கொன்னைச்சொல் ( சொல் - 254) எனத் தம்மை யுணர நின்றவழி ஈறு திரிதலும், னகாரை முன்னர் என எழுத்துச்சாரியை ஈறு திரிதலுங் கொள்க.

**மன் என்னும் இடைச்சொல்:**

கழிவே, ஆக்கம், ஒழியிசைக் கிளவி, என்று

அம் மூன்று என்ப-மன்னைச் சொல்லே

இவ்வோத்தின்கண் ணுணர்த்தப்படும் மூவகை யிடைச்சொல்லுள் தத்தங் குறிப்பாற்பொருள் செய்குந பொருளுணர்த்துதற் நிறப்புப் பரப்புடைமையான் அதனை முன் னுணர்த்துகின்றார்.

கழிவு குறித்து நிற்பதும், ஆக்கங் குறித்து நிற்பதும், ஒழியிசைப் பொருண்மை குறித்து நிற்பதுமென மன்னைச் சொல் மூன்றாம்.

சிறியகட் பெறினேயெமக்கீயு மன்னே (புறம்- 235) - கழிவு

பண்டு காடுமனின்று கயல் பிறழும் வயலாயிற்று"– ஆக்கம்

கூரியதோர் வாண்மன் - என்புழித் திட்பமின்று,இலக்கணமின்று என எச்சமாய் ஒழிந்த சொற் பொருண்மை நோக்கி நின்ற ஒழியிசைக் கிளவி

**தில் என்னும் இடைச்சொல்:**

விழைவே, காலம் ஒழியிசைக் கிளவி, என்று

அம் மூன்று என்ப தில்லைச் சொல்லே"

விழைவு குறித்து நிற்பதும், காலங்குறித்துநிற்பதும், ஆண்டொழிந்து நின்ற சொற்பொருளை நோக்கி நிற்பதுமெனத் தில்லைச்சொல் மூன்றாம்.

வார்ந்திலங்கு வையெயிற்றுச் சின்மொழியரிவையைப் பெறுகதில் லம்ம யானே.“ (குறுந்-14) -விழைவு

குறிப்பு

பெற்றாங் கறிகதில் லம்மவிவ் வூரே– காலம். வருகதில் வம்ம வெஞ் சேரி சேர“ (அகம்-276)

- இன்னது செய்வல் என்னும் ஒழியிசைக் கிளவி.

**கொன் என்னும் இடைச்சொல்:**

அச்சம் பயமிலி காலம் பெருமையென்று

அப்பால் நான்கே கொன்னைச் சொல்லே

அச்சப் பொருளதும், பயமின்மைப் பொருளதும், காலப்பொருளதும், பெருமைப் பொருளதுமெனக் கொன்னைச் சொல் நான்காம்.

கொன்முனை யிரவூர் போலச்

சிலவா குகநீ துஞ்சு நாளே (குறுந்-91)– அச்சம்

கொன்னே கழிந்தன் றிளமை (நாலடி-55)– பயனின்மை

கொன்வரல் வாடை நினதெனக் கொண்டேனோ - காலம்

கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே (குறுந்-138)

என்புழிப் பேரூர் துஞ்சினும் - பெருமை.

உம் என்னும் இடைச்சொல்:

எச்சம், சிறப்பே, ஐயம், எதிர்மறை,

முற்றே, எண்ணே, தெரிநிலை, ஆக்கம், என்று

அப் பால் எட்டேஉம்மைச் சொல்லே.

எச்சங் குறிப்பது முதலாக ஆக்கங் குறிப்பது ஈறாக உம்மைச்சொல் எட்டாம்.

சாத்தனும் வந்தான் என்னும் உம்மை, கொற்றனும் வந்தானென்னும் எச்சங் குறித்து நிற்றலின், எச்ச வும்மை.

குறவரு மருளுங் குன்றத்துப் படினே (மலை-275) என்பது குன்றத்து மயங்காது இயங்குதற்கண் குறவர் சிறந்தமையாற் சிறப்பும்மை.

ஒன்று இரப்பான்போ லிளிவந்துஞ் சொல்லு முலகம்

குறிப்பு

புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்

வல்லாரை வழிபட் டொன்றறிந் தான் போல்

நல்லார்கட் டொன்று மடக்கமு முடையன்

இல்லோர் புன்க ணீகையிற் றணிக்க

வல்லான் போல்வதோர் வண்மையு முடையன் (கலி-47)

என்பதில் இன்னானென்று துணியாமைக்கண் வருதலின் ஐயவும்மை.

சாத்தன் வருதற்கு முரியன் என்பது வாராமைக்கும் உரியன் என்னும் எதிர்மறையை ஒழிபாகவுடைத்தாய் நிற்றலின், எதிர்மறையும்மை.

தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார் என எஞ்சாப் பொருட்டாகலான் முற்றும்மை.

நிலனு நீருந் தீயும் வளியு மாகாயமு மெனப் பூதமைத்து என்புழி எண்ணுதற்கண் வருதலின் எண்ணும்மை.

இரு நில மடி தோய்தலிற் றிருமகளுமல்லள் அரமகளுமல்லள் இவள் யாராகும் என்றவழித் தெரிதற்பொருட்கண் வருதலின் தெரிநிலை யும்மை. திருமகளோ அரமகளோ என்னாது அவரை நீக்குதலின் ஐயவும்மையினின்று வேறுபட்ட உம்மையானது.

ஆக்கவும்மை வந்த வழிக் கண்டுகொள்க என்னும் சேனாவரையர் . உரையாசிரியர் நெடினும் வலியனு மாயினான் என்புழி உம்மை ஆக்கங்குறித்து நிற்றலின் ஆக்க வும்மை யென்றார் உரையாசிரியர் என எடுத்துக் காட்டுவார்,

செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே (சொல்-15) என்னுமும்மை. வழுவை யிலக்கண மாக்கிக் கோடல் குறித்து நின்றமையின் ஆக்கவும்மை என்பாரு முளர். பாலும் ஆயிற்று என்றால், அதுவே மருந்து மாயிற்று என வருதலாம். (ஆக்கம்)

**ஓகார இடைச்சொல்:**

பிரிநிலை, வினாவே, எதிர்மறை, ஒழியிசை,

தெரிநிலைக் கிளவி, சிறப்பொடு தொகைஇ,

இரு-மூன்று என்ப- ஓகாரம்மே.

பிரிநிலைப் பொருட்டாவது முதலாக ஓகாரம் அறுவகைப்படும்.

யானோ தேறேனவர் பொய்வழுங் கலரே (குறுந்-21) என்பது தேறுவார் பிறரிற் பிரித்தலிற் பிரிநிலை

குறிப்பு

சாத்தனுண்டானோ என்பது வினா

யானோ கொள்வேன் என்பது கொள்ளேன் என்னும் எதிர்மறை குறித்து நிற்றலின், எதிர்மறை

கொளலோ கொண்டான் என்பது கொண்டுய்யப் போயினானல்லன் என்பது முதலாய ஒழியிசை நோக்கி நிற்றலின் ஒழியிசை

திருமகளோ வல்லள் அரமகளோ வல்லள் இவள் யார்? என்ற வழித் தெரிதற்கண் வருதலிற் தெரிநிலையோகாரம்.

ஓஓபெரியன் என்பது பெருமை மிகுதி யுணர்த்தலிற் சிறப்பு

**ஏ என்னும் இடைச்சொல்:**

தேற்றம், வினாவே, பிரிநிலை, எண்ணே,

ஈற்றசை, இவ் ஐந்துஏகாரம்மே.

தேற்றம், வினாவே, பிரிநிலை, எண்ணே,ஈற்றசை என்னும் ஐந்து பொருள்களில் ஏகாரம் வரும்.

உண்டே மறுமை எனத் தெளிவின்கண் வருதலில் தேற்றேகாரம்.

நீயே கொண்டாய் என வினாப்பொருளுள்உணர்த்தலின் வினாவேகாரம்.

அவருளிவனே கள்வன் எனப் பிரித்தலிற் பிரிநிலை யேகாரம்.

நிலனே நீரே தீயே வளியே என எண்ணுதற்கண் வருதலின் எண்ணேகாரம்.

கடல்போற் றோன்றல காடிறந் தோரே ( அகம் - 1) என்பது செய்யுளிறுதிக் கண் வருதலின் ஈற்றசையேகாரம்.

வாடா வள்ளியங் காடிறந்தோரே ( குறுந் - 216) எனச் செய்யுளிடையும் வருதலின் ஈற்றசையென்பது மிகுதி நோக்கிச் சென்றதாம்.

**என என்னும் இடைச்சொல்:**

வினையே, குறிப்பே, இசையே, பண்பே,

எண்ணே, பெயரொடு, அவ் அறு கிளவியும்

கண்ணிய நிலைத்தேஎன என் கிளவி.

குறிப்பு

வினை முதலாகிய ஆறு பொருண்மையும் குறித்து வரும் என என்னும் இடைச்சொல்

மலைவான் கொள்கென உயிர்பலி தூஉய் ( புறம் - 143) - வினை

துண்ணெனத் துடித்தது மனம் - குறிப்பு

ஒல்லென வொலித்தது - இசை

வெள்ளென விளர்த்தது. – பண்பு

நிலனென நீரெனத் தீயென வளியென– எண்

அழுக்கா றெனவொரு பாவி (குறள் - 168)- பெயர்

**என்று என்னும் இடைச்சொல்:**

என்று என் கிளவியும் அதன் ஓரற்றே.

என்று என்னும் இடைச்சொல்லும் என என்பது போல வினை குறிப்பு, இசை, பண்பு, எண், பெயர் என்னும் அவ்வாறு பொருளுங் குறித்து வரும்.

நரைவரு மென்றெண்ணி ( நாலடி - 11) வினை

விண்ணென்று விசைத்தது – குறிப்பு

ஒல்லென் றொலிக்கு மொலிபுன லூரற்கு " ( ஐந்திணை ஐம்பது - 28) - இசை

பச்சென்று பசுத்தது - பண்பு

நிலனென்று நீரென்று தீயென்று – எண்

பாரி யென்றொருவனுளன் - எண்

விழைவின் தில்லை தன்னிடத்து இயலும்.

தில்லைச் சொல் என்ற சொல் விழைவின்கண் வருந்பொழுது தன்மைக்கண் அல்லது வாராது

ஏ, ஒ இடைச்சொற்களின் முடிபு:

தெளிவின் ஏயும், சிறப்பின் ஓவும்,

அளபின் எடுத்த இசைய என்ப.

தெளிவின்கண் வரும் ஏகாரமும் சிறப்பின்கண் வரும் ஓகாரமும் அளவால் மிக்க இசையை உடையன.

குறிப்பு

உண்டே மறுமை – ஏ

ஒ பெரியன் - ஓ

**மற்று என்னும் சொல்:**

மற்று என் கிளவி வினைமாற்று, அசைநிலை,

அப் பால் இரண்டு என மொழிமனார் புலவர்.

மற்றென்னுஞ்சொல் வினைமாற்றும் அசை நிலையுமென இரண்டாய் வரும்.

மற்றறிவா நல்வினையாமிளையம் (நாலடி - 9)– வினை மாற்று

அதுமற் றவலங் கொள்ளாது நொதுமற் கலுழும் (குறுந் - 12) என அசைநிலை கட்டுரையிடையும் மற்றோ என அசைநிலையாய் வரும்.

**எற்று என்னும் சொல்:**

எற்று என் கிளவி இறந்த பொருட்டே

எற்றென்னுஞ் சொல் இறந்த பொருண்மைத்து;

எற்றென் னுடம்பி னெழினலம் -

எற்று என்று இரங்குவ செய்யற்க

மற்றையது என்னும் சொல்:

மற்றையது என்னும் கிளவிதானே

சுட்டு நிலை ஒழிய, இனம் குறித்தன்றே.

மற்றையது எனப் பெயர்க்கு முதனிலையாய் வரும் மற்றையென்னும் ஐகாரவீற் றிடைச்சொல் சுட்டப் பட்டதனை ஒழித்து, அதன் இனங்குறித்து நிற்கும்.

ஆடை கொணர்ந்தவழி அவ்வாடை வேண்டாதான் மற்றையது கொணாவெனல். அது சுட்டிய ஆடையொழித்து அதற்கினமாகிய பிற ஆடையைக் குறித்து நின்றது.

பெரும்பான்மையும் முதனிலையாய் நின்றல்லது அவ்விடைச்சொல் பொருள் விளக்காமையின், மற்றையதென்னுங் கிளவி “ என்றார். சிறுபான்மை மற்றையாடை எனத் தானேயும் வரும். மற்றைய∴து

மற்றையவன் என்னுந் தொடக்கத்தனவும் அவ்விடைச்சொல் முதனிலையாய பெயர்.

குறிப்பு

**மன்ற என்னும் சொல்:**

மன்ற என் கிளவி தேற்றம் செய்யும்.

மன்ற வென்னுஞ் சொல், தெளிவு பொருண் மையை யுணர்த்தும்

கடவு ளாயினு மாக

மடவை மன்ற வாழிய முருகே “ (நற்றிணை - 34)– தெளிவு

**அந்தில், ஆங்க என்னும் சொல்:**

அந்தில்-ஆங்க, அசைநிலைக் கிளவி, என்று

ஆயிரண்டாகும் இயற்கைத்து என்ப.

அந்திலென்னுஞ்சொல், ஆங்கென்னும் இடப்பொருளுணர்த்துவதும் அசைநிலையுமென இரண்டாம்;

வருமே - சேயிழை யந்திற் கொழுநற் காணிய “ ( குறுந் - 293) - இடம்

அந்திற்-கச்சினன் கழலினன் (அகம் -76)– அசைநிலை

**கொல் என்னும் சொல்:**

கொல்லே ஐயம்.

குற்றிகொல்லோ மகன்கொல்லோ– ஐயம்

**எல் என்னும் சொல்:**

எல்லே இலக்கம்

எல் என்பது உரிச்சொல் நீர்மைத்தாயினும், ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமையான், இடைச்சொல்லென்று கோடும் என்பார் சேனாவரையர்.

எல்வனை (புறம் - 24) இலக்கம்

**ஆர் என்னும் சொல்:**

இயற்பெயர் முன்னர் ஆரைக் கிளவி

பலர்க்கு உரிஎழுத்தின் வினையொடு முடிமே.

இயற்பெயர் முன்னர் வரும் ஆர் என்னுமிடைச் சொற் பலரறி சொல்லால் முடியும்

குறிப்பு

பெருஞ் சேந்தனார் வந்தார்,

முடவனார் வந்தார்,

முடத்தாமக் கண்ணியார் வந்தார்,

தந்தையார் வந்தார்

நரியார் வந்தார்

தாம், தான் எல்லாம், நீயிர், நீ என்னும் ஐந்துமொழித்து அல்லாவியற்பெயரெல்லாவற்று முன்னரும் அ∴றிணையியற் பெயரல்லாவற்று முன்னரும் ஆரைக்கிளவி வருதலின், பெரும்பான்மை குறித்து இயற்பெயர் முன்னர் என்றார் தொல்காப்பியர்

நம்பியார் வந்தார்.

நங்கையார் வந்தார்

எனச் சிறுபான்மை உயர்திணைப் பெயர் முன்னர் வருதல் ஒன்றென முடித்த லென்பதனாற் கொள்க.

ஆரைக்கிளவி கள் ளென்பது போல ஒற்றுமைப்பட்டுப் பெயரீறாய் நிற்றலின், ஆரைக்கிளவி பலரறி சொல்லான் முடியுமென்றது அதனை யீறாகவுடைய பெயர் பலரறி சொல்லான் முடியுமென்றவாறாம்.

பலர்க்குரி யெழுத்தின் வினையொடு முடிமே என ஆரைக் கிளவியது இயல்புணர்த்தவே, அ∴து உயர்த்தற் பொருட்டாதலும் திணைவழுவும் பால்வழுவும் அமைத்தலும் பெற்றாம்.

ஒருமைப் பெயர்முன்னர் ஒருமை சிதையாமல் ஆரைக் கிளவி வந்து பலரறி சொல்லான் முடிதலின், ஒருவரைக்கூறும் பன்மைக் கிளவியின் வேறாத லறிக என்பார் சேனாவரையர்.

அசைநிலைக் கிளவி ஆகுவழி அறிதல்

ஆரைக்கிளவி அசைநிலையாமிடமறிக

பெயரினாகிய தொகையுமா ருளவே, ( சொல் - 67) ,

எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே" (எழுத்து - 61) எனவும் வரும்.

ஆகுவழியறிதல் என்றதனால், அசைநிலையாங்கால் உம்மை முன்னரும், உம்மீற்று வினைமுன்னரும் அல்லது வாராமை யறிக. சிறுபான்மை வருமேனுங் கொள்க.

**ஏ, குரை என்னும் சொற்கள்:**

ஏயும் குரையும்-இசைநிறை, அசைநிலை,

ஆயிரண்டு ஆகும் இயற்கைய என்ப

ஏ என்னும் இடைச்சொல்லும் குரையென்னும் இடைச் சொல்லும் இசைநிறையும் அசைநிலையும் என ஓரொன்றிரண்டாம்.

ஏஎ யிஃதொத்த னென்பெறான் கேட்டைக் காண் ( கலி - 61) - இசைநிறை.

அளிதோ தானேயது பெறலருங் குரைத்தே ( புறம் - 5) - இசைநிறை

ஏஎயென் சொல்லுக - அசை நிலை.

பல்குரைத்துன்பங்கள் சென்று படும் (குறள் - 1045) - அசைநிலை.

**மா என்னும் சொல்:**

மா என் கிளவி வியங்கோள் அசைச்சொல்.

மாவென்னு மிடைச்சொல் வியங்கோளைச் சார்ந்து அசை நிலையாய் வரும்;

புற்கை யுண்கமா கொற்கை யோனே - வியங்கோள் அசைநிலை

**முன்னிலை அசைச்சொற்கள்:**

மியா, இக, மோ, மதி, இகும், சின் என்னும்

ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.

மியாஇக, மோ, மதி, இகும், சின்முதலிய ஆறும் முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசைச்சொல்லாம்.

கேண்மியா சென்மியா

கண்பனி யான்றிக வென்றி தோழி

காமஞ் செப்பாது கண்டது மொழிமோ (குறுந் - 2)

உரைமதிவாழியோ வலவ

குறிப்பு

மெல்லம் புலம்ப கண்டிகும்

காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை (அகம் - 7)

இகும், சின் என்னும் சொற்கள்

அவற்றுள்,

இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்

தகு நிலை உடைய என்மனார் புலவர்.

மேற்கூறப்பட்ட ஆறனுள், இகுமும் சின்னும் படர்க்கைச் சொல்லோடுந் தன்மைச்சொல்லோடும் பொருந்து நிலையுடைய என எய்தியதன் மேல் சிறப்புவிதி வகுப்பார் தொல்காப்பியர்.

கண்டிகு மல்லமோ (ஐங்குறு - 121)

கண்ணும் படுமோ வென்றிசின் யானே ( நற் - 61)

- தன்மைக்கண் வந்தன.

புகழ்ந்திகு மல்லரோ பெரிதே

யார.∴ தறிந்தசி னோரே (குறுந் - 18)

- படர்க்கைக்கண் வந்தன.

**அம்ம என்னும் சொல்:**

அம்ம கேட்பிக்கும்.

அம்மவென்னு மிடைச்சொல் ஒருவனை ஒருவன் ஒன்று கேளென்று கொல் லுதற்கண் வரும்

அம்ம வாழி தோழி (ஐங் - 21)

மியா இக முதலாகிய அசைநிலை ஒரு பொருளுணர்த்தா வாயினும் முன்னிலைக்கண் அல்லது வாராமையால் அவ்விடம் உணர்விக்குமாறு போல அம்ம என்பதுவும் ஒரு பொருளுணர்த்தாதாயினும் ஒன்றனைக் கேட்பிக்கும் இடத்தல்லது வாராமையான் அப்பொருளுணர்விக்கும் என்பது விளக்கிய, கேட்பிக்கும் என்றார் என விளக்குவார் சேனாவரையர்.

**ஆங்க என்னும் சொல்:**

ஆங்க உரையசை.

ஆங்கவென்னும் இடைச்சொல் கட்டுரைக்கண் அசைநிலையாய் வரும்..

ஆங்கக்குயிலு மயிலுங்காட்டி

ஒப்பு இல் போலியும் அப் பொருட்டு ஆகும்.

குறிப்பு

ஒப்புமைணர்த்தாத போலிச்சொல்லும் ஆங்க வென்பதுபோல உரையசையாம்.

மங்கலமென்பதோ ரூருண்டு போலும் .

போலும் போல்வது என்னுந் தொடக்கத்துப் பலவாய்பாடுந் தழுவுதற்குப் போலி யென்றார். நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதூஉம் (நாலடி - 124)

அசைநிலையும் பொருள் குறித்தல்லது நில்லாமையின் அப்பொருட்டாகும் என்றார்.

**அசைநிலைச் சொற்கள்:**

யா, கா,

பிற, பிறக்கு, அரோ, போ, மாது என வரூஉம்

ஆயேழ் சொல்லும் அசைநிலைக் கிளவி.

யா, கா,பிற, பிறக்கு, அரோ, போ, மாது முதலாகிய ஏழிடைச் சொல்லும் அசைநிலையாம்

யா பன்னிருவர் மாணாக்கருள ரகத்தியனார்க்கு

புறநிழற்பட்டாளோ விவளிவட்காண்டிகா

தான் பிறவரிசை யறிதலிற்றன்னுந் தூக்கி ( புறம் - 140)

அதுபிறக்கு எனவும், நோதக விருங்குயி லாலுமரோ (கலி 33)

பிரியின் வாழா தென்போதெய்ய

விளிந்தன்று மாதவர்த் தெளிந்தவென் நெஞ்சே (நற்றிணை - 178 ).

இடம் வரையறாமையின் இவை மூன்றிடத்திற்கு முரிய.

**பிரிவில் அசைநிலைகள்:**

ஆக, ஆகல், என்பது என்னும்

ஆவயின் மூன்றும் பிரிவு இல் அசைநிலை.

ஆக, ஆகல், என்பது என்னும் மூன்று இடைச் சொல்லும், அசைநிலையாகும்பொழுது, இரட்டித்து நிற்கும்.

குறிப்பு

பிரிவிலசைநிலை யெனவே, தனித்து நின்று அசைநிலை யாகாவென்பதாம்.

ஒருவன் யான் இத்தகையவன், நீ இத்தகையன் என்றபோது என்றபோது கேட்டான் ஆக ஆக, ஆகல் ஆகல் என்னும்; இவை உடம்படாமைக்கண்ணும் ஆதரமில்வழியும் வரும். ஒருவனொன்றுரைப்பக் கேட்டான் என்பது என்பது என்னும். அது நன்குரைத்தற் கண்ணும் இழித்தற்கண்ணும் வரும்.

**ஔ என்னும் சொல்:**

ஈர் அளபு இசைக்கும் இறுதியில் உயிரே

ஆயியல் நிலையும் காலத்தானும்,

அளபெடை நிலையும் காலத்தானும்,

அளபெடை இன்றித் தான் வரும் காலையும்,

உள என மொழிப-பொருள் வேறுபடுதல்

குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.

மொழிக்கு இறுதியாய் வாராது எனப்பட்ட இரண்டு மாத்திரை உடைத்தாய் ஔகாரம் பிரிவில் அசைநிலையொன்று மேற்கூறப்பட்டன போன்று இரட்டித்து நிற்குமிடத்தும் அளபெடையின்றி வருமிடத்தும் பொருள் வேறுபடுதல் உள, அப்பொருள் வேறுபாடு சொல்வான் குறிப்பிற்குத் தரும் ஓசை வேறுபாட்டால் புலப்படும். பொருள் வேறுபாடான வழக்கு நோக்கச் சிறப்பும் மாறு பாடுமாம்.

ஔ ஔவொருவன் தவஞ் செய்தவாறு சிறப்புத் தோன்றும்

ஒரு தொழில் செய்வானை ஔஔ இனிச்சாலும் - மாறுபாடு தோன்றும்

ஔஉ வொருவ னிரவலர்க் கீந்த வாறு– அளபெடுத்து வந்தது:

ஔவினித் தட்டுப்புடையல் - அளபெடையின்றி வந்தது

**குறிப்புச் சொற்கள்:**

நன்று ஈற்று ஏயும், அன்று ஈற்று ஏயும்,

அந்து ஈற்று ஓவும், அன் ஈற்று ஓவும்,

அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.

குறிப்பு

நன்றீற்றேயும் அன்றீற்றேயுமாவன நன்றே அன்றே என்பன ஆகும். அந்தீற்றோவும் அன்னீற்றோவுமாவன அந்தோ அன்னோ என்பன ஆகும் நன்றினது ஈற்றின்கண் ஏயென விரியும், இவ் விரிவு. ஏனையவற்றிற்கு மொக்கும்.

ஒருவன் ஒன்றுரைத்தவழி அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றே யன்றே என அடிக்கலும் வரும்; அவை மேவாமைக் குறிப்பு விளக்கும். அவன் அன்றேயிது செய்வான் என அடுக்காது நின்றவழி அன்றீற்றேவுக்குத் தெளிவு முதலாகிய பிறபொருளும் படும். ஏனையிரண்டும் அடுக்கியும் அடுக்காதும் இரங்கற் குறிப்பு வெளிப்படுக்கும். இவையுங் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குவன ஆகும்.

அன்னபிறவு மென்றதனால்,

அதோ அதோ

சோ, சோ

ஒக்கும் ஒக்கும் என்னுந் தொடக்கத்தன கொள்ளப்படும்.

**உம் என்னும் சொல்:**

எச்ச உம்மையும், எதிர்மறை உம்மையும்,

தத்தமுள் மயங்கும் உடனிலை இலவே

எச்சவும்மை நின்றவழி எஞ்சு பொருட்கிளவியாம் எதிர்மறையும்மைத் தொடர் வந்து தம்முண் மயங்குதல் இல்லை.

சாத்தனும் வந்தான் கொற்றனும் வரலும் உரியன் எனின் இயையாமை காண்க.

எஞ்சு பொருட் கிளவி செஞ்சொல்ஆயின்,

பிற்படக் கிளவார், முற்படக் கிளத்தல்

எச்சவும்மையால் தழுவப்படும் எஞ்சுபொருட் கிளவி உம்மையில் சொல்லாயின் அவ் உம்மையில் சொல்லை அவ் உம்மைத் தொடர்க்குப் பின் சொல்லாது முன் சொல்லாது முன் சொல்லல் வேண்டும்

சாத்தன் வந்தான் கொற்றனும் வந்தான் என வரும்.

குறிப்பு

கொற்றனும் வந்தான் சாத்தன் வந்தான் எனப் பிற்படக் கிளப்பின், முற்கூறியதனை விலக்குவதுபோன்று பொருள் கொள்ளாமை கண்டு கொள்க.

அடகுபுலால் பாகு பாளிதமு முண்ணான்

கடல்போலுங் கல்வியவன்

என்பதும் அதுவாகும்.

உம்மையடாதே தானே நிற்றலிற் செஞ்சொலென்றார்.

**முற்றும்மை எச்சமாதல்:**

முற்றிய உம்மைத் தொகைச்சொல் மருங்கின்,

எச்சக் கிளவி உரித்தும் ஆகும்.

முற்றும்மை யடுத்து நின்ற தொகைச்சொல்லிடத்து எச்சச்சொல் உரித்துமாம்

பத்தும்கொடால், அனைத்துங்கொடாதே என்னும் போது முற்றும்மை தம்பொருளுணர்த்தாது சில தவிர்த்துக் கொடு என்னும் பொருள் தோன்ற நின்றது

இவை மூன்று சூத்திரத்தானும் வழுவற்க என இடைச்சொற் பற்றி மரபுவழுக் காத்தவாறு. அமைந்தது.

**ஏ என்னும் சொல்லிற்கு முடிவு:**

ஈற்று நின்று இசைக்கும் ஏ என் இறுதி,

கூற்றுவயின், ஓர் அளபு ஆகலும் உரித்தே.

செய்யுள் இறுதிக்கண் நின்றிசைக்கும் ஈற்றசை யேகாரங் கூற்றிடத்து ஒருமாத்திரைத்து ஆகலும் உரித்து

கடல்போற் றேன்றல காடிறந் தோரே (அகம் - க ) - ஓரளபாயிற்று.

**எண்ணிடைச் சொற்கள்:**

**எண்ணில் வரும் உம்மை ; எதிர்மறை.**

உம்மை எண்ணும், என என் எண்ணும்,

தம்வயின் தொகுதி கடப்பாடு இலவே.

உம்மையான் வருமெண்ணும் எனவான் வரும் எண்ணும் இறுதிக்கண் தொகை பெறுதலைக் கடப்பாடாக வுடையவல்ல. எனவே, தொகை பெற்றும் பெறாதும் வரும்.

குறிப்பு

உயர்திணைக் குரிமையு ம∴றிணைக் குரிமையும்

ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்

அம்மூ வுருபின (சொல்- 160)

இசையினுங்குறிப்பினும் பண்பினுந் தோன்றி (சொல் - 297)

நிலனென நீரெனத் தீயென வளியென நான்கும்

உயிரென வுடலென வின்றியமையா

- எனத் தொகை பெற்றும் பெறாதும் வந்தன

உயிரென வுடலென வின்றி யமையா

எனவும் அவ்விருவகை எண்ணுந் தொகைபெற்றும் பெறாதும் வந்தன.

தொகையெனப் பொதுப்படக் கூறியவதனான் எண்ணுப் பெயரே அன்றி அனைத்தும் எல்லா மென்னுந் தொடக்கத் தனவுங் கொள்க என்பார் சேனாவரையர்.

**எண்ணில் வரும் ஏ என்னும் சொல்:**

எண் ஏகாரம் இடையிட்டுக் கொளினும்,

எண்ணுக் குறித்து இயலும் என்மனார் புலவர்.

சொற்றொறும் வாராது எண்ணேகாரம் இடையிட்டு வரினும் எண்ணுதற் பொருட்டாம்.

மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்

தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே

யுறலோ டாங்கைம் புலனென மொழிப

எனவும் வரும்.

குறிப்பு

**எனா, என்றா என்னும் சொற்கள்:**

உம்மை தொக்க எனா என் கிளவியும்,

ஆ ஈறு ஆகிய என்று என் கிளவியும்,

ஆயிரு கிளவியும் எண்ணுவழிப்பட்டன.

உம்மை தொக்கு நின்ற எனாவென்னுமிடைச் சொல்லும் என்றாவென்னு மிடைச்சொல்லும் இரண்டும் எண்ணுமிடத்து வரும்

நிலனெனா நீரெனா - எனா

நிலனென்றா– என்றா

உம்மைதொக்க வெனாவென்கிளவி என்றமையால் எனாவு மென அச்சொல் உம்மோடு வருதலுமுடைத்தென்பதாம். உம்மோடு வந்தவழி அவ்வெண்ணும்மை எண்ணுளடங்கும்.

எண்ணுவழிப்பட்டன எனவே, அவை சொற்றொறும் வருதலே யன்றி இடையிட்டும் வருமென்பதாம். பின்சாரயல்புடை தேவகை யெனா (சொல் - 82) எனவும், ஒப்பிற் புகழிற் பழியி னென்றா (சொல் - 72 ) எனவும் இடையிட்டு வந்தவாறு. இவை எண்ணுதற்கண் வாராமையானும் அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும் ( சொல் - 260 ) எனச் சூத்திரஞ் சுருங்குதற் சிறப்பினானும் அவற்றினை ஈண்டு வைத்தார்.

**தொகை பெற்று முடியும் எண்ணிடைச் சொற்கள்:**

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்,

பெயர்க்கு உரி மரபின் செவ்வெண் இறுதியும்,

ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்,

யாவயின் வரினும், தொகை இன்று இயலா

மேற்சொல்லப்பட்ட எனா என்றா என்பனவற்றான் வரும் எண்ணி னிறுதியும், இடைச்சொல்லான் அன்றிப் பெயரான் எண்ணப்படுஞ் செவ்வென் இறுதியும், ஏகாரத்தான் வரும் எண்ணினிறுதியும், யாதானுமோர் இடத்து வரினும் தொகையின்றி நில்லா.

நிலனெனா நீரெனா விரண்டும்

நிலனென்றா நீரென்றா விரண்டும்

நிலநீரென விரண்டும்

நிலனே நீரேயென விரண்டும் எனவும் தொகை பெற்று வந்தவாறு.

செவ்வெண் இடைச்சொல்லெண் ணன்றென் றாராயினும், எண்ணாதலுந் தொகை பெறுதலுமாகிய ஒப்புமையான் ஈண்டுக் கூறினார்.

குறிப்பு

**எண்ணில் வரும் உம்மிற்கு மேலும் ஒரு முடிவு:**

உம்மை எண்ணின் உருபு தொகல் வரையார்

பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலும்

நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப (சொல்-104)

என்னும் பொதுவிதியால் உம்மை யெண்ணின்கண் உருபு தொகல் பெறப்பட்டமையால், பெற்றதன் பெயர்த்துரை நியமப்பொருட்டாகலான் உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையப்படாது ஏனை யெண்ணின்கண் அவை வரையப்படுமென நியமித்தல் இதற்குப் பயனாகக் கொள்க என்பார் சேனாவரையர்.

குன்றி கோபங்கொடிவிடு பவள

மொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்

எனப் பிறவெண்ணின்கண் உருபு தொக்கதா எனின் அற்றன்று செவ்வெண் தொகையின்றி நில்லாமையின் அவற்றையென ஒரு சொல் விரிக்கப்படும் ; விரிக்கவே . குன்றி முதலாயின எழுவாயாய் நின்றனவா மென்பது.

பாட்டுங் கோட்டியு மறியாப் பயமி

தேக்கு மரம்போல்நீடிய ஒருவன்

இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றி (சொல் - 297) என உம்மையெண்ணின்கண் உருபு தொக்கவாறு கண்டு கொள்க.

வரையாது என்றமையால் எல்லாவுருபந் தொகாது,ஐயுங் கண்ணுமே தொக்கு வரும் எனவெனக் கொள்க

யானை தேர் குதிரை காலா ளெறிந்தார் என உம்மையும் உருபும் உடன் றொக்கவழி, இதனை உம்மைத்தொகை யென்னாது உருபுதொகை என்க என இச்சூத்திரத்திற்குக் கருத்தாக உரைத்தாரால் உரை யாசிரியர்: அஃது உம்மைத் தொகையாதலின் ஒருசொன் னடைத்தாய் உருபேற்றானும் பயனிலை கொண்டானும் நிற்கும். அத்தொகையிடை உருபின்மை சிற்றறிவினார்க்கும் புலனாகும்; அதனான் அஃதவர்க்கு கருத்தன்மை சொல்லவேண்டுமோ வென்பதுஎன மறுத்துரைக்கின்றார் சேனாவரையர்.

*Self-Instructional Material*

குறிப்பு

**உம் உந்து ஆதல்:**

உம் உந்து ஆகும் இடனுமார் உண்டே

வினைசெயல் மருங்கிற் காலமொடு வருவனவற்றுள் உம்மீறு உந்தாய்த் திரிதலு முடைத்து.

நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து (புறம் - 295)

நாரரி நறவினாண் மகிழ்தூங் குந்து எனவும் வரும்.

வினைசெயன் மருங்கிற் காலமொடு வரும் உம்மென்பது ஏற்புழிக் கோடலென்பதனாற் பெற்றாம்.

**எண்ணிடைச் சொற்கள் வினைச் சொற்களில் வருதல்:**

வினையொடு நிலையினும் எண்ணு நிலை திரியா;

நினையல் வேண்டும், அவற்று அவற்று இயல்பே.

வினையொடு நிற்பினும் எண்ணிடைச் சொற்கள் தன்னிலையில் திரரியாது ; அவற்றொடு வருங்கால் அவற்றவற்றியல்பு ஆராய்தல் வேண்டும்

உண்டுந்தின்றும் பாடியும் வந்தான்

உண்ணவெனத் தின்ன வெனப் பாடவென வந்தான்

பெரும்பான்மையும் பெயரோடல்லது எண்ணிடைச்சொல் நில்லாமையின் அதனை முற்கூறி, சிறுபான்மை வினையொடு நிற்றலுமுடைமையான் இதனை ஈண்டுக் கூறினார்.

நினையல் வேண்டும் அவற்றவற்றியல்பே யென்றதனான். எண்ணிடைச் சொல் முற்றுச்சொல்லும் பெயரெச்சமும் பற்றி வாராது என்பதுவும், வினையெச்சத்தோடும் ஏற்பன வல்லது வாராதென்பதுவும் ஆண்டுத் தொகை பெறுதல் சிறுபான்மை யென்பதூஉங் கொள்க என்பார் சேனாவரையர்.

சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான், வேடன்வந்தான் என மூவரும் வந்தமையாற் கலியாணம் பொலிந்தது எனச் செவ்வெண்தொகை பெற்று வந்ததென்ற உரையாசிரியரை எடுத்துக்காட்டும் ; அவை எழுவாயும் பயனிலையுமாய் அமைந்து மாறுதலின் எண்ணப்படாமை யானும். மூவருமென்பது சாத்தன் முதலாயினோர் தொகையாகலானும் அது போலியுரையென்க. என மறுத்துரைக்கின்றார் சேனாவரையர்.

**எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்:**

என்றும், எனவும், ஒடுவும், தோன்றி,

ஒன்று வழி உடைய, எண்ணினுள் பிரிந்தே

என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித் தோன்றி எண்ணினுட் பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றுமிடம் உடையனவாகும்.

வினைபகை யென்றிரண்டி னெச்சம் (குறள் - 874)

கண்ணிமை நொடியென (நூன்மரபு - 7 )

பொருள் கருவிகாலம் வினையிடனொ டைந்தும் (குறள் - 375)

என அவை ஒருவழி நின்று, வினையென்று பகையென்று எனவும், கண்ணிமையென நொடியென எனவும் பொருளொடு கருவியோடு காலத்தோடு வினையொடு இடத்தோடு எனவும் நின்றவிடத்துப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியவாறு கண்டு கொள்க.

குறிப்பு

**இடைச்சொற்களின் பொருள் அறிதல்:**

அவ் அச் சொல்லிற்கு அவை அவை பொருள் என

மெய் பெறக் கிளந்த இயல ஆயினும்,

வினையொடும் பெயரொடும் நினையத் தோன்றி,

திரிந்து வேறு வரினும், தெரிந்தனர் கொளலே

மேற்கூறப்பட்ட இடைச்சொற்கள், அவ்வச் சொல்லிற்கு அவையவை பொருளென நிலைபெறச் சொல்லப்பட்ட இயல்புடையனவாயினும், வினையொடும் பெயரொடும் ஆராய்ந்து உணரத் தோன்றிவேறு பொருளவாயும் அசைநிலையாயுந் திரிந்து வரினும், ஆராய்ந்து கொள்ள வேண்டும் என்பதாம்.

எனவே,கூறிய முறையான் வருதல் பெரும்பான்மை என்றும், வேறுபட வருதல் சிறுபான்மை என்றுஞ் சொல்லியவாறாம்.

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ (அகம் - 49)

கலக்கொண்டேன் கள்ளென்கோ காழ்கொற்றன் சூடென்கோ

- ஓகாரம் ஈற்றசையாயும் எண்ணாயும் வந்தது.

ஓர்கமா தோழியவர் தேர்மணிக் குரலே (அகம் - 273) -மா முன்னிலை யசைச் சொல்லாயிற்று.

அதுமற் கொண்கன் றேரே - மன் அசைநிலையாயிற்று.

குறிப்பு

**புறனடை:**

கிளந்த அல்ல வேறு பிற தோன்றினும்,

கிளந்தவற்று இயலான் உணர்ந்தனர் கொளலே!

மேற்சொல்லப்பட்டனவன்றி யவை போல்வன பிறவரினும், அவற்றைக் கிளந்த சொல்லினியல்பால் உணர்ந்து கொள்க

கிளந்தவற்றியலான் என்றது, ஆசிரியர் ஆணையான் அன்றிக் கிளந்தவற்றையும் இன்னவென்றறிவது வழக்கினுட் சார்பும் இடமுங் குறிப்பும் பற்றியன்றே; கிளவாதவற்றையும் அவ்வாறு சார்பும் இடமுங் குறிப்பும் பற்றி இது அசைநிலை இது இசைநிறை இது குறிப்பால் இன்ன பொருளுணர்த்தும் என்றுணர்ந்து கொள்க.

சிறிதுதவிர்ந் தீக மாளநின் பரிசில ருய்ம்மார்

சொல்லென் றெய்ய நின்னொடு பெயர்ந்தே

அறிவார்யார.்.திறுவழி யிறுகென

பணியுமா மென்றும் பெருமை (குறள் - 978)

ஈங்கா குநவா லென்றிசின் யானே (நற்றிணை - 55)

மாள தெய்ய என ஆம் ஆல்

- என்பனவும் அசைநிலையாய் வந்தன

குன்றுதொறாடலு நின்றதன் பண்பே (திருமுருகா - 217)

- எனத்தொறுவென்பதுதான் சார்ந்த மொழிப் பொருட்குப் பன்மையும் இடமாதலுமுணர்த்தி நிற்கும்.ஆனம், ஏனம், ஓனம் என்பன எழுத்துச் சாரியை.

**அசைநிலைகள்:**

யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது என்பன அசைநிலைகள் ஆகும்

**முன்னிலை அசைச்சொற்கள்:**

மியா, இக, மோ, மதி,ஈகும், சின் என்பன முன்னிலை அசைச்சொற்கள்.

குறிப்பு

**வியங்கோள் அசைச்சொல்:**

மியா என்பதாகும்.

**தத்தம் குறிப்பில் பொருள் செய்குவன:**

மன், தில், உம், ஓகாரம், ஏகாரம். ஏன, என்று, மற்று, எற்று, மற்றையது, மன்ற, தஞ்சம், அந்தில், கொல், எல், ஔகாரம், நன்றே, அன்றே, அந்தோ, அன்னோ என்பன தத்தம் குறிப்பில் பொருள் செய்குவன ஆகும்.

**எண்ணிடைச் சொற்கள்:**

உம், என, என, என்றா, என்று, என, ஒடு, போன்றன எண்ணிடைச் சொற்கள் ஆகும்.

**பயிற்சி வினாக்கள்:**

1.முன்னிலை அசைச்சொற்கள் குறித்து எழுதுக.

முன்னிலை அசைச்சொற்கள்:

மியா, இக, மோ, மதி, இகும், சின்" என்னும்
ஆவயின் ஆறும் முன்னிலை அசைச்சொல்.

- மியா இக, மோ, மதி, இகும், சின்" முதலிய ஆறும் முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசைச்சொல்லாம்
- கேண்மியா சென்மியா
- கண்பனி யான்றிக வென்றி தோழி
- காமஞ் செப்பாது கண்டது மொழிமோ (குறுந் - 2)
- உரைமதிவாழியோ வலவ
- மெல்லம் புலம்ப கண்டிகும்
- காப்பும் பூண்டிசிற் கடையும் போகலை (அகம் - 7)
- இகும், சின் என்னும் சொற்கள்
- அவற்றுள்,
- இகுமும் சின்னும் ஏனை இடத்தொடும்
- தகு நிலை உடைய என்மனார் புலவர்.
- மேற்கூறப்பட்ட ஆறனுள், இகுமும் சின்னும் படர்க்கைச் சொல்லோடுந் தன்மைச்சொல்லோடும் பொருந்து நிலையுடைய என எய்தியதன் மேல் சிறப்புவிதி வகுப்பார் தொல்காப்பியர்.

- கண்டிகு மல்லமோ (ஐங்குறு - 121)
- கண்ணும் படுமோ வென்றிசின் யானே ( நற் - 61)

குறிப்பு

- தன்மைக்கண் வந்தன.
- புகழ்ந்திகு மல்லரோ பெரிதே
- யார.். தறிந்தசி னோரே (குறுந் - 18)
- படர்க்கைக்கண் வந்தன.

2.குறிப்புச் சொற்கள் என்பதனை விளக்குக.

குறிப்புச் சொற்கள்:

நன்று ஈற்று ஏயும், அன்று ஈற்று ஏயும்,

அந்து ஈற்று ஓவும், அன் ஈற்று ஓவும்,

அன்ன பிறவும் குறிப்பொடு கொள்ளும்.

நன்றீற்றேயும் அன்றீற்றேயுமாவன நன்றே அன்றே என்பன. ஆகும். அந்தீற்றோவும் அன்னீற்றோவுமாவன அந்தோ அன்னோ என்பன ஆகும் நன்றின. தீற்றின்கண் ஏயென விரியும், இவ் விரிவு ஏனையவற்றிற்கு மொக்கும்.

ஒருவன் ஒன்றுரைத்தவழி அதற்கு மேவாதான் நன்றே நன்றே, அன்றே யன்றே என அடிக்கலும் வரும்; அவை மேவாமைக் குறிப்பு விளக்கும். அவன் அன்றேயிது செய்வான் என அடுக்காது நின்றவழி அன்றீற்றேவுக்குத் தெளிவு முதலாகிய பிறபொருளும் படும் . ஏனையிரண்டும் அடுக்கியும் அடுக்காதும் இரங்கற் குறிப்பு வெளிப்படுக்கும் . இவையுங் தத்தங் குறிப்பிற் பொருள் செய்குவன. ஆகும்.

அன்னபிறவு மென்றதனால்,

அதோ அதோ

சோ, சோ

ஒக்கும் ஒக்கும் என்னுந் தொடக்கத்தன கொள்ளப்படும்.

3.ஔ என்னும் இடைச்சொல் எவ்வாறு வரும்?

ஔ என்னும் சொல்:

ஈர் அளபு இசைக்கும் இறுதியில் உயிரே

ஆயியல் நிலையும் காலத்தானும்,

அளபெடை நிலையும் காலத்தானும்,

அளபெடை இன்றித் தான் வரும் காலையும்,

குறிப்பு

உள என மொழிப-பொருள் வேறுபடுதல்

குறிப்பின் இசையான் நெறிப்படத் தோன்றும்.

மொழிக்கு இறுதியாய் வாராது எனப்பட்ட இரண்டு மாத்திரை உடைத்தாய் ஔகாரம் பிரிவில் அசைநிலையொன்று மேற்கூறப்பட்டன போன்று இரட்டித்து நிற்குமிடத்தும் அளபெடையின்றி வருமிடத்தும் பொருள் வேறுபடுதல் உள, அப்பொருள் வேறுபாடு சொல்வான் குறிப்பிற்குத் தரும் ஓசை வேறுபாட்டால் புலப்படும். பொருள் வேறுபாடான வழக்கு நோக்கச் சிறப்பும் மாறு பாடுமாம்.

ஔ ஔவொருவன் தவஞ் செய்தவாறு சிறப்புத் தோன்றும்

ஒரு தொழில் செய்வானை ஔஔ இனிச்சாலும் - மாறுபாடு தோன்றும்

ஔஉ வொருவ னிரவலர்க் கீந்த வாறு– அளபெடுத்:து வந்தது:

ஔவினித் தட்டுப்புடையல் - அளபெடையின்றி வந்தது.

4. எண்ணிடைச் சொற்கள் - கட்டுரை வரைக.

**எண்ணிடைச் சொற்கள்:**

எண்ணில் வரும் உம்மை எதிர்மறை.

உம்மை எண்ணும், என என் எண்ணும்,

தம்வயின் தொகுதி கடப்பாடு இலவே.

உம்மையான் வருமெண்ணும் எனவான் வரும் எண்ணும் இறுதிக்கண் தொகை பெறுதலைக் கடப்பாடாக வுடையவல்ல. எனவே, தொகை பெற்றும் பெறாதும் வரும்.

உயர்திணைக் குரிமையு ம.ஃ.றிணைக் குரிமையும்

ஆயிரு திணைக்குமோ ரன்ன வுரிமையும்

அம்மூ வுருபின (சொல்- 160)

இசையினுங்குறிப்பினும் பண்பினுந் தோன்றி (சொல் - 297)

நிலனென நீரெனத் தீயென வளியென நான்கும்

உயிரென வுடலென வின்றியமையா

எனத் தொகை பெற்றும் பெறாதும் வந்தன

உயிரென வுடலென வின்றி யமையா

எனவும் அவ்விருவகை எண்ணுந் தொகைபெற்றும் பெறாதும் வந்தன.

குறிப்பு

தொகையெனப் பொதுப்படக் கூறியவதனான் எண்ணுப் பெயரே அன்றி அனைத்தும் எல்லா மென்னுந் தொடக்கத் தனவுங் கொள்க என்பார் சேனாவரையர்.

எண்ணில் வரும் ஏ என்னும் சொல்:

எண் ஏகாரம் இடையிட்டுக் கொளினும்,

எண்ணுக் குறித்து இயலும் என்மனார் புலவர்.

சொற்றொறும் வாராது எண்ணேகாரம் இடையிட்டு வரினும் எண்ணுதற் பொருட்டாம்

மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்

தோற்ற மிசையே நாற்றஞ் சுவையே

யுறலோ டாங்கைம் புலனென மொழிப

எனவும் வரும்.

எனா, என்றா என்னும் சொற்கள்:

உம்மை தொக்க எனா என் கிளவியும்,

ஆ ஈறு ஆகிய என்று என் கிளவியும்,

ஆயிரு கிளவியும் எண்ணுவழிப்பட்டன.

உம்மை தொக்கு நின்ற எனாவென்னுமிடைச் சொல்லும் என்றாவென்னு மிடைச்சொல்லும் இரண்டும் எண்ணுமிடத்து வரும்

நிலனெனா நீரெனா - எனா

நிலனென்றா– என்றா

உம்மைதொக்க வெனாவென்கிளவி என்றமையால் எனாவு மென அச்சொல் உம்மோடு வருதலுமுடைத்தென்பதாம். . உம்மோடு வந்தவழி அவ்வெண்ணும்மை எண்ணுளடங்கும்.

எண்ணுவழிப்பட்டன எனவே, அவை சொற்றொறும் வருதலே யன்றி இடையிட்டும் வருமென்பதாம் . பின்சாரயல்புடை தேவகை யெனா (சொல் - 82) எனவும், ஒப்பிற் புகழிற் பழியி னென்றா (சொல் - 72 ) எனவும் இடையிட்டு வந்தவாறு. இவை எண்ணுதற்கண் வாராமையானும்

அவற்றின் வரூஉ மெண்ணி னிறுதியும் ( சொல் - 260 ) எனச் சூத்திரஞ் சுருங்குதற் சிறப்பினானும் அவற்றினை ஈண்டு வைத்தார்.

குறிப்பு

தொகை பெற்று முடியும் எண்ணிடைச் சொற்கள்:

அவற்றின் வரூஉம் எண்ணின் இறுதியும்,

பெயர்க்கு உரி மரபின் செவ்வெண் இறுதியும்,

ஏயின் ஆகிய எண்ணின் இறுதியும்,

யாவயின் வரினும், தொகை இன்று இயலா

மேற்சொல்லப்பட்ட எனா என்றா என்பனவற்றான் வரும் எண்ணி னிறுதியும் இடைச்சொல்லான் அன்றிப் பெயரான் எண்ணப்படுஞ் செவ்வென் இறுதியும், ஏகாரத்தான் வரும் எண்ணினிறுதியும், யாதானுமோர் இடத்து வரினும் தொகையின்றி நில்லா.

நிலனெனா நீரெனா விரண்டும்

நிலனென்றா நீரென்றா விரண்டும

நிலநீரென விரண்டும்

நிலனே நீரேயென விரண்டும் எனவும் தொகை பெற்று வந்தவாறு.

செவ்வெண் இடைச்சொல்லெண் ணன்றென் றாராயினும், எண்ணாதலுந் தொகை பெறுதலுமாகிய ஒப்புமையான் ஈண்டுக் கூறினார்.

எண்ணில் வரும் உம்மிற்கு மேலும் ஒரு முடிவு:

உம்மை எண்ணின் உருபு தொகல் வரையார்

பிறிதுபிறி தேற்றலு முருபுதொக வருதலும்

நெறிபட வழங்கிய வழிமருங் கென்ப (சொல்-104)

என்னும் பொதுவிதியால் உம்மை யெண்ணின்கண் உருபு தொகல் பெறப்பட்டமையால் , பெற்றதன் பெயர்த்துரை நியமப்பொருட்டாகலான் உம்மை யெண்ணி னுருபுதொகல் வரையப்படாது ;ஏனை யெண்ணின்கண் அவை வரையப்படுமென நியமித்தல் இதற்குப் பயனாகக் கொள்க என்பார் சேனாவரையர்

குன்றி கோபங்கொடிவிடு பவள

மொண்செங் காந்த ளொக்கு நின்னிறம்

குறிப்பு

எனப் பிறவெண்ணின்கண் உருபு தொக்கதா எனின் அற்றன்று செவ்வெண் தொகையின்றி நில்லாமையின் அவற்றையென ஒரு சொல் விரிக்கப்படும்; விரிக்கவே குன்றி முதலாயின எழுவாயாய் நின்றனவா மென்பது.

பாட்டுங் கோட்டியு மறியாப் பயமி

தேக்கு மரம்போல் நீடிய ஒருவன்

இசையினுங் குறிப்பினும் பண்பினும் தோன்றி (சொல் - 297) என உம்மையெண்ணின்கண் உருபு தொக்கவாறு கண்டு கொள்க.

வரையாது என்றமையால் எல்லாவுருபந் தொகாது,ஐயுங் கண்ணுமே தொக்கு வரும் எனவெனக் கொள்க

யானை தேர் குதிரை காலா ளெறிந்தார் என உம்மையும் உருபும் உடன் றொக்கவழி, இதனை உம்மைத்தொகை யென்னாது உருபுதொகை என்க என இச்சூத்திரத்திற்குக் கருத்தாக உரைத்தாரால் உரை யாசிரியர்: அ∴து உம்மைத் தொகையாதலின் ஒருசொன் னடைத்தாய் உருபேற்றானும் பயனிலை கொண்டானும் நிற்கும். அத்தொகையிடை உருபின்மை சிற்றறிவினார்க்கும் புலனாகும்; அதனான் அ∴தவர்க்கு கருத்தன்மை சொல்லவேண்டுமோ வென்பது.என மறுத்துரைக்கின்றார்.

உம் உந்து ஆதல்:

உம் உந்து ஆகும் இடனுமார் உண்டே

வினைசெயன் மருங்கிற் காலமொடு வருவனவற்றுள் உம்மீறு உந்நாய்த் திரிதலு முடைத்து

நீர்க்கோழி கூப்பெயர்க் குந்து (புறம் - 295)

நாரரி நறவினாண் மகிழ்தூங் குந்து எனவும் வரும்.

வினைசெயன் மருங்கிற் காலமொடு வரும் உம்மென்பது ஏற்புழிக் கோடலென்பதனாற் பெற்றாம்.

எண்ணிடைச் சொற்கள் வினைச் சொற்களில் வருதல்:

வினையொடு நிலையினும் எண்ணு நிலை திரியா;

நினையல் வேண்டும், அவற்று அவற்று இயல்பே.

வினையொடு நிற்பினும் எண்ணிடைச் சொற்கள் தன்னிலையில் திரரியாது; அவற்றொடு வருங்கால் அவற்றவற்றியல்பு ஆராய்தல் வேண்டும்

உண்டுந்தின்றும் பாடியும் வந்தான்

உண்ணவெனத் தின்ன வெனப் பாடவென வந்தான்

பெரும்பான்மையும் பெயரோடல்லது எண்ணிடைச்சொல் நில்லாமையின் அதனை முற்கூறி, சிறுபான்மை வினையொடு நிற்றலுமுடைமையான் இதனை ஈண்டுக் கூறினார்.

நினையல் வேண்டும் அவற்றவற்றியல்பே யென்றதனான். எண்ணிடைச் சொல் முற்றுச்சொல்லும் பெயரெச்சமும் பற்றி வாராது என்பதுவும், வினையெச்சத்தோடும் ஏற்பன வல்லது வாராதென்பதுவும் ஆண்டுத் தொகை பெறுதல் சிறுபான்மை யென்பதூஉங் கொள்க என்பார் சேனாவரையர்

சாத்தன் வந்தான், கொற்றன் வந்தான், வேடன்வந்தான் என மூவரும் வந்தமையாற் கலியாணம் பொலிந்தது எனச் செவ்வெண்தொகை பெற்று வந்ததென்ற உரையாசிரியரை எடுத்துக்காட்டும் ; அவை எழுவாயும் பயனிலையுமாய் அமைந்து மாறுதலின் எண்ணப்படாமை யானும் மூவருமென்பது சாத்தன் முதலாயினோர் தொகையாகலானும் அது போலியுரையென்க. என மறுத்துரைக்கின்றார்.

எண்ணிடைச் சொற்கள் பிரிந்து சென்று ஒன்றுதல்:

என்றும், எனவும், ஒடுவும், தோன்றி,

ஒன்று வழி உடைய, எண்ணினுள் பிரிந்தே

என்றும் எனவும் ஒடுவும் என்பன ஒருவழித் தோன்றி எண்ணினுட் பிறவழியும் பிரிந்து சென்று ஒன்றுமிடம் உடைய.னவாகும்

வினைபகை யென்றிரண்டி னெச்சம் (குறள் - 874)

கண்ணிமை நொடியென (நூன்மரபு - எ )

பொருள் கருவிகாலம் வினையிடனொ டைந்தும் (குறள் - 375)

என அவை ஒருவழி நின்று வினையென்று பகையென்று எனவும், கண்ணிமையென நொடியென எனவும் பொருளொடு கருவியோடு காலத்தோடு வினையொடு இடத்தோடு எனவும் நின்றவிடத்துப் பிரிந்து பிறவழிச் சென்று ஒன்றியவாறு கண்டு கொள்க.

குறிப்பு

## உரியியல்

உரிச்சொல்லின் இலக்கணம் உணர்த்தும் இயல் ஆதலின் உரியியல் எனப்பட்டது, தமக்கியல் பில்லாத இடைச் சொற்கள் போலவும் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல் ஆயிற்று என்பார் சேனாவரையர். எழுத்திகாரத்தில் அவற்றை குறை சொற் கிளவி என்று குறித்தமையால் வடநூலாசிரியர் தாது எனக் குறித்த சொற்களே அவையென்று சொல்லப்படும்.அவையும் குறை சொல் ஆதலான் என்று குறிப்பிடுவார் தெய்வச் சிலையார்.உரிச்சொல் செய்யுளுக்கே உரியதென்றும் வினையடை, பெயரடை என்னும் நிலையில் வருவதென்றும் கூறுவர்.நச்சினாக்கினியர். அது தமக்கியல்பில்லா இடைச்சொற் போலாது இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்கு உரியனவாய் வருதலின் உரிச்சொல் ஓத்து என்னும் பெயரதாயிற்று.ஈறு பற்றிப் பலபொருள் விளக்கலும் உருபேற்றலும் இன்றி பெயரையும் வினையையும் சார்ந்து பொருட்குணத்தை விளக்கலின் உரிச்சொல் பெயரின் வேறென்றுணர்க என்பார் சேனாவரையர்.

**உரிச்சொல்லின் பொது இலக்கணம்:**

உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை,

இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி,

பெயரினும் வினையினும் மெய் தடுமாறி,

ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்,

பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்,

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி,

தம்தம் மரபின் சென்று நிலை மருங்கின்,

எச் சொல் ஆயினும், பொருள் வேறு கிளத்தல்

உரிச்சொல்லை விரித்துரைக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேல் தோன்றி . பெயர்க் கண்ணும் வினைக்கண்ணும் தம் உருபு தடுமாறி ஒருசொற் பலபொருட் குரித்தாய் வரினும் பலசொல் ஒருபொருட் குரித்தாய் வரினும் கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொரு சொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப்படும் என்பதாகும்.

**குறிப்பு**

இசை குறிப்புப் பண்பென்னும் பொருளவாய்ப் பெயர்வினை போன்றும் அவற்றிற்கு முதனிலையாயுந் தடுமாறி ஒருசொல் ஒருபொருட் குரித்தாதலேயன்றி ஒருசொற் பல பொருட்கும் பல சொல் ஒரு பொருட்கும் உரியவாய் வருவன உரிச்சொல்லென்றும் அவை பெயரும் வினையும்போலஈறுபற்றிப் பொருளுணர்த்தலாகாமையின், வெளிப்படாதவற்றைவெளிப்பட்டவற்றோடு சார்த்தி, தம்மையெடுத் தோதியே அப்பொருளுணர்த்தப்படுமென்றும் உரிச்சொற்குப் பொதுவிலக்கணமும் அவற்றிற்குப் பொருளுணர்த்து முறைமையுமுணர்த்தியவாறு.

குறிப்பு - மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு - பொறியானுணரப்படுங் குணம்.

கறுப்பு தவவென்பன பெயர்வினைப்போலி, துவைத்தல் துவைக்குமென்பன பெயர் வினைக்கு முதனிலையாயின ,உறு முதலாயின மெய் தடுமாறாது வருதலின், பெயரினும் வினையினு மெய்தடுமாறி யென்றது பெரும்பான்மைபற்றியெனக் கொள்க.

அவை கூறியவாற்றாற் பொருட்குரியவாய் வருமாறு முன்னர்க் காணப்படும்.

மெய்தடுமாறலும் ஒருசொல் பல பொருட்குரிமையும் பலசொல் ஒருபொருட்குறிமையும் உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும், உரிச்சொற்கு இலக்கணமாவது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்.

ஒரு சொல் ஒருபொருட் குரித்தாதல் இயல்பாகலாற் சொல்லாமையே முடியுமென்பது.

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா;

வெளிப்பட வாரா உரிச்சொல் மேன.

வெளிப்பட்ட உரிச்சொல் கிளந்ததனாற் பயனின்மையிற் கிளக்கப்படா; வெளிப்பட வாரா உரிச்சொன் மேற்றுக் கிளந்தோதல்

பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தி எச்சொல்லாயினும் பொருள்வேறு கிளத்தல் (சொல்- 297) என்றதனால் பயிலாதவற்றைப் பயின்றவற்றோடு சார்த்திப் பயின்றவற்றைப் பிறிதொன்றனோடு சார்த்தாது தம்மையே கிளந்தும் எல்லா வுரிச்சொல்லும் உணர்த்தப்படுமென்பது பட்டு நின்றதனை விலக்கி, பயனின்மையாற் பயின்ற உரிச்சொற் கிளக்கப்படாது பயிலாத உரிச்சொல்லே கிளக்கப்படுமென, வரையறுத்தவாறு.

குறிப்பு

**உறு, தவ, நனி:**

அவைதாம்,

உறு, தவ, நனி, என வரூஉம் மூன்றும்

மிகுதி செய்யும் பொருள என்ப.

வெளிப்பட வாரா உரிச்சொல்லைக் கிளந்தோதி விரிக்கின்றார்.

அவைதாம் என்றது வெளிப்பட வாரா உரிச்சொற்றாம் என்றவாறு. அதற்கு முடிபு அவைதாம்அம்மாமெம்மே மென்னும் கிளவியும் (சொல்-303) என்புழி உரைத்தாங் குரைக்க

உறுபுனல் தந்துலகூட்டி (நாலடி-85)

ஈயாது வீயுமுயிர் தவப் பலவே (புறம்- 233)

வந்து நனி வருந்தினை வாழியென் நெஞ்சே (அகம்-19)

உறு தவ நனி என்பன மிகுதியென்னுங் குறிப்புப் பொருளுணர்த்தும்.

குறிப்புசொற் பரப்புடைமையான் முற்கூறினார்.

**உரு, புரை:**

உரு உட்கு ஆகும்; புரை உயர்பு ஆகும்

உருகெழு கடவுள் - உருபு

புரைய மன்றா புரையோர் கேண்மை (நற்றிணை-1)– புரை

**குரு கெழு:**

குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே

குருவும் கெழுவும் நிறமென்னும் பண்புணர்த்தும்.

குருமணித் தாலி - நிறம்

செங்கேழ் மென்கொடி (அகம்-80)– பண்பு.

**செல்லல், இன்னல்:**

செல்லல், இன்னல், இன்னாமையே.

செல்லும் இன்னலும் இன்னாமை யென்னுங் குறிப்புணர்த்தும்.

மணங்கமழ் வியன்மார் பணங்கிய செல்லல் (அகம்-22) - இன்னாமை

வெயில்புறந் தரூஉம், இன்ன வியக்கத்து (மலைபடு-374) - இன்னாமை

குறிப்பு

**மல்லல்:**

மல்லல் வளனே;

மல்லலும் ஏவும், வளமும் பெற்றுமாகிய குறிப்புணர்த்தும்.

மல்லல் மால்வரை (அகம்-52)

**ஏ:**

ஏ பெற்று ஆகும்.

பெற்று-பெருக்கம். ஈது அக்காலத்துப் பயின்றது போலும் என்பார் சேனாவரையர்.

ஏகல் அடுக்கம் (நற்றிணை-116)

உகப்பு,உவப்பு:

உகப்பே உயர்தல்; உவப்பே உவகை.

உகப்பும் உவப்பும் உயர்தலும் உவகையுமாகிய குறிப்புணர்த்தும்;

விசும்புகந் தாடாது

உவந்துவந்தார்வ நெஞ்சமோ டாய்நல னளைஇய (அகம்-35)

**பயப்பு:**

பயப்பே பயன் ஆம்.

பயப்பும் பசப்பும், பயனும் நிறவேறுபாடுமாகிய குறிப்பும் பண்பும் உணர்த்தும்

பயவாக் களரனையர் கல்லா தவர் (குறள் 406)

மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே (கலி -7)

**பசப்பு:**

பசப்பு நிறன் ஆகும்.

மையில் வாண்முகம் பசப்பூ ரும்மே (கலி -7)

குறிப்பு

**இயைபு:**

இயைபே புணர்ச்சி.

இயைபும், இசைப்பும், புணர்ச்சிக் குறிப்பும் இசைப் பொருண்மையும் உணர்த்தியவாறு.

.யைந்தொழுகும் யாழிசையூப் புக்கும்

**இசைப்பு:**

இசைப்பு இசை ஆகும்.

யாழிசையூப் புக்கும்

**அலமரல், தெருமரல்:**

அலமரல், தெருமரல், ஆயிரண்டும் சுழற்சி.

அலமரலும் தெரு மரலும் சுழற்சியாகிய குறிப்புணர்த்தும்

அலமர லாயம் (ஐங் - 66)

தெருமரலுள்ளமோ டன்னை துஞ்சாள்

**மழ,குழ:**

மழவும் குழவும் இளமைப் பொருள.

மழவுங் குழவும் இளமைக் குறிப்புப் பொருளுணர்த்தும்

மழகளிறு (புறம் - 38)

குழக்கன்று (புறம் - 103)

**சீர்த்தி:**

சீர்த்தி மிகு புகழ்.

சீர்த்தியும் மாலையும், பெரும்புகழும் இயல்புமாகிய குறிப்புணர்த்தும

வயக்கஞ்சால் சீர்த்தி

**மாலை:**

மாலை இயல்பே.

இரவரன் மாலையனே (குறிஞ்சிப் - 239)

குறிப்பு

கூர்ப்பு கழிவு:

கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.

கூர்ப்பும்கழிவும் ஒன்றனது சிறத்தலாகிய குறிப்பை யுணர்த்தும்

துனிகூரெவ்வமொடு (சிறுபாண்-39)

கழிகண் ணோட்டம்

**கதழ்வு, துனைவு:**

கதழ்வும் துனைவும் விரைவின் பொருள.

கதழ்வும் துனைவும், விரைவாகிய குறிப்புணர்த்தும்

கதழ்பரிநெடுந்தேர் (நற்றிணை - 223)

துனைபரி நிவக்கும் புள்ளின் மான

**அதிர்வு விதிர்ப்பு:**

அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்.

அதிர்வும் விதிர்ப்பும், நடுக்கமாகிய குறிப் புணர்த்தும்

அதிர வருவதோர் நோய் ( குறள் - 439)

விதிர்ப்புற வறியா வேமக் காப்பினை (புறம் - 20)

அதிழ்வென்று பாடமோதி அதிழ்கண் முரசம் என்று தாரணங்காட்டுவாரும் உளர். என்பார் சேனாவரையர்.

**வார்தல், போகல், ஒழுகல்:**

வார்தல், போகல், ஒழுகல், மூன்றும்

நேர்பும் நெடுமையும் செய்யும் பொருள.

வார்தல், போகல், ஒழுகல் என்னு மூன்று சொல்லும், நேர்மையும் நெடுமையுமாகிய பண்புணர்த்தும்

வார்ந்திலங்கம் வையெயிற்று (குறு - 14)

வார்கயிற் றொழுகை (அகம் - 173)

போகு கொடி மருங்குல்

வெள்வேல் விடத்தேரொடு காருடை போகி (பதிற் - 13)

ஒழுகுகொடி மருங்குல்

குறிப்பு

மால்வரை யொழுகிய வாழை (சிறுபாண் - 21)

**தீர்தல், தீர்த்தல்:**

தீர்தலும் தீர்த்தலும் விடல் பொருட்டு ஆகும்.

தீர்தலுந் தீர்த்தலு மென்னு மிரண்டும் விடுதலாகிய குறிப்புணர்த்தும்

துணையிற் றீர்ந்த கடுங்கண் யானை (நற்றிணை 10)

தீர்த்தல் விடுதற்பொருண்மைக்கண் வந்தவழிக் கண்டு கொள்க. தீர்த்தலென்பது செய்வித்தலை யுணர்த்திநின்ற நிலைமையெனின் :- செய்வித்தலை யுணர்த்து நிலைமை வேறோதின்,இயைபே புணர்ச்சி (உரியியல் - 12) என்புழியும் இயைப்பென வேறோதல் வேண்டும் அதனாற் றீர்த்தலுஞ் செய்தலை யுணர்த்துவதோ ருரிச்சொல் லெனவே படு மென்பது சேனாவரையர் உரை.

**கெடவரல், பண்ணை:**

கெடவரல், பண்ணை, ஆயிரண்டும் விளையாட்டு.

கெடவரலும் பண்ணையும், விளையாட்டாகிய குறிப்புணர்த்தும்;

கெடவர லாயமொடு

பண்ணைத் தோன்றிய வெண்ணான்கு பொருளும்“ (பொருள், மெய்ப்பட்டியல்)

**தட, கய, நளி:**

தடவும் கயவும் நளியும் பெருமை.

தடவும் கயவும் நளியும் பெருமையாகிய பண்புணர்த்தும்.

வலிதுஞ்சு தடக்கை வாய்வாட் குட்டுவான்“ (புறம்-394),

கயவாய்ப் பெருங்கை யானை (அகம்-118),

களி மலைநாடன் (புறம்-150)

அவற்றுள்,

தட என் கிளவி கோட்டமும் செய்யும்

தடவெண்கிளவி முதலாயின, பெருமையேயன்றிக் கோட்டமும் மென்மையுமாகிய பண்பும் செறிவாகிய குறிப்புமுணர்த்தும்

தடமருப்பெருமை (நற்-120)

கயந்தலை மடப்பிடி (நற்-137)

நளியிருள்

குறிப்பு

**கய:**

கய என் கிளவி மென்மையும் செய்யும்.

கயந்தலை மடப்பிடி (நற்-137)

**நளி:**

நளி என் கிளவி செறிவும் ஆகும்.

நளியிருள்.

**பழுது:**

பழுது பயம் இன்றே

பழுது முதலாயின, பயமின்மையாகிய குறிப்பும் மென்மையாகிய பண்பும் எஞ்சாமையாகிய குறிப்பு முணர்த்தும்

பழுதுகழி வாழ்நாள்

**சாயல்:**

சாயல் மென்மை.

சாயன் மார்பு (பதிற்- 16)

"முழுது" என் கிளவி எஞ்சாப் பொருட்டே.

மண்முழுதாண்ட

**வம்பு**

வம்பு நிலை இன்மை.

வம்பும் மாதரும், நிலையின்மையுங் காதலுமாகிய குறிப்புணர்த்தும்;
வம்புமாரி (குறுந்-66)

**மாதர்:**

மாதர் காதல்.

மாதர் நோக்கு நயந்து நாம் விட்ட நன்மொழி நம்பி (அகம்-19

குறிப்பு

**நம்பு,மேவு:**

நம்பும் மேவும் நசை ஆகும்மே

நம்பும் மேவும் நசையாகிய குறிப்புணர்த்தும்.

நவிர மேஎ வுறையுங், காரி யுண்டி (மலைபடு-82)

**ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்:**

ஓய்தல், ஆய்தல், நிழத்தல், சாஅய்,

ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்.

ஓய்தல் முதலாயின நுணுக்கமாகிய குறிப்புணர்த்தும்

வேனிலுழந்த வறிதுயங் கோய் களிறு (கலி-9),பாய்ந்தாய்ந்த தானைப் பரிந்தானா மைந்தினை“ (கலி-99)

நிழத்த யானை மேய்புலம் படர (மது3-03)

கயலறலெதிரக் கடும்புனற் சாஅய் (நெடுநல்-18)

**புலம்பு:**

புலம்பே தனிமை.

புலம்பு முதலாயின தனிமையும் நிறைவும் முதிர்வுமாகிய குறிப்பும் விரும்புதலாகிய பண்புமுணர்த்தும்;

புலிப்பற் கோத்த புலம்புமணித் தாலி (அகம்-7)

சூன்முரஞ் செழிலி

வெங்காமம்“ (அகம்-15)

**துவன்று:**

துவன்று நிறைவு ஆகும்.

ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளீர் (நற்-170)

**முரஞ்சல்:**

முரஞ்சல் முதிர்வே.

சூன்முரஞ் செழிலி

குறிப்பு

**வெம்மை:**

.வெம்மை வேண்டல்

வெங்காமம் (அகம்-15)

**பொற்பு:**

பொற்பே பொலிவு

பொற்பு முதலாயின முறையானே பொலிவும் சிறிதென்பதூஉம் நினைவும் துணிவுமாகிய குறிப்புணர்த்தும்;

பெருவரை யடுக்கம் பொற்ப (நற்-34)

கானலஞ் சேர்ப்பன் கொடுமையேற்றி" (குறுந் - 145),எற்றேற்றமில்லாருள் யானேற்றமில்லாதேன்" எனவும், பொற்பு முதலாயின முறையானே பொலிவும் சிறிதென்பதூஉம் நினைவும் துணிவுமாகிய குறிப்புணர்த்தும்.

**வறிது:**

வறிது சிறிது ஆகும்.

வறிதுவடக் கிறைஞ்சிய (பதிற்-24)

**ஏற்றம்:**

ஏற்றம் நினைவும் துணிவும் ஆகும்.

எற்றேற்றமில்லாருள் யானேற்றமில்லாதேன்

கானலஞ்சேர்ப்பன் கொடுமையேற்றி (குறுந் - 145)

**பிணை, பேண்:**

பிணையும் பேணும் பெட்பின் பொருள.

பெட்பின் பொருளாகிய புறந்தருதலென்னுங் குறிப்புணர்த்தும்; பெட்பின் பொருள வென்றதனால் பெட்பின் பொருளாகிய விரும்புதலுணர்த்தலுங் கொள்க

**பணை:**

பணையே பிழைத்தல்; பெருப்பும் ஆகும்.

பெருப்பாகிய குறிப்புமுணர்த்தும் பனை யென்பது பிழைத்தலாகிய குறிப்புணர்த்தும்

குறிப்பு

பணைத்துவீழ் பகழி

யன்றி வேய்மருள் பணைத்தோள் (அகம்-1)

பெருமையாகிய பண்புணர்த்தாது பெருத்தலாகிய குறிப்புணர்த்துமென்பார் பெருப்பென்றார்.

**படர்:**

படரே உள்ளல்; செலவும் ஆகும்.

படரென்பது உள்ளுதலுந் செலவுமாகிய குறிப்புணர்த்தும்

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி (புறம்-47)

கறவை கன்று வயிற் படர (குறுந்-108)

**பையுள்: சிறுமை:**

பையுளும் சிறுமையும் நோயின் பொருள

பையுளுஞ் சிறுமையும் நோயாகிய குறிப்புணர்த்தும்

பையுண்மாலை (குறுந்-195)

சிறுமையுறுப செய்பறியலரே

**எய்யாமை:**

எய்யாமையே அறியாமையே.

எய்யாமை அறிவின்மையாகிய குறிப்புணர்த்தும்

எய்யாமையலை நீயும் வருந்துதி (குறிஞ்சிப்-8)

அறிதற் பொருட்டாய் எய்தலென்றானும் எய்த்தலென்றானும் சான்றோர் செய்யுட்கண்வாராமையின், எய்யாமை எதிர்மறியன்மை யறிக.

**நன்று:**

நன்று பெரிது ஆகும்.

நன்றென்பது பெரிதென்னுங் குறிப்புணர்த்தும்:

நன்றுமரிதுதுற் றனையாற் பெரும (அகம்-10)

பெருமை என்னாது பெரிதென்றதனான் நன்றென்பது வினையெச்சமாதல் கொள்க.

குறிப்பு

**தாவே:**

தாவே வலியும் வருத்தமும் ஆகும்.

தாவென்பது வலியும் வருத்தமுமாகிய குறிப்புணர்த்தும்;

தாவினன்பொன் றைஇய பாவை, (அகம்-212)

கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றென, (குறுந்-98)

தாவென்பது வலியும் வருத்தமுமாகிய குறிப்புணர்த்தும்.

**தெவு:**

தெவுக் கொளல் பொருட்டே

தெவும், தெவ்வும் முறையானே கொள்ளுதலும் பகையுமாகிய குறிப்புணர்த்தும்

நீர்த் தெவுநிறைத் தொழுவார் (மது-89)

**தெவ்வு:**

தெவ்வுப் பகை ஆகும்.

தெவ்வு பகையுமாகிய குறிப்புணர்த்தும்

தெவ்வுப் புலம்

**விறப்பும், உறப்பும், வெறுப்பும்:**

விறப்பும், உறப்பும், வெறுப்பும் செறிவே

விறப்பு முதலாயின செறிவென்னுங் குறிப்புணர்த்தும்

உறந்த விஞ்சி

வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன் (புறம் - 56) ,

அவற்றுள்,

விறப்பே வெரூஉப் பொருட்டும் ஆகும்.

விறப்பென்பது செறிவே யன்றி வெருவுதற் குறிப்புமுணர்த்தும்

அவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல (பெரும்பாண் - 229

குறிப்பு

**கம்பலை, சும்மை, கலியே, அழுங்கல்:**

கம்பலை, சும்மை, கலியே, அழுங்கல்,

என்று இவை நான்கும் அரவப் பொருள.

கம்பலை முதலாகிய நான்கும் அரவமாகிய இசைப்பொருண்மை யுணர்த்தும்

கம்பலை மூதூர் (புறம் 54

ஒரு பெருஞ் சும்மையொடு

கலிகொளாய மலிபுதொகு பெடுத்த (அகம் - 11 )

உயவுப்புணர்ந் தன்றிவ் வழுங்கலூரே (நற் - 203)

அவற்றுள்,

அழுங்கல் இரக்கமும் கேடும் ஆகும்.

அழுங்கல் அரவமேயன்றி இரக்கமுங் கேடுமாகிய குறிப்புமுணர்த்தும்

பழங்க ணோட்டமு நலிய வழுங்கின னல்லனோ (அகம் - 66)

குணனழுங்கக் குற்ற முழை நின்று கூறுஞ் சிறியவர்கட்கு (நாலடி - 353 )

**கழும்:**

கழும் என் கிளவி மயக்கம் செய்யும்.

கழு மென்பது மயக்கமாகிய குறிப்புணர்த்தும்

கழுமிய ஞாட்பு (களவழி - 11)

**செழுமை:**

செழுமை வளனும் கொழுப்பும் ஆகும்.

செழுமை வளனுங்கொழுப்பு மாகிய பண்புணர்த்தும்

செழும்பல் குன்றம்

செழுந்தடி தின்ற செந்நாய்

**விழுமம்:**

விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்.

விழுமம் முறையானே சீர்மையுஞ் சிறப்பும் இடும்பையுமாகிய குறிப்புணர்த்தும்

குறிப்பு

விழுமியோர் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு (நாலடி - 159 )

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து (புறம் - 27)

நின்னுறு விழுமங் களைந்தோன் (அகம் - 140)

**கருவி:**

கருவி தொகுதி.

கருவியும் கமமும் தொகுதியும் நிறைவுமாகிய குறிப்புணர்த்தும்

கருவி வானம் (புறம் - 159)

கருவிவானம் என்பதில் கருவி மின்னு முழக்கு முதலாயவற்றது தொகுதி.

**கமம்:**

கமம் நிறைந்து இயலும்.

கருவியும் கமமும் தொகுதியும் நிறைவுமாகிய குறிப்புணர்த்தும்

கமஞ் சூன் மாமழை (அகம் - 49 )

**அரி:**

.அரியே ஐம்மை.

அரியுங்கவவும் ஐம்மையும் அகத்தீடு மாகிய குறிப்புணர்த்தும்

அரிமயிர்த் திரண்முன்கை (புறம் - 11 )

**கவவு:**

கவவு அகத்திடுமே.

அரியுங்கவவும் ஐம்மையும் அகத்தீடு மாகிய குறிப்புணர்த்தும்

கழூ உவினங் காரங் கவை இய மார்பே (புறம் - 19)

**துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்:**

துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்

இசைப் பொருட் கிளவி என்மனார் புலவர்.

குறிப்பு

துவைத்தன் முதலாயின இசைப்பொரு ளுணர்த்தும்

வளை துவைம்ப

ஆமா நல்லேறு சிலைப்ப (முருகு - 915)

கடிமரந் தடியு மோகை தன்னூர்

நெடுமதில் வரைப்பிற் கடிமனை யியம்ப (புறம் - 96)

ஏறிரங்கிருளிடை (கலி - 46)

.அவற்றுள்,

இரங்கல் கழிந்த பொருட்டும் ஆகும்.

இரங்கல், இசையே யன்றிப் பொருளது கழிவாகிய குறிப்பு முணர்த்தும்.

செய்திரங்காவினை (புறம் - 10)

கழிந்த பொருள்பற்றி வரும் கவலையைக் கழிந்த பொருளென்றார்.

**இலம்பாடு, ஒற்கம்:**

இலம்பாடு, ஒற்கம், ஆயிரண்டும் வறுமை.

இலம்பாடும் ஒற்கமும் வறுமையாகிய குறிப்புணர்த்தும்

இலம்படு புலவ ரேற்றகைந் நிறைய (மலைபடு - 576)

ஒக்கலொற்கஞ் சொலிய (புறம் - 327)

இலமென்னும் உரிச்சொல் பெரும்பான்மையும் பாடென்னுந் தொழில்பற்றி அல்லது வாராமையின் இலம்பாடென்றார்.

**ஞெமிர்தல், பாய்தல்:**

ஞெமிர்தலும் பாய்தலும் பரத்தல் பொருள.

ஞெமிர்தலும் பாய்தலும், பரத்தலாகிய குறிப்புணர்த்தும்

தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து (நெடுநல் - 60) எனவும

பாய்புனல்

**கவர்வு:**

கவர்வு விருப்பு ஆகும்.

குறிப்பு

கவர்வு முதலாயின முறையானே விருப்புந் திரட்சியும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும்

கவர்நடைப் புரவி (அகம் - க30)

சேர்ந்து செறி குறங்கு (நற்றிணை - 170)

**சேர்:**

சேரே திரட்சி.

கவர்வு சேரே முதலாயின முறையானே விருப்புந் திரட்சியும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும்

சேர்ந்து செறி குறங்கு (நற்றிணை - 170)

வியல் என் கிளவி அகலப் பொருட்டே

கவர்வு, சேரே, வியல் முதலாயின முறையானே விருப்புந் திரட்சியும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும

வியலுலகம்

**பேம், நாம், உரும்:**

பேம், நாம், உரும் என வரூஉம் கிளவி

ஆ முறை மூன்றும் அச்சப் பொருள.

பே முதலாகிய மூன்றும் அச்சமாகிய குறிப்புணர்த்தும்

மன்ற மரா அத்த பேமுதிர் கடவுள் ( குறந் - 87)

நாநல்லார்

உருமில்சுற்றம் (பெரும்பாண் - 447)

**வய:**

வய வலி ஆகும்.

வய முதலாயின, வலியும் அறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பும் ஒளியாகிய பண்புமுணர்த்தும்

துன்னருந் துப்பின் வயமான் (புறம் - 44)

வாண்முகம் (புறம் - 6)

குறிப்பு

துயவுற்றேம் யாமாக

**வாள்:**

வாள் ஒளி ஆகும்.

வய முதலாயின, வலியும் அறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பும் ஒளியாகிய பண்புமுணர்த்தும்

துன்னருந் துப்பின் வயமான் (புறம் - 44)

வாண்முகம் (புறம் - 6)

**துயவு:**

துயவு என் கிளவி அறிவின் திரிபே.

வய, துயவு முதலாயின, வலியும் அறிவு வேறுபடுதலுமாகிய குறிப்பும் ஒளியாகிய பண்புமுணர்த்தும்:

துயவுற்றேம் யாமாக

**உயாவு:**

உயாவே உயங்கல்.

உயங்கலுஞ் சூழ்ச்சியும் வேட்கைப் பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும்

பருந்திருந் துயாவிளி பயிற்று மியாவுயர் நனந்தலை (அகம் - 19)

**உசா:**

உசாவே சூழ்ச்சி

உயங்கலுஞ் சூழ்ச்சியும் வேட்கைப் பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும்

உசாத்துணை ( குறுந் - 207)

**வயா:**

வயா என் கிளவி வேட்கைப் பெருக்கம்

உயா, வயா முதலாயின முறையானே உயங்கலுஞ் சூழ்ச்சியும் வேட்கைப் பெருக்கமுமாகிய குறிப்புணர்த்தும்.

வயவுறு மகளிர் (புறம் - 20)

**கறுப்பு, சிவப்பு:**

குறிப்பு

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள.

கறுப்பும் சிவப்பும் வெகுளியாகிய குறிப்புணர்த்தும்

நிற்கறுப்பதோ ரருங்கடி முனையள்

நீ சிவந்திறுத்த நீரழிபாக்கம் (பதிற் - 13)

கறுமை செம்மையென்னாது கறுப்புச் சிவப்பென்றதனான், தொழிற்பட்டுழியல்லது அவை வெகுளி யுணர்த்தாமை கொள்க.

.நிறத்து உரு உணர்த்தற்கும் உரிய என்ப.

வெகுளியேயன்றி நிறவேறுபாடுணர்த்தற்கு முரிய:

கறுத்தகாயா

சிவந்த காந்தள் (பதிற் - 15)

இவை வெளிப்படு சொல்லாயினும்; கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள வென்றதனால், கறுங்கண் செவ்வாய் எனப் பண்பாய வழியல்லது தொழிலாயவழி நிறவேறுபாடுணர்த்தா வென்பது படுதலின், அதனைப் பாதுகாத்தவாறு என்பார் சேனாவரையர்.

**நொசிவு முதலாயின:**

நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை.

நொசிவு முதலாயின நுண்மையாகிய பண்புணர்த்தும்.

நொசிமட மருங்கல் (கலி - 60)

நுழை நூற் கலிங்கம் (மலைபடு - 56)

நுணங்குதுகி னுடக்கம் போல (நற்றி 15)

**புனிறு:**

புனிறு என் கிளவி ஈன்றணிமைப் பொருட்டே.

புனிறு என்பது ஈன்றணிமையாகிய குறிப்புணர்த்தும்

புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி (அகம் - 5 )

குறிப்பு

**நனவு:**

நனவே களனும் அகலமும் செய்யும்.

நனவுகளனும் அகலமுமாகிய குறிப்புணர்த்தும்

நனவுப்புகு விறலியிற் றோன்று நாடன் (அகம் 82)

நனந்தலை யுலகம் (பதிற் - 63)

**மதவு:**

மதவே மடனும் வலியும் ஆகும்.

மதவென்பது மடனும் வலியுமாகிய குறிப்புணர்த்தும்;

பதவு மேய்ந்த மதவுநடை நல்லான் (அகம் - 14)

கயிறிடு கதச்சேப் போல மதமிக்கு (அகம்-36 )

.மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே.

மடனும் வலியுமேயன்றி மிகுதியும் வனப்புமாகிய குறிப்புஞ் சிறுபான்மையுணர்த்தும்..மதவிடை என்பது மிகுதி, உள்ள மிகுதி.

மாதர் வாண்முகம் தைஇய நோக்கே (அகம்-130)

**யாணர்:**

புதிதுபடல் பொருட்டே யாணர்க் கிளவி.

யாணர் என்பது வாரி புதிதாகப் படுதலாகிய குறிப்புணர்த்தும்

மீனொடு பெயரும் யாண ரூர (நற் - 210)

**அமர்தல்:**

அமர்தல் மேவல்.

அமர்தலும் யாணும், முறையானே மேவுதலுங் கவினுமாகிய குறிப்புணர்த்தும்

அகனமர்ந்து செய்யா ளுறையும் ( குறள் - 84)

**யாண்:**

யாணுக் கவின் ஆம்.

அமர்தலும் யாணும் முறையானே மேவுதலுங் கவினுமாகிய குறிப்புணர்த்தும்

குறிப்பு

யாணது பசலை (நற்றிணை - 50)

**பரவும் பழிச்சும்:**

பரவும் பழிச்சும் வழுத்தின் பொருள

பரவும் பழிச்சும் வழுத்துதலாகிய குறிப்புணர்த்தும்

நெல்லுகுத்துப் பரவுங் கடவுளுமிலவே (புறம் - 335)

கைதொழூஉப் பழிச்சி (மது - 664)

**கடி என் கிளவி:**

கடி என் கிளவி

வரைவே, கூர்மை, காப்பே, புதுமை,

விரைவே, விளக்கம், மிகுதி, சிறப்பே,

அச்சம், முன்தேற்று, ஆயீர்-ஐந்தும்

மெய்ப்படத் தோன்றும் பொருட்டு ஆகும்மே

கடியென்னு முரிச்சொல் வரைவு முதலாகிய பத்துக் குறிப்பு முணர்த்தும்

கடிந்த கடிந்தொரார் செய்தார்க்கு(குறள்-658) - வரைவு

கடிநுனைப் பகழி - கூர்மை

கடிகா, (களவழி-26) - காப்பு

கடிமலர் - புதுமை,

கடுமான் (அகம்-134) - விரைவு

கடும்பகல் (அகம்-148) விளக்கம்

கடுங்கா லொற்றலின் (பதிற்-25) - மிகுதி

கடுநட்பு - சிறப்பு

கடியையா னெடுந்தகை செருவத் தானே- அச்சம்

கொடுஞ்சுழிப்புகார்த்தெய்வ நோக்கிக் கடுஞ்சூ டருகுவ னினக்கே (அகம்-110) - முன்தேற்று

Self-Instructional Material

முன்தேற்று- புறத்தின்றித் தெய்வ முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்.

**குறிப்பு**

ஐயமும் கரிப்பும் ஆகலும் உரித்தே.

கடியென்கிளவி மேற்கூறப்பட்ட பொருளேயன்றிச் சிறுபான்மை ஐயமாகிய குறிப்புங் கரிப்பாகிய பண்பு முணர்த்து தற்கு முரித்து;

கடுத்தன எல்லளோ வன்னை

கடு மிளகு தின்ற கல்லா மந்தி

**ஐ**

ஐ வியப்பு ஆகும்.

ஐ முதலாயின முறையானே வியப்பும் முனிவுங் கூர்மையும் வலியுமாகிய குறிப்புணர்த்தும்;

ஐதே காமம் யானே (நற்றிணை-143) - வியப்பு

**முனைவு:**

முனைவு முனிவு ஆகும்.

முனைவு முனிவாகும்

சேற்றுநில முனைஇய செங்கட காரான் (அகம்-46)– முனிவு

**வை:**

வையே கூர்மை.

வையே கூர்மை என்னுளும் பொருளது

வைநுனைப் பகழி (முல்லை-73)

**எறுழ்:**

எறுழ் வலி ஆகும்

எறுழ் வலி என்பதாகும்

போரெறுழ்த் திணிதோள் (பெரும்பாண்-93)

மெய் பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்

முன்னும் பின்னும் வருபவை நாடி,

ஒத்த மொழியான் புணர்த்தனர் உணர்த்தல்

தம்தம் மரபின் தோன்றும்மன் பொருளே.

குறிப்பு

அன்ன பிறவுங் கிளந்தவல்ல பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம் என்பது, சொல்லப் பட்டனவேயன்றி அவைபோல்வன பிறவும் பலவாற்றானும் பரந்துவரும் உரிச்சொல்லெல்லாம் என்பதனைக் குறித்து நிற்கும்.பொருட்குறை கூட்டவியன்ற மருங்கினினைத்தென அறியும் வரம்பு தமக்கின்மையின் என்பது, பொருளோடு புணர்த்துணர்த்த இசை குறிப்புப் பண்புபற்றித் தாமியன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணருமெல்லை தமக்கின்மையான் எஞ்சாமைக் கிளத்தலரிதாகலின் எனப் பொருள் தரும்.வழிநனி சடைப்பிடித்தோம் படையாணையிற் கிளந்தவற்றியலாற் பாங்குறவுணர்தல் என்பது.

இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்

பெயரினும் வினையினு மெய்தடுமாறி (சொல்-267)

எனவும்,முன்னும் பின்னும் வருபவைநாடி எனவுங் கூறிய நெறியைச் சோராமற் கடைப்பிடித்து எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல் (சொல்-267) எனவும்,

ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல்

தத்த மரபிற் றோன்றுமன் பொருளே (சொல்-376)

எனவும், என்னாற் றரப்பட்ட பாதுகாவ லாணையிற் கிளந்த வற்றியல் பொடுமரீ இயவற்றை முறைப்பட வுணர்க என்றவாறு.

குறிப்புப்பொருண்மை பலவகைத்தாகலானும், பெயரினும் வினையினு மெய்தடுமாறியுந் தடுமாறாதும், ஒருசொற் பலபொருட் குரித்தாயும் வருதலானும்,ஈறுபற்றித் தொகுத்துணர்த்தற்கு அன்னவீறுடைய வன்மையானும் பன்முறையானும் பரந்தன வரூஉம்என்றார்.

பொருளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக்குறையென்றார்; ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமின்,வினைக்குறி தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு (குறள்-912),பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே“ (புறம்-177) என்றாற் போல, பொருட்குறை கூட்ட வரம்புதமக்கின்மை யினென இயையும்.

இருமையென்பது கருமையும் பெருமையு மாகிய பண்புணர்த்தும். சேணென்பது சேய்மையாகிய குறிப்புணர்த்தும்.தொன்மை என்பது பழமையாகிய குறிப்புணர்த்தும். இவையெல்லாம் அன்னபிறவுங் கிளந்த வல்ல வென்பதனாற் கொள்க. பிறவுமன்ன.

கூறிய கிளவிப் பொருள் நிலை அல்ல

வேறு பிற தோன்றினும், அவற்றொடு கொளலே!.

குறிப்பு

முன்னும் பின்னும் வருபவவை நாடியவழி, உரிச்சொற்குக் கூறப்பட்ட பொருளேயன்றிப் பிற பொருடோன்று மாயினும், கூறப்பட்ட வற்றோடு அவற்றையுங் கொள்க என்பதாம்.

கடிநாறும் பூந்துணர் - கடியென்பது முன்னும் பின்னும் வருபவை நாட, வரைவு முதலாயின பொருளை உணர்த்தாது மணம் என்னும் பொருளை உணர்த்தி நின்றது.

பொருட்குப் பொருள் தெரியின், அது வரம்பு இன்றே.

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்திப் பொருளுணர்த்துங்காற் படுமுறைமை யுணர்த்துகின்றார்.

ஒரு சொல்லை ஒரு சொல்லாற் பொருளுணர்த்திய வழி அப்பொருளுணர்த்த வந்த சொற்கும் பொருள் யாதெனப் பொருட்குப் பொருள் தெரியுமாயின் மேல், வருவனவற்றிற்கெல்லாம் ஈதொத்தலின், அவ்வினா இறைவரம்பின்றியோடும் அதனாற் பொருட்குப் பொருள் தெரியற்க என்றார்

ஒரு சொற்குப் பொருளுரைப்பது பிறிதோர் சொல்லானன்றே; அச்சொற்பொருளும் அறியாதானை உணர்த்துமாறென்னையெனின், அது வருகின்ற சூத்திரத்தாற் பெறப்படும்.

. பொருட்குத் திரிபு இல்லை, உணர்த்த வல்லின்.

கற்றும் மாணவர் உணரும் வழி அறிந்து உணர்த்த வல்லானாயின் பொருள் திரிபுபடாமல் அவன் உணரும்.உறுகால் (நற்-37) என்றவழி உறுவென்னுஞ் சொற்குப் பொருளாகிய மிகுதி என்பதன் பொருளை அறிதல் வேண்டும். அறியானாயின் கடுற்காற்று,கொடுங்காற்று முதலிய சொற்களால் அறிவுடையோர் பொருள் உணர்த்த முயல்வர்.

உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே

வெளிப்படத் தொடர்மொழி கூறியபோதும் பொருளைக் காட்டினும் உணர்த்தவும் உணராதானை உணர்த்தும் வாயிலில்லை; உணர்ச்சியது வாயில் உணர்வோர துணர்வை வலியாக வுடைத்தாகலான்.

மொழிப் பொருட் காரணம் விழிப்பத் தோன்றா

உறு தவ முதலாயின சொற்கு மிகுதி முதலாயின பொருளாதல் வரலாற்று முறைமையாற் கொள்வதல்லது. அவை அப்பொருளாவதற்குக் காரணம் விளங்கத் தோன்றா.

குறிப்பு

பொருளோடு சொற்கியைபு இயற்கை ஆகலான் அவ் இயற்கையாகிய இயைபால் சொற்பொருள் உணர்த்துமென்பர் ஒரு சாரார். ஒரு சாரார் பிற காரணத்தால் உணர்த்து மென்பர். அவற்றுண் மெய்ம்மையாகிய காரணம் ஆசிரியர்க்குப் புலனாவதல்லது நம்மனோர்க்குப் புலனாகாமையின், மொழிப்பொருட் காரணமில்லை என்னாது விழிப்பத் தோன்றா வென்றார்.அக்காரணம் பொதுவகையான் பலவாம்; அதனான் விழிப்பத்தோன்றாவெனப் பன்மையிற் கூறினார். உரிச்சொற்பற்றி ஓதினாரேனும், ஏனைச் சொற் பொருட்கு மி∴தொக்கும்.

எழுத்துப் பிரிந்து இசைத்தல் இவண் இயல்பு இன்றே.

முதனிலையும் இறுதிநிலையுமாக எழுத்துக்கள் பிரிந்து வேறு வேறு பொருளுணர்த்தல் உரிச்சொல்லிடத் தியைபுடைத்தன்று;

இவணியல்பின்றெனவே, எழுத்துப் பிரிந்து பொருளுணர்த்தல் பிறாண்டு இயல்புடைத் தென்பதாம். அவையாவன; வினைச்சொல்லும் ஒட்டுப்பெயருமாம். பிரிதலும் பிரியாமையும் பொருளுணர்த்து வனவற்றிற்கேயாகலின், கூறை கோட்படுதல் கடவுளர்க்கு எய்தாதவாறு போல, இடைச்சொற்கு இவ்வாராய்ச்சி எய்தாமை யறிக.

தவநனியென்னுந் தொடக்கத்தன குறிப்பு வினையெச்சம் போலப் பொருளுணர்த்தலின், அவைபோலப் பிரிக்கப்படுங் கொல்லோ வென்றையுறாமை ஐயமகற்றியவாறு என்பார் சேனாவரையர்.

அன்ன பிறவும் கிளந்த அல்ல

பல் முறையானும் பரந்தன வரூஉம்

உரிச்சொல் எல்லாம் பொருட்குறை கூட்ட,

இயன்ற மருங்கின் இனைத்து என அறியும்

வரம்பு தமக்கு இன்மையின், வழி நனி கடைப்பிடித்து,

ஓம்படை ஆணையின், கிளந்தவற்று இயலான்,

பாங்குற உணர்தல்! என்மனார் புலவர்.

குறிப்பு

அன்ன பிறவுங் கிளந்தவல்ல பன்முறையானும் பரந்தன வரூஉம் உரிச்சொல் எல்லாம் என்பதும் முரிச்சொல்லெல்லாம் என்றவாறு. பொருட்குறை கூட்டவியன்ற மருங்கினினைத்தென அறியும் வரம்பு தமக்கின்மையின் என்பது, பொருளோடு புணர்த்துணர்த்த இசை குறிப்புப் பண்புபற்றித் தாமியன்ற நிலத்து இத்துணையென வரையறுத்துணரும் எல்லை தமக்கின்மையான் எஞ்சாமைக் கிளத்தலரிதாகலின் என்றவாறு. வழிநனி சடைப்பிடித்தோம் படையாணையிற் கிளந்தவற்றியலாற் பாங்குறவுணர்தல் என்பது,

இசையினுங் குறிப்பினும் பண்பினுந் தோன்றிப்

பெயரினும் வினையினு மெய்தடுமாறி (சொல்-267)

எனவும்,முன்னும் பின்னும் வருபவைநாடி எனவுங் கூறிய நெறியைச் சோராமற் கடைப்பிடித்து எச்சொல்லாயினும் பொருள் வேறு கிளத்தல் (சொல்-267) எனவும்,

ஒத்த மொழியாற் புணர்த்தன ருணர்த்தல்

தத்த மரபிற் றோன்றுமன் பொருளே (சொல்-376)

எனவும், என்னாற் றரப்பட்ட பாதுகாவ லாணையிற் கிளந்த வற்றியல் பொடுமரீ இயவற்றை முறைப்பட வுணர்க என்றவாறு.

குறிப்புப்பொருண்மை பலவகைத்தாகலானும், பெயரினும் வினையினு மெய்தடுமாறியுந் தடுமாறாதும், ஒருசொற் பலபொருட் குரித்தாயும் வருதலானும்,ஈறுபற்றித் தொகுத்துணர்த்தற்கு அன்னவீறுடைய வன்மையானும் பன்முறையானும் பரந்தன வரூஉம்“ என்றார்.

பொருளைச் சொல் இன்றியமையாமையின், அதனைக்குறையென்றார்; ஒருவன் வினையும் பயனும் இன்றியமையாமின், ஹவினைக்குறி தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு (குறள்-912),பயக்குறை யில்லைத் தாம் வாழு நாளே (புறம்-177) என்றாற் போல, பொருட்குறை கூட்ட வரம்புதமக்கின்மை யினென இயையும்.

இருமை - என்பது கருமையும் பெருமையு மாகிய பண்புணர்த்தும்.

சேண் - என்பது சேய்மையாகிய குறிப்புணர்த்தும்.

தொன்மை - என்பது பழமையாகிய குறிப்புணர்த்தும். இவையெல்லாம் அன்னபிறவுங் கிளந்த வல்ல வென்பதனாற் கொள்க. பிறவுமன்ன.

**குறிப்புப் பற்றி வரும் உரிச்சொற்கள்:**

உரு, புரை, மல்லல், ஏ, உகப்பு, உவப்பு, பயப்பு, இயைபு, சீர்த்தி, மாலை, பழுது, முழுது, வம்பு, மாதர், புலம்பு, துவன்று,முரஞ்சல்,

பொற்பு, வறிது, உய்யாமை, நன்று, தெவு, தெவ்வு, கழும், கருவி, கமம், அரி, கவவு, இரங்கல், கவர்வு, சேர், வியல், வய, துயவு, உயா, உசா, வயா, புனிறு, யாணர், அமர்தல், யாண், வியப்பு, முனைவு, வை, எறுழ், நளி என்பன குறிப்புப் பொருளில் வரும் உரிச்சொற்கள் ஆகும்.

குறிப்பு

**ஒரு சொல் பலபொருட்குரியன:**

ஏற்றம், பணை, படர், தா, விறப்பு, அழுங்கல், விழுமம், நனவு, மத, கடி, என்பன ஒருசொல் பலபொருட்களுக்கு உரியன ஆகும்.

**பலசொல் ஒரு பொருட்கு உரியன:**

உறு, தவ, நனி, - செல்லல், இன்னல், - அலமரல், தெருமரல், - மழ, குழ, - கூர்ப்பு, கழிவு, - கதழ்வு, துனைவு, - அதிர்வு, விதிர்ப்பு, - தீர்த்தல், தீர்தல், - கெடவரல், பண்ணை, - நம்பு, மேவு,- ஓய்தல், ஆய்தல், நிகழ்த்தல், சாஅய், - பிணை, பேண், - பையுள், சிறுமை, - விறப்பு, உறப்பு, வெறுப்பு, - இலம்பாடு, ஒற்கம், - ஞெமிர்தல், பாய்தல், - பேம், நாம், உரும், - கறுப்பு, சிவப்பு, - பரவு, பழிச்சு, என்பன பல சொல் ஒரு பொருட்கு உரியனவாய் வருதல் ஆகும்.

**பண்பு பற்றி வரும் உரிச்சொற்கள்:**

**( 1 ) ஒரு சொல் ஒரு பொருட்கு உரியன:**

பசப்பு,சாயல், வெம்மை, வாள், கடி, என்பன பண்பு பற்றி வரும் உரிச்சொற்கள் ஆகும்.

**( 2 ) ஒரு சொல் பல பொருட்கு உரியன:**

வார்தல், போகல், ஒழுகல், - தட, - கய, - செழுமை என்பன ஒருசொல் பல பொருட்கு உரியதாய் வரும் உரிச்சொற்கள் ஆகும்.

**( 3 ) பல சொல் ஒரு பொருட்கு உரியன:**

குரு, கெழு, - தட, கய, நனி, - கறுப்பு, சிவப்பு, - நொசிவு, நுழைவு, நுணங்கு, - என்பன பல சொல் ஒரு பொருட்கு உரியனவாய் வருவன ஆகும்.

**இசை பற்றி வரும் உரிச்சொற்கள்:**

**( 1) ஒரு சொல் ஒரு பொருட்கு உரியது**

இசைப்பு என்பது மட்டுமே ஈண்டு சுட்டப்பெறுகிறது.

**( 2 ) ஒரு சொல் பல பொருட்கு உரியது:**

குறிப்பு

தொல்காப்பியரால் இத்தகைய உரிச்சொல் இவ் இயலில் குறிக்கப்பெறவில்லை.

**( 3 ) பல சொல் ஒரு பொருட்கு உரியன:**

கம்பலை, சும்மை, கலி, அழுங்கல், - துவைத்தல், சிலைத்தல், இயம்பல். இரங்கல் என்பன பல சொல் ஒரு பொருட்கு உரியன.

**பயிற்சி வினாக்கள்:**

1.உரிச்சொல்லின் பொது இலக்கணம் குறித்து விளக்குக.

உரிச்சொல்லின் பொது இலக்கணம்:

உரிச்சொல் கிளவி விரிக்கும் காலை,

இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றி,

பெயரினும் வினையினும் மெய் தடுமாறி,

ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றினும்,

பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றினும்,

பயிலாதவற்றைப் பயின்றவை சார்த்தி,

தம்தம் மரபின் சென்று நிலை மருங்கின்,

எச் சொல் ஆயினும், பொருள் வேறு கிளத்தல்

உரிச்சொல்லை விரித்துரைக்குமிடத்து, இசை குறிப்புப் பண்பென்னும் பொருண்மேல் தோன்றி . பெயர்க் கண்ணும் வினைக்கண்ணும் தம் உருபு தடுமாறி ஒருசொற் பலபொருட் குரித்தாய் வரினும் பலசொல் ஒருபொருட் குரித்தாய் வரினும் கேட்பானாற் பயிலப்படாத சொல்லைப் பயின்றவற்றோடு சார்த்திப் பெயரும் வினையுமாகிய தத்தமக்குரிய நிலைக்களத்தின்கண் யாதானுமொரு சொல்லாயினும் வேறு வேறு பொருளுணர்த்தப்படும் என்பதாகும்.

2.உரியியல் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

**எச்சவியல்**

கிளவியாக்கம் முதல் உரியியல் ஈறாக அமைந்த இயல்களில் உணர்த்துவதற்கு இடமின்மையான் ஒணர்த்தப்பட்டது போக உஞ்சி நின்ற சொல் இலகச்கணம் எல்லாவற்றையும் தொல்காப்பியர் இவ

இயலில் தொகத்து உணர்த்த விரும்புகிறார். அதனால் இப்பகுதி எச்சவியல் ஆயிற்று. பாட்டியல் கோட்பாட்டிற்குரிய செய்யுள் ஈட்டச்சொல், விகாரம், பொருள்கோள், குறிப்பெச்சம், இசையெச்சம், சொல்லெச்சம் முதலியவற்றையும் இவ் இயலில் குறிப்பிடுகிறார், பத்து வகை எச்சங்களை உணர்த்தமியமையால் இது எச்சவியலி ஆயிற்று என்பார் கூற்றினை மறுக்கிறார் சேனாவரையர்,

குறிப்பு

எச்சவியலில் செய்யுளன் ஒழிபு, வழக்கிணத்தது ஒழிபு, மரபு ஒழிபு பேர்ன்றன விளக்கப்பட்டுள்ளன.

செய்யுள் ஒழிபு எனப்படுவது நான்கு வகைச் சொற்கள், செய்யுள் விகாரம், மொழிபுணர் இயல்பு போன்றன ஆகும்.

**நால்வகைச் சொற்கள்**:

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், என்று

அனைத்தே-செய்யுள் ஈட்டச் சொல்லே.

கிளவியாக்க முதலாக உரியியல் இறுதியாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற் கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல் லிலக்கணமெல்லாந் தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனான் இவ்வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று.

கண்டீரென்றா (சொல்-425) எனவும்,செய்யாயென்னு முன்னிலை வினைச்சொல் (சொல்-450) எனவும்,உரிச்சொன் மருங்கினும் (சொல்-459) எனவும்,ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி" (சொல்-491) எனவும், இவை முதலாகிய சூத்திரங்களா னுணர்த்தப் பட்ட அசைநிலையும், வினைச்சொல் லிலக்கணமும் வழுவமைதியும் அவ்வோத்துக்களு ளுணர்த்தாது ஈண்டுணர்த்திய தென்னையோ வெனின்:- அதற்குக் காரணம் அவ்வச்சூத்திரமுரைக்கும் வழிச் சொல்லுதும்.

பலபொருட்டொகுதிக்கு ஒன்றனாற் பெயர் கொடுக்குங்கால் தலைமையும் பன்மையும் பற்றிக் கொடுப்பினல்லது பிறிதாறின்மையானும், தலைமையும் பன்மையும் எச்சத்திற்கின்மையானும் பத்து வகை யெச்சம் ஈண்டு உணர்த்தலான் எச்சவியலாயிற்றென்றல் பொருந்தாமை யுணர்க.

செய்யுட்குரிய சொல்லும், அவற்றிலக்கணமும், அவற்றாற் செய்யுள் செய்வழிப்படும் விகாரமும் செய்யுட் பொருள்கோளும், எடுத்துக் கோடற்க னுணர்த்துகின்றார்.

இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் என அத்துணையே செய்யுளீட்டுதற்குரிய சொல்லாவன:

குறிப்பு

இயற்சொல்லானுஞ் செய்யுட்சொல்லாகிய திரிசொல்லானுமேயின்றித் திசைச் சொல்லும் வட சொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைப்பாடைச் சொல்லுஞ் செய்யுட்குரியவோ வென்றையுற்றார்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட் சூரியன; பிறபாடைச் சொல் உரியவல்லவென்று வரையறுத்தவாறு.

செய்யுள் செய்யலாவது ஒருபொருண்மேற் பலசொற்கொணர்ந் தீட்டலாகலான் ஈட்டலென்றார்.

பெயர்வினையிடையுரி என்பன இயற்சொற் பாகுபாடாகலான், இயற்சொல் அந்நான்கு பாகுபாட்டானுஞ் செய்யுட் குரித்தாம் திரிசொற் பெயராயல்லது வாரா. என்மனாரென்பதனை வினைத்திரிசொல் என்பாருமுளர். அஃது என்றிசினோர் பெறலருங்குரைத்து (புறம்-5) என்பன போலச் செய்யுண்முடிபு பெற்று நின்றதென்றலேபொருத்தமுடைத்து. தில்லென்னு மிடைச்சொல், தில்லவென்றானுந் தில்லை யென்றானும் திரிந்து நின்றவழி அவை வழக்கிற்கு முரியவாகலின் திரிசொல்லெனப்படாது கடுங்கால் என்புழிக்கடியென்னு முரிச்சொல்,பெயரினும் வினையினு மெய்தடுமாறி“ (சொல்-234) என்பதனாற் பண்புப்பெயராய்ப் பெயரொடு தொக்கு வழக்கினுட் பயின்று வருதலால், திரிசொல்லெனப்படாது. திசைச்சொல்லுள் ஏனைச்சொல்லுமுளவேனும், செய்யுட்குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா. இவ்வாறாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க.

செய்யுளீட்டச் சொல் நான்கு :- தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் அயற் சொல் என்கிற முறையில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ் கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச்சொல் திசைச்சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரியும் பற்றி இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என நான்கமைந்தன.

குறிப்பு

தெலுங்கு, கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத்தில் கொடுந்தமிழா யிருந்தமையின், அவற்றின் சொற்கள் திசைச் சொற்கள் எனப்பட்டன. இன்று அம்மொழிகள் ஆரியக்கலப்பால் வேற்று மொழியாய் வழங்குகின்றமையான், வேற்று மொழிச் சொற்களையெல்லாம் திசைச் சொல்லெனக் கூறுவது தவறாகும், முற்காலத்தில் திசைச்சொல்லாகக் காட்டப்பட்ட கொடுந்தமிழ்ச் சொற்களே இன்றுந் திசைச்சொல்லாகும்.

வடமொழி யொன்றே முற்காலத்தில் தமிழகத்து வழங்கிய அயன்மொழி. அதனால், அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வட சொல் எனப்பட்டது. அதுபோல் இப்போது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச்சொல் போர்த்துகீசியச்சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்.

**இயற்சொல்:**

. அவற்றுள்,

இயற்சொல்தாமே

செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி,

தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.

அந்நான்கனுள் இயற்சொல்லென்று சொல்லப்பட்ட சொல், செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்துந் தம்பொருள் வழுவாமல் உணர்த்துஞ் சொல்லாகும்.

அவையாவன : நிலம் நீர், தீ, வளி, சோறு, கூழ், பால் ,தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னுந் தொடக்கத்தனஆகும்.

செந்தமிழ் நிலமாவன, வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் றெற்கும் ,கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்.

திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல் ஆயிற்று. கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற் சொல்லாயிற்றுஎனினும் அமையும் நீரென்பது ஆரியச் சிதைவாயினும் அப் பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் வழங்கப்படுதலான் இயற்சொல் ஆயிற்று.

குறிப்பு

**திரிசொல்:**

ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும்,

வேறு பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்,

இரு பாற்று என்ப-திரிசொல்-கிளவி".

ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும் வேறுபொருள் குறித்த ஒருசொல்லாகவும் வருபவை எல்லாம் திரிசொல் எனப்படும்.இது இயற்சொல்லினின்று திரிந்து வழங்கும் சொல்லாகும்.

வெற்பு, விலங்கல், விண்டு – ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி

எகினம், உந்தி – வேறுபொருள் குறித்த ஒருபெயர்க்கிளவி

மேற்கண்டவற்றுள் எகினம் என்பது அன்னம், கவரிமா, புளிமா, நாய் என்னும் பொருள்களை உணர்த்தும்.உந்தி என்பது யாழ்பத்தர் உறுப்பாகும்.இத கொப்பூழ், தேர்த்தட்டு, கான்யாறு என்னும் பொருள்களையும் உணர்த்தும்.

திரிசொல் உறுப்புத் திரிதல், முழுவதுந்திரிதல் என இருவகைப்படும.

கிள்ளை, மஞ்ஞை – உறுப்புத் திரிதல் - கிளி – கிள்ளை- மயில் – மஞ்ஞை எனத் திரிந்தது.

விலங்கல், விண்டு – முழுவதும் திரிந்தன.இவை வெற்பு என்பதன் திரிபாகும். தமக்குள் தொடர்பு சிறிதும் புலப்படாமல் முழுவதும் திரிந்தன.

**திசைச்சொல்:**

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்

தம் குறிப்பினவே-திசைச்சொல்-கிளவி.

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்துந் தாங் குறித்த பொருள் விளக்கும் சொல் திசைச்சொல் என்பதாகும்.அவ்வந்நிலத்துத் தாங் குறித்த பொருள் விளக்குவதல்லது அவ்வியற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்கா வென்றவாறாம்.

பன்னிருநிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவட தலை எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பான் முதலாக வட கீழ்பாலிறுதியாக உள்ளனவாகும்.

குறிப்பு

கொடுந்தமிழ் நிலமாக சேனாவரையர் கூறிய பன்னிரு நிலம் 12 ஆம் நூற்றாண்டிற் கேற்றவையாதலின், தொல்காப்பியர் குறித்தவையாகா.

தென்பாண்டிநாட்டார் ஆ, எருமை என்பவற்றைப்பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குவர்.

தங்குறிப்பினவென்று தனிமொழி தம்பொருளுணர்த்து மாற்றுக்குச் சொல்லினார். இருமொழி தொடருமிடத்துத் தன்னை வந்தான் என வேண்டியவாறு வரப்பெறு மென்றாரல்லரென்பது.

பன்னிருநிலமாவன:-வையாற்றின் நாடு; ஒளிநாடு, தென்பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலாடு, அருவாநாடு, அருவாவடதலை என்ப. இவை செந்தமிழ் நாட்டகத்த செந்தமிழ் நாடென்றமையால், பிறநாடாக வேண்டுமென்பார். உதாரணங்காட்டுமாறு:- கன்னித் தென்கரைக் கடற்பழந்தீபம்; கொல்லங் கூபகஞ்சிங்களமென்னும் எல்லையின் புறத்தவும், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம், என்பன குடபாலிருவிறச் சையத் துடனுறைபு கூறுந் தமிழ் திரிநிலங்களும் முடியுடையவ ரிடுநிலவாட்சியின் அசுர மேம்பட்ட குறுநிலக் குடுமிகள் பதின்மரும் உடனிருப் பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிருதேயத்தினும் தமிழ்ச் சொல்லாதற்கு விருப்புடையன" என்றமையானும், தமிழ் கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி என நிறுத்துப் பின்னுஞ் செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு" என ஓதியவதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலானும், பன்னிரு நிலமாவன:-

குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும், கொல்லமும், கூபகமும், சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமுந் துளுவமுங், குடகமுங், குன்றகமும், கிழக்குப் பட்ட கருநடமும், வடுகும், தெலிங்கும், கலிங்கும் என்று கொள்ளப்படும்.

இவற்றுள், கூபகமுங் கொல்லமுங் கடல் கொள்ளப் படுதலின், குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினார் போலும். பஞ்சத் திராவிடமெனவும் வடநாட்டார் உரைப்பவாகலான், அவையைந்தும் வேங்கடத்தின் தெற்காதலும் கூடாமையுணர்க.

வடசொல்-கிளவி வட எழுத்து ஓரீஇ,

எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே.

வடசொற் கிளவியாவது வடசொற்கே உரிய எனப்படுஞ் சிறப்பெழுத்தின் நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம்

எனவே,பொதுவெழுத்தான் இயன்ற வடசொல்லும் செய்யுட் செய்தற்குச் சொல்லாமென்றவாறாயிற்று.

குறிப்பு

அவை வாரி, மேரு, குங்குமம், மனு என்னுந்தொடக்கத்தன.

ஒக்குமென்று சொல்லப்படுவன ஒரு புடையால் ஒப்புமையும் வேற்றுமையுமுடைமையான் இரண்டாகல் வேண்டும், இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒரு சொல்லிலக்கண முடைமையான் இரண்டுசொல்லெனப்படாது

அதனான் ஒத்தல் யாண்டையது ; ஒரு சொல்லேயாமென்பது. ஒரு சொல்லாயினும் ஆரியமுந் தமிழுமாகிய இடவேற்றுமையால் வேறாயினவெனின் :- அவ்வாறாயின் வழக்குஞ் செய்யுளுமாகிய இட வேற்றுமையாற் சோறு கூழென்னுந் தொடக்கத்தனவும் இரண்டு சொல்லாவான் செல்லும்; அதனான் இடவேற்றுமையுடையவேனும் ஒரு சொல் லிலக்கணமுடைமையான் ஒரு சொல்லேயாம் ஒரு சொல்லாய வழித் தமிழ்ச்சொல் வடபாடைக்கட் செல்லாமையெனும் வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகயானும், இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன எனல் வேண்டும் ; அதனான் அது போலியுரையென்க. அல்லதூஉம் அவை தமிழ்ச்சொல்லாயின் வடவெழுத்தொரீஇ யென்றல் பொருந்தாமையானும், வட சொல்லாதலறிக என்பார் சேனாவரையர்.

சிதைந்தன வரினும், இயைந்தன வரையார்.

பொது எழுத்தான் இயன்றனவே அன்றி, வடவெழுத்தான் இயன்ற வடசொற் சிதைந்து வரினும், பொருத்தமுடையன, செய்யுளிடத்து வரையார்

அரமிய வியலகத் தியம்பும் (அகம் - 424)

தசநான் கெய்திய பணைமரு ணோன்றாள் (நெடுநல் - 115) எனவும் வரும்.

சிதைந்தன வரினுமெனப் பொதுப்படக் கூறியவதனான், ஆனை, வட்டம், நவீடம், கண்ணன் எனப் பாகதமாய்ச் சிதைந்து வருவனவுங் கொள்க என்பார் சேனாவரையர்.

அந் நாற் சொல்லும் தொடுக்கும் காலை,

வலிக்கும் வழி வலித்தலும், மெலிக்கும் வழி மெலித்தலும்,

விரிக்கும் வழி விரித்தலும், தொகுக்கும் வழித் தொகுத்தலும்,

நீட்டும் வழி நீட்டலும், குறுக்கும் வழிக் குறுக்கலும்,

நாட்டல் வலிய என்மனார் புலவர்.

குறிப்பு

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்லென்னும் நான்கு சொல்லையும் செய்யுளாகத் தொடுக்கால் மெலியதனை வலிக்கவேண்டும்வழி வலித்தலும், வலியதனை மெலிக்கவேண்டும்வழி மெலித்தலும், குறைவதனை விரிக்க வேண்டும்வழி விரித்தலும்,மிகுவதனைத் தொகுக்கவேண்டும் வழித் தொகுத்தலும், குறியதனை நீட்ட வேண்டும்வழி நீட்டலும், நெடியதனைக் குறுக்கவேண்டும் வழிக் குறுக்கலுமாகிய அறுவகை விகாரமும், செய்யுளின்பம் பெறச் செய்வர் புலவர்.

குறுங்கை யிரும்புலி - குறுக்கை யிரும்புலி" (269)

முந்தை வரூஉங் காலந் தோன்றின் -முத்தை வரூஉங் காலந் தோன்றின்" (எழு - 194) வலிக்கும்வழி வலித்தல்.

சுடுமட்பாவை- சுடுமண்பாவை

குற்றிய லுகரத் திறுதி" - குன்றிய லுகரத் திறுதி - மெலிக்கும்வழி மெலித்தல்

.தண் துறைவன் - தண்ணந் துறைவன் (குறுந் - 296) - விரிக்கும்வழி விரித்தல்

.மழவரை ஓட்டிய - மழவர் ஓட்டிய (அகம் - 9) - தொகுக்கும்,வழித்தொகுத்தல்

குன்றி கோபங் கொடிவிடு பவள மொண்செங்காந்தளொக்கு நின்னிறம் என்புழிச் செவ்வெண்ணின் தொகை தொக்கு நிற்றலின் இதுவும் தொகுக்கும்,வழித்தொகுத்தலாம்.

விடு மின் - வீடு மின், பச்சிலை - பாசிலை - நீட்டும்வழி நீட்டல்

உண்டார்ந்து -உண்டருந்து - குறுக்கும் வழிக்குறுக்கல்.

**மொழிபுணர் இயல்பு:**

. நிரல்-நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று,

அவை நான்கு என்ப-மொழி புணர் இயல்பே

நிரனிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழிமாற்றுமென நான்கென்று சொல்லுப ; அந்நான்கு சொல்லுஞ் செய்யுளிடத்துத் தம்முட்புணருமுறையை.

குறிப்பு

நிரனிறையும் சுண்ணமும் மொழிமாற்றாதல் ஒக்குமாயினும், நிரனிற்றலும் அளவடியெண்சீரைச் சுண்ணமாகத் துணித்தலுமாகிய வேறுபாடுடைமையான், அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர்கொடுத்து, வேறிலக்கணம் இல்லாத மொழிமாற்றை மொழிமாற்றென்றார் தொல்காப்பியர்.

**நிரல்நிறைப் பொருள்கோள்:**

அவற்றுள்,

நிரல்-நிறைதானே

வினையினும் பெயரினும் நினையத் தோன்றி,

சொல் வேறு நிலைஇ, பொருள் வேறு நிலையல்

அந் நான்கினுள், நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாம்;

தொடர் மொழிப்பொருள் முடிக்குஞ் சொற்கண் ஆகலான் முடிக்குஞ் சொல்லைப் பொருளென்றார்.

வினையினும் பெயரினு மென்றதனால், வினைச்சொல்லால் வருவது, பெயர்ச்சொல்லால் வருவது அவ்விரு சொல்லானும் வருவது என நிரனிறை மூன்றாம்.

மாசு போகவுங் காய்பசி நீங்கவுங் -

கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு

- என முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறுவேறு நிற்றலின், வினைநிரனிறை யாயிற்று.

அவை மாசுபோகப் புனன்மூழ்கி, பசிநீங்க அடிசில் கைதொட்டு என இயையும்,

கொடி குவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி

- என முடிவனவும் முடிப்பனவும் ஆகிய பெயர்ச்சொல் வேறுவேறு நிற்றலின், பெயர் நிரனிறையாயிற்று. அவை நுசுப்புக்கொடி, உண்கண்குவளை, மேனிகொட்டை என இயையும்.

உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்

கடலிரு ளாம்பல்பாம் பென்ற - கெடலருஞ்சீர்த்

திங்க டிருமுகமாச் செத்து

என முடிப்பனவாகிய வினையும் முடிவனவாகிய பெயரும் வேறுவேறு நிற்றலின், பொது நிரனிறையாயிற்று.

குறிப்பு

அவை கடல் உடலும், இருள் உடைந்தோடும், ஆம்பல் ஊழ்மலரும் பாம்பு பார்க்கும் என இயையும்.

நினையத்தோன்றி என்றதனால், சொல்லும் பொருளும் வேறுவேறு நிற்குங்கால் நிரல்பட நில்லாது,

களிறும் கந்தும் போல நளிகடற்

கூம்புங் கலனுந் தோன்றுந்

தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே

- என மயங்கி வருதலுங் கொள்க.

**சுண்ணப் பொருள்கோள்:**

சுண்ணம்தானே

பட்டாங்கு அமைந்த ஈர் அடி எண் சீர்

ஒட்டு வழி அறிந்து, துணித்தனர் இயற்றல்.

சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கண் அமைந்த எண்சீரைத் துணித்து இயையும் வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம்;

அளவடி அல்லாதன விகாரவடியாகலிற் பட்டாங்கு அமைந்தில ஆதலிற் பட்டாங்கமைந்த ஈரடியெனவே, அளவடியாதல் பெறப்படும். ஈரடியெண்சீர் விகாரவடியானும் பெறப்படுதலின், அவற்றை நீக்குதற்குப் பட்டாங்கமைந்த ஈரடியென்றார். எனவே சுண்ணம் அளவடியிரண்டனுளல்லது வாராதென்பது. பெறப்படும் என்பார் சேனாவரையர்.

சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன சுனை

என்புழி, ஆழ, மிதப்ப, நீத்து, நிலையென்பனவும், சுரை. அம்மி யானைக்கு, முயற்கென்பனவும் நின்றுவழி பொருள் கொள்ள இயையாமையின் சுரை மிதப்ப, அம்மி யாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் இயையுமாறு துணித்துக்கூட்ட வேண்டும்.

சுண்ணம்போலச் சிதராய்ப் பரந்து கிடத்திலிற் சுண்ண மென்றார்.

குறிப்பு

**அடிமறிமாற்றுப் பொருள்கோள்:**

அடிமறிச் செய்தி அடி நிலை திரிந்து,

சீர் நிலை திரியாது, தடுமாறும்மே.

அடிமறிச்செய்யுளாவது, சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தநிலையில் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று நிற்கும்.

''மாறாக் காதலர் மலைமறந் தனரே

யாறாக் கட்பனி வரலா னாவே

வேறா மென்றோள் வளைநெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழு மாறே“

“யாறாக் கட்பனி வரலா னாவே

மாறாக் காதலர் மலைமறந் தனரே

வேறா மென்றோள் வளைநெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழு மாறே

என அடி மறித்திட்டாலும் பொருள் மாற்றம் ஏற்படுவதில்லை.

பெரும்பான்மையும் நாலடிச்செய்யுட்க ணல்லது இப்பொருள் கோள் வாராதென்க.

நிரனிறைதானே, சுண்ணந்தானே,மொழிமாற்றியற்கை என்பன போல ஈண்டும் அடிமறிச்செய்தியென்பதனைக் குறளடியாக்கி. அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருதெரி மருங்கின் என்று சூத்திரமாக உரைப்பாருமுளர்.

பொருள் தெரி மருங்கின்

ஈற்று அடி இறு சீர் எருத்துவயின் திரியும்

தோற்றமும் வரையார், அடிமறியான.

பொருளாராயுங்கால், அடிமறிச் செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதலும் வரையார்;

சீர்நிலை திரியாது தடுமாறும் என்றாராகலின் சீர்நிலை திரிதலும் ஒரு வழிக்கண்டு எய்தியது இகந்துபடாமற் காத்தவாறு. எருத்துவயன் என்பதற்கு ஈற்றயற்சீர்வயின் என்று பொருளுரைத்து ஆகும்.

குறிப்பு

சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளி ராரணங் கினரே

சார னாட நீவரு தீயே

வார லெனினே யானஞ் சுவலே

என்புழி அஞ்சுவல் யான் என இறுதிச்சீர் ஈற்றயற்சீர்வயிற் சென்று திரிந்ததென்று உதாரணங் காட்டிய உரையாசிரியரை எடுத்துரைக்கும் சேனாவரையர் : - யானஞ்சுவலென நின்றாங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் . இவ்வாறு திரிதல் பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க. என மறுத்துரைக்கின்றார்.

எல்லாவடியும் யாண்டுஞ் செல்லுமாயினும், உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடியென்றுங் கூறினார்.

உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி

யிடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்

மதிக்கப் படாதன மண்டல யாப்பே

என உரைப்போர் குறிப்பான் முதலும் இடையும் ஈறுங்கோடல் பிறருங் கூறினாரென்பது.

**மொழிமாற்றுப்பொருள்கோள்:**

மொழிமாற்று இயற்கை

சொல் நிலை மாற்றி, பொருள் எதிர் இயைய,

முன்னும் பின்னும் கொள் வழிக் கொளாஅல்!

மொழிமாற்றினதியல்பு, பொருளெதிர் இயையுமாறு சொல் நிலையை மாற்றி முன்னும் பின்னும் கொள்ளும் வழிக் கொளுவுதலாகும்.

ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்

பாரி பறம்பின்மேல் தண்ணுமை - காரி

விறன்முள்ளூர் வேங்கை வீ தானாணும் தோளான்

நிறனுள்ளூர் உள்ள தலர்

குறிப்பு

என இதனுள், பாரி பறம்பின்மேல் தண்ணுமை தானாணும் தோளாள் எனவும், நிறன் விறன்முள்ளூர் வேங்கைவீ எனவும், உள்ளூருள்ளதாகிய அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும் எனவும், முன்னும் பின்னுங் கொள்வழி யறிந்து கொள்க. மொழிமாற்று நின்று ஒன்றற்கொன்று செவ்வாகாமை கேட்டார் கூட்டியுணருமாறு கொள்ளல் வேண்டும். அல்லாக்கால், அவாய்நிலையும் தகுதியுடைய சொற்கள் அண்மையாகிய காரணமின்மையாற் சொற்கள் தம்முள் இயையாவாம்.

**வழக்கினத்து ஒழிபு:**

கிளைநுதற் பெயர்கள், தொகைச்சொற்கள்,அடுக்கு, வினைமுற்று, எச்சங்கள் போன்றவை எச்சவியளுள் அமைந்துள்ள வழக்கினத்து ஒழிபு ஆகும்.

**கிளைநுதற் பெயர்கள்:**

"த, ந, நு, எ" எனும் அவை முதல் ஆகிய

கிளை நுதற் பெயரும் பிரிப்பப் பிரியா

த ந நு எ என்பனவற்றை முதலாக உடையவாய்க் கிளைமை நுதலி வரும் பெயரும் பிரிக்கப்படாது.

அவையாவன,

தமன், தமள், தமர்: நமன், நமள், நமர்;

நுமன், நுமள், நுமர்; எமன், எமள், எமர் ;

தம்மான், தம்மாள், தம்மார்; நம்மான், நம்மாள், நம்மார்;

நும்மான், நும்மாள், நும்மார்; எம்மான், எம்மாள், எம்மார்

என்பனஆகும்.உம்மையாற் பிறகிளைநுதற் பெயரும் பிரிக்கப் பிரியா வென்பதாம். அவை தாய், ஞாய், தந்தை, தன்னை என்னுந் தொடக்கத்தன.

வெற்பன் பொருப்பன் என்னுந் தொடக்கத்து ஒட்டுப்பெயர் வெற்பு + அன், பொருப்பு + அன் எனப் பிரித்தவழியும், வெற்பு பொருப்பு என்னும் முதனிலை தம்பொருள் இனிது விளக்கும். தமன், எமன் என்பனவற்றைத் தம் + அன், எம் + அன், எனப் பிரிக்கலுறின் தம், எம் என்பன முதனிலையாய்ப் பொருளுணர்த்துதல் வேண்டும் ; அவை பொருளுணர்த்தாமையான், தமன், எமன் என வழங்கியாங்குக் கொள்வதல்லது பிரிக்கப்படாமையின் ,அவ்வாறு கூறினார் தொல்காப்பியர்

.. தாம் யாம் என்பன அவற்றிற்கு முதனிலையாகப் பிரிக்கவே, அவையுந் தம் பொருளுணர்த்து எனின் என வினா எழுப்பும் சேனாவரையர் தமன், எமன் என்பன தன் கிளை, என் கிளை எனவும் தங்கிளை, எங்கிளை எனவும் முதனிலை வகையான் ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாதலுடைய ஒருமையுணர்த்துங்கால் தாம் யாம் என்பன பொருந்தாமையின் தான் யான் என்பனவே முதனிலையெனல் வேண்டும்.வேண்டவே இவ்வாறு பிரிப்பின் தமன் எமன் என ஓரொன்றிரண்டு சொல்லாதல் வேண்டுதலான், எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையின் ஒரு சொல்லெனவே படும்; இரண்டு சொல்லென்றல் நிரம்பாமையின் , அவ்வாறு பிரித்தலும் பொருத்தமின்று என்பது ஆம்.

இசைநிறை, அசைநிலை, பொருளொடு புணர்தல், என்று

அவை மூன்று என்ப-ஒரு சொல் அடுக்கே

இசைநிறையும் அசைநிலையும் பொருள் வேறுபாட்டோடு புணர்வதுமென ஒரு சொல்லடுக்கு மூன்று வகைப்படும்;

**இசைநிறை:**

செய்யுளில் இசைநிறைத்தற் பொருட்டு வரும். நான்கு முறை அடுக்கி வரும். இரண்டு, மூன்று முறையும் அடுக்கி வரலாம்.

இசைப்படு பொருளே நான்கு வரம்பாகும் ( சொல் - 423 )

ஏ ஏ ஏ ஏ யம்பன் மொழிந்தனள் - இசைநிறை.

**அசைநிலை:**

செய்யுளில் இன்பம் குறித்து வரும். இது அடுக்கி வருதற்கு தொல்காப்பியர் வரம்பு கூறவில்லை, எனினும் உரையாசிரியர்கள் இருமுறை அடுக்கி வரும் என்பர்.

மற்றோ மற்றோ; அன்றே அன்றே - அசைநிலை.

**பொருளோடு புணர்தல்:**

ஒரு பொருளுஞ் குறித்து வரும். விரைவு, துணிவு, உடன்பாடு, ஒரு தொழில்மேல் பலகால் வருதல் எனக் குறித்து வரும்.

பாம்பு பாம்பு,- விரைவு

அவன் அவன் - துணிவு

வைதேன் வைதேன் ; உண்டு உண்டு ; போம் போம் - நிகழ்தல்

என்பன விரைவுந் துணிவும் உடம்பாடும் ஒரு தொழில் பலகால் நிகழ்தலுமாகிய பொருள்வேறுபாடு உணர்த்தலிற் பொருளொடு புணர்த்தல்.

குறிப்பு

**தொகைநிலைமொழிகள்**

.வேற்றுமைத் தொகையே, உவமத் தொகையே,

வினையின் தொகையே, பண்பின் தொகையே,

உம்மைத் தொகையே, அன்மொழித் தொகை, என்று

அவ் ஆறு என்ப,-தொகைமொழி நிலையே

வேற்றுமைத்தொகை முதலாகத் தொகைச்சொல் ஆறாம்

வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறுந் தொகுதலிற் தொகையாயின வென்பாரும். அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலிற் தொகையாயின என்பாரும் உளர். செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு வருவனவற்றைத் தொகையாகக் கருதவில்லை. வேழக்கரும்பு, கேழற்பன்றி என்வழித் தொக்கவில்லை எனினும் தொகையெனக் கருதுவர். உருபு முதலாயின தொகுதலில் தொகை எனில் உருபு தொகல் எல்லாத் தொகையின் கண்ணும் இல்லை. எனவே சேனாவரையர் அவ்வப் பொருள்மேல் பிளவுபடாது சொன்னீர்மைபட்டு வருவதனையே ஏற்றுக்கொள்வார், உருபு தொகவருதலும் (சொல் - 104) எனவும்,வேற்றுமை தொக்க பெயர்வயினானும் (சொல் - 418) எனவும்,உம்மை தொக்க பெயர்வயினானும்“ எனவும்,உவமைதொக்க பெயர்வயினானும்“ எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்கனவெனப் படுமோ எனின் - அவ்வாறன்று,, அதுவென் வேற்றுமை யுயர் திணைத் தொகைவயின்“ (சொல் 94) என்புழி அதுவெனுருபு நின்று கெட்டதாயின் நின்ற காலத்துத் தினைவழுவாம். ; அத்திணைவழு அமைவுடைத்தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அதுதன்னையே விரிப்பினும் அமைவுடைத்து; அதனான் முறைப்பொருடோன்றா நம்பிமகன் என இரண்டு சொற் தொக்கன வென்பதே ஆசிரியர் கருத்தெனல் வேண்டும். மேலும், வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை என்பன வற்றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுந் தொக்கு நில்லாமை யானும், அ.்.தே கருத்தாதலறிக. அதனான் உருபும் உவமையும் உம்மையுந் தொகுதலாவது தம் பொருள் ஒட்டிய சொல்லாற்றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாது நிற்றலே யாம் என்பார் சேனாவரையர்

குறிப்பு

வேற்றுமைத் தொகையென்பது வேற்றுமைப் பொருளையுடைய தொகை அல்லது வேற்றுமைப் பொருள் தொக்கதொகை என்றானும் விரியும். உவமத்தொகை உம்மைத் தொகை அன்மொழித்தொகையென்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொக்க சொல்லல்லாத மொழி. வினைத்தொகை பண்புத்தொகை யென்பன, வினையினது தொகை பண்பினது தொகையென விரியும். வினைபண்பென்றது அவற்றை யுணர்த்துஞ் சொல்லை. ஒரு சொல்லாற் தொகையின்மையிற் பிறிதொரு சொல்லொடு தொகுதல் பெறப்படும்.

**வேற்றுமைத்தொகை:**

அவற்றுள்,

வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல்.

வேற்றுமைத் தொகை அவ்வேற்றுமை உருபு தொடர்பொருள் உணர்த்தியாங்கு உணர்த்தும்;

சாத்தனொடு வந்தான் என்னும் பொருட்கட் சாத்தன் வந்தன் எனவும் சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கட் சாத்தன் கொடுத்தான் எனவும் உருபு தொடர்புப் பொருளுணர்த்தும் ஆற்றல் இல்லன தொகா, அவ்வாற்றல் உடையனவே தொகும்.

இரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாக வேற்றுமைத்தொகை அறு வகைப்படும்.

நிலங்கடந்தான், குழைக்காது

தாய் மூவர், பொற்குடம்

கருப்பு வேலி, கடிசூத்திரப்பொன்

வரை பாய்தல் , கருவூர்க் கிழக்கு

சாத்தன் புத்தகம், கொற்றனுணர்வு

மன்றப்பெண்ணை, மாரியாமா

இவை முறையானே, நிலத்தைக் கடந்தான் ; குழையை யுடைய காது; தாயொடு மூவர்; பொன்னானியன்ற குடம் ; கரும்பிற்கு வேலி; கடிசூத்திரத்திற்குப் பொன்; வரையினின்றும் பாய்தல்; கருவூரின் கிழக்கு; சாத்தனது புத்தகம் ; கொற்றன துணர்வு; மன்றத்தின்கணிற்கும் பெண்ணை; மாரிக்கணுள தாமா என்னும் உருபுதொடர்ப் பொருளை இனிது விளக்கும்.

குறிப்பு

**உவமத்தொகை:**

உவமத் தொகையே உவம இயல்

உவமத் தொகை உவமவுருபு தொடர்ப் பொருள் போலப் பொருளுர்த்தும். எனவே புலியன்ன சாத்தன், மயிலன்ன மாதர் என்னும் பொருட்கட் புலிச்சாத்தன், மயின்மாதர் என அப்பொருள் விளக்கும் ஆற்றல் இல்லாதன தொகா; ஆற்றலுடையவே தொகும்.

புலிப்பாய்த்துள் ; மழைவண்கை ; துடிநடுவு; பொன்மேனி என்பன புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள் மழையன்ன வண்கை; துடியன்ன நடுவு; பொன்னன்ன மேனி எனத் தம் விரிப்பொருள் உணர்த்தின. புலிப்பாய்த்துளை யொக்கும் பாய்த்துள்; மழையையொக்கும் வண்கை என விரித்தலின் அவையெல்லாம் வேற்றுமைத் தொகை யெனப்படும்; அதனான் உவமத் தொகையென ஒன்றில்லையெனின்: அவ்வாறன்று,சொல்லுவார்க்கு அது கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக் கருத்தானன்றிப் புலியன்ன பாய்த்துள், பொன்மானு மேனி என வேற்றுமையோடு இயைபில்லா உவமவுருபு தொடர்ப்பொருட்கண் தொக்கவழி உவமத் தொகையாகவே அமையும். வேற்றுமைத் தொகை ஆகா என்பார் சேனாவரையர்.

உவமவுருபு ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லாகலான், வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும். (இரண்டாம் வேற்றுமை) அவைபற்றி என்போற் பெருவிதுப் புறுகநின்னை யின்னாதுற்ற வறனில் கூற்றே (புறம் - 255) என்புழிப் போலவென்பது குறிப்பு வினையெச்சமாய் நிற்றலானும்,நும்ம னோருமற்றினைய ராயி - னெம்ம னோரிவட் பிறவலர் மாதோ (புறம் - 210) என்றவழி அன்னோரென்பது இடைச் சொல் முதனிலையாகப் பிறந்த குறிப்புப் பெயராகலானும், என்னைப் போல நும்மையன்னோர் எம்மையன்னோரென இரண்டாவது விரித்தாற்கு ஏற்புடைமை உண்டென்று அறிதல் வேண்டும்.

**வினைத்தொகை:**

வினையின் தொகுதி காலத்து இயலும்.

வினைத் தொகை காலத்தின்கண் நிகழும்;

காலத்தியலும் எனப் பொதுவகையாற் கூறியவதனான் மூன்று காலமுங் கொள்க.

தொகுதி காலத்தியலுமெனவே அவ்வினை பிரிந்து நின்ற வழித் தோன்றாது. தொக்கவழித் தொகையாற்றலாற் காலந்தோன்றும்

வினையென்றது எனப்படுவது: - வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும் முதனிலையாய், உண், தின், செல், கொல், என வினை மாத்திர முணர்த்தி நிற்பவை ஆகும் இவற்றை வடநூலார் தாதுவென்பர்.

ஆடரங்கு, செய்குன்று; புணர்பொழுது; அரிவாள்; கொல் யானை; செல்செலவு என வரும். காலம் உணர்த்தாது வினைமாத்திரம் உணர்த்தும் பெயர், நிலைப்பெயர் முதலாகிய பெயரொடு தொக்குழிக் காலமுணர்த்தும்.காலமுணர்த்துகின்றுழிப் பெயரெச்சப் பொருளவாய் நின்றுணர்த்துமென்பது

செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின் -

மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும். (எழு - 482)

என்பதனாற் கூறினார். தொகைப் பொருளாகிய தாம் பிரிந்தவழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் புணரியனிலையிடை யுணரத் தோன்றா" என்றார். அதனான் இவைதஞ் சொல்லான் விரிக்கப்படாமையிற் பிரிவிலொட்டாம்.

பெயரெச்சம் நின்று தொக்கதென்ற உரையாசிரியரின் கருத்தினை எடுத்துரைக்கும் சேனாவரையர் : - அற்றன்று ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க்கப்படா ; வழங்கியவாறே கொள்ளப்படுமென்றது. பிரித்தவழித் தொகைப்பொருள் சிதைதலானன்றே ; கொன்ற யானை என விரிந்த வழியும் அப்பொருள் சிதைவின்றேல் புணரிய னிலையிடை யுணரத்தோன்றா" என்றற்கொரு காரணமில்லையாம் ; அதனாற் பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர் கருத்தன்மையின் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க என விளக்கம் செய்கிறார், அல்லதூஉம், ஆகுபெயர் உணர்த்தியவழி வினைத்தொகையுளப்பட இருபெயரொட்டும்" (சொல் - 114) என்றாராகலானும் வினை நின்று தொகுதல் அவர்க்குக் கருத்தன்மையறிக.என விளக்கம் செய்கிறார் சேனாவரையர்.

**பண்புத்தொகை:**

வண்ணத்தின், வடிவின், அளவின், சுவையின், என்று

அன்ன பிறவும் அதன் குணம் நுதலி,

இன்னது இது என வரூஉம் இயற்கை

என்ன கிளவியும் பண்பின் தொகையே.

குறிப்பு

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அவை போல்வன பிறவும் குணத்தை குறித்துப் பின் தொக்க வழிக் குணச்சொற் குணமுடையதனை யுணர்த்தலான் இன்ன திதுவென ஒன்றனை ஒன்று விசேடித்து இரு சொல்லும் ஒரு பொருளின்மேல் வரும் இயல்பையுடைய எல்லாத் தொகைச் சொல்லும் பண்புத்தொகையாம்:

கருங்குதிரை - வண்ணம்

வட்டப்பலகை - வடிவு.

நெடுங்கோ - அளவு .

தீங்கரும் - சுவை.

அன்னபிறவு மென்றதனான்.

நுண்ணூல், பராரை, மெல்லிலை, நல்லாடை என்னுந் தொடக்கத்தன கொள்க. அவை, கரிதாகிய குதிரை, வட்ட மாகிய பலகை எனப் பண்புச் சொல்லும் பண்புடைப் பொருளே குறித்தலான், இரு சொல்லும் ஒரு பொருளவாய் இன்னது இதுவென ஒன்றையொன்று பொதுமை நீக்கியவாறு கண்டுகொள்க. அஃதேல், கரிதாகிய குதிரை, வட்டமாகிய பலகை என்பன அத்தொகையின் விரியாகலின் பண்புத் தொகை பிரிக்கப்படாது என்றது என்னையெனின் என வினா எழுப்பும் சேனாவரையர்:- அற்றன்று, தொகைப்பொரும் உணர்த்துதற்குப் பிறசொற் கொணர்ந்து விரித்ததல்லது தன்சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படா வென்க. வடநூலாரும் பிரியாத் தொகையும் பிற சொல்லான் விரிக்கப்படுமென்றார். கரியதென்னும் பண்பு கொள் பெயர் கருங்குதிரையெனத் தொக்கதென்றாரால் உரையாசிரியரெனின். அதனைப் பெயரெச்சம் வினைத்தொகை நிலைமொழி என்றதற்கு உரைத்தாங் குரைத்து மறுக்க. பிறசொற்கொணர்ந்து விரிக்குங்கால் கரிய குதிரை. கரிதாகிய குதிரை, கரியது குதிரை என அத்தொகைப் பொருளுணர்த்துவன எல்லாவற்றானும் விரிக்கப்படும் என விளக்கம் தருவார்.

முதனிலை எனப்படுவது கரியன், செய்யன், கருமை, செம்மை, என்பன வற்றிற்கெல்லாம் முதனிலையாய்ச் சொல்லாய் நிரம்பாது கரு செவ்வெனப் பண்புமாத்திர முணர்த்தி நிற்பதாம்.

என்ன கிளவியும் என்றதனால்,

சாரைப்பாம்பு, வேழக்கரும்பு, கேழற்பன்றி எனப் பண்பு தொகாது பெயர் தொக்கனவும் அத்தொகையாதல் கொள்க.

குறிப்பு

**உம்மைத்தொகை:**

இரு பெயர், பல பெயர், அளவின் பெயரே,

எண்ணியற் பெயரே, நிறைப் பெயர்க் கிளவி,

எண்ணின் பெயரொடு, அவ் அறு கிளவியும்

கண்ணிய நிலைத்தே உம்மைத் தொகையே.

இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச் சொல் திரளையும் தனக்குச் சார்பாகக் குறித்து நிற்கும் உம்மைத்தொகை;

உவாப்பதினான்கு- இருபெயரானாய உம்மைத் தொகை.

புலிவிற்கெண்டை - பல பெயரானாய உம்மைத் தொகை.

தூணிப்பதக்கு - அளவுப்பெயரானாய உம்மைத் தொகை.

முப்பத்து மூவர் - எண்ணியற்பெயரானாய உம்மைத் தொகை.

தொடியரை - நிறைப்பெயரானாய உம்மைத் தொகை.

பதினைந்து - எண்ணுப்பெயரானாய உம்மைத் தொகை.

அவை விரியுங்கால், உவாவும் பதினான்கும் எனவும். புலியும் வில்லுங் கெண்டையும் எனவும், தூணியும் பதக்கும் எனவும், முப்பதின்மரும் மூவரும் எனவும், தொடியும் அரையும் எனவும், பத்துமைந்தும் எனவும் விரியும்.

வேற்றுமைத்தொகை முதலாயின பலசொல்லால் தொகுதல் சிறுபான்மை ; அதனான் உம்மைத்தொகை இரு சொல்லானும் பல சொல்லானும், ஒப்பத்தொகுமென்பது அறிவித்தற்கு இருபெயர் பலபெயரென்றார். கற்சுனைக் குவளையிதழ், பெருந்தோட் பேதை எனப் பிற தொகையும் பெரும்பான்மையும் பல சொல்லான் வருமா எனின் :- கல்லென்பதும் சுனையென்பதும் கற்சுனை எனத் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் இதழென்பதோடு தொக்குக் கற்சுனைக் குவளையிதழென ஒன்றாயிற்று. பெருந்தோளென்னுந் தொகை ஒரு சொல்லாய்ப் பேதையென்பதனோடு தொக்குப் பெருந்தோட் பேதையென ஒன்றாயிற்று.அவை இவ்வாற்றானல்லது தொகாமையின் இரு சொற்றாகையேயாம். புலிவிற் கெண்டை என்றவழி மூன்று பெயருந் தொகுமென்னாது முதற் பெயரொழித்தும் இறுதிப் பெயரொழித்தும் ஏனையிரண்டுந் தம்முள் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின்

*Self-Instructional Material*

குறிப்பு

மற்றையதனோடு தொகுமெனின் : - முன்றொகு மிரண்டற்கும் ஓரியைபு வேறுபாடின்மையானும் . இரு தொகைப்படுத்தல் பலசெய்கைத்தாதலானும் அவை மூன்று பெயரும் ஒருங்கு தொக்கனவெனவே படும் என்பது. வெளிப்பட்டு நிற்கும்.

அளவின் பெயர் முதலாயின, இருபெயராயல்லது தொகாவென வரையறுத்தற்கு இருபெயர் பல்பெயரென அடங்குவனவற்றைப் பெயர்த்துக் கூறினார். கலனே தூணிப் பதக்கு, தொடியே கஃசரை, நூற்றுநாற்பத்துநான்கு என்புழித் தூணிப்பதக்கு கஃசரை, நாற்பத்துநான்கு என்பன ஒரு சொற்போல அளவுப்பெயரும், நிறைப் பெயரும், எண்ணுப் பெயருமாய் வழங்கப்பட்டு வருதலின் கலமுந் தூணிப்பதக்கும் தொடியும் கஃசரையும், நூறும் நாற்பத்துநான்கும் என இரு மொழி நின்று தொக்கவென்றலே பொருத்தமுடைமையறிக.

பண்பு தொக வரூஉம் கிளவியானும்,

உம்மை தொக்க பெயர்வயினானும்,

வேற்றுமை தொக்க பெயர்வயினானும்,

ஈற்று நின்று இயலும்-அன்மொழித்தொகையே.

பண்புச்சொற்றொகுஞ் சொல்லினும், உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் ; இறுதிச்சொற்கள் நின்று நடக்கும் அன்மொழித்தொகை;

பண்புத்தொகைபடவும் உம்மைத் தொகைபடவும் வேற்றுமைத் தொகைபடவும் அச்சொல் தொக்கபின் அத்தொகை அன்மொழித் தொகையாகாமையின் தொகுவதன் முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பது விளக்கிய தொகைவயினானும் என்னாது,பண்புதொக வரூஉங் கிளவியானும், உம்மை தொக்கபெயர்வயினானும், வேற்றுமை தொக்க பெயர்வயினானும் என்றார்.

வெள்ளாடை-அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை ;

தகரஞாழல் - உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பொற்றொடி - வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை

அவை வெள்ளாடையுடுத்தாள், அகரமாகிய ஈற்றையுடைய சொல் எனவும், தகரமுஞாழலுமாகிய சாந்து பூசினாள் எனவும், பொற்றொடி தொட்டாள் எனவும் விரியும்.

பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் பெரும்பான்மை ஆகலின் முறையிற் கூறாது அதனை முன்னர் கூறினார் . வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறத்தலின் உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் சிறுபான்மை யாயினும், ஒரு பயனோக்கி அதனை அதன்முன் வைத்தார்.அதன் பயன் யாதெனின்:-சிறுபான்மைஉவமத்தொகை நிலைக்களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்ப துணர்த்துதலென்க. அவை பவளவாய், திரிதாடி எனவரும். அவைதாம் பவளம்போலும் வாயையுடையாள்; திரிந்த தாடியையுடையான் என விரியும்.

குறிப்பு

**தொகைச் சொற்கள் - பொருள் சிறத்தல்:**

அவைதாம்,

முன் மொழி நிலையலும், பின் மொழி நிலையலும்,

இரு மொழி மேலும் ஒருங்குடன் நிலையலும்,

அம் மொழி நிலையாது அல் மொழி நிலையலும்,

அந் நான்கு என்ப பொருள் நிலை மரபே.

முன்மொழிமேல் நிற்றலும், பின்மொழிமேல் நிற்றலும் இருமொழிமேல் நிற்றலும், அவற்றின் மேல் நில்லாது பிற மொழிமேல் நிற்றலும் என அத்தொகையும் அவற்றது பொருணிலைமரபும் நான்கென்று சொல்லப்பெறும்

வேங்கைப்பூ என்புழிப் பூவென்னும் முன்மொழிக்கட் பொருணின்றது.அது நறிதென்னும் வினையோடியையுமாற்றான் . மேற்பட்டுத்தோன்றியது.இடவகையான் முன்மொழியாயிற்று.

அலைகடல் என்புழி அலையென்னும் பின்மொழிக்கட் பொருணின்றது.இடவகையாற் பின்மொழியாயிற்று. முன் பின்னென்பன காலவகையாற்றறுமாறி நிற்கும். கடலுங் கடலடைந்த விடமுங் கடலெனப் படுதலின், அடைகடலென்பது அடையாகிய கடலென இருபெயர்ப் பண்புத்தொகை.

உவாப்பதினான்கு - இருமொழி மேலும் பொருணின்றது.

வெள்ளாடை - தொக்க இருமொழி மேலும் நில்லாது உடுத்தாளென்னும் அன்மொழிமேல்பொருள் நின்றது.

வேற்றுமைத் தொகைமுதல் நான்குதொகையும் முன்மொழிப் பொருள ; வேற்றுமைத்தொகையும் பண்புத்தொகையும் சிறுபான்மை பின்மொழிப் பொருளவுமாம். உம்மைத்தொகை இருமொழிப் பொருட்டு.

*Self-Instructional Material*

எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய.

குறிப்பு

அறுவகைத் தொகைச் சொல்லும் ஒருசொல்லாய் நடத்தலையுடையதாகும்.; ஒரு சொல் அடையவெனப் பொதுப்படக் கூறியதால், யானைக்கோடு கொல்யானை என முன்மொழி பெயராகிய வழி ஒரு பெயர்ச் சொல் நடையாய் வந்தன.

நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் என முன்மொழி வினையாயவழி ஒரு வினைச்சொல் நடையாய் வந்தன.

மேற்கண்டவை உருபேற்றலும் பயனிலைகோடலும் முதலாகிய வினைத்தன்மையுடையன.

நிலங்கடந்தான், குன்றத்திருந்தான் எனப் பெயரும் வினையுந்தொக்கன ஒருசொன்னீர்மை யிலவாகலிற் றொகை யெனப்படா வென்பாருமுளர். எழுத்தோத்தினுள் பெயருந்தொழிலும் பிரிந்தொருங் கிசைப்பவேற்றுமையுருபு நிலை பெறுவழியுந் தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும் (எழு - 123) என்றதனான், வேற்றுமையுருபு தொகப் பெயருந் தொழிலும் ஒருங்கிசைத்தல் ஆசிரியர் நேர்ந்தாராகலின் அவை தொகையெனவே படுமென்பது. கடந்தானிலம், இருந்தான் குன்றத்து என்பன ஒருங்கிசையாது பக்கிசைத்தலின் அவை தொகையன்மையறிக என விளக்கம் செய்வார் சேனாவரையர்.

எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய என்றதனான், தொகையல்லாத தொடர்மொழியுள் ஒரு சொன்னடையவாவன சிலவுளவென்பதாம். யானை கோடு கூரிது, இரும்பு பொன்னாயிற்று, மக்களை உயர்திணையென்ப என்பனவற்றுள், கோடுகூரிது, பொன்னாயிற்று, உயர் திணை யென்ப என்னுந் தொகையல் தொடர்மொழி ஒரு சொன்னடையவாய், எழுவாய்க்கும் இரண்டாவதற்கும் முடிவாயின.

உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே

பலர்சொல் நடைத்து என மொழிமனார் புலவர்

உயர்திணைக்கண் வரும் உம்மைத்தொகை பலர்க்குரிய ஈற்றான் நடக்கும்:.

மாமூலபெருந்தலைச் சாத்தர் ;

கபில பரண நக்கீரர் விரவுப்பெயர்த்தொகையும் அடங்குதற்கு உயர்திணைப் பெயரும்மைத் தொகை என்னாது, உயர்திணைமருங்கினும உம்மைத்தொகை என்றார். அவை ஒட்டியொருசொல்லாய் நிற்றலில் பலரறிசொல் எனப்படும். பலரறிசொல் கபிலபரணன் என ஒருமையீற்றான் நடத்தல் வழுவாகலின் வழுக்காத்தற்காகச் சொல்லப்பட்டது.

குறிப்பு

**குறிப்பு மொழி:**

. வாரா மரபின வரக் கூறுதலும்,

என்னா மரபின எனக் கூறுதலும்,

அன்னவை எல்லாம் அவற்று அவற்று இயல்பான்,

இன்ன என்னும் குறிப்புரை ஆகும்.

வாரா இயல்பினவற்றை வருவனவாகச் சொல்லுதலும் என்னா இயல்பினவற்றை என்பனவாகச் சொல்லுதலும் அத்தன்மையானவெல்லாம் அவ்வப் பொருளியல்பான இத்தன்மைய என்று சொல்லும் குறிப்புமொழியாம்;

அந்நெறி இங்கு வந்து கிடந்தது

அம்மலை வந்து இதனோடு பொருந்திற்று

அவலவல் என்கின்றன நெல்,

மழைமழை என்கின்றன பைங்கூழ்

முலை வந்தன, தலை வந்தன என்பன காட்டுவாருமுளர். ஆண்டு வருதல் வளர்தற் பொருட்டாகலான், அவை ஈண்டைக் காகா வென்க என மறுத்துரைப்பார் சேனாவரையர்,

நிலம் வல்லென்றது" நீர் தண்ணென்றது என்பனவற்றை உரையாசிரியர் காட்டினார் என்பதனை எடுத்துரைத்துசொலல் பொருளவன்மையின், அவை காட்டல் அவர் கருத்தன்றென்க என உரை விளக்கமும் செய்வார்.

அன்னவையெல்லாம் என்றதனான்,

இந்நெறி யாண்டுச் சென்று கிடக்கும் ; இக்குன்று அக்குன்றோடொன்றும் என்னுந் தொடக்கத்தன கொள்க.

.இசைப் படு பொருளே நான்கு வரம்பு ஆகும்.

இசைப் பொருட்கண் அடுக்கி வரும் சொல்லிற்கு எல்லை நான்கு ஆகும்.

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும் - இசை

.விரை சொல் அடுக்கே மூன்று வரம்பு ஆகும்.

விரைவுப் பொருட்கண் அடுக்கி வரும் சொல்லிற்கு எல்லை மூன்று ஆகும்.

குறிப்பு

தீ தீ தீ - விரைவு

"கண்டீர் என்றா, கொண்டீர் என்றா,

சென்றது என்றா, போயிற்று என்றா,

அன்றி அனைத்தும், வினாவொடு சிவணி,

நின்ற வழி அசைக்கும் கிளவி என்ப.

கண்டீர் எனவும், கொண்டீர் எனவும், சென்றதெனவும் போயிற்றெனவும் வரும் வினைச்சொல் நான்கும்; வினாவொடு பொருந்தி நின்றவழி அசைநிலையடுக்காம்.

கட்டுரையகத்து ஒருவன் ஒன்று சொல்லியவழி அதற்கு உடம்படாதான் கண்டீரே கண்டீரே என்னும்;

ஈண்டு வினைச்சொற் பொருண்மையும் வினாப்பொருண்மையும் இன்மையால் . அசைநிலையாயிற்று. வரையாது கூறினமையால், கண்டீரே எனச் சிறுபான்மை அடுக்காது வருதலும் உண்டு என்பது பெறப்படும். ஏனையவும் ஏற்றவழி அடுக்கியும் அடுக்காதும் அசைநிலையாம்..

கேட்டை என்றா, நின்றை என்றா,

காத்தை என்றா, கண்டை என்றா,

அன்றி அனைத்தும் முன்னிலை அல் வழி,

முன்னுறக் கிளந்த இயல்பு ஆகும்மே.

கேட்டை எனவும், நின்றை எனவும், காத்தை எனவும், கண்டை எனவும் வரும் நான்கும் முன்னிலை அல்லாக்கால், மேற்சொல்லப்பட்ட அசைநிலையாம்.

இவையும் கட்டுரைக்கண் அடுக்கியும் சிறுபான்மை அடுக்காதும் ஏற்றுவழி அசைநிலையாய் வரும். நின்றை, காத்தை என்பன இக்காலத்துப் பயின்று வாரா.

வினாவிற் கடையாக அடுக்கிவந்தவழி முன்னிலையசை நிலையேயாம். இவை அடுக்கியும் அடுக்காதும் முன்னிலைச் சொல்லாதலும் உடைமையால், அந்நிலைமையை நீக்குதற்கு, முன்னிலையல்வழி என்றார்.

முன்னுறக்கிளந்த இல்பாகும் என்றதனால், முன்னையதுபோலச் சிறுபான்மை வினாவொடு வருதலும் உண்டு.

குறிப்பு

முன்னிலையல்வழி என்பதற்கு முன்னையபோல வினாவொடு சிவணி நில்லாதவழி என்றுரைத்தார் உரையாசிரியர். இதனை; வினாவொடு சிவணல் இவற்றிற்கொன்றா னெய்தாமையின் விலக்க வேண்டா; அதனான் அவர்க்கது கருத்தன்றென்க எனச் சேனாவரையர் மறுத்துரைப்பார்.

இரண்டு சூத்திரத்தானும் கூறப்பட்டன வினைச்சொல்லாதலும் இடைச்சொல்லாதலும் உடைமையான், வினையியலுள்ளும் இடையியலுள்ளுங் கூறாது ஈண்டுக் கூறினார்.

ஆக, ஆகல் என்பதும் அடுக்கி வருவன ஆகும். இங்கு குறிக்கப்பட்டனவும் அடுக்கி வருவனவே ஆகும். எனினும் வேறுபாடு உண்டு. இசை நிறைத்தற்கும் பொருள் வேறுபாட்டிற்கும். அடுக்கி வரினல்லாது அடுக்காது வருதலே வினைச்சொல்லிற்கு இயல்பாம், ஆக, ஆகல் என்பது என்பன அடுக்கியல்லது நில்லாமையின், வினைச்சொல் இடைச்சொல்லாயின வெனப்படா, கண்டீர், கொண்டீர், என்பன முதலாயின வினைச்சொற்குரிய ஈற்றவாய் அடுக்கியும் அடுக்காதும் வருதலால் வினைச்சொல் அசைநிலையாயின எனப்படும்; ஞேம் வினாவொடு சிவணி நிற்றலாலும் வினைச்சொல்லெனவே படும்.

**வினைமுற்று:**

இறப்பின், நிகழ்வின், எதிர்வின், என்ற

சிறப்புடை மரபின் அம் முக் காலமும்,

தன்மை, முன்னிலை, படர்க்கை, என்னும்

அம் மூஇடத்தான், வினையினும் குறிப்பினும்,

மெய்ம்மையானும் இவ் இரண்டு ஆகும்

அவ் ஆறு" என்ப-"முற்று இயல் மொழியே

முற்றுச்சொல்லாவது, இறப்பு நிகழ்வு எதிர்வென்னும் மூன்று காலமும், தன்மை முன்னிலை படர்க்கை என்னும் மூன்றிடத்தும், உயர்திணையும் அஃறிணையும் இருதிணைப் பொதுவுமாகிய பொருள் தோறும், வினையானும் குறிப்பானும் இவ்விரண்டாய் வரும் அவ்வறுவகைச் சொல்லாம் என்று சொல்வர் ஆசிரியர்;

சென்றனன், கரியன்

சென்றது, கரிது

சென்றனை, கரியை

குறிப்பு

இடமுணர்த்தலும் திணையும் பாலும் விளக்கலும் போல ஒரு சாரனவற்றிற்கே ஆகாது, எல்லாமுற்றுச்சொற்கும் காலம் முன் சிறத்தலின் சிறப்புடை மரபின் அம்முக் காலமும்" என்றார்.

வினையினும் குறிப்பினும் என்றவழி ஓர் ஈற்றவாகிய வினையும் வினைக் குறிப்புமே கொள்ளப்படும். மெய்ம்மையாவது பொருண்மை.

உயர்திணையும் அஃறிணையுமல்லது இருதிணைப் பொது வென்பதொரு பொருளில்லையாயினும், சென்றனை, கரியை என்பன செலவிற்கு வினை முதலாதலும் பண்பியுமாகிய ஒரு நிமித்தம் பற்றி இருதிணைக் கண்ணும் சேறலின் அந்நிமித்தம் இருதிணைப் பொதுவெனப்பட்டது.

வினையினுங் குறிப்பினும் இவ்விரண்டாய் வருதலாவது தெரிநிலை வினையால் தெற்றெனத் தோன்றலும் குறிப்பு வினையால் தெற்றெனத் தோன்றாமையும் ஆகும்.

முற்றிநிற்றல் முற்றுச் சொல்லிற்கு இலக்கணமாதல் முற்றியன் மொழியே என்பதனால் பெறப்படும்.. முற்றிநிற்றலாவது இதுவென்பது வினையியலுட் கூறினாம் (சொல் - 235). திணையும் பாலும் இடமும் விளக்கல் எல்லா முற்றிற்கும் இன்மையான் இலக்கணமன்மை அறிக என்பார் சேனாவரையர்,

உயர்திணை அஃறிணை விரவென்னும் பொருண் மேல் வினையும் வினைக்குறிப்புமாய் வருதல்பற்றி அவ்வாறென்ப வென்றார், காலமும் இடமும் முதலாயினவற்றோடு கூட்டிப் பகுப்பப் பலவாம்.

ஊரானோர் தேவகுலம் என்றாற்போல மெய்ம்மை யானும் என்புழி ஆனென்பது தொறும் என்பதன் பொருட்டாய் நின்றது.

முன்னர்ப் பிரிநிலை வினையே பெயரே ( சொல் - 430) என்புழிப் பெயரெச்சமும் வினை யெச்சமுங் கூறுபவாகலின் அவற்றோடு இயைய முற்றுச்சொல்லையும் ஈண்டுக் கூறினார். கூறவே முற்றுச் சொல்லும் பெயரெச்சமும் வினை எச்சமும் என வினைச்சொல் மூவகைத்தாதல் இனிது உணரப்படும்.

உரையாசிரியர் வினையியலுள் ஓதப்பட்டன சில வினைச்சொற்கும் முற்றுச் சொல்லென்று குறியிடுதல் நுதலிற்று இச்சூத்திரமென்பார், இதனைச் சேனாவரையர் மறுத்துரைப்பார். முற்றுச் சொல்லிற்குப் பெயரிடுவதே கருத்தாயின் அவ்வாறு என்ப முற்றியன் மொழியே என்னாது அவ்வாறு முற்றியன் மொழியே எனல் வேண்டும் ஆகலின் அது போலியுரையென்கஎன்பார்.

மொழி மாற்றக் கொண்டு பொருள் உரைக்கலாமே எனின் ஒன்றிற்குப் பெயரிடுவது ஆளுதற் பொருட்டே ஆதலின் அங்ஙனம் ஆளாமையின் மொழிமாற்றி இடர்ப்பட வேண்டாம் என்பார்.

**குறிப்பு**

மூவகை வினைச் சொல்லும் முற்று எனக் குறியிடுதற்கு இந்நூற்பா கூறினார் எனின் ஏனைய இருவகை எச்சங்களுக்கும் குறியிட வெவ்வேறு நூற்பாக்கள் கூற வேண்டும். அங்ஙனம் கூறாமையின் அது பொருத்தமன்று.

எனவே பெயரெச்சம், வினையெச்சம்,வினைமுற்றுடிஆகிய மூன்றனுள் இருவகை எச்சம் நீங்கலாக ஏனைய சொற்களே முற்றுச் சொற்களாய் நிற்கும். அவை முத்திணையோடும் முக்காலத்தோடும் மூவிடத்தோடும் சேரப் பலவகைப்படும் என்பதனையும் உணர்த்தவல்லதே இந் நூற்பா என்பது சேனாவரையர் கருத்தாம்.

எவ் வயின் வினையும் அவ் இயல் நிலையும்.

மூவிடத்தால் பொருள் தோறும் இவ்விரண்டாம் என மேற்சொல்லப்பட்ட கட்டளையுள் அடங்காது பிற இடங்களில் வரும் வினையும் முற்றின் இயல்பைப் பெறும்.

அவன் யார்?

பொருள் இல்லை?

இனம் வேறு?

யார், எவன், இல்லை, வேறு என்பன இடம் உணர்த்தாமையின் மேற்கூறிய கட்டளையில் அடங்காது.பிற இடங்களில் வந்தனவாம். சிறப்பு ஈற்றான் வரும் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் பொருடோறும் வினையும் வினைக் குறிப்புமாய் வருதற்கு எய்தாமையின் மெய்ம்மையானு மிவ்விரண் டாகும் (சொல் - 427) கட்டளையுட்படாது பிற இடங்களில் வந்தனவாம். குறிப்பு வினைக்கு ஈறாகாது தெரிநிலை வினைக்கு ஈறாவனவும் தெரிநிலை வினைக்கு ஈறாகாது குறிப்பு வினைக்கு ஈறாவனவும் சிறப்பு ஈற்றவாகும். அவை வினையியலுட் கூறப்பட்டது, யார், எவன் என்பன பாலும், இல்லை வேறு என்பன திணையும் பாலும் உணர்த்தா ஆயினும் மேலைச் சூத்திரத்தான் முற்றுச்சொற்குப் பாலுந் திணையு முணர்த்தல் ஒருதலையாக எய்தாமையின் இடம் உணர்த்தாமையே பற்றி ஈண்டுக் காட்டப்பட்டன. திணையும் பாலும் உணர்த்தல் ஒருதலையாயின் தன்மை முன்னிலை படர்கை என்னும் மூவிடத்தான் (சொல் - 427) என ஆசிரியர் முன்னிலையிடம் ஆண்டு வையார் என்பது. சேனாவரையர் தரும் உரைக்குறிப்பாகும்.

குறிப்பு

முற்றுச்சொல்லே அன்றிப் பெயரெச்சமும் வினையெச்சமும் காலமும் இடமும் உணர்த்தும் என்பது இச் சூத்திரத்திற்குப்பொருளாக உரைத்தாரால் உரையாசிரியர் எனின் :- அவை இடவேறுபாடுணர்த்தாது மூவிடத்திற்கும் பொதுவாய் நிற்றலின், அது போலியுரை யென்க என மறுக்கிறார் சேனாவரையர்.

மேலைச் சூத்திரத்தாற் கூறப்பட்ட பொருண் மேலும் வரும் எல்லா வினையும் முற்றுச்சொல்லாய் நிற்கும் என்றவாறு,ஈண்டுவினையென்றது வினைச்சொல்லை ஆக்கும் முதனிலையை, எல்லாவினையும் முற்றுச்சொல்லாம். எனவே எச்சமாகல் ஒரு தலையன் என்பதாம். ஆகவே, வினைச் சொல்லாதற்குச் சிறந்தன முற்றுச்சொல்லே என்பதாம். எல்லாவினையும் முற்றுச்சொல்லாகலும், கச்சினன், கழலினன், நிலத்தன், புறத்தன் என்னுந் தொடக்கத்து வினைக்குறிப்பின் முதனிலை எச்சமாய் நில்லாமையும், வழக்கு நோக்கிக் கண்டு கொள்க என்பார் சேனாவரையர்,

அவைதாம்,

தம்தம் கிளவி அடுக்குந வரினும்,

எத் திறத்தானும் பெயர் முடிபினவே.

மேற்சொல்லப்பட்ட முற்றுச்சொற்களும் தத்தமற்கேற்ற வினைச் சொல்லோடுஅடுக்கி வரினும், தம்முள் தொடராது எவ்வாற்றானும் பெயரொடு முடியும்;

உண்டான் தின்றான் ஆடினான் பாடினான் சாத்தன்

நல்லனறிவுடையன் செவ்வியன் சான்றோர் மகன்

அடுக்கி வரினும் என்ற உம்மையான் வந்தான் வழுதி; கரியன்மால் என அடுக்காது பெயரொடு முடிதலே பெரும்பான்மை என்பதாம்.

தம்பால் சொல்லல்லது பிறபால் சொல்லொடு விராயடுக்கு இன்மையின் தத்தங்கிளவி என்றார்.

**எச்சங்கள்:**

பிரிநிலை வினையே, பெயரே, ஒழியிசை,

எதிர்மறை, உம்மை, எனவே, சொல்லே,

குறிப்பே, இசையே, ஆயீர்-ஐந்தும்

நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி.

பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் எஞ்சுபொருட் கிளவியாம்.

குறிப்பு

அவற்றுள் கடைநிலை மூன்றும் அதாவது சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய மூன்றும் தாமே முடிக்கும் சொல்லாயும் அமையும்.ஏனையன தமக்கொரு முடிக்கும் சொல்லினைக் கொண்டு நின்று தாம் எஞ்சுபொருட்கிளவியாய் நிற்கும்.

பெயரெச்சம் வினையெச்சம் பெயர் வினையான் முடிதலின், ஆகுபெயரால் பெயர் வினையென்றார்.

ஆயீரைந்தும் எஞ்சுபொருட்கிளவி என்றாரேனும் எஞ்சு பொருட்கிளவி பத்துவகைப்படுமென்பது கருத்தாகக்கொள்க.

எச்சமாவன ஒருசார் ; பெயரும் வினையும் இடைச்சொல்லுமாதலின், பெயரியன் முதலாயினவற்றுட் பத்தும் ஒருங்குணர்த்துதற் கேலாமை யறிக என்பார் சேனாவரையர்.

**பிரிநிலை எச்சம்:**

அவற்றுள்,

பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின

மேற்சொல்லப்பட்ட எச்சங்களுள், பிரிநிலை யெச்சம் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையும் என இருவகைப்படும்.அவ்விருவகைப் பிரிநிலையெச்சமும் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ் சொல்லோடு முடியும்:

தானே கொண்டான் - ஏகாரப் பிரிநிலை எச்சம்

தானோ கொண்டான் - ஓகாரப் பிரிநிலை எச்சம்

அ.்.தேல், தானெனப்பட்டானன்றே ஆண்டுப் பிரிக்கப் பட்டான், பிறர் கொண்டிலரென்பது அவனையுணர்த்துஞ் சொல்லன்மையான், அவை பிரிநிலை கொண்டு முடிந்திலவால் எனின்:- அற்றன்று; தானெனப்பட்டான் பிறரிற் பிரிக்கப்பட்டவழிப், பிறகும் அவனிற் பிரிக்கப்பட்டமையான், அவை பிரிநிலை கொண்டனவேயாகும்.

பிரிநிலையோடு முடிதலாவது அவனே கொண்டான் என்றவழி அவனே என்பது கொண்டானெனப் பிரிக்கப்பட்ட பொருளை வினையெனக் கொண்டு முடிதல் என்றார் உரையாசிரியர். அவனே கொண்டான் என்புழி அவன் என்னும் எழுவாய்வேற்றுமை கொண்டான் என்னும் பயனிலை கொண்டது; ஏகாரம் பிரிவுணர்த்திற்று. ஆண்டு எச்சமும் எச்சத்தை முடிக்குஞ் சொல்லுமின்மையான் அவர்க்கது கருத்தன் றென்க என மறுத்துரைப்பார் சேனாவரையர்.

குறிப்பு

**வினையெச்சம்:**

வினை எஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்

நினையத் தோன்றிய முடிபு ஆகும்மே;

ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே.

வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் முடிபாம்; ஆண்டைக் குறிப்புவினை ஆக்க வினையோடு வரும்.

உழுது வந்தான்; - தெரிநிலை வினையெச்சம்

மருந்துண்டு நல்ல னாயினான் - குறிப்பு வினையெச்சம்

உழுது வருதல்; உழுது வந்தவன் என வினையெச்சம் வினைப்பெயரோடு முடிதல் நினையத் தோன்றிய என்றதனாற் கொள்க.

வேங்கையுங் காந்தளு நாறி யாம்பன் மலரினுந் தான்றண்ணியளே;" (குறுந் - 84)

வில்லக விரலிற் பொருந்தியவாறு நல்லகஞ் சேரி னொருமருங் கினமே" (குறுந் - 370)

கற்றுவல்லன் பெற்றுடையன்

வினைக்குறிப்பு ஆக்கமின்றி வந்தன எனின் ஆக்கமொடு வருமென்றது பெரும்பான்மை குறித்ததாகலிற் சிறுபான்மை ஆக்கமின்றியும் வரும்.

***பெயரெச்சம்:***

பெயர் எஞ்சு கிளவி பெயரொடு முடிமே

பெயரெச்சம் பெயரொடு முடியும்;

உண்ணுஞ்சாத்தன்;

உண்டசாத்தன்

அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய" (சொல் - 234) என்றதனாற் பெயரெச்சம் பொருள்படுமுறைமை கூறினார்.

**ஒழியிசை எச்சம்:**

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின.

மன்னை ஒழியிசையும், தில்லை ஒழியிசையும், ஓகார ஒழியிசையும் ஆகிய ஒழியிசை எச்சம் மூன்றும் ஒழியிசையான் முடியும்;

குறிப்பு

கூரியதோர் வாண்மன் - திட்பம் இன்மை என்னும் ஒழியிசைப் பொருளைத் தந்தது.

வருகதில் லம்மவெஞ்சேரி சேர (அகம் - 276) - வந்தால் இன்னது செய்வல் ஒழியிசைப் பொருளைத் தந்தது.

கொளலோ கொண்டான் - கொண்டுய்யப் போமாறு அறிந்திலன் என்னும் ஒழியிசையான் முடிந்தவாறு காண்க.

**எதிர்மறை எச்சம்:**

எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.

மாறுகொள் எச்சம் எனப்பட்ட ஏகார எதிர் மறையும், ஓகார எதிர்மறையும், உம்மை எதிர்மறையுமாகிய எதிர்மறையெச்சம் மூன்றும் எதிர்மறையான் முடியும்.

யானே கொள்வேன்,

யானோ கள்வன்,

வரலுமுரியன்

என்னும் எதிர்மறையெச்சம், முறையானே, கொள்ளேன், கள்ளேன் வாராமையும் உரியன் என்னும் எதிர்மறையான் முடிந்தது.

**உம்மை எச்சம்:**

உம்மை எச்சம் இரு வீற்றானும்

தன்வினை ஒன்றிய முடிபு ஆகும்மே.

எஞ்சுபொருட்கிளவியும் அவ் எஞ்சுபொருட்கிளவியான் முடிவதுமாகிய உம்மையெச்சம் வேறுபாடு இரண்டன் கண்ணும், தன்வினையோடு பொருந்திய முடிவைப் பெறும்.

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயின் (சொல் - 284) என்றதனான் உம்மையுடைத்தாயும் உம்மையின்றியும் வரும் எஞ்சு பொருட்கிளவி உம்மையெச்சத்திற்கு முடிபாதல் எய்திற்று. எல்லாவெச்சத்திற்கும் எஞ்சு பொருட்கிளவியே முடிபாகலின். இனி உம்மையொடு தொடர்ந்த சொல்லிரண்டற்கும் வினையொன்றே ஆகல் வேண்டுமென எய்தாதது எய்துவித்தவாறு அமைந்தது.

சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் - இரண்டும் ஒருவினை கொண்டமைந்தது.

குறிப்பு

சாத்தானும் வந்தான், கொற்றனும் உண்டான் -வினை வேறுபட்ட வழி உம்மை எச்சமும் எஞ்சுபொருட் கிளவியும் இயையாமல் போயிற்று.

பைம்புதல் வேங்கையு மொள்ளிணர் விரிந்தன

நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே" (அகம் - 2)

என வினை வேறுபட்டுழியும் தம்முள் இயைந்தனவால் எனின்:- இணர் விரிதலும் ஊர் கோடலும் இரண்டும் மணஞ்செய் காலம் இது என்றுணர்த்தலாகிய ஒருபொருள் குறித்து நின்றமையான், அவை ஒரு வினைப்பாற்படும் என்பது அறிய வரும். எஞ்சு பொருட்கிளவி செஞ்சொலாயவழித் தன்வினை கோடல் ஈண்டடங்காமையான், அது தன்னினமுடித்தலென்பதனாற் பெறப்படும்.

உம்மையெச்சம் இருவீற்றானும் என்றதனால், உம்மை எச்சத்திற்கு முடிபாகிய எஞ்சுபொருட்கிளவி உம்மையொடுவரின் எச்சமாமென்பதாம். அஃது எச்சமாங்கால், முன்னின்றது, எஞ்சுபொருட் கிளவியாமென்பது.

எதிர்மறையும்மை எதிர்மறை எச்சமாயடங்குதலின்,ஈண்டும்மை எச்சமென்றது எச்சவும்மையேயாம்.

தன்மேல் செஞ்சொல் வரூஉம் காலை,

நிகழும் காலமொடு வாராக் காலமும்,

இறந்த காலமொடு வாராக் காலமும்,

மயங்குதல் வரையார் முறைநிலையான.

உம்மை எச்சத்தின்முன் எஞ்சுபொருட்கிளவி உம்மையற்ற சொல்லாய் வருங்கால் நிகழ்காலத்தோடு எதிர்காலமும் இறந்த காலத்தோடு எதிர்காலமும் மயங்குதல் வரையார்;

முறைநிலையான என்றதனான், கூறிய முறையானல்லது எதிர்காலம் முன்னிற்ப ஏனைக்காலம் பின் வந்து மயங்குதலில்லை என்பதாம்.

கூழுண்ணாநின்றான் சோறுமுண்பன் - நிகழ்காலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது

கூழுண்டான் சோறுமுண்பன் - இறந்த காலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது

இவற்றோடு இது மயங்குதல் வரையார் எனவே, இறந்த காலத்தோடு நிகழ்காலமும் நிகழ்காலத்தோடு இறந்தகாலமும் வந்து மயங்குதல் வரையப்படும்

குறிப்பு

தன்மேற் செஞ்சொல் வரூஉங்காலை என்றதனான், உம்மையடுத்த சொல் வருங்கால், வேறுபாடின்றி இரண்டு சொல்லும் ஒருகாலத் தான் வருமென்பதாம்.

தன்வினை, காலம்வேறுபடுதலும் வேறுபடாமையும் உடைமையான், இன்னுழி இன்னவாற்றான் அல்லது காலம் வேறுபடாதென வரையறுத்தவாறு.

**என என் எச்சம்:**

"என" என் எச்சம் வினையொடு முடிமே

எனவென்னுமெச்சம் வினைகொண்டு முடியும்; என என்னும் எச்சம் வினை, குறிப்பு, பண்பு, எண், பெயர் என்னும் ஆறு பெயரோடு வரும்.வினையெச்சத்தமின் வாய்பாடுகளுள் ஒன்றாய செய்தென என்பதினோடும் சேர்ந்து வரும்.ஆகையால் என என்னும் எச்சம் ஏழு வகைப்படும்.இவற்றுள் எண், பெயர் என்பதினோடு வரும் என என்னும் எச்சம் வினை கொள்ளாது, செய்தென என்னும் வாய்பாட்டில் வரும் என என்னும் எச்சம்வினையோடு முடிதல் வினையியலில் கூறப்பட்டது, எனவே வினை, குறிப்பு, இசை, பண்பு என்னும் நான்கு சொற்களோடு வரும் என என்னும் எச்சம் வினையோடு முடிதலை ஈண்டு தொல்காப்பியர் சுட்டினார்.

கொள்ளெனக் கொடுத்தான் - வினை

துண்ணெணத் துடித்தது; - குறிப்பு

ஒல்லென வொலித்தது; - இசை

காரெனக் கறுத்தது - பண்பு

எஞ்சிய மூன்றும் மேல் வந்து முடிக்கும்

எஞ்சு பொருட் கிளவி இல என மொழிப.

தொல்காப்பியரால் சொல்லப்பட்டன பத்தனுள் முடிவு சொல்லாத மூன்று எச்சங்களும் தம மேல் வந்து முடிக்கும் சொற்களை எடையனவல்ல. அவை முறையே ஒழிந்து நின்ற சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் என்பன ஆகும்.

அவைதாம்,

தம்தம் குறிப்பின் எச்சம் செப்பும்.

Self-Instructional
Material

அவ்வெச்சமூன்றும் சொல்வார் குறிப்பான் எஞ்சி நின்ற பொருளையுணர்த்தும்;

குறிப்பு

குறிப்பெச்சம்:

சொற்படு பொருளே அன்றி சொல்லுபவன் குறித்த பொருளும் எஞ்சி நிற்பது குறிப்பெச்சம் ஆகும்.இவ் எச்சம் தானே எச்சமாய் நிற்பதன்றி தனக்கொரு முடிக்கும் சொல்லைப் பெறாதது.

பசப்பித்துச் சென்றா ருடையையோ வன்ன

நிறத்தையோ பீரமலர்

இளைதாக முணமரங் கொல்க களையுநர்

கைகொல்லுங் காழ்த்த விடத்து (குறள் 879)

என்றவழி முறையானே பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் எனவும், தீயாரைக் காலத்தாற் களைக எனவும் வந்த தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்சமாயின.

**இசையெச்சம்:**

தொடர்மொழி எஞ்சி நிற்பது இசையெச்சம் என்பதாகும்.இவ் எச்சம் தானே எச்சமாய் நிற்பதன்றி தனக்கொரு முடிக்கும் சொல்லைப் பெறாதது

அகர முதல வெழுத்தெல்லா மாதி

பகவன் முதற்றே யுலகு (குறள்-1)

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்

றேறியார்க் குண்டோ தவறு (குறள்-1154)

என்றவழி முறையானே அதுபோல எனவும், நீத்தார்க்கே தவறு எனவும் வருவன எஞ்சிய இசைப்பொருளுணர்த்தலால் இசையெச்சம் ஆயின. சொல் லெச்சத்திற்கு உதாரணம் முன்னர்க்காட்டுதும். சொல்லளம் வல்ல தெஞ்சுத லின்றே" (சொல், 441) என்பதனான் அ∴தொரு சொல்லாதல் பெறப் படுதலின் இது தொடர்ச் சொல்லாமென்பது சொல்லென்னுஞ் சொல் எஞ்சுவது சொல்லெச்சமென்பார் இவ்விரு வகையும் இசையெச்சமென அடக்குப.

நிலையலுங் குறிப்பிற் றோன்றலும் (சொல்-157) எனச் சொற்பொருட் பாகுபாடுணர்த்தினார். குறிப்பிற் தோன்றும் பொருளை வெளிப்படுத்தும் எச்சமாதலுடைமையான் எச்சமென்றார்; அதனான் ஆண்டு அடங்காது. இனி விசைத்தது ஒலித்தது என்பன தஞ்சொல்லெனப்படாது; படினும்

குறிப்பு

விண்ணென வீங்கிற்று, துண்ணெனத் துளங்கினான் எனவும், ஒல் பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் என்னுந் தொடக்கத்தன குறிப்பிற்றோன்றலா யடங்குதலின், விண்ணென விசைத்தது என்பது குறிப்பெச்சமென்றும், அதுபோல என்னுந் தொடக்கத்தன விகாரவகையால் தொக்கு நின்றமையான், ஒல்லென ஒலித்தது என்பது இசையெச்ச மென்றும். இவை தத்தஞ் சொல்லான் முடிதலல்லது பிற சொல்லான் முடியாமையின் இவற்றை மேல்வந்து முடிக்கும் எஞ்சு பொருட்கிளவியில் என்றாரென்றும், உரைத்தாரால் உரையாசிரியர் எனின்:- என வினா எழுப்பும் சேனாவரையர் அற்றன்று; தெரிபுவேறு என வீழ்ந்தது எனவும் பிற சொல்லானும் முடிதலின் எஞ்சுபொருட் கிளவியில் வென்றல் பொருந்தாதாம். தஞ்சொ லல்லாதன எஞ்சுபொருட் கிளவியா மாகலின் என விளக்கம் தருவார் சேனாவரையர்.

**சொல்லெச்சம்:**

"சொல்" என் எச்சம், முன்னும் பின்னும்,

சொல் அளவு அல்லது எஞ்சுதல் இன்றே.

சொல்லெச்சம், ஒருசொற்கு முன்னும் பின்னுஞ் சொல்மாத்திரம் எஞ்சுவதல்லது, தொடராய் எஞ்சுதலில்லை

உயர்திணையென்மனார் (சொல்-1) - ஆசிரியர் என்னும் சொல் முன்னால் எஞ்சி நின்றது,,

மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே, (குறுந்-71) - எமக்கென்னும் சொல் பின்னும், எஞ்சி நின்றது.

**அவையல் கிளவி:**

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

அவைக்கண் உரைக்கப்படாத சொல்லை உரைக்கப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டால் அச் சொல்லை மறைத்து பிற சொல்லால் கூறல் வேண்டும்.

அவைக்கண் வழங்கப்படுஞ் சொல்லை அவையென்றார்.

ஆன்முன் வரூஉ மீகார பகரம் - பீ

கண்கழீஇ வருதும்,

கான்மே னீர்பெய்து வருதும்

கருமுக மந்தி– பெண்குறி

செம்பினேற்றை – ஆண்குறி

**குறிப்பு**

புலிலன்றி றந்த நீரல் லீரத்து - மூத்திரம்

ஈகாரபகரமென்பதுபோலக் கண் கழுவுதன் முதலாயின அவையல் கிளவியால் கூறாது உள்ளவாறே கூறப்பட்டுள்ளது.எனினும் அவையல் கிளவிப் பொருண்மையை யுணர்த்தலின், ஒற்றுமை நயத்தான் அவையல் கிளவியைப் பிறிதோராற்றாற் கூறிய வாய்பாடாகக் கொள்ளப்படும்;

இவை தகுதியும் வழக்கும், (சொல்-14) என்புழித் தகுதியாயடங்குமெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் செத்தாரைத் துஞ்சினா ரென்றல் முதலாயினவன்றே தகுதியாவன; ஆண்டுச் செத்தாரென்பது இலக்கணமாகலின் அதனானும் வழங்கப்படும் தகவு; நோக்கிச் சொல்லுங்கால் துஞ்சினா ரென்றுஞ் சொல்லப்படும்; ஈண்டு அவையல் கிளவியாற் கிளத்தல் வழுவாதலின் மறைத்த வாய்பாட்டானே கிளக்கப்படும்; அதனான் ஆண்டு அடங்கா என்பது என விளக்கம் தருவார்.

மறைக்கும் காலை மரீஇயது ஒராஅல்!.

அவையல் கிளவியை மறைத்துச் சொல்லுங்கால். மேற்றொட்டு வழங்கப்பட்டு வருவன மறைக்கப்படாது

ஆப்பி , ஆனையிலண்டம் என மரீஇ வந்தன மறைக்கப்படாது வந்தது.

பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி (பெரும்பாண் - 2) என்புழிக் கான்றென்பது , தன் பொருண்மேல் நில்லாது அணி குறித்துப் பிறிதொரு பொருண்மேல் நிற்றலின் மரீஇய சொல்லாய் மறைக்கப் படாமையின் , அதன் பொருண்மேல் நின்றவழி மறைக்கப்படுதலும் அறிக.

**இரத்தல் கிளவி:**

“ஈ, தா, கொடு“ எனக் கிளக்கும் மூன்றும்

இரவின் கிளவி ஆகு இடன் உடைய.

ஈ, தா, கொடு எனச் சொல்லப்படும் மூன்றும் ஒருவன் ஒன்றை இரத்தற்கண் வருஞ்சொல்லாம்;

அவை பிறபொருண்மேல் வருதலுமுடைமையான், இரவின் கிளவி யாகிட னுடைய என்றார்.

வழங்கல், உதவல், வீசல் முதலாயின பிறவும் உளவாக இவற்றையே விதந்தோதியதற்குக் காரணம் அவை கொடைப் பொருளவாய் வருவதல்லது இவைபோல இரத்தற் குறிப்பு வெளிப்படுக்கும் இரவின் கிளவியாய்ப் பயின்று வாராமை ஆகும். மேலும் இன்னார்க்கு இன்ன

சொல் உரித்தென்று வரையறுத்தலும் வழுவமைத்தலுமாகிய ஆராய்ச்சி ஆண்டின்மையானும் இவற்றையே விதந்தோதியதற்கான காரணம் ஆகும்.

குறிப்பு

ஈயென்கிளவி (சொல் - 445) என்னும் சூத்திரம் முதலாய நான்கும் அமையும் ; இச்சூத்திரம் வேண்டா எனின் இவை இரவின் கிளவியாதலும் மூன்றென்னும் வரையறையும் அவற்றாற் பெறப்படாமையின் வேண்டுமென்பது.

முன்னிலைச் சொல்லாய் வருவழியல்லது பிற இடங்களில் இன்ன சொல் இன்னார்க்கு உரித்தென்னும் வரையறை இல்லென்பது உணர்த்துதற்கு ஈ,தா, கொடு என முன்னிலை வாய்பாடுபற்றி ஓதினார்.

அவற்றுள்,

“ஈ“ என் கிளவி இழிந்தோன் கூற்றே.

ஈ என்கிளவி இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் கூற்றாம்.

சோறு ஈ - இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் கூற்று

“தா“ என் கிளவி ஒப்போன் கூற்றே.

தாவென்கிளவி அவனோடு ஒப்போன் கூற்றாம்

ஆடை தா - அவனோடு ஒப்போன் கூற்று

“கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே.

கொடு என்கிளவி அவனினும் உயர்ந்தவன் கூற்றாம்;

சாந்துகொடு - கொடு என்கிளவி அவனினும் உயர்ந்தவன் கூற்று

“கொடு என் கிளவி படர்க்கைஆயினும்,

தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்

தன்னிடத்து இயலும் என்மனார் புலவர்.

கொடுவென்னுஞ் சொல், முதனிலை வகையாற் படர்க்கையாயினும். தன்னைப் பிறனொருவன் போலக் கூறுங் கருத்து வகையால், தன்னிடத்துச் செல்லும்;

தம்பிக்குக் கொடு – தன்னையே படர்க்கையில் கூறுவது.

தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய தாவென்பதனானாக பொதுவாகிய ஈ என்பதனானாகவன்றே சொல்லற்பாலது; உயர்ந்தான் அங்ஙனந் தான் ஏற்பானாகச் சொல்லாது, கொடுவெனப் படர்க்கை வாய்பாட்டாற்

சொல்லும்; ஆண்டு தன்னையே பிறன்போலக் குறித்தானாகலிற் தன்னிடத்தே யாமென இடவழு வமைத்தவாறு என்பார் சேனாவரையர்.

குறிப்பு

உயர்ந்தான் தம் ஒருவனைக் காட்டி இவற்குக் கொடு என்னுமென்றார் உரையாசிரியர்என எடுத்துரைக்கும் சேனாவரையர்:- ஆண்டுப் படர்க்கைச் சொற்படர்க்கைச் சொல்லோடு இயைதலான் வழுவின்மையின் அமைக்கல் வேண்டாவாம் ; அதனான் அது போலியுரையென்க என மறுக்கின்றார்,.

பெயர்நிலைக் கிளவியின் ஆஅகுநவும்,

திசைநிலைக் கிளவியின் ஆஅகுநவும்,

தொல் நெறி மொழிவயின் ஆஅகுநவும்,

மெய்ந் நிலை மயக்கின் ஆஅகுநவும்,

மந்திரப் பொருள்வயின் ஆஅகுநவும்,

அன்றி அனைத்தும் கடப்பாடு இலவே.

ஒரு திணைப்பெயர் ஒருதிணைக்காய் வருவனவும்:. திசைச் சொல் சிலவிடத்து வாய்பாடு திரிந்து வருவனவும், முது சொல்லாகிய செய்யுள் வேறுபாட்டின்கண் இயைபில்லன இயைந்தனவாய் வருவனவும், பொருண்மயக்காகிய பிசிச் செய்யுட்கண் திணைமுலாயின திரிந்து வருவனவும் மந்திரப் பொருட்கண் அப் பொருட் குரித்தல்லாச் சொல் வருவனவும் ஆகிய இவையனைத்தும் இலக்கண மரபிற்குப் பொருத்தமிலவேனும் வழக்கில் அவை கடியப்படாது,

ஓரெருத்தை நம்பியென்று வழங்குதலும், ஒருகிளியை நங்கையென்று வழங்குதல்- பெயர்நிலைக்கிளவி

புலியான், பூசையான் - திசைநிலைக் கிளவி

ஆற்றுட் செத்த எருமையீர்த்தல் ஊர்க் குயவர்க்குக் கடன் - தொன்னெறி மொழி .

எழுதுவரிக் கோலத்தா ரீவார்க் குரியார்

தொழுதிமைக் கண்ணணைந்த தோட்டார் - முழுதகலா

நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்

பேணற் கமைந்தார் பெரிது.

- என்பது புத்தகத்திற்கும் பெண்ணிற்கும் உரியது,- மெய்ந்நிலை மயக்கு

மந்திரப் பொருட்குரிய சான்று மந்தில நூல்வல்லார் கேட்டுணர்க என்பார் சேனாவரையர்.

குறிப்பு

இது இயற்சொல்லும் திசைச்சொல்லும் பிறவும்பற்றி வழுவமைத்தது ஆகலின், கிளவியாக்க முதலாயினவற்றின்கண் உணர்த்துதற்கு இயைபின்மையான்; ஈண்டு வைத்தார் தொல்காப்பியர்,

"செய்யாய்" என்னும் முன்னிலை வினைச்சொல்

செய் என் கிளவி ஆகு இடன் உடைத்தே

செய்யாயென்னும் வாய்பாட்டதாகிய முன்னிலை முற்றுச்சொல் ஆயென்னும் ஈறு கெடச் செய் யென்னும் சொல்லாய் நிற்றம் உடைத்து;

ஆகிடன் உடைத்து என்றதனால், செய்யா என ஈறு கெடாது நிற்றலே பெரும்பான்மை யென்பதாம்.

உண்ணாய், தின்னாய், கிடவாய், நடவாய், தாராய், வாராய், போவாய் என்பன ஈறுகெட,

உண், தின், கிட, நட,தா,வா,போ எனச் செய்யென் கிளவி யாயின.

செய்யாயென்னும் முன்னிலை யெதிர்மறை செய்யென் கிளவியாதற் கேலாமையின், செய்யாயென்னும் முன்னிலை வினைச் சொலென்றது விதி வினையையேயாம்.

தன்னினம் முடித்தல் என்பதனான் வம்மின் தம்மின் என்பன மின்கெடவும், வம், தம் என நிற்றலும், அழியலை அலையலை என்னும் முன்னிலை எதிர்மறை, ஐகாரங்கெட்டு அழியல் அலையல் என நிற்றலுங் கொள்க.

ஒன்றென முடித்தலென்பதனால், புகழ்ந்தார் என்னும் படர்க்கைவினை ஆர் ஈறுகெடக் புகழ்ந்திகு மல்லரோ என நிற்றலுங்கொள்க. இவையெல்லாஞ் செய்யுண்முடிவு என்பாரும் உளர்.

செய்யா என்னும் முன்னிலை எதிர்மறை எதிர்மறை படாது செய்யென் விதி வினையாதலும் உரித்தென்பார் உரையாசிரியர், அதனை மறுக்கும் சேனாவரையர் செய்யாயென்னும் எதிர்மறைவினையுஞ் செய்யா என்னும் விதிவினையும் முடிந்த நிலைமை ஒக்குமாயினும் எதிர்மறைக்கண் மறையுணர்த்தும் இடைநிலையும் உண்மையான், முடிக்குஞ்சொல் வேறெனவே படும். மறையுணர்த்தும் இடைநிலையாவன; உண்ணலன், உண்டிலன், உண்ணாது, உண்ணேன் என வரும். அல்லும், இல்லும், ஆவும், ஏயும் பிறவுமாம். உண்ணாய் உண்ணேன் என்றவழி

குறிப்பு

எதிர்மறையாகாரம் ஏகாரங் கெட்டு நின்றன எனல் வேண்டும்; அல்லாக்கால் மறைபொருள் பெறப்படாமையின், அதனான் எதிர்மறைச் சொல்லே விதிவினைச்சொல் ஆகாமையின் அவர்க்கது கருத்தன்றென்க என மறுக்கின்றார், மேலும் ஆசிரியர் அக்கருத்தினராயின், செய்யாயென்னும் எதிர்மறைவினைச்சொல் என்று ஓதுவார். அவ்வாறு ஓதாமையான் அவர்க்கது கருத்தன்மையான் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்மையறிக என்றும் விதந்து கூறுவார்.

முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்

அந் நிலை மரபின் மெய் ஊர்ந்து வருமே.

முன்னிலை வினைச்சொல் முன் வரும் ஈகாரமும் ஏகாரமும் அம் முன்னிலைச் சொல்லிற்கு ஏற்ற மெய்யூர்ந்து வரும்.

சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரோ (அகம்-46),

அட்டிலோலை தொட்டனை நின்மே (நற்றிணை-300)

- முன்னிலைக்கேற்ற மெய்யூர்ந்து வந்தன.

முன்னிலை என்றாரேனும், செய்யென் கிளவியாகிய முன்னிலை என்பது அதிகாரத்தாற் கொள்க.

ஈகாரம் ஒன்றேயாக, புக்கீ, உண்டீ, உரைத்தீ, சென்றீ என முன்னிலை வினையீற்று வேறுபாட்டிற் கேற்ப மெய் வேறுபட்டு வருதலால்,அந்நிலை மரபின் மெய் என்றார். ஏகாரம் மகரம் ஊர்ந்து அல்லது வாராது.

இவ்வெழுத்துப்பேறு புணர்ச்சி விகாரமாதலின் ஈண்டுக்கூறற் பாற்றன்றெனின்:- அற்றன்று: இயற்பெயர் முன்னராரைக் கிளவி“ (சொல்-270) அப் பெயரோடு ஒற்றுமைப் பட்டு நின்றாற்போல முன்னிலை முன்னர் ஈயும் ஏயும் முன்னிலைச் சொல்லொடு ஒற்றுமைப்பட்டு நிற்றலான், நிலைமொழி வருமொழி செய்து புணர்க்கப்படாமையான், அம்மெய் புணர்ச்சி விகார மெனப் படாவென்க. அஃதேல், இடையியலுள் இயற்பெயர் முன்ன ராரைக் கிளவி (சொல்-270) என்பதனோடு இயைய இதனையும் வைக்க வெனின்:- ஆண்டு வைப்பிற் செய்யா யென்பது செய்யென் கிளவியாய வழியது அவ்வீகார வேகார வரவென்பது பெறப்படாமையின் ஈண்டு வைத்தார், ஹசெய்யா யென்னு முன்னிலை வினைச்சொல் என்பதனை ஈண்டு வைத்தற்கும் இதுவே பயனாதலறிக. முன்னிலைச் சொல் விகாரம் ஒருங்குணர்த்தல் அதற்குப் பயனெனினு மமையும்,ஈயென்ப தோரிடைச்சொல் உண்டென்பது இச் சூத்திரத்தாற்பெற்றாம். இவையிரண்டும் ஈண்டுப் புறத்துறவு பொருள்பட நின்றன. அசை நிலை என்பாருமுளர்.

கடி சொல் இல்லை, காலத்துப் படினே.

குறிப்பு

இவைதொன்று தொட்டன வல்லன என்று கடியப்படுஞ் சொல்லில்லை; அதாவது அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கும் சொற்கள் கடியப்படுவதில்லை.

சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு

சாரக் கிளவியு மவற்றோ ரற்றே

அ ஐ ஔவெனு மூன்றலங்கடையே (எழு 92)

என விலக்கார் ஆசிரியர்; அதனான் அவை பிற்காலத்துத் தோன்றிய சொல்லேயாம்..

இ∴து எழுவகை வழுவமைதியுள் ஒன்றாகாது ஒரு பாதுகாவலாதலின் கிளவியாக்கத் தியைபின்மையான் ஈண்டுக் கூறினார்,.

இனி ஒன்றென முடித்தலாற் புதியன தோன்றினாற் போலப் பழையன கெடுவனவும் உளவெனக் கொள்க. அவை அழான், புழான் முதலியனவும் எழுத்திற்புணர்ந்த சொற்கள் இக்காலத்து வழங்காதனவுமாம்.

சம்பு, சள்ளை, சட்டி, சமழ்ப்பு சமைமுதலிய சொற்கள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழங்கினமை தேற்றமாகலின், சகரக் கிளவியு மவற்றோ ரற்றே என்னும் நூற்பா பிற்காலத்திடைச் செருகலாயோ பாடவேறுபாடு உள்ளதாயோ இருத்தல் வெண்டும். தொல் காப்பியம் ஓர் அகராதியன்மையின், அதிற் சகரக்கிளவி யின்மை சகரம் மொழி முதல் வராதென்பதற்குச் சான்றன்று;

**குறைச்சொற் கிளவி:**

குறைச்சொற் கிளவி குறைக்கும்வழி அறிதல்

குறைக்கும் சொல்லைக் குறைக்கும் இடமறிந்து குறைக்க. குறைத்தனவாயினும் அவை குறையாது நிறைந்து நின்ற பெயரியல்புடையனவாகும்.

தாமரை- மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி – முதற்குறை

ஓந்தி – ஓதிமுதுபோத்து - இடைக்குறை

நீலம் - நீல் உண் துகிலிகை – கடைக்குறை

குறைந்தன ஆயினும் நிறைப் பெயர் இயல.

குறைந்த வழியும் நிறைந்த பெயராகக் கொள்க.குறைக்கப்படுவன பெயரேயாகலின், நிறைப்பெயரியல வென்றார்.

குறிப்பு

இடைச் சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே.

பிறிதொரு சொல்லை வேறுபடுப்பனவும் பிறிதொரு சொல்லான் வேறுபடுக்கப்படுவனவுமெனச் சொல் இரு வகைப்படும் ; பிறிதொரு சொல்லை வேறுபடுத்தலாவது விசேடித்தல். பிறிதொரு சொல்லான் வேறுபடுக்கப்படுதலாவது விசேடிக்கப்படுதல். இடைச் சொல்லெல்லாம் பிறிதொரு சொல்லை வேறு படுக்குஞ் சொல்லாம்

வேறுபடுத்தலும் வேறு படுக்கப்படுதலும் ஆகிய இரண்டும் பொது வகையான் எல்லாச் சொற்குங் கூறாமை எய்துமாகலின் இடைச்சொல்லெல்லாம் வேற்றுமைச் சொல்லென்றதனான் ,இவை வேறுபடுக்குஞ் சொல்லாதலல்லது ஒருஞான்றும் வேறுபடுக்கப்படுஞ் சொல்லாகாவென நியமித்தவாறாம். அவை அன்னவாதல் இடையியலுள் ஓதப்பட்ட இடைச்சொல் வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் வரும் வழிக் கண்டு கொள்க.

வேற்றுமைச்சொல் வேற்றுமையைச் செய்யுஞ் சொல்லென விரியும்.வேற்றுமையெனினும் வேறுபாடெனினு மொக்கும்.

இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லாயினும், அவற்றுள் ஒரு சாரனவற்றை வேற்றுமைச் சொல்லென்றார்.இயற்சொல்லுள் ஒரு சாரனவற்றை இயற்பெயரென்றாற்போல வென்பது. இதுவுமொரு நயம்.

உரிச் சொல் மருங்கினும் உரியவை உரிய

உரிச்சொல் இடத்தும் வேறுபடுக்குஞ் சொல்லாதற்கும் உரியன உரியவாம் ; எல்லாம் உரியவாகா. எனவே, உரிச் சொல்லுள் வேறுபடுத்தும் வேறுபடுக்கப்பட்டும் இருநிலைமையும் உடையவாய் வருவனவே பெரும்பான்மை என்பதாம்.

வேறுபடுக்குஞ் சொல்லேயாவன உறு, தவ, நனி என்னுந் தொடக்கத்தன .

இருநிலைமையு முடையன குரு, கெழு, செல்லல், இன்னல் என்னுந் தொடக்கத்தன.

உறு பொருள், தவப்பல், நனி சேய்த்து. ஏகல்லடுக்கம் என இவை ஒன்றை விசேடித்து வந்தன.

குருமணி, விளங்குகுரு; கேழ் கிளரகலம், செங்கேழ்; செல்லனோய், அருஞ்செல்லல்; இன்னற்குறிப்பு, பேரின்னல் என இவை ஒன்றனை விசேடித்தும் விசேடிக்கப்பட்டும் இரு நிலைமையுமுடையவாய் வந்தன.

குறிப்பு

வினை எஞ்சு கிளவியும் வேறு பல் குறிய.

வினையெச்சமும் வேறுபட்ட பல விலக்கணத்தையுடையன ஆகும்;

அவையாவன : உரற்கால் யானை யொடித்துண்டெஞ்சிய (குறுந் - 232) எனவும்,ஞாயிறு பட்டு வந்தான்“ எனவும் செய்தெனெச்சம் வினைமுதல் கொள்ளாது பிறிதின் வினைகோடலும் அ.·.தீறு திரிதலும்,மோயின ளுயிர்த்த காலை (அகம் - 5) எனவும், கண்ணியன் வில்லன் வரும் எனவும், முற்றுச் சொல்லது திரிபாய் வருதலும், ஓடிவந்தான் விரைந்து போயினான் எனவும், வெய்ய சிறியமிழற்றுஞ் செவ்வாய் எனவும் செவ்வன் தெரிகிற்பான், புதுவதனியன்ற வணியன் எனவும், தம்மை முடிக்கும் வினைக்கட்கிடந்த தொழிலானும் பண்பானுங் குறிப்பானும் உணர்த்தித் தெரிநிலை வினையுங் குறிப்பு வினையுமாய் முடிக்குஞ் சொல்லை விசேடித்தலும் பிறவுமாம். செய்தெனச்சத்தீறு திரிதல் வினையியலுட் காட்டிப் போந்தாம் என்பார் சேனாவரையர்,

பெருங்கை யற்றவென் புலம்புமுந் துறத்து என்புழிப் பெருமென்பதை ஒருசாரார் வினையெச்ச வாய்பாடென்பர் ; ஒருசாரார் வினைச்சொற்பற்றி நின்றதோர் உரிச்சொலென்பர்.

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் மேற்கூறப்பட்ட இலக்கணமேயன்றிப் பிறவிலக்கண முடைய வென்ப துணர்த்தினார். இனி அவையேயன்றி வினையெஞ்சு கிளவியும் பல விலக்கணத்தன என்பதுபட நின்றமையான், உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை, அவ்விலக்கணம் ஓரியலவன்றித் திரிதலும் வேறு பொருளுணர்த்துதலும் விசேடித்தலு முதலாகிய வேற்றுமையுடையவாகலின், வேறு பல்குறிய வென்றார்.

வினையெச்சத்துள் விசேடித்தே நிற்பனவுமுளவென்பதுஉம் உணர்த்துகின்றாராகலின், இதனை வினையியலுள்வையாது,ஈண்டு விசேடிக்குஞ் சொல்லுணர்த்துவன வற்றோடு வைத்தார்.

பெயர்த்தனென் முயங்க (குறுந் - 64) என்பது முதலாயின செய்தெனெச்சம் முற்றாய்த் திரிந்தனவென்றும் ஒடித்துண்டெஞ்சிய என்பது முதலாயின செயவெனெச்சம் செய்தெனெச்சமாய்த் திரிந்தன வென்றும், முன்னருரைத் தாரால் உரையாசிரியர் என்பதனை எடுத்துக் காட்டி பெயர்த்தனென் முயங்க என்பது முதலாயின எச்சத்திரிபாயின் எச்சப்பொருளுணர்த்து வதல்லது இடமும்பாலும் உணர்த்தற்பால வல்ல. எச்சப் பொருண்மையாவது மூன்றிடத்திற்கும் ஐந்துபாற்கும் பொதுவாகிய வினை நிகழ்ச்சியன்றே; அவ்வாறன்றி முற்றுச்சொற்கு ஓதிய ஈற்றவாய் இடமும் பாலுமுணர்த்தலின், அவை முற்றுத்திரிசொல் லெனவே படும்.

*Self-Instructional Material*

குறிப்பு

சொன்னிலை யுணர்ந்து வினை கோடன் மாத்திரத்தான் வினையெச்ச மெனின் :- மாரைக் கிளவியும், வினையொடு முடியும் வேற்றுமையும், பிறவுமெல்லாம் வினையெச்சமாவான் செல்லும்; அதனான் அவர்க்கது கருத்தன்றென்க. அல்லதூஉம் கண்ணியன் வில்லன் வரும் என வினைக்குறிப்பு முற்றாய்த் திரிதற்கேற்பதொரு வினையெச்சம் இன்மையானும், அது கருத்தன்மையறிக. என்றும் மறுத்துரைப்பார் சேனாவரையர்.

ஒடித்துண்டெஞ்சிய என்பதுஉம் ஞாயிறு பட்டு வந்தான் என்பதுஉம் பிறவினை கொண்டனவாயினும்,செயவெனெச் சத்திற்குரிய இறந்தகால முணர்த்தலான்,ஏனைக்காலத்திற்குரிய செய்தெனெச்சத்தின் திரிபெனப்படா;செயவெனெச்சத்திற்குரிய காலமுணர்த்தல் வேண்டும்.

உரையிடத்து இயலும் உடனிலை அறிதல்

வழக்கில் பயின்று வரும் மாறுபாடற்ற சொற்கள் உடனியைந்து நிற்றலை உணர்க.

இந்நாழிக்கிந்நாழி சிறிது பெரிது என உடனிற் கற்பால வல்லாச் சிறுமையும் பெருமையும் உடனின்றவாறு கண்டு கொள்க.

முன்னத்தின் உணரும் கிளவியும் உளவே.

இன்ன என்னும் சொல்முறையான.

சொல்லால் அன்றிச் சொல்லுவான் குறிப்பாற் பொருளுணரப்படுஞ் சொல்லும் உள ; இப்பொருள் இத்தன்மைய என்று சொல்லுதற்கண்;

செஞ்செவி, வெள்ளொக்கலர் என்றவழி மணியும் பொன்னு மணந்த செவி என்றும் , வெளியதுடுத்த சுற்றம் என்றும் குறிப்பா னுணரப்பட்டவாறு கண்டுகொள்க. குழைகொண்டு கோழியெறியும் வாழ்க்கையர் என்புழி அன்ன பெருஞ் செல்வத்தார் என்பதும் குறிப்பால் உணரப்படும்.

ஒரு பொருள் இரு சொல் பிரிவு இல வரையார்

பொருள் வேறுபாடின்றி ஒரு பொருண்மேல் வரும் இரண்டுசொற் பிரிவின்றித் தொடர்ந்துவரின், அவற்றைக் கடியார்;

நிவந்தோங்கு பெருமலை

துறுகன் மீமிசை யுறுகண்

பிரிவில வென்றது, வேறொரு சொல்லான் இடையிடப் படாது நிற்பன வென்றவாறு.

இருசொல் ஒரு பொருண்மேல் வருதல் எழுவகை வழுவினுள் ஒன் றன்மையான் ஈண்டுக் கூறினார்.

குறிப்பு

வையைக் கிழவன் வயங்குதார் மாணகலந்

தையலா யின்றுநீ நல்கினை நல்காயேற்

கூடலார் கோவோடு நீயும் படுதியே

நாடறியக் கௌவை யொருங்கு

என்றவழி, வையைக் கிழவன் கூடலார்கோ என்பன ஒரு பொருளை வரைந்துணர்த்தலாற் பிரிவிலவாகலின் வரையப் படாவென்றும்,

கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப் பெருஞ்சேந்தன்

வைகலு மேநும் வயக்களிறே-கைதொழுவல்

காலேக வண்ணனைக் கண்ணாரக் காணவெஞ்

சாலேகஞ் சார நட

என்றவழி காலேகவண்ணன் என்பது அச் சாந்து பூசினார் எல்லார்க்கும் பொதுவாய்க் கூத்தப்பெருஞ்சேந்தனையே வரைந்துணர்த்தாமையின், அவை பிரிவுடையவாமென்றும். உரை யாசிரியர் உரைத்ததை மறுக்கும் சேனாவரையர்.

நாணி நின்றோ ணிலைகண் டியானும்

பேணினெ னல்லனோ மகிழ்ந வானத்

தணங்கருங் கடவுளன் னோணின்

மகன்றா யாதல் புரைவதாங் கெனவே (அகம் - 33)

என்புழி வானத் தணங்கருங் கடவு ளன்னோள் என்பது மகளிர்க்கெல்லாம் பொதுவாய் நாணி நின்றோளை வரைந்துணர்த்தாமையின் சொல்லுவான் குறிப்பான் அவளையே உணர்த்தினாற்போலக் காலேகவண்ணன் என்பதும் பொதுவாயினுஞ் சொல்லுவான் குறிப்பாற் கூத்தப் பெருஞ் சேந்தனையே உணர்த்திப் பிரிவிலவாய் நிற்றலான், அவர்க்கது கருத்தன்றென்க என விளக்கம் செய்கின்றார்,

ஒருமை சுட்டிய பெயர் நிலைக் கிளவி

பன்மைக்கு ஆகும் இடனுமார் உண்டே

குறிப்பு

ஒருமைக்குரிய பெயர்ச்சொற் பன்மைக்காகும் இடமும் உண்டு:

ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப என்பதில் தாயென்னும் ஒருமை சுட்டிய பெயர் இளைய என்பதனால் தாயர் என்னும் பன்மை உணர்த்திற்று,

பன்மைக் காகுமிடனுமா ருண்டே என்பது, ஒருமைச் சொற் பன்மைச் சொல்லோடு தொடர்தற்குப் பொருந்துமிடம் உண்டென்பதூஉம் படநின்றமையான்,அ.ஃ.தை, தந்தை, அண்ணல், யானை, அடு போர்ச் சோழர் என ஒருமைச் சொல் பன்மைச் சொல்லோடு தொடர்தலுங் கண்டுகொள்க. ஈண்டு ஒருமைச்சொற் பன்மைச்சொல்லோடு மயங்குதலுடைமை யான் ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவி (சொல் - 36) என்புழி அடங்காமை அறிக என்பார் சேனாவரையர்.

**ஆற்றுப்படை இலக்கணம்:**

முன்னிலை சுட்டிய ஒருமைக் கிளவி

பன்மையொடு முடியினும் வரை நிலை இன்றே;

ஆற்றுப்படை மருங்கின் போற்றல் வேண்டும்.

முன்னிலை குறித்து நின்ற ஒருமைச் சொல் , பன்மையொடு முடிந்ததாயினும் , வரையப்படாது ; அம்முடிபு ஆற்றுப்படைச் செய்யுளிடத்துப் போற்றியுணரப்படும்;

கூத்தராற்றுப்படையுள் கலம்பெறு கண்ணுள ரொக்கற்றலைவ (மலைபடுகடாம் - 50) என நின்ற ஒருமைச் சொற்போய் இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்“ (மலைபடுகடாம் - 157 ) என்னும் பன்மைச் சொல்லோடு முடிந்தது..

ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி

பன்மைக் காகு மிடனுமா ருண்டே (சொல்-461)

என்பதனான் இதுவும் அடங்குதலின் , இச்சூத்திரம் வேண்டாவா எனின் : - பன்மையொடு முடியுமிடனுமாருண்டே என்னாது பன்மைக்காகு மிடனுமாருண்டே என்றாராதலின், ஆண்டு பன்மைச் சொற்கொண்டு முடியாது ஒருமைச் சொற் பன்மையுணர்த்துதலும் பன்மைச் சொல்லொடு ஒரு பொருட்டாகிய துணையாய் மயங்குதலுமுணர்த்தினார் . அதனான் இக்கொண்டு முடிபு ஆண்டு அடங்காதென்பது, அல்லதூஉம், இம்முடிபு செய்யுட்கு உரித்து என்றமையானும் ஆண்டு அடங்காமையறிக.

பொதுவகையான் ஆற்றுப்படைமருங்கி னென்றாராயினும் சுற்றத்தோடு சுற்றத்தலைவனை ஆற்றுப்படுத்தற் கண்ணது இம் மயக்கமென்பது பாதுகாத்துணர்கவென்பார் போற்றல் வேண்டும் என்றார்.

குறிப்பு

பான்மயக் குற்ற ஐயக் கிளவி (சொல் - 23) என்பதனாற் கூறிய ஒருமைப்பன்மை மயக்கம் வழுவமைதியாயினும் இலக்கணத்தோடத்துப் பயின்று வரும் ஒருமை சுட்டிய பெயர் நிலைக்கிளவி பன்மைக்காதலும், முன்னிலையொருமை பன்மையொடு முடிதலும் அன்னவன்றிச் சிறுவழக்கினவாதலின், ஆண்டு வையாது ஈண்டு வைத்தார்.

ஒருவர் ஒருவரை ஆற்றுப்படுத்தற்கண் முன்னிலை யொருமை பன்மையொடு முடிதல் வழக்கிற்கும் ஒக்குமாகலான், ஆற்றுப்படையெனப் பொதுவகையாற் கூறினார்.

செய்யுள் மருங்கினும் வழக்கியல் மருங்கினும்

மெய் பெறக் கிளந்த கிளவி எல்லாம்

பல் வேறு செய்தியின் நூல் நெறி பிழையாது,

சொல் வரைந்து அறிய, பிரித்தனர் காட்டல்!.

செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் இவ்வதிகாரத்தின்கண் பொருள்பெறச் சொல்லப்பட்ட சொல் எல்லாவற்றையும் பல்வேறு செய்கையுடைய தொன்னூல் நெறியிற் பிழையாது சொல்லை வேறுபடுத்துணருமாற்றாற் பிரித்துக் காட்டுக;

நிலப்பெயர் குடிப்பெயர்" எனவும்,அம். ஆம், எம். ஏம் எனவும் பொதுவகையாற் கூறப்பட்டன . அருவாள நிலத்தானென்னும் பொருட்கண் அருவாளன் எனவும்; சோழநிலத்தானென்னும் பொருட்கண் சோழியன் எனவும்; இறந்தகாலத்தின்கண் உண்டனம், உண்டாம் எனவும்; நிகழ்காலத்தின்கண் உண்ணா நின்றனம், உண்ணா நின்றாம், உண்கின்றாம் எனவும்; எதிர்காலத்தின்கண் உண்குவம், உண்பாம் எனவும் வேறுபட்டு வருமன்றே; அவ்வேறுபாடெல்லாம் கூறிற் பல்குமென்றஞ்சிக் கூறிற்றிலனாயினும் தொன்னூல் நெறியிற் பிழையாமல் அவ் வேறுபாடு உணரபிரித்துக் காட்டுக நூல் வல்லாரென்றவாறாயிற்று.

இது பிற நூன் முடிந்தது தானுடம்படுதலென்னுந் தந்திரவுத்தி பிறவுமன்ன.

சொல்வரைந்தறிய எனவே வரைந்தோதாது பொது வகையானோதப்பட்டவற்றின் மேற்று இப்புறனடை யென்பதாம்.

இனி ஒருரை :- செய்யுளிடத்தும் வழக்கிடத்தும் என்னாற் கிளக்கப்படாது தொன்னூலாசிரியராற் கிளக்கப்பட்டு எஞ்சி நின்ற சொல் எல்லாவற்றையும் அவ்வத் தொன்னூல் நெறியிற் பிழையாமைச் சொல்லை வரைந்துணரக்கொணர்ந்து பிரித்துக்காட்டுக என்றவாறு.

குறிப்பு

புறனடையாற் கொள்ளப்படுவன :- யானு நீயு மவனுஞ் செல்வேம் எனவும், யானு நீயுஞ் செல்வேம் எனவும் ஏனையிடத்திற்குரிய சொல் தன்மைச் சொல்லோடு இயைந்தவழித் தன்மையான் முடிதலும் அவனு நீயுஞ் சென்மின் எனப் படர்க்கைச்சொல் முன்னிலையோடு இயைந்த வழி முன்னிலையான் முடிதலும், நில்லாது பெயர்ந்த பல்லோருள்ளும் என்புழிப் பல்லே முள்ளுமெனத் தன்மையாகற் பாலது பல்லோருள்ளுமெனப் படர்க்கைப் பன்மையாயவழி அமைதலும்,

முரசுகெழு தானை மூவருள்ளும்

அரசெனப் படுவது நினதே பெரும(புறம்-35)

என்புழி மூவிருள்ளுமென முன்னிலையா கற்பாலது மூவருள்ளும் எனப்படர்க்கையாயவழி அமைதலும். இரண்டனுட் கூர்ங் கோட்ட காட்டுவல் என்புழிக் கூர்ங்கோட்டதென ஒருமை யாகற்பாலது கூர்ங்கோட்டவெனப் பன்மையாவழி அமைதலுமாம். அகத்தியமுதலாயின எல்லாவிலக்கணமும் கூறலிற் பல்வேறு செய்தியினூலென்றார்.

பயிற்சி வினாக்கள்:

1.நான்கு வகைச்சொற்கள் குறித்து விவரி?

**நால்வகைச் சொற்கள்**:

இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல், என்று

அனைத்தே-செய்யுள் ஈட்டச் சொல்லே.

கிளவியாக்க முதலாக உரியியல் இறுதியாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற் கிடமின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல் லிலக்கணமெல்லாந் தொகுத்துணர்த்திய வெடுத்துக்கொண்டார். அதனான் இவ்வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தாயிற்று.

கண்டீரென்றா“ (சொல்-425) எனவும்,செய்யாயென்னு முன்னிலை வினைச்சொல்“ (சொல்-450) எனவும்,உரிச்சொன் மருங்கினும்“ (சொல்-459) எனவும்,ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி“ (சொல்-491) எனவும், இவை முதலாகிய சூத்திரங்களா னுணர்த்தப் பட்ட அசைநிலையும், வினைச்சொல் லிலக்கணமும் வழுவமைதியும் அவ்வோத்துக்களு ளுணர்த்தாது ஈண்டுணர்த்திய தென்னையோ வெனின்:- அதற்குக் காரணம் அவ்வச்சூத்திரமுரைக்கும் வழிச் சொல்லுதும்.

பலபொருட்டொகுதிக்கு ஒன்றனாற் பெயர் கொடுக்குங்கால் தலைமையும் பன்மையும் பற்றிக் கொடுப்பினல்லது பிறிதாறின்மையானும், தலைமையும் பன்மையும் எச்சத்திற்கின்மையானும் பத்து வகை யெச்சம் ஈண்டு உணர்த்தலான் எச்சவியலாயிற்றென்றல் பொருந்தாமை யுணர்க.

செய்யுட்குரிய சொல்லும், அவற்றிலக்கணமும், அவற்றாற் செய்யுள் செய்வழிப்படும் விகாரமும் செய்யுட் பொருள்கோளும், எடுத்துக் கோடற்க னுணர்த்துகின்றார்.

இயற்சொல்லும், திரிசொல்லும், திசைச்சொல்லும், வடசொல்லும் என அத்துணையே செய்யுளீட்டுதற்குரிய சொல்லாவன:

இயற்சொல்லானுஞ் செய்யுட்சொல்லாகிய திரிசொல்லானுமேயின்றித் திசைச் சொல்லும் வட சொல்லும் இடைவிராய்ச் சான்றோர் செய்யுள் செய்யுமாறு கண்டு ஏனைப்பாடைச் சொல்லுஞ் செய்யுட்குரியவோ வென்றையுற்றார்க்கு, இந்நான்கு சொல்லுமே செய்யுட் சூரியன; பிறபாடைச் சொல் உரியவல்லவென்று வரையறுத்தவாறு.

செய்யுள் செய்யலாவது ஒருபொருண்மேற் பலசொற்கொணர்ந் தீட்டலாகலான் ஈட்டலென்றார்.

பெயர்வினையிடையுரி யென்பன இயற்சொற் பாகுபாடாகலான், இயற்சொல் அந்நான்கு பாகுபாட்டானுஞ் செய்யுட் குரித்தாம் திரிசொற் பெயராயல்லது வாரா. என்மனாரென்பதனை வினைத்திரிசொல் என்பாருமுளர். அஃது ஹஎன்றிசினோர்“ ஹபெறலருங்குரைத்து“ (புறம்-5) என்பன போலச் செய்யுண்முடிபு பெற்று நின்றதென்றலேபொருத்தமுடைத்து. தில்லென்னு மிடைச்சொல், தில்லவென்றானுந் தில்லை யென்றானும் திரிந்து நின்றவழி அவை வழக்கிற்கு முரியவாகலின் திரிசொல்லெனப்படாது ஹகடுங்கால்“ என்புழிக்கடியென்னு முரிச்சொல், ஹபெயரினும் வினையினு மெய்தடுமாறி“ (சொல்-234) என்பதனாற் பண்புப்பெயராய்ப் பெயரொடு தொக்கு வழக்கினுட் பயின்று வருதலால், திரிசொல்லெனப்படாது. திசைச்சொல்லுள் ஏனைச்சொல்லுமுளவேனும், செய்யுட்குரித்தாய் வருவது பெயர்ச்சொல்லேயாம். வடசொல்லுள்ளும் பெயரல்லது செய்யுட் குரியவாய் வாரா. இவ்வாறாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க.

செய்யுளீட்டச் சொல் நான்கு :- தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையிற் போன்றே சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன. முதலாவது தன்சொல் அயற் சொல் என்கிற முறையில் தென்சொல் வடசொல் என்ற பாகுபாடும், பின்பு தன் சொற்குள் செந்தமிழ் கொடுந்தமிழ் என்கிற முறையில் நாட்டுச்சொல் திசைச்சொல் என்ற பாகுபாடும், பின்பு நாட்டுச் சொற்கள் இயல்பும் திரியும் பற்றி இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என நான்கமைந்தன.

குறிப்பு

ஆங்கிலத்தில் சொற்களை ிசஅைவைளைநள னசளையவளைநள என இரண்டாய்ப் பகுப்பதாலும், ஹதிரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல்லாயிற்று" என்றும், ஹதிரிசொல்லது திரிவாவது உறுப்புத்திரிதலும் முழுவதுந் திரிதலுமென இருவகைத்து, கிள்ளை, மஞ்ஞை என்பன உறுப்புத்திரிந்தன. விலங்கல், விண்டு என்பன முழுவதுந் திரிந்தன" என்றும் சேனாவரையரும் பிறரும் கூறுவதாலும்; இயற்சொல்லையுந் திரிசொல்லையும் முறையே எண்சொல் அருஞ்சொல் என்று கொள்ளாமல், இயல்பான சொல் திரிக்கப்பட்ட சொல் என்று கொள்வதே பொருத்தமாம்.

தெலுங்கு கன்னடம் முதலிய திராவிட மொழிகள் முற்காலத்தில் கொடுந்தமிழா யிருந்தமையின், அவற்றின் சொற்கள் திசைச் சொற்கள் எனப்பட்டன. இன்று அம்மொழிகள் ஆரியக்கலப்பால் வேற்று மொழியாய் வழங்குகின்றமையான், வேற்று மொழிச் சொற்களையெல்லாம் திசைச் சொல்லெனக் கூறுவது தவறாகும், முற்காலத்தில் திசைச்சொல்லாகக் காட்டப்பட்ட கொடுந்தமிழ்ச் சொற்களே இன்றுந் திசைச்சொல்லாகும்.

வடமொழி யொன்றே முற்காலத்தில் தமிழகத்து வழங்கிய அயன்மொழி. அதனால், அதன் சொல் அம்மொழிப் பெயராலேயே வட சொல் லெனப்பட்டது. அதுபோல் இப்போது தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் ஆங்கிலச்சொல் போர்த்துகீசியச்சொல் என அவ்வம் மொழிப் பெயராலேயே அழைக்கப்படல் வேண்டும்.

இயற்சொல்:

. அவற்றுள்,

இயற்சொல்தாமே

செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி,

தம் பொருள் வழாமை இசைக்கும் சொல்லே.

அந்நான்கனுள் இயற்சொல்லென்று சொல்லப்பட்ட சொல், செந்தமிழ்நிலத்து வழக்காதற்குப் பொருந்திக் கொடுந்தமிழ் நிலத்துந் தம்பொருள் வழுவாமல் உணர்த்துஞ் சொல்லாகும்.

அவையாவன : நிலம் நீர், தீ, வளி, சோறு, கூழ், பால் ,தயிர், மக்கள், மா, தெங்கு, கமுகு என்னுந் தொடக்கத்தனஆகும்.

செந்தமிழ் நிலமாவன, வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் றெற்கும் ,கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்குமாம்.

குறிப்பு

திரிபின்றி இயல்பாகிய சொல்லாகலின் இயற்சொல் ஆயிற்று. கொடுந்தமிழ் நிலத்திற்கும் பொதுவாகலின் இயற் சொல்லாயிற் றெனினுமையும் நீரென்பது ஆரியச் சிதைவாயினும் அப் பொருட்கு அதுவே சொல்லாய்ச் செந்தமிழ் நிலத்தும் கொடுந்தமிழ் நிலத்தும் வழங்கப்படுதலான் இயற்சொல் ஆயிற்று. பிறவும் இவ்வாறு வருவன இயற்சொல்லாகக் கொள்க.

ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும்,

வேறு பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்,

இரு பாற்று என்ப-திரிசொல்-கிளவி".

திரிசொல்:

ஒரு பொருள் குறித்த வேறு சொல் ஆகியும்,

பொருள் குறித்த ஒரு சொல் ஆகியும்,

இரு பாற்று என்ப-திரிசொல்-கிளவி".

ஒருபொருள் குறித்த பல சொல்லாகவும் வேறுபொருள் குறித்த ஒருசொல்லாகவும் வருபவை எல்லாம் திரிசொல் எனப்படும்.இது இயற்சொல்லினின்று திரிந்து வழங்கும் சொல்லாகும்.

சான்று: வெற்பு, விலங்கல், விண்டு – ஒருபொருள் குறித்த வேறுபெயர்க்கிளவி

எகினம், உந்தி – வேறுபொருள் குறித்த ஒருபெயர்க்கிளவி

மேற்கண்டவற்றுள் எகினம் என்பது அன்னம், கவரிமா, புளிமா, நாய் என்னும் பொருள்களை உணர்த்தும்.உந்தி என்பது யாழ்பத்தர் உறுப்பாகும்.இத கொப்பூழ், தேர்த்தட்டு, கான்யாறு என்னும் பொருள்களையும் உணர்த்தும்.

திரிசொல் உறுப்புத் திரிதல், முழுவதுந்திரிதல் என இருவகைப்படும.

கிள்ளை, மஞ்ஞை – உறுப்புத் திரிதல் - கிளி – கிள்ளை- மயில் – மஞ்ஞை எனத் தரிந்தது.

விலங்கல், விண்டு – முழுவதும் திரிந்தன. இவை வெற்பு என்பதன் திரிபாகும். துமக்குள் தொடர்பு சிறிதும் புலப்படாமல் முழுவதும் திரிந்தன.

குறிப்பு

திசைச்சொல்:

செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்

தம் குறிப்பினவே-திசைச்சொல்-கிளவி.

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலத்துந் தாங் குறித்த பொருள் விளக்கும் திசைச்சொல் என்பதாகும்.அவ்வந்நிலத்துத் தான் குறித்த பொருள் விளக்குவதல்லது அவ்வியற்சொற்போல எந்நிலத்துந் தம்பொருள் விளக்கா வென்றவாறாம்.

பன்னிருநிலமாவன பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவட தலை எனச் செந்தமிழ் நாட்டுத் தென்கீழ்பான் முதலாக வட கீழ்பாலிறுதியாக உள்ளனவாகும்.

கொடுந்தமிழ் நிலமாக சேனாவரையர் கூறிய பன்னிரு நிலம் 12 ஆம் நூற்றாண்டிற் கேற்றவையாதலின், தொல்காப்பியர் குறித்தவையாகா.

தென்பாண்டிநாட்டார் ஆ, எருமை என்பவற்றைப்பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குவர்.

தங்குறிப்பினவென்று தனிமொழி தம்பொருளுணர்த்து மாற்றுக்குச் சொல்லினார். இருமொழி தொடருமிடத்துத் தன்னை வந்தான் என வேண்டியவாறு வரப்பெறு மென்றாரல்லரென்பது.

1.பன்னிருநிலமாவன:-வையாற்றின்...நாடு; ஒளிநாடு, தென்பாண்டிநாடு, கருங்குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலாடு, அருவாநாடு, அருவாவடதலை என்ப. இவை செந்தமிழ் நாட்டகத்த செந்தமிழ் நாடென்றமையால், பிறநாடாக வேண்டுமென்பார் உதாரணங்காட்டுமாறு:- ”கன்னித் தென்கரைக் கடற்பழந்தீபம்; கொல்லங் கூபகஞ்சிங்களமென்னும் எல்லையின் புறத்தவும், கன்னடம், வடுகம், கலிங்கம், தெலிங்கம், கொங்கணம், துளுவம், குடகம், குன்றகம், என்பன குடபாலிருவிறச் சையத் துடனுறைபு கூறுந் தமிழ் திரிநிலங்களும் முடியுடையவ ரிடுநிலவாட்சியின் அசுர மேம்பட்ட குறுநிலக் குடுமிகள் பதின்மரும் உடனிருப் பிருவருமாகிய பன்னிருவர் அரசரும் படைத்த பன்னிருதேயத்தினும் தமிழ்ச் சொல்லாதற்கு விருப்புடையன” என்றமையானும், ஹ தமிழ் கூறு நல்லுலகத்து வழக்குஞ் செய்யுளுமாயிரு முதலின் எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி“ என நிறுத்துப் பின்னுஞ் ஹசெந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு“ என ஓதியவதனாற் சிவணிய நிலமாவது எல்லை குறித்த நிலத்தைச் சார்ந்த நிலமென வேண்டுதலானும், பன்னிரு நிலமாவன:-

குமரியாற்றின் தென்கரைப்பட்ட பழந்தீபமும், கொல்லமும், கூபகமும், சிங்களமும், சையத்தின் மேற்குப்பட்ட கொங்கணமுந் துளுவமுங், குடகமுங், குன்றகமும், கிழக்குப் பட்ட கருநடமும், வடுகும், தெலிங்கும், கலிங்கும் என்று கொள்ளப்படும்.

குறிப்பு

இவற்றுள், கூபகமுங் கொல்லமுங் கடல் கொள்ளப் படுதலின், குமரியாற்றின் வடகரையைக் கொல்லமெனக் குடியேறினார் போலும். பஞ்சத் திராவிடமெனவும் வடநாட்டார் உரைப்பவாகலான், அவையைந்தும் வேங்கடத்தின் தெற்காதலும் கூடாமையுணர்க.

வடசொல்-கிளவி வட எழுத்து ஓரீஇ,

எழுத்தொடு புணர்ந்த சொல் ஆகும்மே.

வடசொற் கிளவியாவது வடசொற்கே உரிய வெனப்படுஞ் சிறப்பெழுத்தின் நீங்கி இருசார் மொழிக்கும் பொதுவாகிய எழுத்தானியன்ற சொல்லாம்

எனவே,பொதுவெழுத்தான் இயன்ற வடசொல்லும் செய்யுட் செய்தற்குச் சொல்லாமென்றவாறாயிற்று.

அவை வாரி, மேரு , குங்குமம், மனு

ஒக்குமென்று சொல்லப்படுவன ஒரு புடையால் ஒப்புமையும் வேற்றுமையுமுடைமையான் இரண்டாகல் வேண்டும், இவை எழுத்தானும் பொருளானும் வேறுபாடின்மையாகிய ஒரு சொல்லிலக்கண முடைமையான் இரண்டுசொல்லெனப்படாது

அதனான் ஒத்தல் யாண்டையது ; ஒரு சொல்லேயாமென்பது . ஒரு சொல்லாயினும் ஆரியமுந் தமிழுமாகிய இடவேற்றுமையால் வேறாயினவெனின் :- அவ்வாறாயின் வழக்குஞ் செய்யுளுமாகிய இட வேற்றுமையாற் சோறு கூழென்னுந் தொடக்கத்தனவும் இரண்டு சொல்லாவான் செல்லும் ; அதனான் இடவேற்றுமையுடையவேனும் ஒரு சொல் லிலக்கணமுடைமையான் ஒரு சொல்லேயாம் . ஒரு சொல்லாய வழித் தமிழ்ச்சொல் வடபாடைக்கட் செல்லாமையெனும் வடசொல் எல்லாத்தேயத்திற்கும் பொதுவாகயானும் இவை வடசொல்லாய் ஈண்டு வழங்கப்பட்டன வெனல் வேண்டும் அதனான் அது போலியுரையென்க. அல்லதூஉம் அவை தமிழ்ச்சொல்லாயின் வடவெழுத்தொரீஇ யென்றல் பொருந்தாமையானும் வட சொல்லாதலறிக.

*Self-Instructional Material*

குறிப்பு

2.மொழிபுணர் இயல்பு ( பொருள்கோள் ) குறித்து எழுதுக.

**மொழிபுணர் இயல்பு:**

. நிரல்-நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று,

அவை நான்கு என்ப-மொழி புணர் இயல்பே

நிரனிறையும், சுண்ணமும், அடிமறியும், மொழிமாற்றுமென நான்கென்று சொல்லுப ; அந்நான்கு சொல்லுஞ் செய்யுளிடத்துத் தம்முட்புணருமுறையை.

நிரனிறையும் சுண்ணமும் மொழிமாற்றாதல் ஒக்குமாயினும், நிரனிற்றலும் அளவடியெண்சீரைச் சுண்ணமாகத் துணித்தலுமாகிய வேறுபாடுடைமையான், அவற்றைப் பிரித்து அவ்வேறுபாட்டாற் பெயர்கொடுத்து, வேறிலக்கணம் இல்லாத மொழிமாற்றை மொழிமாற்றென்றார் தொல்காப்பியர்.

.அவற்றுள்,

நிரல்-நிறைதானே

வினையினும் பெயரினும் நினையத் தோன்றி,

சொல் வேறு நிலைஇ, பொருள் வேறு நிலையல்

அந் நான்கினுள் , நிரனிறையாவது வினையானும் பெயரானும் ஆராயத் தோன்றிச் சொல் வேறு நிற்பப் பொருள் வேறு நிற்றலாம்;

தொடர் மொழிப்பொருள் முடிக்குஞ் சொற்கண் ஆகலான் முடிக்குஞ் சொல்லைப் பொருளென்றார்.

வினையினும் பெயரினு மென்றதனால் , வினைச்சொல்லால் வருவது, பெயர்ச்சொல்லால் வருவது அவ்விரு சொல்லானும் வருவது என நிரனிறை மூன்றாம்.

மாசு போகவுங் காய்பசி நீங்கவுங் -

கடிபுனன் மூழ்கி யடிசில்கை தொட்டு“ என முடிவனவும் முடிப்பனவுமாகிய வினைச்சொல் வேறுவேறு நிற்றலின் , வினைநிரனிறை யாயிற்று.

அவை மாசுபோகப் புனன்மூழ்கி, பசிநீங்க அடிசில் கைதொட்டு என இயையும்,

கொடி குவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி“ என முடிவனவும் முடிப்பனவும் ஆகிய பெயர்ச்சொல் வேறுவேறு நிற்றலின், பெயர்

நிரனிறையாயிற்று. அவை நுசுப்புக்கொடி, உண்கண்குவளை, மேனிகொட்டை என இயையும்.

குறிப்பு

உடலு முடைந்தோடு மூழ்மலரும் பார்க்குங்

கடலிரு ளாம்பல்பாம் பென்ற - கெடலருஞ்சீர்த்

திங்க டிருமுகமாச் செத்து"

என முடிப்பனவாகிய வினையும் முடிவனவாகிய பெயரும் வேறுவேறு நிற்றலின் , பொது நிரனிறையாயிற்று .

அவை கடல் உடலும் , இருள் உடைந்தோடும் , ஆம்பல் ஊழ்மலரும் பாம்பு பார்க்கும் என இயையும்.

நினையத்தோன்றி என்றதனால், சொல்லும் பொருளும் வேறுவேறு நிற்குங்கால் நிரல்பட நில்லாது,

களிறும் கந்தும் போல நளிகடற்

கூம்புங் கலனுந் தோன்றுந்

தோன்றன் மறந்தோர் துறைகெழு நாட்டே"

என மயங்கி வருதலுங் கொள்க.

.சுண்ணம்தானே

பட்டாங்கு அமைந்த ஈர் அடி எண் சீர்

ஒட்டு வழி அறிந்து, துணித்தனர் இயற்றல்.

சுண்ணமாவது இயல்பாக அமைந்த ஈரடிக்கண் அமைந்த எண்சீரைத் துணித்து இயையும் வழி அறிந்து கூட்டி இயற்றப்படுவதாம்;
அளவடி அல்லாதன விகாரவடியாகலிற் பட்டாங்கு அமைந்தில ஆதலிற் பட்டாங்கமைந்த ஈரடியெனவே, அளவடியாதல் பெறப்படும் . ஈரடியெண்சீர் விகாரவடியானும் பெறப்படுதலின் , அவற்றை நீக்குதற்குப் பட்டாங்கமைந்த ஈரடியென்றார்". எனவே சுண்ணம் அளவடியிரண்டனுளல்லது வாராதென்பது. பெறப்படும் என்பார் சேனாவரையர்.

சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப

கானக நாடன சுனை"
என்புழி, ஆழ, மிதப்ப, நீத்து, நிலையென்பனவும், சுரை. அம்மி யானைக்கு, முயற்கென்பனவும் நின்றுவழி பொருள் கொள்ள

இயையாமையின் சுரை மிதப்ப, அம்மி யாழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து எனத் இயையுமாறு துணித்துக்கூட்ட வேண்டும்.

குறிப்பு

சுண்ணம்போலச் சிதராய்ப் பரந்து கிடத்திலிற் சுண்ண மென்றார்.

அடிமறிச் செய்தி அடி நிலை திரிந்து,

சீர் நிலை திரியாது, தடுமாறும்மே.

அடிமறிச்செய்யுளாவது, சீர் நின்றாங்கு நிற்ப அடிகள் தத்தநிலையில் திரிந்து ஒன்றன் நிலைக்களத்து ஒன்று சென்று நிற்கும

''மாறாக் காதலர் மலைமறந் தனரே

யாறாக் கட்பனி வரலா னாவே

வேறா மென்றோள் வளைநெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழு மாறே"

''யாறாக் கட்பனி வரலா னாவே

மாறாக் காதலர் மலைமறந் தனரே

வேறா மென்றோள் வளைநெகி ழும்மே

கூறாய் தோழியான் வாழு மாறே"

என அடி மறித்திட்டாலும் பொருள் மாற்றம் ஏற்படுவதில்லை.

பெரும்பான்மையும் நாலடிச்செய்யுட்க ணல்லது இப்பொருள் கோள் வாராதென்க.

நிரனிறைதானே" சுண்ணந்தானே" மொழிமாற்றியற்கை" என்பன போல ஈண்டும் அடிமறிச்செய்தியென்பதனைக் குறளடியாக்கி. அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருதெரி மருங்கின் என்று சூத்திரமாக உரைப்பாருமுளர்.

பொருள் தெரி மருங்கின்

ஈற்று அடி இறு சீர் எருத்துவயின் திரியும்

தோற்றமும் வரையார், அடிமறியான.

பொருளாராயுங்கால், அடிமறிச் செய்யுட்கண் ஈற்றடியது இறுதிச்சீர் எருத்தடியிற் சென்று திரிதலும் வரையார்;

குறிப்பு

சீர்நிலை திரியாது தடுமாறும் என்றாராகலின் சீர்நிலை திரிதலும் ஒரு வழிக்கண்டு எய்தியது இகந்துபடாமற் காத்தவாறு. எருத்துவயன் என்பதற்கு ஈற்றயற்சீர்வயின் என்று பொருளுரைத்து.

சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளி ராரணங் கினரே

சார னாட நீவரு தீயே

வார லெனினே யானஞ் சுவலே“

என்புழி அஞ்சுவல் யான் என இறுதிச்சீர் ஈற்றயற்சீர்வயிற் சென்று திரிந்ததென்று உதாரணங் காட்டிய உரையாசிரியரை எடுத்துரைக்கும் சேனாவரையர் : - யானஞ்சுவலென நின்றாங்கு நிற்பவும் பொருள் செல்லுமாகலின் . இவ்வாறு திரிதல் பொருந்தாமையின், அவர்க்கது கருத்தன்றென்க. என மறுத்துரைக்கின்றார்.

எல்லாவடியும் யாண்டுஞ் செல்லுமாயினும், உரைப்போர் குறிப்பான் எருத்தென்றும் ஈற்றடியென்றுங் கூறினார்.

உரைப்போர் குறிப்பி னுணர்வகை யன்றி

யிடைப்பான் முதலீ றென்றிவை தம்முண்

மதிக்கப் படாதன மண்டல யாப்பே“

என உரைப்போர் குறிப்பான் முதலும் இடையும் ஈறுங்கோடல் பிறருங் கூறினாரென்பது.

மொழிமாற்று இயற்கை

சொல் நிலை மாற்றி, பொருள் எதிர் இயைய,

முன்னும் பின்னும் கொள் வழிக் கொளாஅல்!

மொழிமாற்றினதியல்பு, பொருளெதிர் இயையுமாறு சொன்னிலையை மாற்றி முன்னும் பின்னும் கொள்ளும் வழிக் கொளுவுதலாம்;
ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும்

பாரி பறம்பின்மேல் தண்ணுமை - காரி

விறன்முள்ளூர் வேங்கை வீ தானாணும் தோளான்

நிறனுள்ளூர் உள்ள தலர்“

என இதனுள், பாரி பறம்பின்மேல் தண்ணுமை தானாணும் தோளாள் எனவும், நிறன் விறன்முள்ளூர் வேங்கைவீ எனவும், உள்ளூருள்ளதாகிய

குறிப்பு

அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந்தியம்பும் எனவும், முன்னும் பின்னுங் கொள்வழி யறிந்து கொள்க. மொழிமாற்று நின்று ஒன்றற்கொன்று செவ்வாகாமை கேட்டார் கூட்டியுணருமாறு கொள்ளல் வேண்டும். அல்லாக்கால், அவாய்நிலையும் தகுதியுடைய சொற்கள் அண்மையாகிய காரணமின்மையாற் சொற்கள் தம்முள் இயையாவாம்.

3.தொகைநிலைமொழிகள் குறித்து விவரி.

**தொகைநிலைமொழிகள்**

. வேற்றுமைத் தொகையே, உவமத் தொகையே,

வினையின் தொகையே, பண்பின் தொகையே,

உம்மைத் தொகையே, அன்மொழித் தொகை, என்று

அவ் ஆறு“ என்ப,-தொகைமொழி நிலையே“

வேற்றுமைத்தொகை முதலாகத் தொகைச்சொல் ஆறாம்

வேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் வினைச்சொல்லீறும் பண்புச்சொல்லீறுந் தொகுதலிற் தொகையாயின வென்பாரும். அவ்வப்பொருண்மேல் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் தம்முள் இயைதலிற் தொகையாயின என்பாரும் உளர். செய்தான் பொருள், இருந்தான் மாடத்து என உருபு தொக்கு வருவனவற்றைத் தொகையாகக் கருதவில்லை. வேழக்கரும்பு, கேழற்பன்றி என்வழித் தொக்கவில்லை எனினும் தொகையெனக் கருதுவர்,, உருபு முதலாயின தொகுதலிற்றொகை எனில் உருபு தொகல் எல்லாத் தொகையின் கண்ணும் இல்லை., எனவே சேனாவரையர் அவ்வப் பெருாள்மேல் பிளவுபடாது சொன்னீர்மைபட்டு வருவதனையே ஏற்றுக்கொள்வார், உருபு தொகவருதலும்“ (சொல் - 104) எனவும்,வேற்றுமை தொக்க பெயர்வயினானும்“ (சொல் - 418) எனவும்,உம்மை தொக்க பெயர்வயினானும்“ எனவும்,உவமைதொக்க பெயர்வயினானும்“ எனவும் ஓதலால் அவை ஆண்டுத் தொக்கனவெனப் படுமோ எனின் - அவ்வாறன்று,, அதுவென் வேற்றுமை யுயர் திணைத் தொகைவயின்“ (சொல் 94) என்புழி அதுவெனுருபு நின்று கெட்டதாயின் நின்ற காலத்துத் தினைவழுவாம். ; அத்திணைவழு அமைவுடைத்தெனின் விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அதுதன்னையே விரிப்பினும் அமைவுடைத்து; அதனான் முறைப்பொருடோன்றா நம்பிமகன் என இரண்டு சொற் தொக்கன வென்பதே ஆசிரியர் கருத்தெனல் வேண்டும். மேலும், வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை என்பன வற்றின்கண் வினையும் பண்பும் அன்மொழியுந் தொக்கு நில்லாமை யானும், அ∴தே கருத்தாதலறிக. அதனான் உருபும் உவமையும்

உம்மையுந் தொகுதலாவது தம் பொருள் ஒட்டிய சொல்லாற்றோன்றத் தாம் ஆண்டுப் புலப்படாது நிற்றலே யாம். என்பார் சேனாவரையர்

குறிப்பு

வேற்றுமைத் தொகையென்பது வேற்றுமைப் பொருளையுடைய தொகை அல்லது வேற்றுமைப் பொருள் தொக்கதொகை என்றானும் விரியும். உவமத்தொகை உம்மைத் தொகை அன்மொழித்தொகையென்பனவும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொக்க சொல்லல்லாத மொழி. வினைத்தொகை பண்புத்தொகை யென்பன, வினையினது தொகை பண்பினது தொகையென விரியும். வினைபண்பென்றது அவற்றை யுணர்த்துஞ் சொல்லை. ஒரு சொல்லாற் தொகையின்மையிற் பிறிதொரு சொல்லொடு தொகுதல் பெறப்படும்.

அவற்றுள்,

வேற்றுமைத் தொகையே வேற்றுமை இயல்.

,வேற்றுமைத் தொகை அவ்வேற்றுமை உருபு தொடர்பொருள் உணர்த்தியாங்கு உணர்த்தும்;

சாத்தனொடு வந்தான் என்னும் பொருட்கட் சாத்தன் வந்தன் எனவும் சாத்தற்குக் கொடுத்தான் என்னும் பொருட்கட் சாத்தன் கொடுத்தான் எனவும் உருபு தொடர்புப் பொருளுணர்த்தும் ஆற்றல் இல்லன தொகா, அவ்வாற்றல் உடையனவே தொகும்.

இரண்டாம் வேற்றுமைத்தொகை முதலாக வேற்றுமைத்தொகை அறு வகைப்படும்.

நிலங்கடந்தான், குழைக்காது

தாய் மூவர், பொற்குடம்

கருப்பு வேலி, கடிசூத்திரப்பொன்

வரை பாய்தல் , கருவூர்க் கிழக்கு

சாத்தன் புத்தகம், கொற்றனுணர்வு

மன்றப்பெண்ணை, மாரியாமா

இவை முறையானே நிலத்தைக் கடந்தான் ; குழையை யுடைய காது; தாயொடு மூவர்; பொன்னானியன்ற குடம் ; கரும்பிற்கு வேலி; கடிசூத்திரத்திற்குப் பொன்; வரையினின்றும் பாய்தல்; கருவூரின் கிழக்கு; சாத்தனது புத்தகம் ; கொற்றன துணர்வு; மன்றத்தின்கணிற்கும்

பெண்ணை; மாரிக்கணுள தாமா என்னும் உருபுதொடர்ப் பொருளை இனிது விளக்கும்.

குறிப்பு

உவமத் தொகையே உவம இயல்

உவமத் தொகை உவமவுருபு தொடர்ப் பொருள் போலப் பொருளுர்த்தும்., எனவே புலியன்ன சாத்தன், மயிலன்ன மாதர் என்னும் பொருட்கட் புலிச்சாத்தன், மயின்மாதர் என அப்பொருள் விளக்கும் ஆற்றல் இல்லாதன தொகா; ஆற்றலுடையவே தொகும்.

:புலிப்பாய்த்துள் ; மழைவண்கை ; துடிநடுவு ; பொன்மேனி என்பன புலிப்பாய்த்துளன்ன பாய்த்துள் ; மழையன்ன வண்கை ; துடியன்ன நடுவு ; பொன்னன்ன மேனி எனத் தம் விரிப்பொருள் உணர்த்தின. புலிப்பாய்த்துளை யொக்கும் பாய்த்துள் ; மழையையொக்கும் வண்கை என விரித்தலின் அவையெல்லாம் வேற்றுமைத் தொகை யெனப்படும் ; அதனான் உவமத் தொகையென ஒன்றில்லையெனின் : அவ்வாறன்று,, சொல்லுவார்க்கு அது கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக் கருத்தானன்றிப் புலியன்ன பாய்த்துள், பொன்மானு மேனி என வேற்றுமையோடு இயைபில்லா உவமவுருபு தொடர்ப்பொருட்கண் தொக்கவழி உவமத் தொகையாகவே அமையும். வேற்றுமைத் தொகை ஆகா.

உவமவுருபு ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லாகலான், வினையும் வினைக்குறிப்பும் பற்றி வரும். (இரண்டாம் வேற்றுமை) அவைபற்றி என்போற் பெருவிதுப் புறுகநின்னை" யின்னாதுற்ற வறனில் கூற்றே (புறம் - 255) என்புழிப் போலவென்பது குறிப்பு வினையெச்சமாய் நிற்றலானும்,நும்ம னோருமற்றினைய ராயி - னெம்ம னோரிவட் பிறவலா் மாதோ" (புறம் - 210) என்றவழி அன்னோரென்பது இடைச் சொல் முதனிலையாகப் பிறந்த குறிப்புப் பெயராகலானும், என்னைப் போல நும்மையன்னோர் எம்மையன்னோரென இரண்டாவது விரித்தாற்கு ஏற்புடைமை உண்டென்று அறிதல் வேண்டும்.

வினையின் தொகுதி காலத்து இயலும்.

வினைத் தொகை காலத்தின்கண் நிகழும்;

காலத்தியலும் எனப் பொதுவகையாற் கூறியவதனான் மூன்று காலமுங் கொள்க.

தொகுதி காலத்தியலுமெனவே அவ்வினை பிரிந்து நின்ற வழித் தோன்றாது. தொக்கவழித் தொகையாற்றலாற் காலந்தோன்றும்

வினையென்றது எனப்படுவது : - வினைச் சொற்கும் வினைப் பெயர்க்கும் முதனிலையாய், உண், தின், செல், கொல், என வினை மாத்திர முணர்த்தி நிற்பவை ஆகும் இவற்றை வடநூலார் தாதுவென்பர்.

குறிப்பு

ஆடரங்கு, செய்குன்று ; புணர்பொழுது ; அரிவாள் ; கொல் யானை ; செல்செலவு என வரும். காலம் உணர்த்தாது வினைமாத்திரம் உணர்த்தும் பெயர், நிலைப்பெயர் முதலாகிய பெயரொடு தொக்குழிக் காலமுணர்த்தும்.. காலமுணர்த்துகின்றுழிப் பெயரெச்சப் பொருளவாய் நின்றுணர்த்துமென்பது

செய்யுஞ் செய்த வென்னுங் கிளவியின் -

மெய்யொருங் கியலுந் தொழிறொகு மொழியும். (எழு - 482)

என்பதனாற் கூறினார். தொகைப் பொருளாகிய தாம் பிரிந்தவழிப் பெறப்படாமையின் ஆசிரியர் இவற்றைப் புணரியனிலையிடை யுணரத் தோன்றா“ என்றார். அதனான் இவைதஞ் சொல்லான் விரிக்கப்படாமையிற் பிரிவிலொட்டாம்.

பெயரெச்சம் நின்று தொக்கதென்ற உரையாசிரியரின் கருத்தினை எடுத்துரைக்கும் சேனாவரையர் : - அற்றன்று ஆசிரியர் இவற்றைப் பிரித்துப் புணர்க்கப்படா ; வழங்கியவாறே கொள்ளப்படுமென்றது. பிரித்தவழித் தொகைப்பொருள் சிதைதலானன்றே ; கொன்ற யானை என விரிந்த வழியும் அப்பொருள் சிதைவின்றேல் புணரிய நிலையிடை யுணரத்தோன்றா“ என்றற்கொரு காரணமில்லையாம் ; அதனாற் பெயரெச்சம் நின்று தொகுதல் ஆசிரியர் கருத்தன்மையின் உரையாசிரியர்க்கும் அது கருத்தன்றென்க என விளக்கம் செய்கிறார், அல்லதூஉம், ஆகுபெயர் உணர்த்தியவழி வினைத்தொகையுளப்பட இருபெயரொட்டும்“ (சொல் - 114) என்றாராகலானும் வினை நின்று தொகுதல் அவர்க்குக் கருத்தன்மையறிக.என விளக்கம் செய்கிறார் சேனாவரையர்

வண்ணத்தின், வடிவின், அளவின், சுவையின், என்று

அன்ன பிறவும் அதன் குணம் நுதலி,

“இன்னது இது“ என வரூஉம் இயற்கை

என்ன கிளவியும் பண்பின் தொகையே.

வண்ணம், வடிவு, அளவு, சுவை என்பனவும் அவை போல்வன பிறவும் குணத்தை குறித்துப் பின் தொக்க வழிக் குணச்சொற் குணமுடையதனை யுணர்த்தலான் இன்ன திதுவென ஒன்றனை ஒன்று

விசேடித்து இரு சொல்லும் ஒரு பொருளின்மேல் வரும் இயல்பையுடைய எல்லாத் தொகைச் சொல்லும் பண்புத்தொகையாம்:

குறிப்பு

கருங்குதிரை - வண்ணம்

வட்டப்பலகை - வடிவு.

நெடுங்கோ - அளவு .

தீங்கரும் - சுவை.

அன்னபிறவு மென்றதனான்.

நுண்ணூல், பராரை, மெல்லிலை, நல்லாடை என்னுந் தொடக்கத்தன கொள்க. அவை, கரிதாகிய குதிரை, வட்ட மாகிய பலகை எனப் பண்புச் சொல்லும் பண்புடைப் பொருளே குறித்தலான், இரு சொல்லும் ஒரு பொருளவாய் இன்னது இதுவென ஒன்றையொன்று பொதுமை நீக்கியவாறு கண்டுகொள்க. அஃதேல், கரிதாகிய குதிரை , வட்டமாகிய பலகை என்பன அத்தொகையின் விரியாகலின் பண்புத் தொகை பிரிக்கப்படாது என்றது என்னையெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் :- அற்றன்று, தொகைப்பொரும் உணர்த்துதற்குப் பிறசொற் கொணர்ந்து விரித்ததல்லது தன்சொல்லான் விரியாமையின் அவை விரியெனப்படா வென்க. வடநூலாரும் பிரியாத் தொகையும் பிற சொல்லான் விரிக்கப்படுமென்றார். கரியதென்னும் பண்பு கொள் பெயர் கருங்குதிரையெனத் தொக்கதென்றாரால் உரையாசிரியரெனின். அதனைப் பெயரெச்சம் வினைத்தொகை நிலைமொழி என்றதற்கு உரைத்தாங் குரைத்து மறுக்க. பிறசொற்கொணர்ந்து விரிக்குங்கால் கரிய குதிரை. கரிதாகிய குதிரை, கரியது குதிரை என அத்தொகைப் பொருளுணர்த்துவன எல்லாவற்றானும் விரிக்கப்படும் என விளக்கம் தருவார்.

முதனிலை எனப்படுவது கரியன், செய்யன், கருமை, செம்மை, என்பன வற்றிற்கெல்லாம் முதனிலையாய்ச் சொல்லாய் நிரம்பாது கரு செவ்வெனப் பண்புமாத்திர முணர்த்தி நிற்பதாம்.

என்ன கிளவியும் என்றதனால்,

சாரைப்பாம்பு, வேழக்கரும்பு, கேழற்பன்றி எனப் பண்பு தொகாது பெயர் தொக்கனவும் அத்தொகையாதல் கொள்க.

.இரு பெயர், பல பெயர், அளவின் பெயரே,

எண்ணியற் பெயரே, நிறைப் பெயர்க் கிளவி,

எண்ணின் பெயரொடு, அவ் அறு கிளவியும்

குறிப்பு

கண்ணிய நிலைத்தே-உம்மைத் தொகையே.

இருபெயர் முதலாகச் சொல்லப்பட்ட அறுவகைச் சொல் திரளையும் தனக்குச் சார்பாகக் குறித்து நிற்கும் உம்மைத்தொகை;

உவாப்பதினான்கு- இருபெயரானாய உம்மைத் தொகை.

புலிவிற்கெண்டை - பல பெயரானாய உம்மைத் தொகை.

தூணிப்பதக்கு - அளவுப்பெயரானாய உம்மைத் தொகை.

முப்பத்து மூவர் - எண்ணியற்பெயரானாய உம்மைத் தொகை.

தொடியரை - நிறைப்பெயரானாய உம்மைத் தொகை.

பதினைந்து - எண்ணுப்பெயரானாய உம்மைத் தொகை.

அவை விரியுங்கால், உவாவும் பதினான்கும் எனவும். புலியும் வில்லுங் கெண்டையும் எனவும், தூணியும் பதக்கும் எனவும், முப்பதின்மரும் மூவரும் எனவும், தொடியும் அரையும் எனவும், பத்துமைந்தும் எனவும் விரியும்.

வேற்றுமைத்தொகை முதலாயின பலசொல்லால் தொகுதல் சிறு பான்மை ; அதனான் உம்மைத்தொகை இரு சொல்லானும் பல சொல்லானும், ஒப்பத்தொகுமென்பது அறிவித்தற்கு இருபெயர் பலபெயரென்றார். கற்சுனைக் குவளையிதழ், பெருந்தோட் பேதை எனப் பிற தொகையும் பெரும்பான்மையும் பல சொல்லான் வருமா எனின் :- கல்லென்பதும் சுனையென்பதும் கற்சுனை எனத் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் இதழென்பதோடு தொக்குக் கற்சுனைக் குவளையிதழென ஒன்றாயிற்று. பெருந்தோளென்னுந் தொகை ஒரு சொல்லாய்ப் பேதையென்பதனோடு தொக்குப் பெருந்தோட் பேதையென ஒன்றாயிற்று . அவை இவ்வாற்றானல்லது தொகாமையின் இரு சொற்றாகையேயாம். புலிவிற் கெண்டை என்றவழி மூன்று பெயருந் தொகுமென்னாது முதற் பெயரொழித்தும் இறுதிப் பெயரொழித்தும் ஏனையிரண்டுந் தம்முள் தொக்கு ஒரு சொல்லாய்ப் பின் மற்றையதனோடு தொகுமெனின் : - முன்றொகு மிரண்டற்கும் ஓரியைபு வேறுபாடின்மையானும் . இரு தொகைப்படுத்தல் பலசெய்கைத்தாதலானும் அவை மூன்று பெயரும் ஒருங்கு தொக்கனவெனவே படும் என்பது. வெளிப்பட்டு நிற்கும்.

அளவின் பெயர் முதலாயின, இருபெயராயல்லது தொகாவென வரையறுத்தற்கு இருபெயர் பல்பெயரென அடங்குவனவற்றைப் பெயர்த்துக் கூறினார். கலனே தூணிப் பதக்கு, தொடியே க.ஃசரை, நூற்றுநாற்பத்துநான்கு என்புழித் தூணிப்பதக்கு க.ஃசரை, நாற்பத்துநான்கு என்பன ஒரு சொற்போல அளவுப்பெயரும், நிறைப் பெயரும், எண்ணுப்

குறிப்பு

பெயருமாய் வழங்கப்பட்டு வருதலின் கலமுந் தூணிப்பதக்கும் தொடியும் க.்.சரையும், நூறும் நாற்பத்துநான்கும் என இரு மொழி நின்று தொக்கவென்றலே பொருத்தமுடைமையறிக.

பண்பு தொக வரூஉம் கிளவியானும்,

உம்மை தொக்க பெயர்வயினானும்,

வேற்றுமை தொக்க பெயர்வயினானும்,

ஈற்று நின்று இயலும்-அன்மொழித்தொகையே.

பண்புச்சொற்றொகுஞ் சொல்லினும், உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் ; இறுதிச்சொற்கள் நின்று நடக்கும் அன்மொழித்தொகை;

பண்புத்தொகைபடவும் உம்மைத் தொகைபடவும் வேற்றுமைத் தொகைபடவும் அச்சொல் தொக்கபின் அத்தொகை அன்மொழித் தொகையாகாமையின் தொகுவதன் முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பது விளக்கிய தொகைவயினானும் என்னாது,பண்புதொக வரூஉங் கியவி யானு, மும்மை தொக்கபெயர்வயினானும், வேற்றுமை தொக்க பெயர்வயினானும்“ என்றார்.

வெள்ளாடை-அகரவீறு என்பன பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை ;

தகரஞாழல் - உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

பொற்றொடி - வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை

அவை வெள்ளாடையுடுத்தாள், அகரமாகிய ஈற்றையுடைய சொல் எனவும், தகரமுஞாழலுமாகிய சாந்து பூசினாள் எனவும், பொற்றொடி தொட்டாள் எனவும் விரியும்.

பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் பெரும்பான்மை ஆகலின் முறையிற் கூறாது அதனை முன்னர் கூறினார்.வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப் பிறத்தலின் உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறத்தல் சிறுபான்மை யாயினும் , ஒரு பயனோக்கி அதனை அதன்முன் வைத்தார். அதன் பயன் யாதெனின்:-சிறுபான்மை உவமத்தொகை நிலைக்களத்தும் வினைத்தொகை நிலைக்களத்தும் அன்மொழித்தொகை பிறக்குமென்ப துணர்த்துதலென்க . அவை பவளவாய், திரிதாடி

எனவரும். அவைதாம் பவளம்போலும் வாயையுடையாள் திரிந்த தாடியையுடையான் என விரியும்.

குறிப்பு

4.எச்சங்களின் வகைகளை விளக்குக.

**எச்சங்கள்:**

பிரிநிலை வினையே, பெயரே, ஒழியிசை,

எதிர்மறை, உம்மை, எனவே, சொல்லே,

குறிப்பே, இசையே, ஆயீர்-ஐந்தும்

நெறிப்படத் தோன்றும் எஞ்சு பொருட் கிளவி.

பிரிநிலை முதலாகச் சொல்லப்பட்ட பத்தும் எஞ்சுபொருட் கிளவியாம்.

அவற்றுள் கடைநிலை மூன்றும் அதாவது சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய மூன்றும் தாமே முடிக்கும் சொல்லாயும் அமையும்.ஏனையன தமக்கொரு முடிக்கும் சொல்லினைக் கொண்டு நின்று தாம் எஞ்சுபொருட்கிளவியாய் நிற்கும்.

பெயரெச்சம் வினையெச்சம் பெயர் வினையான் முடிதலின், ஆகுபெயரால் பெயர் வினையென்றார்.

ஆயீரைந்தும் எஞ்சுபொருட்கிளவி என்றாரேனும் எஞ்சு பொருட்கிளவி பத்துவகைப்படுமென்பது கருத்தாகக்கொள்க.

எச்சமாவன ஒருசார் ; பெயரும் வினையும் இடைச்சொல்லுமாதலின், பெயரியன் முதலாயினவற்றுட் பத்தும் ஒருங்குணர்த்துதற் கேலாமை யறிக என்பார் சேனாவரையர்,

அவற்றுள்,

பிரிநிலை எச்சம் பிரிநிலை முடிபின

மேற்சொல்லப்பட்ட எச்சங்களுள் , பிரிநிலை யெச்சம் ஏகாரப்பிரிநிலையும் ஓகாரப்பிரிநிலையும் என இருவகைப்படும் . அவ்விருவகைப் பிரிநிலையெச்சமும் பிரிக்கப்பட்ட பொருளையுணர்த்துஞ் சொல்லோடு முடியும்:

தானே கொண்டான் - ஏகாரப் பிரிநிலை எச்சம்

தானோ கொண்டான் - ஓகாரப் பிரிநிலை எச்சம்

குறிப்பு

அ∴தேல், தானெனப்பட்டானன்றே ஆண்டுப் பிரிக்கப் பட்டான், பிறர் கொண்டிலரென்பது அவனையுணர்த்துஞ் சொல்லன்மையான், அவை பிரிநிலை கொண்டு முடிந்திலவால் எனின்:- அற்றன்று; தானெனப்பட்டான் பிறரிற் பிரிக்கப்பட்டவழிப், பிறகும் அவனிற் பிரிக்கப்பட்டமையான், அவை பிரிநிலை கொண்டனவேயாகும்.

பிரிநிலையோடு முடிதலாவது அவனே கொண்டான் என்றவழி அவனே என்பது கொண்டானெனப் பிரிக்கப்பட்ட பொருளை வினையெனக் கொண்டு முடிதல் என்றாரார் உரையாசிரியர். அவனே கொண்டான் என்புழி அவன் என்னும் எழுவாய்வேற்றுமை கொண்டான் என்னும் பயனிலை கொண்டது; ஏகாரம் பிரிவுணர்த்திற்று. ஆண்டு எச்சமும் எச்சத்தை முடிக்குஞ் சொல்லுமின்மையான் அவர்க்கது கருத்தன் றென்க என மறுத்துரைப்பார் சேனாவரையர்,

வினை எஞ்சு கிளவிக்கு வினையும் குறிப்பும்

நினையத் தோன்றிய முடிபு ஆகும்மே;

ஆவயின் குறிப்பே ஆக்கமொடு வருமே.

வினையெச்சத்திற்குத் தெரிநிலை வினையும் குறிப்பு வினையும் முடிபாம்; ஆண்டைக் குறிப்புவினை ஆக்க வினையோடு வரும்.

உழுது வந்தான்; - தெரிநிலை வினையெச்சம்

மருந்துண்டு நல்ல னாயினான் - குறிப்பு வினையெச்சம்

உழுது வருதல்; உழுது வந்தவன் என வினையெச்சம் வினைப்பெயரோடு முடிதல் நினையத் தோன்றிய என்றதனாற் கொள்க.

வினையெச்சத்திற்கு முடிபு வினையியலுட் கூறப்பட்டமையான் இச்சூத்திரம் வேண்டா வெனின்;- இதற்கு விடை ஆண்டே கூறினாம்.

வேங்கையுங் காந்தளு நாறி யாம்பன் மலரினுந் தான்றண்ணியளே;“ (குறுந் - 84)

வில்லக விரலிற் பொருந்தியவாறு நல்லகஞ் சேரி னொருமருங் கினமே“ (குறுந் - 370)

கற்றுவல்லன் பெற்றுடையன்

வினைக்குறிப்பு ஆக்கமின்றி வந்தன எனின் ஆக்கமொடு வருமென்றது பெரும்பான்மை குறித்ததாகலிற் சிறுபான்மை ஆக்கமின்றியும் வரும்..

பெயர் எஞ்சு கிளவி பெயரொடு முடிமே

குறிப்பு

பெயரெச்சம் பெயரொடு முடியும்;

உண்ணுஞ்சாத்தன்;

உண்டசாத்தன்

அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய“ (சொல் - 234) என்றதனாற் பெயரெச்சம் பொருள்படுமுறைமை கூறினார்.

ஒழியிசை எச்சம் ஒழியிசை முடிபின.

மன்னை ஒழியிசையும், தில்லை ஒழியிசையும், ஓகார ஒழியிசையும் ஆகிய ஒழியிசை எச்சம் மூன்றும் ஒழியிசையான் முடியும்;

கூரியதோர் வாண்மன்“

வருகதில் லம்மவெஞ்சேரி சேர“ (அகம் - 276)

கொளலோ கொண்டான்

என்னும் ஒழியிசையெச்சம், முறையானே, திட்பம் இன்று. வந்தால் இன்னது செய்வல், கொண்டுய்யப் போமாறு அறிந்திலன் என்னும் ஒழியிசையான் முடிந்தவாறு காண்க.

.எதிர்மறை எச்சம் எதிர்மறை முடிபின.

மாறுகொள் எச்சம் எனப்பட்ட ஏகார எதிர் மறையும், ஓகார எதிர்மறையும், உம்மை எதிர்மறையுமாகிய எதிர்மறையெச்சம் மூன்றும் எதிர்மறையான் முடியும்.

யானே கொள்வேன்,

யானோ கள்வன்,

வரலுமுரியன்

என்னும் எதிர்மறையெச்சம், முறையானே, கொள்ளேன், கள்ளேன் வாராமையும் உரியன் என்னும் எதிர்மறையான் முடிந்தது.

உம்மை எச்சம் இரு வீற்றானும்

தன்வினை ஒன்றிய முடிபு ஆகும்மே.

எஞ்சுபொருட்கிளவியும் அவ் எஞ்சுபொருட்கிளவியான் முடிவதுமாகிய உம்மையெச்சம் வேறுபாடு இரண்டன் கண்ணும், தன்வினையோடு பொருந்திய முடிவைப் பெறும்.

குறிப்பு

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயின்“(சொல் - 284) என்றதனான் உம்மையுடைத்தாயும் உம்மையின்றியும் வரும் எஞ்சு பொருட்கிளவி உம்மையெச்சத்திற்கு முடிபாதல் எய்திற்று. எல்லாவெச்சத்திற்கும் எஞ்சு பொருட்கிளவியே முடிபாகலின். இனி உம்மையொடு தொடர்ந்த சொல்லிரண்டற்கும் வினையொன்றே ஆகல் வேண்டுமென எய்தாதது எய்துவித்தவாறு அமைந்தது.

சாத்தனும் வந்தான், கொற்றனும் வந்தான் - இரண்டும் ஒருவினை கொண்டமைந்தது.

சாத்தானும் வந்தான், கொற்றனும் உண்டான் -வினை வேறுபட்ட வழி உம்மை எச்சமும் எஞ்சுபொருட் கிளவியும் இயையாமல் போயிற்று.

பைம்புதல் வேங்கையு மொள்ளிணர் விரிந்தன

நெடுவெண் டிங்களு மூர்கொண் டன்றே“ (அகம் - 2)

என வினை வேறுபட்டுழியும் தம்முள் இயைந்தனவால் எனின்:- இணர் விரிதலும் ஊர் கோடலும் இரண்டும் மணஞ்செய் காலம் இது என்றுணர்த்தலாகிய ஒருபொருள் குறித்து நின்றமையான், அவை ஒரு வினைப்பாற்படும் என்பது அறிய வரும்.. எஞ்சு பொருட்கிளவி செஞ்சொலாயவழித் தன்வினை கோடல் ஈண்டடங்காமையான், அது தன்னினமுடித்தலென்பதனாற் பெறப்படும்.

உம்மையெச்சம் இருவீற்றானும் என்றதனால், உம்மை எச்சத்திற்கு முடிபாகிய எஞ்சுபொருட்கிளவி உம்மையொடுவரின் எச்சமாமென்பதாம். அ.்.து எச்சமாங்கால், முன்னின்றது, எஞ்சுபொருட் கிளவியாமென்பது.

எதிர்மறையும்மை எதிர்மறை எச்சமாயடங்குதலின்,ஈண்டும்மை எச்சமென்றது எச்சவும்மையேயாம்.

தன்மேல் செஞ்சொல் வரூஉம் காலை,

நிகழும் காலமொடு வாராக் காலமும்,

இறந்த காலமொடு வாராக் காலமும்,

மயங்குதல் வரையார் முறைநிலையான.

உம்மை எச்சத்தின்முன் எஞ்சுபொருட்கிளவி உம்மையற்ற சொல்லாய் வருங்கால் நிகழ்காலத்தோடு எதிர்காலமும் இறந்த காலத்தோடு எதிர்காலமும் மயங்குதல் வரையார்;

முறைநிலையான என்றதனான், கூறிய முறையானல்லது எதிர்காலம் முன்னிற்ப ஏனைக்காலம் பின் வந்து மயங்குதலில்லை என்பதாம்.

கூழுண்ணாநின்றான் சோறுமுண்பன் - நிகழ்காலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது

குறிப்பு

கூழுண்டான் சோறுமுண்பன் - இறந்த காலத்தோடு எதிர்காலம் மயங்கி நின்றது

இவற்றோடு இது மயங்குதல் வரையார் எனவே, இறந்த காலத்தோடு நிகழ்காலமும் நிகழ்காலத்தோடு இறந்தகாலமும் வந்து மயங்குதல் வரையப்படும்

தன்மேற் செஞ்சொல் வரூஉங்காலை என்றதனான், உம்மையடுத்த சொல் வருங்கால், வேறுபாடின்றி இரண்டு சொல்லும் ஒருகாலத் தான் வருமென்பதாம்.

தன்வினை, காலம்வேறுபடுதலும் வேறுபடாமையும் உடைமையான், இன்னுழி இன்னவாற்றான் அல்லது காலம் வேறுபடாதென வரையறுத்தவாறு.

"என" என் எச்சம் வினையொடு முடிமே

எனவென்னுமெச்சம் வினைகொண்டு முடியும்; என என்னும் எச்சம் வினை, குறிப்பு, பண்பு, எண், பெயர் என்னும் ஆறு பெயரோடு வரும்.வினையெச்சத்தமின் வாய்பாடுகளுள் ஒன்றாய செய்தென என்பதினோடும் சேர்ந்து வரும்.ஆகையால் என என்னும் எச்சம் ஏழு வகைப்படும்.இவற்றுள் எண், பெயர் என்பதினோடு வரும் என என்னும் எச்சம் வினை கொள்ளாது, செய்தென என"னும் வாய்பாட்டில் வரும் என என்னும் எச்சம்வினையோடு முடிதல் வினையியலில் கூறப்பட்டது, எனவே வினை, குறிப்பு, இசை, பண்ப என்னும் நான்கு சொற்களோடு வரும் என என்னும் எச்சம் வினையோடு முடிதலை ஈண்டு தொல்காப்பியர் சுட்டினார்,

கொள்ளெனக் கொடுத்தான்; - வினை

துண்ணெணத் துடித்தது; - குறிப்பு

ஒல்லென வொலித்தது; - இசை

காரெனக் கறுத்தது - பண்பு

."எஞ்சிய மூன்றும் மேல் வந்து முடிக்கும்

எஞ்சு பொருட் கிளவி இல என மொழிப.

குறிப்பு

தொல்காப்பியரால் சொல்லப்பட்டன பத்தனுள் முடிவு சொல்லாத மூன்று எச்சங்களும் தம மேல் வந்து முடிக்கும் சொற்களை எடையனவல்ல. அவை முறைுயே ஒழிந்து நின்ற சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் என்பன ஆகும்.

அவைதாம்,

தம்தம் குறிப்பின் எச்சம் செப்பும்.

அவ்வெச்சமூன்றும் சொல்வார் குறிப்பான் எஞ்சி நின்ற பொருளையுணர்த்தும்;

குறிப்பெச்சம்:

சொற்படு பொருளே அன்றி சொல்லுபவன் கறித்த பொருளும் எஞ்சி நிற்பது குறிப்பெச்சம் ஆகும்.இவ் எச்சம் தானே எச்சமாய் நிற்பதன்றி தனக்கொரு முடிக்கும் சொல்லைப் பெறாதது.

பசப்பித்துச் சென்றா ருடையையோ வன்ன

நிறத்தையோ பீரமலர்“

இளைதாக முணமரங் கொல்க களையுநர்

கைகொல்லுங் காழ்த்த விடத்து“ (குறள் 879)

என்றவழி முறையானே பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் எனவும், தீயாரைக் காலத்தாற் களைக எனவும் வந்த தொடர்மொழி எச்சமாய் நின்ற குறிப்புப்பொருளை வெளிப்படுத்தலால் குறிப்பெச்சமாயின.

இசையெச்சம்:

தொடர்மொழி எஞ்சி நிற்பது இசையெச்சம் என்பதாகும். ˙.இவ் எச்சம் தானே எச்சமாய் நிற்பதன்றி தனக்கொரு முடிக்கும் சொல்லைப் பெறாதது

அகர முதல வெழுத்தெல்லா மாதி

பகவன் முதற்றே யுலகு“ (குறள்-1)

அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றௌித்தசொற்

றேறியார்க் குண்டோ தவறு“ (குறள்-1154)

குறிப்பு

என்றவழி முறையானே அதுபோல எனவும், நீத்தார்க்கே தவறு எனவும் வருவன எஞ்சிய இசைப்பொருளுணர்த்தலால் இசையெச்சம் ஆயின. சொல் லெச்சத்திற்கு உதாரணம் முன்னர்க்காட்டுதும். சொல்லளம் வல்ல தெஞ்சுத லின்றே" (சொல், 441) என்பதனான் அ.்.தொரு சொல்லாதல் பெறப் படுதலின் இது தொடர்ச் சொல்லாமென்பது சொல்லென்னுஞ் சொல் எஞ்சுவது சொல்லெச்சமென்பார் இவ்விரு வகையும் இசையெச்சமென அடக்குப.

நிலையலுங் குறிப்பிற் றோன்றலும்" (சொல்-157) எனச் சொற்பொருட் பாகுபாடுணர்த்தினார். குறிப்பிற் தோன்றும் பொருளை வெளிப்படுத்தும் எச்சமாதலுடைமையான் எச்சமென்றார்; அதனான் ஆண்டு அடங்காது. இனி விசைத்தது ஒலித்தது என்பன தஞ்சொல்லெனப்படாது; படினும் விண்ணென வீங்கிற்று, துண்ணெனத் துளங்கினான் எனவும், ஒல் பசப்பித்துச் சென்றாரை யாமுடையேம் என்னுந் தொடக்கத்தன குறிப்பிற்றோன்றலா யடங்குதலின், விண்ணென விசைத்தது என்பது குறிப்பெச்சமென்றும், அதுபோல என்னுந் தொடக்கத்தன விகாரவகையால் தொக்கு நின்றமையான், ஒல்லென ஒலித்தது என்பது இசையெச்சம்என்றும். இவை தத்தஞ் சொல்லான் முடிதலல்லது பிற சொல்லான் முடியாமையின் இவற்றை மேல்வந்து முடிக்கும் எஞ்சு பொருட்கிளவியில என்றாரென்றும், உரைத்தாரால் உரையாசிரியர் எனின்:- என வினா எழுப்பும் சேனாவரையர் அற்றன்று; தெரிபுவேறு என வீழ்ந்தது எனவும் பிற சொல்லானும் முடிதலின் எஞ்சுபொருட் கிளவியில வென்றல் பொருந்தாதாம். தஞ்சொ லல்லாதன எஞ்சுபொருட் கிளவியா மாகலின் என விளக்கம் தருவார் சேனாவரையர்.

சொல்லெச்சம்:

சொல் என் எச்சம், முன்னும் பின்னும்,

சொல் அளவு அல்லது எஞ்சுதல் இன்றே.

சொல்லெச்சம், ஒருசொற்கு முன்னும் பின்னுஞ் சொல்மாத்திரம் எஞ்சுவதல்லது, தொடராய் எஞ்சுதலில்லை

உயர்திணையென்மனார்" (சொல்-1) - ஆசிரியர் என்னும் சொல் முன்னால் எஞ்சி நின்றது,,

மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே (குறுந்-71) - எமக்கென்னும் சொல் பின்னும், எஞ்சி நின்றது.

5.அவையல் கிளவி – சுட்டியுரைக்க.

அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்.

Self-Instructional
Material

குறிப்பு

அவைக்கண் உரைக்கப்படாத சொல்லை உரைக்கப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டால் அச் சொல்லை மறைத்து பிற சொல்லால் கூறல் வேண்டும்.

அவைக்கண் வழங்கப்படுஞ் சொல்லை அவையென்றார்.

ஆன்முன் வரூஉ மீகார பகரம்“- பீ

கண்கழீஇ வருதும்,

கான்மே னீர்பெய்து வருதும்

கருமுக மந்தி– பெண்குறி

செம்பினேற்றை – ஆண்குறி

புலிலன்றி றந்த நீரல் லீரத்து, - மூத்திரம்

ஈகாரபகரமென்பதுபோலக் கண் கழுவுதன் முதலாயின அவையல் கிளவியால் கூறாது உள்ளவாறே கூறப்பட்டுள்ளது.எனினும் அவையல் கிளவிப் பொருண்மையை யுணர்த்தலின், ஒற்றுமை நயத்தான் அவையல் கிளவியைப் பிறிதோராற்றாற் கூறிய வாய்பாடாகக் கொள்ளப்படும்;

இவை தகுதியும் வழக்கும், (சொல்-14) என்புழித் தகுதியாயடங்குமெனின் என வினா எழுப்பும் சேனாவரையர் செத்தாரைத் துஞ்சினா ரென்றல் முதலாயினவன்றே தகுதியாவன; ஆண்டுச் செத்தாரென்பது இலக்கணமாகலின் அதனானும் வழங்கப்படும் தகவு; நோக்கிச் சொல்லுங்கால் துஞ்சினா ரென்றுஞ் சொல்லப்படும்; ஈண்டு அவையல் கிளவியாற் கிளத்தல் வழுவாதலின் மறைத்த வாய்பாட்டானே கிளக்கப்படும்; அதனான் ஆண்டு அடங்கா என்பது என விளக்கம் தருவார்.

மறைக்கும் காலை மரீஇயது ஒராஅல்!

அவையல் கிளவியை மறைத்துச் சொல்லுங்கால். மேற்றொட்டு வழங்கப்பட்டு வருவன மறைக்கப்படாது

ஆப்பி , ஆனையிலண்டம் என மரீஇ வந்தன மறைக்கப்படாது வந்தது.

பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி (பெரும்பாண் - 2) என்புழிக் கான்றென்பது , தன் பொருண்மேல் நில்லாது அணி குறித்துப் பிறிதொரு பொருண்மேல் நிற்றலின் மரீஇய சொல்லாய் மறைக்கப் படாமையின் , அதன் பொருண்மேல் நின்றவழி மறைக்கப்படுதலும் அறிக.

குறிப்பு

6.இரப்புரைச் சொற்களைத் தருக.

“ஈ, தா, கொடு“ எனக் கிளக்கும் மூன்றும்

இரவின் கிளவி ஆகு இடன் உடைய.

ஈ, தா , கொடு எனச் சொல்லப்படும் மூன்றும் ஒருவன் ஒன்றை இரத்தற்கண் வருஞ்சொல்லாம்;

அவை பிறபொருண்மேல் வருதலுமுடைமையான், இரவின் கிளவி யாகிட னுடைய“ என்றார்.

வழங்கல், உதவல், வீசல் முதலாயின பிறவும் உளவாக இவற்றையே விதந்தோதியதற்குக் காரணம் அவை கொடைப் பொருளவாய் வருவதல்லது இவைபோல இரத்தற் குறிப்பு வெளிப்படுக்கும் இரவின் கிளவியாய்ப் பயின்று வாராமை ஆகும். மேலும் இன்னார்க்கு இன்ன சொல் உரித்தென்று வரையறுத்தலும் வழுவமைத்தலுமாகிய ஆராய்ச்சி ஆண்டின்மையானும் இவற்றையே விதந்தோதியதற்கான காரணம் ஆகும்.

ஈயென்கிளவி“ (சொல் - 445) என்னும் சூத்திரம் முதலாய நான்கும் அமையும் ; இச்சூத்திரம் வேண்டா எனின் இவை இரவின் கிளவியாதலும் மூன்றென்னும் வரையறையும் அவற்றாற் பெறப்படாமையின் வேண்டுமென்பது.

முன்னிலைச் சொல்லாய் வருவழியல்லது பிற இடங்களில் இன்ன சொல் இன்னார்க்கு உரித்தென்னும் வரையறை இல்லென்பது உணர்த்துதற்கு ஈதா கொடு என முன்னிலை வாய்பாடுபற்றி ஓதினார்.

அவற்றுள்,

ஈ என் கிளவி இழிந்தோன் கூற்றே.

ஈ என்கிளவி இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் கூற்றாம்.

சோறு ஈ - இரக்கப்படுவோனின் இழிந்த இரவலன் கூற்று

“தா“ என் கிளவி ஒப்போன் கூற்றே.

குறிப்பு

தாவென்கிளவி அவனோடு ஒப்போன் கூற்றாம்

ஆடை தா - அவனோடு ஒப்போன் கூற்று

“கொடு என் கிளவி உயர்ந்தோன் கூற்றே.

கொடு என்கிளவி அவனினும் உயர்ந்தவன் கூற்றாம்;

சாந்துகொடு - கொடு என்கிளவி அவனினும் உயர்ந்தவன் கூற்று

கொடு என் கிளவி படர்க்கைஆயினும்,

தன்னைப் பிறன்போல் கூறும் குறிப்பின்

தன்னிடத்து இயலும் என்மனார் புலவர்.

கொடுவென்னுஞ் சொல், முதனிலை வகையாற் படர்க்கையாயினும். தன்னைப் பிறனொருவன் போலக் கூறுங் கருத்து வகையால், தன்னிடத்துச் செல்லும்;

தம்பிக்குக் கொடு – தன்னையே படர்க்கையில் கூறுவது.

தன்மைக்கும் முன்னிலைக்கும் உரிய தாவென்பதனானாக பொதுவாகிய ஈ என்பதனானாகவன்றே சொல்லற்பாலது; உயர்ந்தான் அங்ஙனந் தான் ஏற்பானாகச் சொல்லாது, கொடுவெனப் படர்க்கை வாய்பாட்டாற் சொல்லும்; ஆண்டு தன்னையே பிறன்போலக் குறித்தானாகலிற் தன்னிடத்தே யாமென இடவழு அமைத்தவாறு என்பார் சேனாவரையர்.

உயர்ந்தான் தம் ஒருவனைக் காட்டி இவற்குக் கொடு என்னும் என்றார் உரையாசிரியர்என எடுத்துரைக்கும் சேனாவரையர்: ஆண்டுப் படர்க்கைச் சொற்படர்க்கைச் சொல்லோடு இயைதலான் வழுவின்மையின் அமைக்கல் வேண்டாவாம் அதனான் அது போலியுரையென்க என மறுக்கின்றார்.

-

-

# மாதிரி வினாத்தாள் - I

அழகப்பா பல்கலைக்கழகம் - காரைக்குடி – 3

முதுகலைத்தமிழ் - இலக்கணம் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

## பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக.

1.உயர்திணை எனப்படுவன யாவை?

2.மூன்றாம் வேற்றுமை உருபு யாது?

3.கருமச்சார்பு என்றால் என்ன?

4.மன்னாப்பொருளும் அன்ன இயற்றே – விளக்குக.

5.கொன் என்னும் சொல் எவ்வெப்பொருள்களில் பயின்று வரும்?

6.இயற்பெயர் என்பதனைச் சுட்டுக.

7.எல்லாம் என்னும் உயர்திணைப்பொருள் வருமாற்றை விளக்குக.

8.வினையெச்சம் என்றால் என்ன?

9.அம்ம என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்?

10.பண்ணை என்னும் உரனிச்சொல் பயின்று வரும் தன்மையைச் சுட்டுக.

## பகுதி – ஆ

11. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11(அ) இயற்கைனப்பொருள், செயற்கைப்பொருள் குறித்து விளக்குக.

( அல்லது )

(ஆ ) வேற்றுமையின் வகைகளைச் சுட்டியுரைக்க.

12(அ ) உருபு மயக்கம் என்பதனை விளக்குக.

(அல்லது )

(ஆ) பெயர்ச்சொல் என்பதனை விளக்குக.

13(அ ) வினைமுற்று என்பதனை விளக்குக.

( அல்லது )

(ஆ) வினையெச்ச வாய்பாடுகளை எழுதுக.

14(அ) இடைச்சொல்லின் வகைகள் யாவை?

(அல்லது )

(ஆ ) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தைச் குறிப்பிடுக.

15 (அ ) அவையல் கிளவி குறித்தெழுதுக.

(அல்லது )

(ஆ) செய்யுள் விகாரங்களைத் தருக.

பகுதி - இ

111. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16.வழு, வழுவமைதி குறித்துக் கட்டுரைக்க

17.நான்காம் வேற்றுமை குறித்து விரித்தெழுதுக.

18.உயர்திணைப்பெயாகள் குறித்துக் கட்டுரைக்க.

19.வினைச்சொல்லின் வகைகள் குறித்து விரித்துரைக்க.

20. தொகைகளின் வகைகளை விளக்கி வரைக.

\-                                        மாதிரி வினாத்தாள் - II

அழகப்பா பல்கலைக்கழகம் - காரைக்குடி – 3

முதுகலைத்தமிழ் - இலக்கணம் - தொல்காப்பியம் - சொல்லதிகாரம் - சேனாவரையம்

பகுதி – அ

அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைதருக.

1.வண்ணச்சினைச்சொல் - சுட்டுக.

2.மன்னாப்பொருள் குறித்து எழுதுக.

3.எழுவாய் வேற்றுமை என்றால் என்ன?

4.கெடையெதிர் கிளவி மயங்குமாற்றை குறித்துரைக்க.

5.தான், தாம் என்னும் பெயாகள் எவ்வாறு வரும்?

6.செய்தென் எச்சத்து இறந்தகாலம் எவ்வாறு மயங்கி வரும்?

7.தில் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வரும்?

8.வறுமை என்னும் பொருளில் வரும் உரிச்சொல் யாது?

9.நீட்டல் விகாரம் குறித்தெழுதுக.

10.இசைநிறை குறித்த எடுத்துரைக்க.

பகுதி – ஆ

11. அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11 (அ) திணை, பால் வழுவமைதி – விளக்குக.

(ஆ ) வழக்கினாகிய உயர்சொற் கிளவி குறித்தெழுதுக.

12(அ) முதல் வேற்றுமையை விளக்குக.

(அல்லது )

(ஆ ) மூன்றாம் வேற்றுமைப் பொருள்களைச் சுட்டியுரைக்க.

13 (அ ) வேற்றுமைஉருபுகள் விரிந்து நிற்கும் இடங்கள் யாவை?

(அல்லது )

(ஆ) ஒருவர், நீயிர், நீ எவ்வாறு வரும்?

14(அ) வினையெச்ச வாய்பாடுகளை விளக்கி எழுதுக.

(அல்லது )

(ஆ) அசைநிலைகளை விளக்குக.

15 (அ ) பண்பு பற்றி வரும் உரிச்சொற்கள் யாவை?

( அல்லது )

(ஆ) மொழிமாற்றுப்பொருள்கோள் குறித்து எழுதுக

பகுதி - இ

111. எவையேனும் மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16.கிளவியாக்கச் செய்திகளைத் தொகுத்துரைக்க

17.ஆறாம் வேற்றுமை குறித்துக் கட்டுரைக்க.

18.விரவுப்பெயர்களை விவரி.

19.எண்ணிடைச் சொற்களை விவரி

20. பத்துவகை எச்சங்களை விளக்கி வரைக.

-

எம்.ஏ. (தமிழ்)

# 319 21

## தொல்காப்பியம் - சொல்லதிகாரம்

இரண்டாம் பருவம்





## அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்


ISBN 978-93-5338-587-3